
# இஸ்ரேலிய ஆசரிப்புக் கூடாரம்



ஆசிரியர் டி. தாம்ஸன்

# இஸ்ரேலிய
# ஆசரிப்புக் கூடாரம்

P

ஆசிரியரும் வெளியிடுபவரும்:

**பாஸ்டர் டி. தாம்சன்**


***அல்லேலூயா பெந்தெகொஸ்தே சபை***
திருப்பாச்சூர் P.O,
திருவள்ளூர் மாவட்டம்
பின். 631 203. தென் இந்தியா


அப்பொழுது ஒரு மேகம் ஆசாரிப்புக் கூடாரத்தை மூடினது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் அதின்மேல் தங்கி கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது. யாத் *40 : 34,35*


திருப்பாச்சூர்
*1998*

பதிப்புரிமை : ஆசிரியருக்கே
முதற்பதிப்பு : நவம்பர் 1998

விலை ரூபாய் : 45/-

அச்சிட்டோர்:
செல்லம் ஆப்செட் பிரஸ்,
சென்னை - 21.

# முகவுரை

மகாதேவனும், நமது இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தேவனுடைய வாசஸ்தலமாகிய ஆசரிப்புக்கூடாரமானது மிக அற்புதமான ஒரு வீடாகும். இதனால் கவர்ந்து கொள்ளப்படாத மக்கள் இல்லை. கருத்தும், மறைபொருளும் நிறைந்த இது என் மனதில் முக்கியமானதோர் இடத்தைக் கைப்பற்றி விட்டது. இதன் விசித்திர படைப்பினை என் சிறுவயது முதல் ஆர்வத்துடன் வாசித்து வந்தேன். இதன் சில பகுதிகளின் ஆன்மீக விளக்கங்கள் புரியாப் புதிராக இருந்து வந்தது. மயிர் சிலிர்க்க வைக்கும் இதன் கருத்துக்களை பரிசுத்த ஆவியானவர் விளக்கிக் காட்டியபோது வியப்படைந்தேன். “சேனைகளின் கர்த்தாவே உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்!” சங். 84 : 1.

இத்தனை மகிமையான கூடாரத்தின் இரகசியங்களை கிறிஸ்தவ உலகின் முன் வைக்க வேண்டுமென ஜெபத்துடன் திட்டம் பண்ணினேன். இதன்படி இதை எழுதி முடிக்கவும் புத்தகமாக வெளியிடவும் வாய்ப்பளித்த தேவனை உளமாரத் துதிக்கிறேன்.

ஆசரிப்புக்கூடாரத்தில் நியமிக்கப்பட்ட அதிகாரபூர்வமான பலிகளைக் குறித்தும் பண்டிகை பலிகளைக் குறித்தும் “பலிகள் ஏதேன் முதல் கல்வாரி வரை” என்ற என்னுடைய புத்தகத்தில் விபரமாகக் கூறியுள்ளபடியால் இந்நூலில் அதன் விளக்கங்கள் தவிர்க்கப் பட்டுள்ளது.

தேவ ஊழியர்களின் அதிகாரத்தையும், மகிமையையும், கவுரவத்தையும், சேவையையும் அழகும், சிறப்புமாக உயர்த்திக் காட்டியதுடன், ஆராதிக்கிறவர்கள் எத்தனை பயபக்தியாக ஆராதிக்க வேண்டுமென்பதையும், ஆராதிக்கப்படுகிற தேவன் தமது சித்தத்தின்படியல்லாத ஆராதனைகளை அங்கீகரிப்பதில்லை என்பதையும் இக்கூடாரத்தில் விளங்கச்செய்து, புறஜாதி மார்க்கங்களை மிஞ்சி நிகரற்ற நிலைமையிலும் இஸ்ரவேலருக்கு மகிழ்ச்சியும், புகழ்ச்சியும் மிக்கதாக இக்கூடாரத்தினைப் படைத்துள்ளார்.

இதை வாசிக்கின்ற அனைவரையும் ஆவியில் பலப்படுத்திடவும், அதன் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்படவும் சர்வ வல்லவருடைய கரங்களில் அர்ப்பணிக்கிறேன். எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஆசிரியர்.

# அணிந்துரை

பாஸ்டர் சாம்சுந்தரம், தலைமை போதகர்,
அப்போஸ்தல கிறிஸ்தவ அசெம்பிளி, சென்னை.

என் அன்புள்ள சகோதரர் டி. தாம்ஸன் அவர்கள் எழுதிய 'இஸ்ரேலிய ஆசரிப்புக் கூடாரம்' என்ற புத்தகத்திற்கு அணிந்துரை எழுதுவதில் மிகவும் மகிழுகிறேன். நான் அவர்களை ஏற்கனவே எழுதிய புத்தகங்களில் ஆழந்த கருத்துக்களை பாராட்டுகிறேன். தேவன் தம்முடைய தாசனாகிய தாம்ஸன் அவர்களை அதிசயமாக உபயோகப் படுத்துவதை நான் கண்டிருக்கிறேன். மெய்யாகவே அவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு மகிமையின் கிருபா பாத்திரம் என்பதற்கு சந்தேகமில்லை.

'இஸ்ரேலிய ஆசரிப்புக்கூடாரம்' என்ற புத்தகத்தை நான் கண்ணோக்கிய போது, அதற்குள் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கருத்துக்கள் அனைத்தும் வேத வியாக்கியானத்திற்கேற்ப அமைந் திருக்கிறது. கூடாரத்தில் காணப்படும் பொருள்கள், அளவுகள், கிரியை கள் எல்லாம் நன்கு விவரமாக கூறப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கை, ஊழியம் யாவும் ஆழ்ந்த பிரதிஷ்டையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்ற வியாக்கியானம் இப்புத்தகத்தின் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. கர்த்தர் தம்முடைய தாசனுக்கு கொடுத்த அறிவு, ஞானம் முதலானவைகளுக்காக நான் கர்த்தரரை ஸ்தோத்தரிக்கிறேன். ஏதோ இது பழைய ஏற்பாட்டின் ஓர் சாதாரண கூடாரமாக அல்ல. இன்றை கிறிஸ்தவ வாழ்க்கையை குறிக்கும் பொருளாக நிழல் போல எழுதப்பட்ட இப்புத்தகம், வாசிப்போருக்கு நிச்சயமாகவே மிகவும் பிரயோஜனமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

மேலும் கர்த்தருடைய முழு நேர ஊழியத்தை செய்பும் அவருடைய பிள்ளைகளுக்கு இப்புத்தகம் சரியான வழிகாட்டும் விளக்காகவே காணப்படுகிறது. கர்த்தருக்கு ஊழியம் செய்வதல்ல, எவ்விதத்தில் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதே நமது நோக்கமாக இருத்தல் வேண்டும். தம்முடைய சித்தத்தின்படி ஊழியம் செய்யாத ஊழியர்களை இயேசு கடிந்துகொண்டார் என்பதை நாம் அறிவோம். *(மத்தேவு 7 : 21-23)* நாம் கர்த்தருக்கு செய்யும் ஊழியத்தின் அளவு அல்ல, நாம் கர்த்தருக்கு செய்ய வேண்டிய ஊழியத்தின் விதமே முக்கியம். அதற்கு அனுகூலமாக இப்புத்தகம் ஓர் வழிகாட்டியாக இருக்கிறது. தேவன் இன்னும் சகோ. தாம்ஸன் அவர்களை தமது கிருபையினாலும், வெளிப்படுத்தலினாலும் நிறைத்து உபயோகப்படுத்துவாராக. கர்த்தருக்கே மகிமை

# புத்தக அறிமுகம்

**பாஸ்டர் D. மோகன்,**
**அசெம்பிளி ஆப் காட்,**
**சென்னை**

இஸ்ரேலிய ஆசரிப்புக் கூடாரம் என்னும் புத்தகத்திற்கு அறிமுகம் எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். பாஸ்டர் *D.* தாம்சன் சுமார் *28* ஆண்டுகள் ஊழிய பாதையில் நடந்து நல்ல அனுபவம் பெற்றவர். வேதத்தைக் கருத்தாய் ஆராய்ந்து ஆசரிப்பு கூடார நாமங்கள், ஆலய வரலாறுகள், அதன் அமைப்பு மற்றும் அதைக் குறித்துப் பொதுவான விஷயங்கள் முதலியவற்றை ஆவிக்குரிய அர்த்தத்தோடு விளக்கி இருக்கிறார். தேவ சமூகத்தில் அவர் காத்திருந்த போது தேவன் ஆவியானவர் மூலம் விளக்கிய சத்தியங்கள் அநேகருடைய வாழ்க்கையில் பிரயோஜனமாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதன் ஆவிக்குரிய விளக்கங்கள் பூலோக வாழ்வில் பரிசுத்தத்தை நாடச் செய்வதுமல்லாமல் வரப்போகிற ராஜாவும் பிரதான ஆசாரியருமாகிய இயேசுவுக்கு ஏற்ற மணவாட்டியாக நிறுத்த நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ளது. சபைவிசுவாசிகள் ஆவியின் வாழ்க்கையில் வளர மிகவும் உற்சாகப்படுத்துகின்ற இப்புத்தகத்தை சபையின் போதகர்கள் மற்றும் விசுவாசிகள் வாங்கி வாசித்து பயனடையுங்கள் என்று உங்களுக்கு இந்தப் புத்தகத்தை சந்தோஷத்தோடு அறிமுகப்படுத்துகிறேன்.

இப்படிக்கு

அன்பரின் பணியில்,
***பாஸ்டர் D. மோகன்***

# சிறப்புரை

**பாஸ்டர் D. தயானந்தன்**
**GEMS**
**சென்னை**

பாஸ்டர் *D.* தாம்சன் " அவர்களால் எழுதப்பட்ட இஸ்ரேலிய ஆசரிப்புக் கூடாரம் என்ற புத்தக பொக்கிஷத்திற்கு சிறப்புரை எழுதுவதில் மிக மகிழ்ச்சி உண்டு.

பரிசுத்த வேதாகமத்தில் வரையப்பட்டுள்ள தேவனுடைய வீடாகிய ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி மிகத் தெளிவான விளக்கங்களை இப்புத்தகத்தில் தந்துள்ளார். பள்ளிக்கூட டெக்ஸ்ட் புத்தகத்திற்கு கையேடு *(Guide)* போல வேதமாகிய டெக்ஸ்ட் *(Text)* புத்தகத்தின் ஆசரிப்பு கூடாரம் என்ற பகுதிக்கு ஒரு அரிய கைடு ஆக இந்நூல் விளங்குகிறது.

ஆதாமின் விழுகைக்குப் பின்பு ஆசரிப்பு கூடாரம் தான், மனிதனோடு நேரடித் தொடர்பு கொள்ள தேவன் தெரிந்து கொண்ட முதலாவது சமரச மன்றம் என இப்புத்தகம் தெளிவுபடுத்தியுள்ளது. பின்பு, தேவன் ஏற்படுத்திய வாசஸ்தலமாகும் புதிய ஏற்பாட்டு சபை. இனி கடைசியான புதிய எருசலேமில் அவர் மனிதர்களோடு என்றென்றைக்கும் ஸ்திரமாக வாசமாயிருப்பார்.

ஆசரிப்பு கூடாரத்தில் மனிதன் பலியினால் தேவனோடு ஒப்புரவான போதிலும் சாகாதபடிக்கு மிக கிட்ட நெருங்கமுடியவில்லை என்றும், புதிய ஏற்பாட்டு சபையில் விசுவாசத்தினால் கிருபாசனம் வரையிலும் சேரலாம் என்றும், புதிய எருசலேமில் தேவனைப்போல மனிதனும் ஆவியின் சரீரம் பெற்று என்றும் பிரியாமல் ஒன்றாக இணைந்து வாழுவர் என்றும் இந்நூலில் காணலாம்.

ஆசரிப்பு கூடாரத்தின் அமைப்பும், பாளயமும், பயணக் கிரமமும், பணிமுட்டுகளும் பற்றிய விளக்கங்கள் எல்லா விசுவாசிகளுக்கும் தேவ ஊழியர்களுக்கும் புத்துணர்வை அளிக்கக்கூடியதாக உள்ளது.
ஆசிரியருக்கு தேவ கிருபையும், ஆசீர்வாதமும் பெருக வாழ்த்துகிறேன்.

***பாஸ்டர் D. தயானந்தன்***
***14.11.98***

# மதிப்புரை

**பாஸ்டர் A. தாமஸ்ராஜ்**
**அப்போஸ்தல கிறிஸ்தவ அசெம்பிளி,**
**ஆவடி**

பழைய ஏற்பாட்டு புத்தகங்களை வாசிக்கும் நம்மில் அநேகர், ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படி தெரியும் ? என்று பிலிப்புவைப் பார்த்து சொன்ன எத்தியோப்பியனைப் போன்று, வாசிப்பதின் கருத்தை அறியாமல் இருப்பது உண்மை.

தேவ கட்டளையின்படியும், கற்பனையின்படியும் மோசே கட்டி எழுப்பிய ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிய தெளிவு குன்றியிருக்கும் இவ்வேளையில் இஸ்ரேலிய ஆசரிப்புக் கூடாரம் எனும் இப்புத்தகம் வெளிவருகிறது மகிழ்ச்சி அளிக்கிறது.

தேவ கிருபையின்படி, இப்புத்தகத்தை ஆசிரியர் பாஸ்டர் தாம்சன் அவர்களின் ஜெபத்தாலும், கடின உழைப்பாலும், பல ஆண்டுகளின் ஆராய்ச்சியின் பலனாகவும் வெளிவரும் இப்புத்தகம் தேவ சபைக்கும், வேதத்தின் மகத்துவங்களை கற்றறிய ஆவலுடன் முயற்சி செய்யும் வேதப்பிரியர்களுக்கும் கிடைக்கப் பெறும் ஒரு அரிய பொக்கிஷம். 20ம் நூற்றாண்டின் இறுதிகாலத்தைக் கடந்து கொண்டிருக்கிறவர்களுக்கும், 21ம் நூற்றாண்டில் வாழப்போகும் விசுவாச மக்களுக்கும் தேவன் வெளிப்படுத்த விரும்பும் ஆழமான ஆவிக்குரிய உண்மைகளை சுமந்து வரும் இந்நூல் ஓர் அற்புத களஞ்சியம். வசன ஆதாரத்துடனும், சரித்திர சான்றுகளுடனும் வெளியிடப்படும் இப்படைப்பு, அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிமையான நடையில் இருப்பது பாராட்டத்தக்கது.

ஆசரிப்பு கூடாரத்தைப் பற்றிய இந்தக் கையேட்டின் மதிப்பு அதன் முகவிலையைப் பார்க்கிலும் பல்லாயிரம் மடங்கு ஆகும். ஆன்மீக மனிதனின் ஊழியமும் பரிசுத்தமும் அடையவிருக்கும் மகிமையும், எத்தனை மதிப்புள்ளதோ, அப்படியே அதற்கு வழிகாட்டும் இப்புத்தகத்தின் மதிப்பும் மிக அதிகமே. இது ஒரு வேதாகமக் கல்லூரியின் பாடத்திடத்தின் மதிப்புள்ளதாகக் கருதுகிறேன்.

தேவ பிள்ளைகளை வேத அறிவில் வளர்க்க அதிக பிரயாசத்துடனும், பாரத்துடனும் இது போன்ற பல புத்தகங்களை வெளியிடும் பாஸ்டர் தாம்சன் அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும், சபையாருக்கும் என் வாழ்த்துக்கள். தமிழ்மொழி பேசும் தேவ பிள்ளைகளின் ஆவிக்குரிய நலனை கருத்தில் கொண்டு, தேவ நடத்துதலின்படி செய்யப்படும் இத்திருப்பணி வெற்றியுடன் தொடரவும், மிகுந்த பலனளிக்கவும் ஜெபிக்கிறேன்.

இப்புத்தகத்தை வாசிக்கும் அனைவரோடும் கர்த்தருடைய கிருபை இருப்பதாக. ஆமென்.

***போதகர் A. தாமஸ்ராஜ்***
***14.11.98***

# வாழ்த்துரை

**பாஸ்டர் T. மேத்யு**
CHURCH ON THE WORD
**சென்னை - 54**

பேரன்பு கொண்ட ஆசிரியருக்கும் இந்நூலினை வாசிக்க நேருகின்ற அனைவருக்கும் வார்த்தையானவராகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஆசரிப்புக் கூடாரத்தை இஸ்ரவேலருக்கு வழங்கி மேன்மையான வழியில் நடத்திய சகல ஞானமும் நிறைந்த தேவதேவனை வாழ்த்தி அவருக்குத் துதி கனம் மகிமை அனைத்தையும் செலுத்துகிறேன்.

இஸ்ரேலிய ஆசரிப்புக் கூடாரம் என்ற இந்த அரிய நூலினை தேவ கிருபையினால் இயற்றி அதன் அரிய சத்தியங்களை பொருள் திரித்துக் கொடுத்த ஆசிரியரை சகல கிருபை பொருந்திய தேவன் *( 1 பேதுரு 5 : 10)* ஆசீர்வதிக்க மனமார வாழ்த்துகிறேன்.

இந்நூலினை வாசிக்கின்ற எல்லா தேவ பிள்ளைகளுக்கும் இதன் பொருளை நன்கு புரிந்து கொள்ள பிரகாசமான மனக்கண்களை (எபே. *1 : 19)* தேவன் அருளும்படிக்கு வேண்டிக் கொள்வதுடன், அனைவரும் பக்திவிருத்தியும் தேவகிருபையும் பெற்று சபையிலும் உலகத்திலும் பிரகாசிக்க வேண்டுமென்று கர்த்தருடைய நாமத்தில் வாழ்த்துகிறேன்.

***பாஸ்டர் T. மேத்யு***
***13.11.98***

# பொருளடக்கம்


| பகுதி | அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|---|
| I | 1. | ஆசரிப்புக்கூடாரம் ஏற்பட்ட சூழ்நிலை | 11 |
| | 2. | பலிகளின் கூடாரம் | 13 |
| | 3. | ஆசரிப்புக்கூடாரத்தின் நாமங்கள் | 16 |
| | | (1) கூடாரம் | |
| | | (2) ஆசரிப்புக்கூடாரம் | |
| | | (3) ஆலயம் | |
| | | (4) கர்த்தருடைய வீடு | |
| | | (5) கர்த்தருடைய கூடாரம் | |
| | | (6) சாட்சியின் கூடாரம் | |
| | | (7) சாட்சியின் வாசஸ்தலம் | |
| | | (8) பரிசுத்த ஸ்தலம் | |
| II | 4. | **ஆலயங்களின் வரலாறு** | 18 |
| | | (1) ஆசரிப்புக்கூடாரம் | |
| | | (2) சாலமோனின் ஆலயம் | |
| | | (3) செருபாபேலின் ஆலயம் | |
| | | (4) ஏரோதுவின் ஆலயம் | |
| | | (5) கிறிஸ்தவ சபையாகிய ஆலயம் | |
| | | (6) மகா உபத்திரவகாலத்து ஆலயம் | |
| | | (7) ஆயிர வருட ஆட்சி காலத்து ஆலயம் | |
| | | (8) புதிய பூமியின் ஆலயம் | |
| III | | **ஆசரிப்புக்கூடாரத்தின் அமைப்பு** | 32 |
| | 5. | தேவ சித்தம் வெளிப்பட்ட கூடாரம் | 32 |
| | 6. | கொடுங்கள் அப்பொழுது | 36 |
| | 7. | உன்னத அழைப்பு - பெசலெயேல் அகோலியாப் | 37 |
| | 8. | முப்பகுதி ஆலயம் - ஒப்பனைகள் | 38 |
| | 9. | பிராகாரம், பரிசுத்தஸ்தலம், மகாபரிசுத்தஸ்தலம் | 41 |
| | 10. | மூன்று வாசல்கள் | 45 |
| IV | | **கட்டுமானப்பணிகள் - பிராகாரம்** | 46 |
| | 11. | பிராகாரம் - தூண்கள் | 48 |
| | 12. | தொங்குதிரைகள் | 52 |
| | 13. | பிராகார வாசல் | 53 |
| | 14. | நான்கு வகை நூல்கள் | 55 |
| | 15. | கூடார முளைகள் | 58 |
| | 16. | கயிறுகள் | 62 |
| | 17. | ஆசரிப்புக்கூடாரத்தின் தரை | 65 |
| | | **பிராகாரத்துப் பணிமுட்டுகள்** | |
| | 18. | வெண்கல பலிபீடம் | 68 |
| | 19. | வெண்கலத்தொட்டி | 80 |

V **கட்டுமானப்பணிகள் - பரிசுத்தஸ்தலம்**
20. பரிசுத்தஸ்தலம் ..... 85
21. வாசல் திரைச்சீலை ..... 86
22. நிமிர்ந்து நிற்கும் பலகைகள் ..... 88
**பரிசுத்தஸ்தலத்துப் பணிமுட்டுகள்**
23. சமூகத்து அப்ப மேஜை ..... 93
24. சமூகத்து அப்பங்கள் ..... 99
25. குத்துவிளக்கு ..... 107
26. தூபபீடம் ..... 115
27. தூப கலசம் ..... 119
28 சுகந்த தூபவர்க்கம் ..... 123

VI **மகா பரிசுத்த ஸ்தலத்துப் பணிமுட்டுகள்**
29. உடன்படிக்கைப் பெட்டி ..... 127
30. பெட்டிக்குள்ளிருக்கும் பொருட்கள் ..... 136
31. கிருபாசனம் ..... 141

VII **மூடுதிரைகள்**
32. நால்வகை நூல் மூடுதிரை ..... 145
33. ஆட்டுமயிர் மூடுதிரை ..... 148
34. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்மூடி ..... 150
35. தகசுத்தோல் மூடி ..... 152

VIII **பொது விஷயங்கள்**
36. மரமும் உலோகமும் ..... 153
(1) சீத்திம் மரம்
(2) வெண்கலம்
(3) வெள்ளி
(4) பொன்
(5) இல்லாத உலோகம் - இரும்பு
37. மகாபிரதான ஆசாரியன் ..... 164
38. ஆசாரியத்துவ வஸ்திரங்கள் ..... 171
39. (1) ஆசாரியனின் பங்கு பலிகள் ..... 185
(2) லேவியரின் பங்கு தசம பாகம்
40. மெல்கிசேதேக்கின் முறைமை ..... 191
41. (1) நியாயப்பிரமாணமும் - கிருபைப் பிரமாணமும் ..... 195
(2) ஆசரிப்புக்கூடாரமும் - தேவ சபையும்
(3) சாகாதபடிக்கு
42. மோசே ஆரோன் - வம்சாவழி ..... 199
43. (i) பாளயத்தின் அமைப்பும் பயணமும் ..... 202
(ii) பயணத்தில் கூடாரம் - கோகாத், கெர்சோன், மெராரி
(iii) பயணத்தின் ஒழுங்குகள் - பூரிகை, கொடி
44. பிரதிஷ்டை - லேவியன் - ஆசாரியன் - கூடாரம் ..... 214
45. பரலோகக் கூடாரம் ..... 219

# இஸ்ரேலிய ஆசரிப்புக்கூடாரம்

**பகுதி I** **அதிகாரம் 1**

## ஆசரிப்புக்கூடாரம் ஏற்பட்ட சூழ்நிலை

ஆதியிலே வானத்தையும், பூமியையும் உண்டாக்கின தேவன் மகிமையில் மிகுந்தவராக மறைந்திருப்பதை விரும்பவில்லை. நாட்டு பாஷையில் சொன்னால் அவருக்கு அவ்வித வாழ்க்கை "போர்" அடித்தது. மனிதனை விட்டுப் பிரியாத உள்ளத்தின் அன்பு அவரை நெருக்கி ஏவியது. ஆம்! தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் அன்புடன் பேசவும், பழகி வாழவும் ஒரு கூட்டம் மக்களை உண்டாக்க திட்டமிட்டார். இதற்காக அவருக்கு வெகுதிரளான விண்மயமான தூதர்கள் இருந்தனர். ஆனால் அவர்களில் அவர் திருப்தியடையவில்லை. ஏனென்றால்,

1. அவர்கள், அவருடைய வேலைக்காரரும், பணிவிடை ஆவிகளுமாவர்.
2. தூதர்கள் வசம் பூமியை ஆளும்படி கொடுத்திருந்தும் தூதரில் தலைவனாகிய லூசிபரும், ஒரு கூட்டம் தூதரும் கலகம் பண்ணி பாவம் செய்தனர். அது முதல் அவர் தூதர்களை நம்புவதை விட்டு விட்டார். *(யோபு 4 : 18)* எனவே, மனிதரை உருவாக்கினார்.

அத்திட்டத்தை நிறைவேற்ற, மக்களை சிருஷ்டிக்கும் முன்னே மக்கள் வசிக்க, இடத்தை ஆயத்தம் பண்ண வேண்டுமென்று முடிவு செய்தார். தாம் உண்டாக்கின கிரகங்கள், கோளங்கள், நட்சத்திரங்கள் அனைத்திலும் பூமியை அதற்காகத் தெரிந்து கொண்டார். அப்போது பூமியானது வெறுமையும், பாழுமாக இருந்தது. ஆதி. *1 : 21-32.* எனவே மனிதன் குடியிருப்புக்கு ஏற்றவிதமாக பூமியை சீர்ப்படுத்தினார். இப்பணியை முடிக்க தேவனுக்கு *6* நாட்கள் தேவைப்பட்டது. அவனுக்கு வேண்டிய வெளிச்சம், தண்ணீர், காற்று, மரம், செடி, கொடிகள், காய் கனிகள், பறவை, மச்சம், மிருகம் முதலிய யாவையும் உண்டாக்கினார்.

பின்பு ஆறாவது நாளில் தமது சித்தத்தின்படி மனிதனையும் படைத்தார். தமது திருவுளத்தை அவனில் வடிவமைத்தார். தனது வேலை வெற்றியாயிற்று என ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து பூரித்தார். யாத். *31 : 17.* தேவனுடைய அமைதி வெகுகாலம் செல்லவில்லை. மனிதன் மீறினான். அவனை தோட்டத்திற்கு வெளியே துரத்தினார். தேவன் மனிதனோடு உள்ள உறவைத் துண்டித்துக் கொண்டார். மனிதனும் தனிமையானான். இனி என்ன செய்வது? ஐக்கியம் நஷ்டப்பட்டது. இவ்வாறு *2451* ஆண்டுகள் தேவனும், மனிதனும் பிரிந்து வாழ்ந்தனர். அந்தக் காலத்தின் விவரமானது:

ஆதாம் முதல் நோவாவின் *500* - ம் வயது வரை .......... *1556*
நோவாவுக்கு *500* - வயதில் சேம் பிறந்தது முதல்
ஆபிரகாமின் *75* - வயதில் தேவ அழைப்பு வரை ............... *465*
அது முதல் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு
சீனாய் மலையில் ஆசரிப்புக்கூடார அமைப்பைப்
பெற்றது வரை ............................................................. *430*
மொத்த வருடங்கள் ........................................................ *2451*

இத்தனை நீண்ட காலம் தேவன் மனிதனோடு நேரடியாக அதிகாரப் பூர்வமான தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை என்ற போதிலும் சங். *14 : 2*ன்படி தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க தேவன் மனுபுத்திரரை கண்ணோக்கினார். சங். *14 : 3* ன்படி எல்லாரும் வழி விலகி ஏகமாய் கெட்டுப் போயிருந்தனர்.

இச்சங்கீதத்தைத் தாவீது இயற்றும்போது ஆதாம் பாவம் செய்த பின் *3050* வருடங்கள் கடந்து போயிருந்தது. இது தாவீதின் காலத்தைக் குறித்த ஒரு வெளிப்படுத்தல் மட்டுமல்ல, ஆதாம் பாவம் செய்தது முதல் வழி விலகிக் கெட்டுப்போன மக்களுள் எவனாவது தன்னைத் தேடுகிறானா என்று தேவன் தேடிப்பார்த்து வந்த வரலாறு தான் தாவீது ஆவியில் நிறைந்தபோது வெளிப்பட்டு வந்தது. அவ்வாறு தம்மைத் தேடுகிற மக்களுக்கு அவர் ஆயத்தம் பண்ணின இரட்சிப்பின் மார்க்கமாகும் ஆசரிப்புக் கூடாரம்

*1.* ஆபேல் தன் மேன்மையான பலியினால் கர்த்தரைத் தேடினதைக் கண்டு அவர் பலியை அங்கீகரித்தார். *(ஆதி. 4 : 1-4)*

*2.* சேத் கர்த்தருடைய நாமத்தில் அவரை ஆராதிக்க ஏற்பாடு செய்ததையும் அவர் கண்டார். *(ஆதி. 4 : 26)*

*3.* நோவா அன்றிருந்த உலக மக்களுடைய அக்கிரமங்களுக்கு உடன் படாமல் கர்த்தருக்குப் பயந்து ஜீவிப்பதை அவர் கண்டார். பிரளயத்தில் காப்பாற்றினார். ஆதி. *6-9* அதிகாரங்கள்.

*4.* ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரை, அழைத்த அழைப்பில் அவர்கள் உண்மையாயிருந்ததைக் கண்டு, பெருமிதம் கொண்ட கர்த்தர் ஏராளமான வாக்குத்தத்தங்களையும் கொடுத்தார்.

*(அ)* இவ்வாறு அநேக மக்கள் தம்மைத் தேடுகிறதைக் கண்ட தேவன் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தத் தெரிந்துகொண்ட அமைப்பாகும் ஆசரிப்புக்கூடாரம்.

*(ஆ)* இயேசு கூறிய கெட்ட குமாரனின் உவமையில் இந்த நிகழ்ச்சியையும் உள்ளடக்கித் தான் இயேசு கூறினார். தமது சமூகத்தை விட்டு வெகுதூரம் சென்று தன்னையும் ஆஸ்தியாகிய பூமியையும், அழித்த போதிலும், அவன் புத்தி தெளிந்து திரும்பி வந்தபோது, கொழுத்த கன்றை அடித்து தேவன் ஏற்பாடு செய்த விருந்து வீடாகும் ஆசரிப்புக்கூடாரம். அந்தக் கன்றைத்தான் ஆசரிப்புக்கூடாரத்தின் பலி பீடத்திலும், கடைசியாக சிலுவையிலும் கண்டோம்.

(இ) தம்மைவிட்டுப் பிரிந்துபோன மக்களோடு எப்படியும் உறவுகொள்ள முடியாத நிலைமை தேவனுக்கு ஏற்பட்டது. அவருடைய பரிசுத்தத்தின் வலிமையினால் மனிதனை தீண்டமுடியாதவரானார். மனிதனும், தேவனும் சத்துருக்களாயினர். ஆனாலும் கைப்படைப்பாகிய மக்களுடன் தொடர்பு கொள்ள அவருடைய அன்பு உள்ளம் துடித்தது. இந்நிலையில், மனிதனும் தேவனுடைய அன்பை சம்பாதிக்க, ஆராதனைகள், பலிகள் மூலம் துடிப்பதையும் அவர் கண்டார். இரண்டு சத்துருக்கள் இணைவதற்கு துடியாய் துடித்ததின் விளைவாக ஏற்பட்ட சமரசமன்றம் ஆகும் ஆசரிப்புக் கூடாரம். இவ்வாறாக தேவனும், மனிதனும் பகையை மறந்து ஒற்றுமையாய் வாழ விரும்பிய சூழ்நிலையில் தான் ஆசரிப்புக்கூடாரம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது.

### அதிகாரம் 2

# பலிகளின் கூடாரம்

ஆதாம் பாவம் செய்தது முதல் பாவ பரிகார பிரச்சனை எழும்பிற்று. பாவம் எங்கே உண்டோ அங்கே பலியும் தேவைப்பட்டது. ஏனென்றால் இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது என்பது தேவனுடைய மாறாத பிரமாணம். இரத்தம் சிந்திய பலிக்கு கீழ்வரும் காரியங்கள் தேவை.

1. பாவம் செய்த பின் மனஸ்தாபப்படுகிற ஒரு மனிதன்
2. பலியாக ஒரு பாவமில்லாத மிருகம்
3. பலியிட ஒரு அங்கீகாரமுள்ள பீடம்
4. பலி செலுத்த பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரு ஆசாரியன்

இவை அனைத்தும் ஒரு இடத்தில் சந்திக்க வேண்டும். விசேஷமாக ஆசாரியன் ஒருவன் பாவம் செய்தவர்கள் இருக்கும் இடங்களைத் தேடிச் சென்று பலியை செலுத்துவது இயலாது. பாவி தான் பலிபீடத்தைத் தேடிச்செல்ல வேண்டும். அந்த இடம் தான் ஆசரிப்புக்கூடாரம். இயேசு கிறிஸ்து தாமே பலியாகி, இன்று மகா பிரதான ஆசாரியனாக கிருபாசனத் தின் மேல் வீற்றிருக்கிறார். 'வாருங்கள்' என அழைக்கிறார். மீத். *11 : 28* வரவேண்டியது மனிதனின் கடமை. வருகிறவன் விடுதலை பெறுகிறான்.

**மனசாட்சிக்காலம் :-** ஆசரிப்புக்கூடாரத்திற்கு முந்திய பலிகள்

ஆதியில் இருவரும் பாவம் செய்தது முதல் வனாந்திரத்தில் ஆசரிப்புக் கூடாரம் அமைக்கப்பட்டது வரை ஒரு குறிப்பிட்ட ஆசாரியனோ, தனிப்பட்ட பலிபீடமோ இருந்ததில்லை. அவரவர் தங்கள் மனச்சாட்சியின்படி பலிகளைச் செலுத்தி வந்தனர். நன்றியறிதலுக்கான பலியானாலும், பாவ பரிகார பலியானாலும் பலியைக் கொண்டு வருகிறவனே பலியை செலுத்தும் ஆசாரியனாகவும் அமைந்தான்.

1. காயீன் தன் மனசாட்சிப்படி ஒரு பலியை செலுத்தினான். அதை தேவன் அங்கீகரிக்கவில்லை.

2. ஆபேல் தன் மனசாட்சிப்படி ஒரு பலியை செலுத்தினான். அதை தேவன் அங்கீகரித்தார். இந்த இரண்டு பலிகளும் செலுத்தப்படும்போது பலி பற்றிய எந்த விதியும் கொடுக்கப்படவில்லை. ஆனால் காயீனின் பலியை தேவன் ஏற்க மறுத்ததினால் அங்கீகாரத்திற்கு ஏதோ விதியை வைத்திருந்தார். தேவனுடைய மனதில் இருந்த விதிப்படி அது இல்லாதிருந்ததினால் தான் தேவன் அதை ஏற்கவில்லை என உறுதியாகிறது. தேவனும் அவனுக்கு ஒரு வாய்ப்பை அளித்தவண்ணம் (ஆதி. *4 : 7*) நீ இன்னமும் நன்மை செய்யலாமே. பாவம் (பாவ நிவாரண பலி) வாசற்படியிலேயே இருக்கிறது. (ஒரு ஆடு) அதை பலியிடலாமே என்றார். அவன் அதை ஒப்புக்கொள்ளவில்லை. எனவே தேவன் தமது மனதில் இருந்த பிரமாணங்களை வெளிப்படையாக்கிக் கொண்டார். அதன் விளைவே ஆசரிப்புக்கூடாரம். அங்கே பலி குறித்த சகல பிரமாணங்களும் மிக நுட்பமாக கொடுக்கப்பட்டது.

3. நோவாவின் பலி ஒரு ஸ்தோத்திர பலியாக இருந்தது. பிரளயத்தில் தேவன் காப்பாற்றியதற்கு நன்றியாக அதை செலுத்தினார். அவர் தனது மனச்சாட்சிப்படி அதை செலுத்தினார். பிரமாணங்கள் கொடுக்கப்படாதிருந்த போதிலும் அவரது பலி தேவ சித்தப்படி இருந்ததினால் தேவன் அதன் வாசனையை முகர்ந்தார். (ஆதி. *8 : 21*) அவ்வாறு தேவன் தமது அங்கீகாரத்தை வெளிப்படுத்தினார்.

4. அடுத்ததாக ஆபிரகாமின் பலிகளைக் காண்கிறோம். அவர் கானானில் வந்து சேர்ந்தபோது தேவன் தரிசனமாகி இந்த தேசத்தைத் தருவேன் என்றார். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தைக் கட்டினார். ஆதி. *12 : 5-7*. இது தான் கானான் தேசத்தில் செலுத்தப்பட்ட முதலாவது பலி. வெளியுலகில் நிகழ்ந்த பலிகள் நகர்ந்து கானான் தேசத்தை அடைந்தது. அப்படி இருக்க ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கைப் பலியிட தேவன் சொன்னார். ஆபிரகாமை சோதிக்கக் கொடுத்த இந்தப்பலிக்கு ஒரு இடத்தை தேவன் குறித்தார். மோரியா மலை. எருசலேமில் கட்டப்பட்டதும் பின்பு ஆசரிப்புக்கூடாரம் அமையப்பெற்றதுமான இடம் இதுதான் என்பது வேத ஆராய்ச்சியாளர்களின் கருத்து. (ஆதி. *22*) ஆதி. *15 : 7-10*) வரையில் உள்ள பலியில் சில குறிப்பிட்ட ஜீவன்களை தேவன் கொண்டுவரும் படியாகச் சொன்னார். இவ்வாறு பலிக்குரிய பொருட்கள், இடம் ஆகியவற்றை படிப்படியாகக் குறித்த தேவன் மற்ற எல்லாப் பிரமாணங்களையும் ஒருங்கிணைத்து வழங்கிய இடமாகும் ஆசரிப்புக்கூடாரம்.

## அதிகாரப்பூர்வ பலி

மேலும் அவர்கள் மனச்சாட்சிப்படி பலி செலுத்துவதை நீக்கி பலிகளெல்லாம் குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட

ஆசாரியன் மூலம் செலுத்தப்படுவதற்காக ஆசரிப்புக்கூடாரத்தை ஏற்படுத்தினார்.

*1.* ஒவ்வொரு பலிக்கும் உரிய பிரமாணங்கள் கொடுக்கப்பட்டன. சர்வாங்க தகனபலிக்குரிய பிரமாணம் *(லேவி. 6 : 9-13)* போஜனபலி *(லேவி. 2)* சமாதானபலி *(லேவி 3)* பாவநிவாரணபலி *(லேவி 4)* குற்ற நிவாரணபலி *(லேவி 5)*

*2.* குறிப்பிட்ட இடத்தில் பலியைச் செலுத்த வேண்டும். அத்துடன் கண்ட இடமெல்லாம் உன் சர்வாங்க தகனபலிகளை இடக்கூடாது. (உபா. *12 : 13)* என்ற ஒரு தாக்கீதும் கொடுக்கப்பட்டது. அதினிமித்தம் ஆங்காங்கு சிதறுண்ட பலிகளை ஓரிடத்தில் சேர்த்து பலிகளுக்கு ஒரு அமைப்பை ஏற்படுத்தினார்.

*3.* பலியைக் கொண்டு வருகிறவரே பலியை செலுத்துபவராக இனிமேல் இருக்க முடியாது. செலுத்துவதற்கென ஒரு தனி அதிகாரியை தேவன் நியமித்தார். அவர் அதற்குரிய அதிகாரி (Officer)ஆனார். அவரது பதவிப் பெயராகும் ஆசாரியன். (Priest) இனி மற்றவர்கள் செலுத்துவது அங்கீகாரம் பெறாது. இதற்கு மாறாக யெரொபெயாம் என்ற அரசன் ஈனமானவர்களை ஆசாரியனாக்கினான். *1* இரா. *12 : 31; 13 : 1.* அவனே ஆசாரியப் பணியைச் செய்தான். தேவன் அவனைத் தண்டித்து பலிபீடம் வெடித்துச் சிதறும்படி செய்தார். அதிகாரப்பூர்வ ஆசாரியத்துவத்தை தேவன் மேன்மைப்படுத்தினார்.

*4.* பலிபீடம் நியமிக்கப்பட்டது. ஆசரிப்புக்கூடாரத்தை மூன்று பாகமாகப் பிரித்து வெளிப்பாகத்தில் *(பிராகாரத்தில்)* பலிபீடம் வைக்கப்பட்டது. அது செய்யப்பட வேண்டிய மரம், வெண்கலம், அதன் அளவுகள், அதன் உறுப்புகள் எல்லாமே தேவனால் நிர்ணயிக்கப்பட்டது. மனுஷசித்தம் அங்கே முறியடிக்கப்பட்டது. சகலமும் தேவ சித்தப்படியும், அதிகாரப்படியும் செய்யப்பட்டது.

*5.* பலியைச் செலுத்தும் முறைமையையும் தேவனே நியமித்தார். பலி மிருகம் கொல்லப்பட்டு, தோலுரிக்கப்பட்டு சந்து சந்தாக துண்டித்து பலிபீடத்தில் அடுக்கி வைத்த கட்டைகளின் மேல் துண்டங்கள் அடுக்கி வைக்கப்பட வேண்டும். அதன் கொழுப்பை என்ன செய்ய வேண்டும்? அதன் ஜவ்வை என்ன செய்ய வேண்டும் என்று கூட தேவன் கட்டளையிட்டார். அதன் வயிற்றில் இருக்கும் சாணியை கொட்டிவிட வேண்டிய இடம் வரையில் குறிக்கப்பட்டது. இவ்வாறு சகலமும் தேவனுடைய பிரதிநிதியாக ஆசாரியனின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததால் அது அதிகாரப்பூர்வ பலியாயிற்று. (Official Sacrifice) ஆசரிப்புக் கூடாரம் பலிகளின் கூடார மாயிற்று. பலிகளின் திரட்சியினாலும், பலிகளின் அதிகாரத்தினாலும், இப்பெயர் அதற்குப் பொருத்தமாயிற்று.

## அதிகாரம் 3

# ஆசரிப்புக்கூடாரத்தின் நாமங்கள்

ஆசரிப்புக்கூடாரத்தின் எட்டு பெயர்களும் அதன் பண்புகளைச் செவ்வனே வெளிப்படுத்துவதாக உள்ளது.

**1. கூடாரம்** - TENT யாத். *39 : 33, 36 : 14*

திடமான அஸ்திபாரமில்லாத் தன்மையை இப்பெயர் புலப்படுத்துகிறது. எளிதில் பிரித்துப் பெயர்த்து மாற்றும் வசதி கொண்டதாகும் கூடாரம். ஆதியில் மனிதர்களும், கூடாரங்களிளேயே வாழ்ந்தனர். கூடாரம் அற்பமான துவக்கமாகும். தேவனும் தமது ஆலயத்தை அற்பமாகத் துவக்குகிறார். அது புதிய எருசலேமாகிய மகிமையின் மோட்ச நிலையான வீட்டில் முடிவுறும். கூடாரம் நிலையில்லாத இம்மை வாழ்வைப் பரதேசியின் வாழ்க்கை என நினைப்பூட்டவும் செய்கிறது.

ஆலயங்கள் மற்றும் ஸ்தாபனங்கள் மீது வெறி கொள்ளாமல் புதிய எருசலேமாகிய ஆலயம் வரும் வரையில் தேவ ஆலயங்களெல்லாம் கூடாரத்தன்மையுடையனவே என அறியச் செய்கிறது இப்பெயர்.

**2. ஆசரிப்புக்கூடாரம்** - TABERNACLE லேவி. *1 : 1*
இந்தக் கூடாரத்தில் பலி செலுத்துதல், தூபம் காட்டுதல், விளக்கேற்றுதல், சமூகத்தப்பம் வைத்தல், பாதசுத்தி செய்தல், இரத்தம் தெளித்தல் போன்ற அநேக காரியங்கள் தொடர்ச்சியாக காலமுறைப்படி செய்வதே ஆசரிப்பு. யூதர்களுடைய ஆசரிப்புகளை இந்தக் கூடாரம் நிலை நாட்டியது. அங்கே ஒப்வில்லாத ஆசரிப்புகள் நடைபெற்றது. தேவ சபையிலும் ஊழியங்களாகிய பணிகள் ஓய்வின்றி தொடரட்டும்.

**3. ஆலயம்** - TEMPLE *1* சாமு. *1 : 9*

இஸ்ரவேலர் ஆசரிப்புக் கூடாரத்தில் வந்து தேவனைத் தொழுது கொள்வது வழக்கமாயிற்று. தேவனைத் தொழுது கொள்ள மக்கள் பயன்படுத்தும் இடம் தான் ஆலயம். புதிய ஏற்பாட்டு சபையில் விசுவாசியின் சரீரமே தேவ ஆலயம். *1* கொரி. *6 : 19.*

**4. கர்த்தருடைய வீடு** - HOUSE OF THE LORD சங். *135 : 2*

இந்த வார்த்தையை ஆலயம் என உபா. *23 : 18;* யோசுவா *6 : 24; 1* சாமு. *3 : 15* முதலிய வசனங்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மனிதனுடைய பொருட்களால் மனித கைவேலையால் செய்தபோதிலும் அது கர்த்தருடைய வீடு ஆகும். சகலத்தையும் படைத்து மனிதனுக்கு தேவன் கொடுத்தார். அதில் மனிதன் தேவனுக்கு கொடுத்ததாகும் இந்த வீடு. குடும்பமாக வாழுமிடமாகும் வீடு. இங்கே தேவன் குடும்பத்தலைவனும், ஆசாரியன் குடும்பத்துணைவியும், ஜனங்கள் பிள்ளைகளுமாவர். ஆசாரியன் என்பது மனிதருக்குத்தான். தேவனுக்கு அவன் ஊழியத்தை நடப்பிக்கிற துணை ஆள் ஆவான். எனவே இது

ஒரு நல்ல ஆன்மீக வீடாக அமைந்து விட்டது.

**5. கர்த்தருடைய கூடாரம் - TABERNACLE OF THE LORD** 1 இரா. *2 : 28*

மனிதனை கூடாரம் பரதேசியாக்கினது போல, தேவனும் இவ்வுலகில் பரதேசியைப் போலிருக்கிறார். அவர் கூடாரம் போன இடங்களுக்கு மாறி மாறி உலாவினார். *2* சாமு. *7 : 6* சாலமோன் கட்டின ஆலயம் நிலையானது என்னப்பட்டதால் *(1* இரா. *8 : 13)* முந்தின கூடாரம் தேவனுக்குத் தற்காலிகமும், நிலையற்றதுமாக இருந்தது. இயேசுவும் இல்வுலகில் தலை சாய்க்க இடமில்லாதிருந்தார். மத். *8 : 20* நிலையான பரலோக வீட்டை விட்டு நிலையற்ற பூமியில் நிலையற்ற கூடாரத்தில் உலாவியதால் இப்பெயர் பொருத்தமாகிவிட்டது. இந்தக் கூடாரம் மனிதனுக்குச் சொந்தமானதல்ல என்றும் அது கர்த்தருடையது மட்டுமே என்ற கருத்தினையும் இப்பெயர் தருகிறது. அதின் அளவுகளும், சட்ட திட்டங்களும் தேவனால் கொடுக்கப்பட்டது. அதில் வாசமாயிருப்பவரும் அவரே. அதைச் செய்ய பொருள் கொடுத்தவரும், பணி செய்தவரும் அதில் சேவை செய்கிற ஆசாரியன் கூட யாராக இருந்தாலும் அதில் வாசமாயிருக்கிறவருக்கே சொந்தம். அப்படியே தேவசபையும், அது தேவன் தமது சுயரத்தத்தினாலே சம்பாதித்ததாகும். அப். *20 : 28.* அது உங்களிடத்தில் உள்ளதாக இருந்தாலும் அது தேவனுடைய மந்தை என *1* பேதுரு *5 : 2* ல் காண்க.

**6. சாட்சியின் கூடாரம் -** TABERNACLE OF WITNESS எண். *17:7*

இது இஸ்ரவேலருக்கெல்லாம் ஒரு சாட்சி. உலகத்துக்கெல்லாம் சாட்சி. இது போன்ற ஒரு சாட்சியை உலகம் இதுகாறும் கண்டதில்லை. ஒரு தேவன் உண்டென்றும் சத்திய தேவனை ஆராதிப்பது மனிதனுக்கு கடமை என்றும் இக்கூடாரம் சாட்சியிடுகிறது. புதிய ஏற்பாட்டுச் சபையும் அவருடைய சாட்சியாகும். அப். *1 : 8.*

**7. சாட்சியின் வாசஸ்தலம் - TABERNACLE OF TESTIMONY** யாத். *38 : 21*

தேவனுடைய பத்து கட்டளைகளுக்கும், இதர விதிகளுக்கும் சாட்சி என்று கூறப்பட்டுள்ளது. சங். *119:2, 14, 22, 24, 26, 31, 46.* கூடாரத்திலுள்ள உடன்படிக்கைப் பெட்டியில் அவரது கற்பனையின் பலகைகள் வைக்கப்பட்டிருந்ததினால் அந்தப் பெட்டிக்கும் சாட்சிப்பெட்டி என்று பெயர். யாத். *25 : 22.* அது வாசமாயிருப்பதால் கூடாரத்திற்கும் சாட்சியின் வாசஸ்தலம் என்று பெயர். ஜீவனுள்ளவன் வசிப்பது போல தேவ கற்பனை கள் ஜீவனுள்ளதாக அங்கே வசிக்கிறது என்று பொருள். நாமும் தேவ கற்பனையின் வாசஸ் தலங்களாகக் காணப்படுவோமாக. *1* யோவான் *2 : 14.*

**8. பரிசுத்த ஸ்தலம் - SANCTUARY** யாத். *25 : 8*

ஆங்கிலத்தில் Saint (செயிண்ட்) என்பதிலிருந்தே இப்பதம் உருவானது. Sanctuary (சேங்சுவரி) என்பதற்கு பரிசுத்தமானவைகளைக் காக்குமிடம் அல்லது பரிசுத்தமானவைகளின் பண்டசாலை என்று பொருளாகும். கூடாரத்திலுள்ள அனைத்துப் பொருட்களும்

பரிசுத்தமாக்கப் பட்டன. அவைகள் பரிசுத்தப் பணிமுட்டுகள் என்று அழைக்கப்பட்டன. *1* இரா. *8 : 4;* எண். *4 : 4-19.* சாட்சிப்பெட்டி, மேஜை, குத்துவிளக்கு, பொற்பீடம் முதலியவற்றை மகாபரிசுத்தமானவை என விதிக்கப்பட்டுள்ளது. மேலும் பரிசுத்த அப்பம் *1* சாமு. *21 : 4-6.* பரிசுத்த காணிக்கை யாத். *28 : 38.* பரிசுத்த அபிஷேக தைலம் யாத். *30 : 25.* பரிசுத்த சணல் நூல் சட்டை லேவி. *16 : 4.* பரிசுத்த கிரீடம் யாத். *29 : 6.* ஆகியவற்றையும் பார்க்கையில் அதைப் பரிசுத்த ஸ்தலம் என்பது எத்தனையோ தகுதியானது! மேலும் அவைகள் உண்டாக்கப்பட்ட பின்பு பரிசுத்த அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் செய்யப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டதாம். யாத். *30 : 23-30.* அவைகள் பரிசுத்தமாயிருப்பது மல்லாமல் அவைகளைத் தொடுகிறவை களெல்லாம் கூட பரிசுத்தமாயிருக்க வேண்டுமாம்.*!* வசனம் *29.* என்னே*!* தேவன் வேண்டுகிற பரிசுத்தம்*!* அப்படியே சபையும் பரிசுத்த ஆலயமா யிருக்கிறது. எபே. *2 : 21.*

எல்லாவற்றிற்கும் மேலாக மகா பரிசுத்தமுள்ள தேவன் அதில் வாசமாயிருப்பதால் இப்பெயர் பொருத்தமாயிற்று. வெள்ளி, பொன், பணிமுட்டுகள் பரிசுத்தமாக்கப்பட்டு வைக்கப்பட்டால், பரிசுத்த ஸ்தலம் எனப்படலாம் என்றால் மகா பரிசுத்தமுள்ள தேவன் வசிப்பதால் அதை பரிசுத்த ஸ்தலம் என்னப்பட வேண்டியது எத்தனை அவசியம். அப்படியே புதிய ஏற்பாட்டு சபையும் பரிசுத்தமாயிருக்கிறது. *1* கொரி. *3 : 17.* தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது*;* நீங்களே அந்த ஆலயம்.

**பகுதி II** **அதிகாரம் 4**

# ஆலயங்களின் வரலாறு

பரலோகத்தில் தேவன் வாசம் பண்ணுகிற இடமும் அவரை ஆராதிக்கிற ஜனங்கள் கூடும் இடமும் தான் பழைய ஏற்பாட்டில் ஆலயம் என்னப் பட்டுள்ளது. "ஆதியும் அந்தமும் ஆலயமாகும்". ஆதி ஆலயம் தான் பரலோகம். பரலோகத்தை தேவன் சகலத்திற்கும் முன்னே படைத்து அதிலே வாசம் பண்ணி வருகிறார். பரலோகத்தில் எல்லா இடமும் தேவனுடைய பிரசன்னத்தினால் நிறையப்பட்டிருந்தாலும், தேவ ஆராதனை நடைபெறுகிறதும் தேவன் ஆராதனையை ஏற்க வீற்றிருக்கும் சிம்மாசனம் இருக்கிறதுமான தனி இடம் உண்டெனக் காணலாம்.

*1.* பரலோகத்தில் சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது. வெளி. *15 : 5-8.*

*2.* பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. வெளி. *11 : 19.*

*3.* பரலோகத்தின் வடபுறத்தில் ஆராதனைக் கூடத்தின் பர்வதம் ஒன்று இருப்பதாக ஏசாயா *14 : 13*ல் காண்க. இந்த பர்வதம் தான் பரலோக

ஆலயம் எனலாம்.

பரலோகத்தில் இருந்து ஆதி ஆலயம் புதியதொரு ஆலயமாக புதிய பூமியில் புதிய எருசலேமில் அடங்கி வருகிறது. வெளி. *21 : 1-3.* பின்பு தேவன் இந்த ஆலயத்தில் என்றைக்குமாக தேவ ஜனத்துடன் வாசமாயிருப்பார். புதிய எருசலேம் முழுவதுமே தேவ ஆலயமாக இருக்கும். அதிலே தேவ ஆலயம் என்று தனியாக இடம் இல்லை என்பதினாலே "அதிலே தேவ ஆலயத்தை நான் காணவில்லை" என *21 : 22* ல் கூறப்பட்டுள்ளது.

**ஏழு ஆலயங்கள்**

பரலோகமாகிய ஆதி ஆலயத்திற்கும் புதிய எருசலேமாகிய கடைசியான முடிவான ஆலயத்திற்குமிடையே எழுத்தின்படியான ஏழு தேவாலயங்களை நாம் காணலாம்.

**1. ஆசரிப்புக்கூடாரம்**

இஸ்ரவேல் ஜனங்களுடன் உறவாடும்படியாக சீனாய் மலையில் வைத்து மோசேயின் மூலமாக தேவன் ஏற்படுத்திய சில குறிப்பிட்ட ஆசாரியத்துவப் பணிவிடைக்குரிய பணிமுட்டுக்களை உள்ளடக்கி தேவ அளவுகளின்படி செய்யப்பட்டதும், எளிதில் பிரித்து மாற்றக்கூடியதுமாகிய ஒரு ஆலயமாகும் ஆசரிப்புக்கூடாரம்.

அது வரையிலும் ஆங்காங்கு நடத்தப்பட்டு வந்த ஆராதனைகளும், பலிகளும் எல்லாம் ஆசரிப்புக்கூடாரத்தில் அதிகாரப்பூர்வமாக ஒருங்கிணைக் கப்பட்டது. இது சீனாய்மலை முதல் *40* வருட வனாந்திரப் பயணம், யோசுவா முதல் சாமுவேல் வரை *16* நியாயாதிபதிகளின் *520* வருடங்கள், சவுலின் *40* வருடங்கள், தாவீதின் *40* வருடங்கள், ஆக மொத்தம் *640* வருடங்கள் இஸ்ரவேலருடைய ஆராதனை ஸ்தலமாக விளங்கியது. ஆதாமைக் கொண்டு பூமியை நிரப்பத்துவக்கியது முதல் மனிதர்களுக்கு தேவன் ஏற்படுத்திய ஆலயங்களுள் முதன்மையானது என்ற தனிச்சிறப்பு இதற்கு உண்டு. ஆதாம் பாவம் செய்தபின் துரத்தி விடப்பட்ட மனிதன் தொடர்பு கொள்ள தேவன் திறந்து கொடுத்த முதலாவது வாசலாகும் ஆசரிப்புக்கூடாரம். முக்கியமாக வனாந்திரத்தில் அடிக்கடி அதைப் பிரித்து மாற்ற அவசியமேற்பட்டதால் அதைக் கூடார வடிவில் வழங்கினார்.

*40* ஆண்டுகால வனாந்திரப் பயணத்தின் முடிவில் இஸ்ரவேலர் கானானில் குடியேறினர். கானானில் முதலாவதாக சீலோவிலே அதை நிறுத்தினார்கள். யோசுவா *18 : 1.* சாலமோன் ஆலயத்தைக் கட்டும் வரையில் அது அங்கேயே இருந்தது. சாமுவேலின் தகப்பனாகிய எல்க்கானா வருடா வருடம் சீலோவுக்குப் போய் வந்திருக்கிறார். *1* சாமு. *1 : 3.* ஏலி இங்கே ஆசாரியனாக இருந்தார். சாமுவேல் இங்கே தான் வளர்ந்தார்.

தொடர்ந்து இஸ்ரவேலருக்கும் கானானிலுள்ள ஜாதிகளுக்குமிடையே நடந்த யுத்தங்களில் அது சிதைந்து அழிவுற்றது.

ஆசாரியர்களும் அதைச் சரியாக பாதுகாவாததினால் அது பலவீனமாகிப் பழுதடைந்தது.

இதற்கிடையில் ஆசரிப்புக்கூடாரத்தின் பிரதான பணிமுட்டாகிய உடன்படிக்கைப் பெட்டியை தாவீது சீயோன் என்னும் தாவீதின் நகரத்தில் கொண்டு வந்து வைத்திருந்தார். *2* சாமு. *6 : 1-2, 11-19.* சாலமோன் ஆலயத்தைக் கட்டினபோது ஆசரிப்புக்கூடாரத்தையும் அதன் பரிசுத்த பணிமுட்டுகள் அனைத்தையும் சுமந்து கொண்டு வந்து சாலமோனின் ஆலயத்தில் வைத்தனர். *1* ராஜா. *8 : 1-10.* உடன்படிக்கைப் பெட்டியைப் பார்த்தபொழுது அதில் கற்பலகைகள் *2* மட்டுமே இருந்தன. எனவே, ஆரோனின் துளிர்த்த கோலும், மன்னா போட்டு வைத்திருந்த பொற் பாத்திரமும் காணாமற்போயின என்பதால் ஆசரிப்புக்கூடாரம் பழுதடைந்தது என அறியலாம். *1* இரா. *8 : 7-9.* இவ்வாறு ஆசரிப்புக் கூடாரத்தின் பிரதாபம் மிக்க காலம் ஒரு முடிவுக்கு வந்தது.

**2. சாலமோனின் ஆலயம்**

ஆலயங்களின் வரிசையில் மகிமை நிறைந்ததும் ஒன்றிலும் குறைவில்லாததுமாகத் திகழ்ந்தது சாலமோன் கட்டிய ஆலயம். அது வரையிலும் இருந்த கூடாரம் அதன் அசையும் தன்மையினால் சேதமுற்றது. எனவே அசையாத்தன்மையில் இதைச் செய்ய சாலமோன் திட்டம் பண்ணினார்.

தாவீது தாமே அஸ்திபாரமுள்ள ஆலயத்தைக்கட்ட விரும்பினார். தேவனோ அதைத் தடுத்தார். அப்பணியைச் செய்ய சாலமோனைத் தெரிந்து கொண்டார். தாவீதின் கைகள் அநேகருடைய இரத்தத்தைச் சிந்தினதால் அவரைத் தடுத்தார். தேவனுக்கு ஊழியம் செய்வோர் பாதகங்களிலிருந்து விலகியிருக்க வேண்டியதின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது. சாலமோன் ஆலயத்தைக் கட்டி முடிக்க ஏழு ஆண்டுகள் ஆயின. அந்த ஆலயத்தைப் போல் கீர்த்திப்பெற்ற ஆலயம் அக்காலத்தில் இருந்ததில்லை. *1* இரா. *6 : 38.*

இந்த மகத்தான ஆலயத்தின் பிரதிஷ்டையின் போது இலட்சத் திருபதாயிரம் ஆடுகளும், இருபத்தீராயிரம் மாடுகளும் பலியிடப்பட்டன. *1* ராஜா. *8 : 62, 63.* சாலமோன் அதை தேவரீர் வாசம் பண்ணத்தக்க நிலையான ஸ்தானம் என்றார். தேவன் தமது மகிமையால் அதை நிரப்பி ஆலயத்தின் மகிமையை சிறப்பித்தார்.

ஆனால் இஸ்ரவேலர் பாவம் செய்தபோது தேவன் ஆலயத்தைக் கைவிட்டார். அதை பாபிலோனியர் கையில் ஒப்புக்கொடுத்தார். கல்தேயர் அதை இடித்து, கொளுத்தி அதன் பணிமுட்டுகளையும், பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு போய் சிநெயார் தேசத்தில் உள்ள தங்கள் விக்கிரகக் கோயிலில் வைத்து விட்டனர். ஆலயத்தைப் பார்க்கிலும் ஆத்துமாக்களின் இரட்சிப்பையே தேவன் நாடுகிறார் என்று இதனால் விளங்கச் செய்தார். தன் ஆத்துமாவில் பரிசுத்தமில்லாமல் ஆலயத்தைக் குறித்துப் பெருமை பாராட்டுகிற எவரும் தரித்து நின்று

சிந்திக்கக்கடவர்கள். *2* ராஜா. *23,24;* தானி. *1 : 1-3.*

சாலமோனின் காலம் முதல் பாபிலோன் ராஜா வந்து அழிக்கும் வரையில் அது சுமார் *426* ஆண்டுகள் இஸ்ரவேலருக்கு மகிமையாக விளங்கியது. தேவரீர் தங்கத்தக்க நிலையான ஸ்தானம் என்ற சாலமோனே முடிவில் விபச்சாரியும், விக்கிரக சேவைக்காரனுமானான்! தேவ ஜனம் இதைக் கண்டு எச்சரிக்கை கொள்வது நலம்!

**3. செருபாபேலின் ஆலயம்**

சாலமோன் கட்டிய ஆலயம் சுமார் *426* வருடங்கள் வாழ்ந்திருந்தது. இதற்குள் இஸ்ரவேலர் பாவம் செய்து தேவனுக்கு கோபமூட்டவே, அவர் பாபிலோனின் இராஜாவின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தார். தேவனால் கைவிடப்பட்ட இஸ்ரவேலர் அடைந்த ஆக்கினையின் கண்ணீர் அஞ்சலி தான் புலம்பலின் புத்தகம். ஜனங்களை ஒடுக்குவதுடன் பாபிலோனிய அரசனாகிய நேபுகாத்நேச்சார் நின்று விடவில்லை. தேவ ஆலயத்தை இடித்து நொறுக்கினான், சுட்டெரித்தான். ஆபிரகாம் முதற் கொண்டு இஸ்ரவேலர் காணா நிந்தையின் சோகக்கதையை எரேமியா *52*ல் காணலாம். அதில் *13* முதலுள்ள சில வசனங்களை கீழே படியுங்கள்.

"அவன் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரண்மனையையும், எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும் ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டான். கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வெண்கலத்தூண்களையும், ஆதாரங்களையும், வெண்கல கடல் தொட்டியையும், கல்தேயர் உடைத்துப்போட்டு, அவைகளின் வெண்கலத்தையெல்லாம் பாபிலோனுக்கு எடுத்துக் கொண்டு போனார்கள். செப்புச்சட்டிகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், வெட்டுக்கத்திகளையும், கலயங்களையும், ஆராதனைக்குரிய சகல பணி முட்டுகளையும் எடுத்துக்கொண்டு போனார்கள். பசும் பொன்னும், சுத்த வெள்ளியுமான கிண்ணங்களையும், தூபகலசங்களையும், கரகங்களையும் காவற்சேனாதிபதி எடுத்துக்கொண்டான்."

இவ்வாறு ஏற்பட்ட சிறையிருப்பு *70* ஆண்டுகள் நீடித்தது. இதற்குள் பாபிலோனிய கொடுங்கோலாட்சியை மேதியனாகிய தரியு கைப்பற்றினான். தானி. *5 : 30,31.* தரியு அரசன் மேதிய-பெர்சிய இராஜாக்களின் கூட்டாட்சியை ஏற்படுத்தினான். அப்படியிருக்க பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் கர்த்தருடைய ஆலயத்தைத் திரும்ப எடுப்பித்துக் கட்டவேண்டுமென்று கட்டளையிட்டான். *2* நாளா. *36 : 22-23.* இந்தக் கட்டளையை தேசமெங் கும் விளம்பரம் பண்ணினபோது யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சார் (செருபாபேலின் பாபிலோனிய நாமம் எஸ்றா *1 : 8)* இந்த பொறுப்பை ஏற்றார்.

உடனே செருபாபேல் வெகு திரளான *4986* மனிதரை *8139* மிருகங்களுடன் எருசலேமுக்கு அழைத்துக்கொண்டு வந்தார். (எஸ்றா *1-3* அதிகாரம்) அவர் எருசலேமில் தேவாலயத்தை அதன் ஆதி

மேன்மையில் கட்டுவித்தார். இது தான் செருபாபேலின் ஆலயம். இந்த ஆலயம் கி. மு. *515*ல் கட்டி முடிக்கப்பட்டது. இந்த ஆலயம் கட்டப்படும் போது இருந்த தீர்க்கதரிசிகளாவர் ஆகாய் மற்றும் சகரியா. எஸ்றா *6 : 14, 22*. ஆலயத்தைக் கட்டிமுடித்து பிரதிஷ்டை செய்து பஸ்காவையும் ஆசரித்தனர். ஆலயப் பணிகளுக்கு மேதியனாகிய தரியுவும் பெர்சிய ராஜாவாகிய கோரேசும் ஒத்தாசை செய்தனர். ஆனாலும் இந்த ஆலயத்தின் பிரதாபமிக்க வாழ்நாள் குறுகியதாக போயிற்று.

இஸ்ரவேலர் திரும்பவும் பாவம் செய்து தேவ சாபத்திற்குட்பட்டனர். அப்போது சீரியா (Syria) நாட்டின் அரசனாக இருந்த எப்பிபேனஸ் என்று மறுபெயருள்ள அந்தியோக்கஸ் எருசலேமின் மீது படையெடுத்துப் படுகொலை செய்தான். இது கி. மு. *170* ல் நடந்தது. தேவ ஆலயத்து பலிபீடத்தின் மேல் தன் தேவனாகிய ஜூப்பிடரின் சிலையை நிறுவினான். யூதர்களுக்கு அருவருப்பான மிருகமாகிய பன்றிகளை பலிபீடத்தின் மேல் பலியிட்டான். யூதர்களை ஆத்திரமூட்டவும், இழிவுபடுத்தவும் அவன் இதைச் செய்தான். இவ்வாறு ஆலயம் தீட்டுப்பட்டதாக எண்ணப்பட்டதால் யூதர்களே அந்த ஆலயத்தை விரும்பாத நிலைமை தொடர்ந்தது. இந்த ஆலயம் கி. மு. *20* வரையில் *495* ஆண்டுகள் வாழ்ந்திருந்தது.

**4. ஏரோதுவின் ஆலயம்**

இவன் மகா ஏரோது என அழைக்கப்பட்டான். அந்தியோக்கஸ் எப்பிபேனஸ் தீட்டுப்படுத்தியதால் இழிநிலையில் இருந்த செருபாபேலின் ஆலயத்தை இவன் இடித்து நொறுக்கினான். அதன் ஸ்தானத்தில் அதைவிடப் பெரிய அளவுகள் கொண்ட ஒரு ஆலயத்தை மகா ஏரோது கட்டினான் என யூசிபியஸ் என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். கி. மு. *20*ல் துவங்கிய ஆலயத்தின் பணி சுமார் கி. பி. *26* ல் முடிவடைந்தது. எனவே இதைக்கட்ட *46* வருடங்கள் ஆனது என யூதர்கள் இயேசுவிடம் வாதாடினர். (*யோவான் 2 : 20*) இயேசு தனது பகிரங்க ஊழியத்தைத் துவக்கும்போது ஆலயம் கட்டப்பட்டு முடிந்திருந்தது.

இந்த ஏரோதுதான் இயேசு பிறக்கும்போது ஆட்சியில் இருந்தவன். கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் வந்து யூதருக்கு ராஜா பிறந்திருக்கிறார் என்று சொன்னபோது நடுங்கினவனும், பெத்லகேமிலுள்ள ஆண்குழந்தைகளை கொலை செய்தவனும் இவனே. ஏரோது என்பது பாலஸ்தீனாவை ஆண்ட இதுமேய அரச பரம்பரையின் பட்டப்பெயர் ஆகும். இவன் கி. மு. *37* முதல் கி. பி. *4* வரை அரசாண்டான்.

ஏரோதுவின் இந்த ஆலயத்தில் தான் சகரியா தரிசனம் பெற்றான். லூக்கா *1 : 5-22*. இயேசுவை மரியாள் ஆலயத்திற்கு கொண்டு வந்து புறாக்களை பலி செலுத்தி ஒப்புக்கொடுக்க வந்தபோது சிமியோன் இயேசுவை கைகளில் ஏந்தி ஆசீர்வதித்ததும் இங்கே தான். லூக்கா *2 : 22-30*. *12* வயதில் இயேசு அமர்ந்திருந்து போதகர்களுடன் வாதாடியதும் இந்த

ஆலயமே. விற்கிறவர்களையும், வாங்குகிறவர்களையும் காசுக்காரர்களையும் அடித்துத் துரத்தி இயேசு சுத்தம் செய்த ஆலயம் இதுவே. கடைசியாக ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும் என இயேசு எச்சரிக்கை செய்ததும் இந்த ஆலயமே. மத். *24 : 2*.

இயேசு கூறியது போலவே இந்த ஆலயத்திற்கு சம்பவித்தது. அது பெருங் கற்களால் கட்டப்பட்டது ஆகும். அதன் காலம் நீடித்திருக்கவில்லை. கிரேக்க மகா மன்னர் அலெக்சாண்டர் யூதருக்கு ஆதரவாக இருந்தார். கி. மு. *330* ல் அவர் மரணமடைந்த பின்னர் சீரியா மன்னர்கள் இஸ்ரவே லரைப் பாழ்கடித்தனர். தொடர்ந்து ரோம் நாட்டு ஆதிக்கம் வலுத்தது. பாபிலோனிய பாரம்பரிய விக்கிரக மார்க்கத்தில் வந்த ரோம் ஆட்சியை யூதர்கள் பகைத்தனர். இயேவின் காலத்திலேயே ரோமின் ஆளுகைக்கு எதிராக புரட்சிகள் துவங்கியிருந்தன. ரோமன் ஆட்சிக்கெதிராக போராடிய ஒரு புரட்சிக்கட்சியாகும் செலோத்தே என்பது. இயேசுவின் சீடனாகிய சீமோன் பேதுரு அல்லாத மற்ற சீமோன் என்பவன் இக்கட்சியிலிருந்து வந்தவராகும். *(லூக்கா 6 : 15)* எனவே அவர் செலோத்தே எனப்பட்ட சீமோன் என்று அழைக்கப்பட்டார். இயேசுவுக்குப் பதிலாக விடுதலையாக்கப்பட்ட பரபாஸ் என்பவன் இந்தப் புரட்சிக் கட்சியினர் நடத்திய கலவரத்தில் கைது செய்யப்பட்டதாக வரலாறுகள் உள்ளன.

ரோமருக்கும் யூதருக்குமிடையே பகை முற்றியிருந்த காலத்தில் கி. பி. *70*ம் ஆண்டில் ரோமன் ஆட்சிபீடத்திற்கு வாரிசும் அப்போது சேனைத் தலைவனுமாக இருந்த தீத்து ராயன் எருசலேமை முற்றுகையிட்டான். ஆயிரக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர். யூதருக்கு ஏரோது கட்டிக் கொடுத்த ஆலயம் இடித்து நொறுக்கப்பட்டது, தீக்கொளுத்தப்பட்டது. ஆலயத்தில் பதிக்கப்பட்டிருந்த பொன்னும், வெள்ளியும் உருகி கற்களுக் கிடையே ஓடியது. எனவே, அதனை எடுக்க ஒவ்வொரு கல்லும் புரட்டப் பட்டது. இவ்வாறு ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடி எல்லாம் இடிக்கப் பட்டுப்போகும் என்ற இயேசுவின் வார்த்தைகள் நிறைவேறலாயிற்று. இந்த ஆலயம் சுமார் கி. பி. *1* முதல் கி. பி. *70* வருடங்கள் வாழ்ந்திருந்தது. ஆலயங்களின் வரிசையில் மிகக்குறைவான காலம் இருந்த ஆலயம் இதுவே.

மேற்குறிப்பிட்ட ஆலயங்களின் பரிதாப முடிவுகளிலிருந்து நாம் அறிய வேண்டியதென்ன*?* ஆலயமல்ல, ஆலயத்தில் தொழுகிற ஆத்துமாக்களே முக்கியம் என்பது தானே*!* எப்போது ஆத்துமாக்கள் பாவம் செய்கிறார் களோ, அப்புறம் ஆலயம் தேவனுக்குப் பெரியதல்ல. சபை ஸ்தாபனங்கள் பேரில் அதிக வெறி கொண்டவர்கள் அதை அறிய வேண்டும்.

**5. கிறிஸ்தவ சபையாகிய ஆலயம்**

மேலே நாம் பார்த்த ஆலயங்கள் நான்கும் பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாணத்தைச் சார்ந்தவை ஆகும். அவையாவன.

1. ஆசரிப்புக்கூடாரம் 2. சாலமோனின் ஆலயம்
3. செருபாபேலின் ஆலயம் 4. ஏரோதுவின் ஆலயம்

இவை அனைத்தையும் பழைய உடன்படிக்கை என்கிறது வேதம்.

1. பழமையான எழுத்து ரோமர் 7 : 6.
2. பெலனற்றதும், வெறுமையுமான வழிபாடுகள் கலா. 4 : 9.
3. பெலவீனமும், பயனற்றதுமான முந்தின கட்டளை எபி. 7 : 18.
4. அது மாம்ச சம்மந்தமான கட்டளை எபி. 7 : 16.
5. நீக்கிப்போடப்பட்ட முதலாவதானது எபி. 10 : 9.
6. பழமையானதும் நாள் பட்டதுமானது எபி. 8 : 13.
7. பிழையுள்ள முதலாம் உடன்படிக்கை எபி. 8 : 7, 9, 1.
8. மனச்சாட்சியை பூரணப்படுத்தக்கூடாத பலிகள் எபி. 9 : 9.
9. சீர்திருத்தல் உண்டாகும் வரை இஸ்ரவேல் மக்களுக்கு கட்டளையிடப்பட்ட சடங்குகள். எபி. 9 : 10.

இவ்விதக் குறைபாடுகளுடன் அதைத் தொடர தேவன் அனுமதிக்கவில்லை. எனவே, புதிய உடன்படிக்கையாகிய திருச்சபையை தேவன் ஏற்படுத்தினார். இது இயேசுவின் இரத்தத்தினால் ஆன உடன் படிக்கையானதால் (மத். 26 : 28) மக்களைப் பாவமறக்கழுவி பூரணப் படுத்துகிறது. புதிய ஏற்பாட்டு சபைக்கு குறிப்பிட்ட அளவிலான கட்டிடம் இல்லை. இரண்டோ, மூன்றோ பேர்கள் என் நாமத்தினாலே எங்கே கூடினாலும் நான் அங்கே இருக்கிறேன் என்றார் நம் இயேசு பெருமான். என்றாலும் ஆங்காங்கே மக்கள் கூடி ஆராதிப்பதற்கு தேவையான அளவில் கட்டிடங்களை அமைத்துக் கொள்ளலாம். ஆனாலும் கட்டிடங்களில் தேவனாகிய கர்த்தர் வாசமாக இருப்பது இல்லை. மக்கள் அங்கே கூடும் போது அவர் அங்கே இருப்பார். மக்கள் மறுபடியும் கூடும்போது அங்கே வருவார். இவ்வாறு ஏற்பட்ட முதலாவது புதிய ஏற்பாட்டு ஆலயமாகும். பெந்தெ கொஸ்தே நாளில் 120 பேர் கூடி இருந்த மேல்வீடு. அப். 1 : 13-20; 1-3. அது ஆலயமாகும் படி கட்டப் பட்டதல்ல. ஆவியானவரும் தேவ ஜனமும் கூடி இருந்தால் கூடி இருக்கும் வரை ஆலயம் ஆக்கப்பட்டது. பின்பு பல ஊர்களிலும் ஆலயங்கள் தோன்றின.

இதற்கு கைகளால் கட்டப்பட்ட ஆலயம் ஒரு பொருட்டல்ல. ஆலயத்திற்குள் ஆராதிக்கின்ற மக்களே மெய்யான ஆலயம். அல்லது ஆலயத்திற்குள் ஆலயம் எனலாம். ஆலயத்திற்குள் ஆராதிக்கின்ற மக்கள் கூட்டமே சபை. அதிலும் எல்லாரும் இயேசுவின் வருகையில் எடுத்துக். கொள்ளப்படுவார்கள் என உறுதி கூற இயலாது, கைவிடப்பட்ட ஐந்து கன்னியர்கள் இதற்கு திருஷ்டாந்தம். எனவே, சபைக்குள் சபை என இதனை பிரித்துக் காட்ட இயலும்.

சபை என்பதற்கு மூலபாஷையாகிய கிரேக்க மொழி 'எக்லீஷியா' என்பதாகும். ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக அழைத்துப் பிரித்தெடுக் கப்பட்ட கூட்டம் என்றே அதன் பொருள். அது தான் சபை. அப்.

*2 : 47*, மத். *16 : 18*. இதற்கு கைகளினால் கட்டப்பட்ட ஆலயம் இல்லை. இரட்சிக் கப்பட்ட தேவபிள்ளைகள் தாமே ஆலயமாகும். *1* கொரி. *3 : 16*. எனவே, இதை அழிக்க எவராலும் முடியவில்லை. ஆலய கட்டிடங்களை இடித்து விட்டால் இது அழியாது. புதிய ஏற்பாட்டுச் சபையை அழிக்கலாம் என்று நினைத்து ஆலய கட்டிடங்களை இடித்துப் பார்த்தார்கள். ஆனால் தோற்றுப்போனார்கள். அல்லேலூயா! சில கிறிஸ்தவர்கள் கூட புதிய ஏற்பாட்டு சபையின் இரகசியத்தை அறியாமல் ஆலய கட்டிடங்கள் மீது பக்திவெறி கொண்டுள்ளனர். அதை வணங்குகின்றனர். அதற்குள் வந்துவிட்டால் ஆசீர்வாதம் வந்து விடும் என்கின்றனர்.

ஆனால் புதிய ஏற்பாட்டு சபையானது கிறிஸ்துவின் மற்றும் அப்போஸ்தலரின் உபதேசங்களின் மேல் கட்டப்படுகிறது. உபதேசங்கள் தான் சபையின் அளவுகள். உபதேசங்களே சபையின் எல்லை. அவை களைக் கைக்கொள்ளுகிறவன் மரித்தாலும் பிழைப்பான். உபதேசங்களை கைக் கொள்ளுகிறவனே சபையில் காணப்படுவான்.

**6. மகா உபத்திரவகாலத்து ஆலயம்**

இயேசுவின் இரகசிய வருகையில் புதிய ஏற்பாட்டு சபை பூமியிலி ருந்து மாற்றப்படும். அவர்கள் மறுரூபமாகிப் பரலோகம் சேர்ந்து விடுவார் கள். அப்பொழுது மீண்டும் யூதர்களின் காலம் துவங்கும். அது ஒரு வருடக்காலமாகும். ஏழு வருடங்கள் அந்தி கிறிஸ்து ஆளுகை செய்வான். யூதர்களுக்கு மிக உதவி செய்து ஆலயத்தைக் கட்ட அனுகூலமும் செய்வான். (தானி. *9 : 27*)

ஆனால் அந்த வாரம் பாதி *(7* நாட்கள் = *7*வருடங்கள்*)* செல்லும் போது (மூன்றரை வருடங்கள்*)* உடன்படிக்கையை மீறுவான். பலியையும், காணிக்கையையும் ஒழியப் பண்ணுவான். பரிசுத்த ஸ்தலத்தை பரிசுத்தக் குலைச்சலாக்கி அன்றாட பலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை (அந்தி கிறிஸ்துவின் சிலையை*)* அங்கே வைப்பான். *(*தானி. *11 : 30,31)* இயேசுவும் அப்படியே நடக்கும் என கூறியுள்ளார். *(*மத். *24 : 15*, மாற்கு *13 : 14)* அப்போது யூதர்களை கொடூரமாய் துன்புறுத்துவான். உலகம் உண்டானது முதல் அதுவரையிலும் கண்டிராத உபத்திரவம் அன்று உண்டாகும். (மத். *24:21)*

வெளிப்படுத்தல் *11*ம் அதிகாரத்தில் இந்த ஆலயம் இருப்பதாகக் காண்கிறோம். அது இப்போது இல்லை. இனிமேல் கட்டப்படும். அது இருந்த ஆதி ஸ்தானத்தில் இப்போது ஒரு முஸ்லீம் பள்ளி இருக்கிறது. (Mosque of Omar) அது இஸ்ரேல் தேசத்துக்குள் இருக்கிறது என்றாலும் அகில உலக இஸ்லாம் எதிர்ப்பினால் யூதர்களால் அதை இடிக்க முடியவில்லை. அது ஒரு பூமி அதிர்ச்சியிலோ, யுத்தத்திலோ அழியும் என்றும், அப்போது அங்கே யூதரின் ஆலயத்தைக்கட்டி விடலாமென்றும் இஸ்ரவேலர் காத் திருக்கின்றனர். எனவே, ஆலயத்தைக் கட்டுவதற்கு தேவையான மரம், கல், பொன், வெள்ளி முதலியவற்றை சேர்த்து

வைத்துள்ளனர். ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த உடன்படிக்கைப் பெட்டி கிடைத்திருப்பதாகவும் அதை புதியதாக கட்டப்பட இருக்கும் ஆலயத்தில் வைக்க இருப்பதாகவும் கூட செய்திகள் வந்துள்ளன.

ஆனால் ஆலயத்தைக் கட்டுவது எளிதான வேலை அல்ல. இப்போ திருக்கிற ஆலயம் பூமி அதிர்ச்சியிலோ, யுத்தத்திலோ அழிந்தால் கூட இஸ்லாம் மதத்தினரே அதை திரும்பக்கட்டிக் கொள்ள வாய்ப்பு உள்ளது. உலகமனைத்தின் வணக்கத்தையும் பெறப்போகும். (வெளி. *13 : 8).* அந்தி கிறிஸ்து போன்ற ஒருவனின் உதவியால் மட்டுமே அதைக் கட்டிக்கொள்ள முடியும். எனவே அவனோடு இஸ்ரவேலர் உடன்படிக்கை செய்வார்கள் என்பது பொருத்தமாக உள்ளது. ஏசாயா*28 : 18,* தானி. *9 : 27.*

யூதர்களுடைய ஆலயங்களின் வரிசையில் ஐந்தாவதாகத் தோன்றும் இந்த ஆலயம் மகா உபத்திரவ காலமாகிய ஏழு வருடங்கள் மாத்திரமே இருக்கும். ஆலயங்களில் மிகக்குறைவான காலம் இருப்பது இந்த ஆலயமே. அது மகா உபத்திரவ காலத்தின் முடிவில் நடக்கும் இடி, மின்னல், பூமி அதிர்ச்சிகளில் அழியும். (வெளி. *19 : 14-21)* பின்னர் இயேசுவின் ஆயிர வருட ஆட்சி நடைபெறும். அப்போது ஒரு ஆலயம் மீண்டும் கட்டப்படும்.

**7. ஆயிர வருட ஆட்சி காலத்து ஆலயம்**

ஆசரிப்புக்கூடாரம் முதல் புதிய எருசலேம் வரையில் எட்டு ஆலயங்களைக் குறித்து நாம் தியானித்து வருகிறோம். இயேசுவின் இரகசிய வருகையைத் தொடர்ந்து அந்திக்கிறிஸ்துவின் 7 வருட ஆளு கையும் நடக்கும். அதன் பின்பு இயேசு பூமியில் ஆயிர வருடங்கள் ஆளுகை செய்வார். அந்த ஆயிர வருட ஆட்சிக்காலத்தில் ஒரு ஆயலம் இருக்கும் என வேதத்தில் காணலாம்.


மகா பிரதான ஆசாரியனால் நிர்வாகிக்கப்பட்ட ஆலயமாகிய கூடாரம் நிலைத்திருக்கவில்லை. ஆசாரியர்களே பாவம் செய்தார்கள். ஒரு பிரதான ஆசாரியனாகிய எலியாசிபின் குமாரன் நிமித்தம் ஆசாரிய ஊழியம் தீட்டுப் பட்டதாம். நெகேமியா. *13 : 28-29.* சில ஆசாரியர்கள் எருசலேமிலுள்ள ஆலயத்தை தீட்டுப்படுத்தினார்கள். *2* நாளா. *36 : 14* ஒரு சந்தர்ப்பத்தில் ஜனத்தில் ஈனமானவர்கள் ஆசாரியராக்கப்பட்டனர். *1* இராஜா. *12 : 31.*

எரேமியாவின் காலத்தில் தீர்க்கதரிசிகள் முதல் ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யரானார்கள். எரே. *6 : 13.* ஆசாரியர்களை மாயக்காரர் என்றார். எரே. *23 : 11.* இதினால் எரேமியாவைக் கொல்ல வேண்டும் என ஆசாரியர்கள் முடிவெடுத்தனர். *26 : 8.* ஆசாரியர்களின் அக்கிரமங்களினால் (புல. *4 : 13)* ஆலயம் நொறுக்கப்பட்டும் இஸ்ரவேல் தேசம் சிறைப்பட்டும் இஸ்ரவேல் சிறைப்பட்டும் போயின.

ஆசாரியர்களைப் பற்றி எசேக்கியேலும் குமுறினார். ஆசாரியனிடம் வேதம் இராமல் போகும் என்றார். எசே. *7 : 26* ன்

வடக்கு

தாண் - ன் பங்கு
ஆசேரின் பங்கு
நப்தலியின் பங்கு
மனாசேயின் பங்கு
எப்பிராயீமின் பங்கு
ரூபனின் பங்கு
யூதாவின் பங்கு
லேவியின் பங்கு




பென்யமீனின் பங்கு
சிமியோனின் பங்கு
இசக்காரின் பங்கு
செபுலோனின் பங்கு
காத் - ன் பங்கு

தெற்கு

வேதத்துக்கு அநியாயம் செய்தார்கள். அவர்கள் நடுவில் நான் கனஈனம் பண்ணப் படுகிறேன் என்றார். *22 : 26.*

ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசித்தார்கள் என்றார், மீகா *3 : 11.* கடைசியாக தோட்டத்திற்கு சுதந்திரவாளியும், இஸ்ரவேலின் இரட்சகருமாய் வந்த இயேசு கிறிஸ்துவை கொலை செய்ய பிரதான ஆசாரியன் உடன்பட்டான். மத். *27 : 1-20, 41.* இதினிமித்தம் ஆசாரிய ஊழியத்தையும் ஆலயத்தையும் தேவன் ஒழித்துக் கட்டினார். இந்த மலையிலும், எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் என்றார். யோவான் *4 : 21.* இரண்டோ மூன்றோ பேர் என் நாமத்தினாலே எங்கே கூடினாலும் அங்கே இருக்கிறேன் என்றார். மத். *18 : 20.*

ஒரு காலத்தில் ஆசாரியனின் சொல் கேளாதவன் சாகக்கடவன் என்றிருந்தது. உபா. *17 : 12.* ஒரு குஷ்டரோகி சுத்தமானான் என்பதற்கு ஆசாரியனிடம் சான்று பெற வேண்டும். ஆசாரியனின்றி ஒரு பலி இல்லை. இத்தனை மகிமையான ஊழியம் கள்ளர் கெபியாயிற்று. இதை முன்னறிந்த தேவன்:

1. ஆசாரியன் பாவஞ்செய்தால் அதற்கும் பலியை ஏற்படுத்தினார். லேவி. *4 : 3.*

2. நான் என் உள்ளத்துக்கும், என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப் பண்ணி அவனுக்கு நிலையான வீட்டைக்கட்டுவேன். *1* சாமு. *2 : 35.* என அன்றே சொல்லி வைத்தார். அவர் தான் இயேசு.

3. தூஷிப்படைந்த ஆசாரியத்துவத்தைக் கண்டு மனம்வெந்த தாவீது ஆவிக்குள்ளான போது, மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றைக்கும் ஆசாரியராக இருக்கப்போகிற கர்த்தரைக்குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார். சங். *110 : 4.*

4. அதன்படி இயேசு கிறிஸ்து மகா பிரதான ஆசாரியரானார். எபி. *3 : 1-4, 10-11.* பாவமுள்ள ஆசாரியர்களை நீக்கிவிட்டு பாவமற்றவர் ஆசாரியரானார். *4 : 15.* இந்த ஆசாரியத்துவம் நித்தியமானதாகும். *6 : 20.* இந்த ஆசாரியத்துவத்தில் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகக் கட்டப்பட்டு வருகிறோம். *1* பேதுரு *2 : 5.*

இந்த விதமான ஆசாரியத்துவம் இயேசுவின் ஆயிரமாண்டு அரசாட்சியில் ஸ்தாபிக்கப்படும். ஆசாரியத்துவம் பாங்காக நடைபெற ஆலயம் இன்றியமையாததாகும். அதற்காகவே தேவன் *1000* ஆண்டாளு கையில் ஒரு ஆலயத்தைக் கட்டி எழுப்பப் போகிறார். அந்தி கிறிஸ்துவின் காலத்து ஆலயம் அர்மகெதோன் யுத்தத்தில் தகர்ந்து போகும். பின்பு இயேசு தாமே ஆலயத்தைத் தமது திட்டத்தின்படி கட்டி எழுப்புவார்.

வேதாகமத்தில் இரண்டு ஆலயங்களின் விபரங்களும், அளவுகளும் மட்டுமே தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது. *1.*

ஆசரிப்புக்கூடாரம் *2*. ஆயிர ஆண்டாளுகைக் காலத்து ஆலயம். ஆசரிப்புக்கூடாரத்தின் விபரங் களை யாத்திராகமம் *25* முதல் *40* வரைக் காணலாம். ஆயிரமாண்டு ஆளுகை காலத்து ஆலயத்தை எசேக்கியேல் *40* முதல் *48* வரைக் காணலாம். அந்த ஆலயத்தின் அமைப்பிடத்தை மட்டும் இங்கு காண்போமாக. இஸ்ரேல் நாடு வடக்கிலிருந்து தெற்கு வரை அகலம் குறைந்து நீளமாகக் கிடக்கிறது. எசே. *48 : 1-8, 12, 23, 27.*

1. மிக வடக்கில் தாண் கோத்திரத்தின் பங்கு
2. அதற்கு தெற்கில் ஆசேரின் பங்கு
3. அதற்கு தெற்கில் நப்தலிக்கு ஒரு பங்கு
4. அதற்கு தெற்கில் மனாசேக்கு ஒரு பங்கு
5. அதற்கு தெற்கில் எப்பிராயீமுக்கு ஒரு பங்கு
6. அதற்கு தெற்கில் ரூபனுக்கு ஒரு பங்கு
7. அதற்கு தெற்கில் யூதாவுக்கு ஒரு பங்கு
8. அதற்கு தெற்கில் லேவிக்கு ஒரு பங்கு

இந்த லேவியின் பங்கின் எல்லைக்குள் *25,000* கோல் நீளமும், *25000* கோல் அகலமுமான ஒரு சதுரமான கண்டம் பரிசுத்த அற்பித நலமாக ஒதுக்கப்பட வேண்டும். ஒரு கோல் என்பது தேவ அளவின் படியுள்ள ஆறுமுழமாகும். அந்த ஒரு முழமானது மனிதகை முழம் ஒன்றும் நாலு விரற்கடையும் கொண்டதாகும். அந்த ஒரு தேவ முழம் என்பது சுமார் *24* அங்குலம் அல்லது *2* அடி ஆகும். எனவே ஒரு கோல் என்பது *6* தேவ முழம் அதாவது *12* அடி அல்லது சுமார் *4* மீட்டர் ஆகும்.

*25,000* கோல் என்பது ஏறத்தாழ ஒரு லட்சம் மீட்டர் அல்லது *100* கிலோ மீட்டர் தூரமாகும்.

*25,000* கோல் நீளம் வடக்கில் உள்ளது. அப்படியே தெற்கிலும் *25,000* கோல் செல்லும். தெற்கில் செல்லும் *25,000* கோல் தூரத்தை மூன்று பகுதிகளாக பிரிக்கின்றார்.

**பகுதி 1:** வடக்கிலிருந்து *10000* கோல் தெற்குமுகமாய் அளந்து அதை லேவியருடைய பணிவிடைக்காக ஒப்புக் கொடுப்பார். எனவே அதன் மேற்கிலும் கிழக்கிலும் அகலம் *10,000* கோல். வடக்கிலும் தெற்கிலும் நீளம் *25,000* கோல்.

**பகுதி 2:** பின்னும் *10000* கோல் *(40* கி.மீ*)* தெற்கு முகமாய் அறிந்து அதை ஆசாரியருக்கு கொடுக்கிறார். இந்த நடுபகுதியில் தான் ஆயிரமாண்டாட்சி சாலத்து ஆலயம் இருக்கும். *(*இப்பகுதியின் அளவு *25,000* கோல் x *10,000* கோல் ஆகும்*)*

**பகுதி 3:** பின்னும் எஞ்சியுள்ளது தெற்கில் *5,000* கோல் ஆகும். அதாவது வடக்கில் *25,000* கோல் நீளம் தெற்கில் *25,000* கோல் நீளம் கிழக்கில் *5,000* கோல் அகலம். மேற்கிலும் *5,000* கோல் அகலம். இப்பகுதியை மூன்று பகுதிகளாகப் பிரித்து மையத்தில் *5,000* x *5,000* கோல் அளவில் ஒரு நகரத்தையும் அதன் சுற்று வெளி நிலத்தையும்

ஸ்தாபிக்கிறார். எசே. *48 : 15-17*.

மேற்குறிப்பிட்ட இரண்டாம் பகுதியில் தாமே ஆலயமும் ஆசாரியரின் பணிவிடைப் பகுதியும் அமையும். ஆலயம், அறைவீடுகள், வெளிப்புற மதில், மண்டபம், தூணாதாரம், வெளிப்பிராகாரம், ஆகியவற்றின் விபரங்களை எசேக்கியேல் *40* முதல் *48* வரை உள்ள அதிகாரங்களில் தெளிவாகக் காணலாம்.

இதன் தெற்கில் ஐந்து கோத்திரங்களுக்குப் பங்கு கிடைக்கும்.

*9*. பரிசுத்த அற்பித நிலத்தை தொட்டு தெற்கில் பென்யமீனின் பங்கு
*10*. அதன் தெற்கில் சிமியோனின் பங்கு
*11*. அதன் தெற்கில் இசக்காருக்கு பங்கு
*12*. அதன் தெற்கில் செபுலோனுக்கும்
*13*. கடைசியாக தெற்கில் காத்துக்கு ஒரு பங்கும் ஆக இஸ்ரவேல் தேசத்தை பங்கிடுவார். எசே. *48 : 18, 12, 23, 27*.

ஆலயமோவென்றால் யூதாவுக்கும் பென்யமீனுக்கும் நடுவாக அமையும். லேவியின் பங்கில் இணைந்து வரும் *25,000* x *10,000* கோல் கண்டத்தின் மையத்தில் ஸ்தாபிக்கப்படும்.

இந்த ஆலயம் ஆயிரமாண்டு ஆளுகை காலத்திற்காக ஏற்படுத்தப்பட்டு அதன் பின் நடக்கும் பூமியின் அக்கினிப் பிரளயத்தில் அழிக்கப்படும் என நியாயமாக நிதானிக்கலாம். அதன் பின் புதிய பூமியில் நமது நித்திய வீடாகிய புதிய எருசலேம் ஸ்தாபிக்கப்படும். அதற்கு முடிவே இல்லை. அல்லேலூயா*!*

### 8. ஆலயமில்லாத ஆலயம் அல்லது புதிய பூமியின் ஆலயம்

பாவத்தில் விழுந்துவிட்ட மனிதன் இரட்சிப்படைவதற்கு ஒரு ஆலயத் தில் இணைக்கப்படுகிறான். நல்ல சமாரியன் உவமையில் காயப்பட்டவனை பராமரித்து, விட்டு விடாமல், ஒரு சத்திரத்தில் கொண்டுபோய் சேர்க்கிறார். *(*லூக்கா *10 : 34)* அப்போஸ்தல ஊழியத்தின் துவக்க நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்படுகிறவர்களை அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். *(*அப். *2 : 47)* அவர்களை தங்கள் இஷ்டப்படி வாழவிட்டு விடவில்லை. சபை இல்லை என்பதும் இயேசுவை ஏற்றுக்கொண்டு இஷ்டம் போல் வாழுங்கள் அல்லது ஊழியம் செய்யுங்கள் என்பதும் கள்ளப்போதகமாகும்.

1. பழைய ஏற்பாட்டிலும் அதிகாரப்பூர்வமான இடமும், ஆசாரியரும், ஆராதனை முறையும் கொடுக்கப்பட்டது.
2. இந்தக் கல்லின் மேல் என் சபையை கட்டுவேன் என்ற கர்த்தர் சபையிலே அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர், போதகர், சுவிசேஷகர் ஆகியோரை நியமித்திருக்கிறார். *(*மத். *16 : 18*, எபி. *4 : 13*, அப். *20 : 28)*
3. இயேசுவும் *7* குத்துவிளக்கின் மத்தியில் உலாவுகிறவராக இருக்கிறார். குத்துவிளக்கு சபையை குறிப்பிடுகிறது. வெளி. *1 : 20*.

4. புதிய ஏற்பாட்டிலுள்ள நிருபங்கள் அனைத்தும் சபைகளுக்கு அல்லது சபைகளின் மூப்பர்களுக்கு (ஊழியர்களுக்கு) சபையின் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டவைகளேயாகும். எனவே, இரட்சிக்கப் படுகிற தேவ பிள்ளைகள் ஒவ்வொருவரும் பூரண சத்தியங்களை பாது காக்கிற ஒரு சபையில் ஐக்கியமாக இருப்பது அவசியம்.

சபையின் ஐக்கியம் இவ்வாறு இன்றியமையாததாக இருக்கும் போது புதிய பூமியில் ஸ்தாபிதமாக இருக்கும் புதிய எருசலேமில் ஆலயத்தை நான் காணவில்லை என்கிறார் யோவான். வெளி. 21 : 22. தேவனாகிய கர்த்தரும், ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம் என்று கூறப்பட் டுள்ளது. புதிய எருசலேமில் ஆலயம் இல்லை என்று காணப்படுவது ஆச்சரியத்தைத் தருகிறது அல்லவா?

ஆனால் இப்போது பூமியில் மாத்திரமல்ல, பரலோகத்திலும் ஒரு ஆலயம் இருக்கிறது என வெளிப்படுத்தல் ஆகமம் கூறுகிறது.

1. என் தேவனுடைய ஆலயத்தில் தூணாக்குவேன். 3 : 12.
2. அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். 7 : 15.
3. பரலோகத்திலே தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. 11 : 19.
4. வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டான். 14 : 15.
5. பரலோகத்திலுள்ள தேவனுடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டு வந்தான். 14 : 17.
6. பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது. வெளி. 15 : 5.
7. அந்த ஆலயத்திலிருந்து அவ்வேழு தூதர்களும் புறப்பட்டார்கள். 15 : 6.
8. புகையினால் தேவாலயம் நிறைந்தது. ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது. 15 : 8.
9. தேவ ஆலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம். 16 : 1.
10. பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது. 16 : 17 இப்போது பரலோகத்திலுள்ள ஆலயம் புதிய பூமி ஸ்தாபிக்கப்படும்போது, என்ன ஆகும்? அதைக்குறித்து கீழ்வரும் விளக்கங்களைக் காண்க.

1. அது பூமியில் ஸ்தாபிக்கப்படும் புதிய எருசலேமில் இணைந்து விடலாம். தேவனுடைய வாசஸ்தலம் புதிய எருசலேமாக இருப்பதால் அதுவே பொதுவாக தேவ ஆலயமாக அமையக்கூடும். ஆனாலும் ஆலயம் என்று அழைக்கப்படக்கூடிய ஒரு தனி கட்டிடம் அதில் இராது என 21 : 22 ல் இருந்து புரியலாம்.

2. புதிய எருசலேமில் தேவன் இருப்பதாலும், அதில் வாசமாயிருக்கிற யாவரும் எப்போதும் அவரை தரிசிப்பார்கள் என்பதாலும் புதிய எருசலேம் முழுவதுமே தேவ ஆலயமாக அமையலாம். 21 : 3, 22 : 3, 4. தேவ சிங்காசனமும் அதில் உள்ளது. பளிங்குபோல தெளிவான சுத்தப் பொன்னினால் புதிய எருசலேமின் தெருக்களும், தரையும் உள்ளதால்

எல்லாரும் தேவனை எப்போதும் தரிசிக்கலாகும். *21 : 21.*

*3.* அல்லது இப்போது பரலோகத்திலுள்ள ஆலயம் எப்போதுமே தனிமையாக இருக்க வேண்டும். அப்படியானால் தேவன் அதில் இருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் அவர் எப்போதுமே புதிய எருசலேமில் தேவ ஜனத்தோடு சிங்காசனத்தில் இருப்பார். *21 : 3, 22 : 1-3.* தேவன் இல்லாத ஒன்றை ஆலயம் என்று கூறுவதும் சரியாகாது. எனவே, பரலோகத் திலுள்ள ஆலயம் புதிய எருசலேமில் இணைந்து புதிய எருசலேம் முழுவது மே தேவ ஒளியினால் நிறைந்து ஆலயமாக விளங்கும். ஆகையால் தான் ஆலயமாகிய ஒரு தனி கட்டிடத்தை அங்கே காணவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. *21 : 22.* இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். *21 : 3.* இவ்வாறு புதிய எருசலேம் முழுவதுமே தேவ பிரசன்னத்தினால் நிறைந்திருந்து, மக்களனை வரையும் அவர் பிரசன்னத்திற்குள்ளாக்கி யிருப்பதால் புதிய எருசலேம் முழு வதுமே தேவ ஆலயமாகும். எனவே தேவாலயம் என்று ஒரு தனி இடம் அங்கே இல்லை என முடிவு செய்யலாம்.

இந்தப் 'புதிய எருசலேமாகிய தேவ வாசஸ்தலத்தின் அளவுகளையும், இரத்தின அஸ்திபாரமிடப்பட்ட அதின் மதில்கள் வாசல்கள் ஆகியவற்றின் விபரங்களையும் வெளிப்படுத்தலாகமம் *21 : 10-23* வசனங்களில் அறிந்து கொள்ளலாம்.

**பகுதி III** **அதிகாரம் 5**


# ஆசரிப்புக்கூடாரத்தின் அமைப்பு

## தேவசித்தம் வெளிப்பட்ட கூடாரம்

கூடாரம் அமைக்கப்பட வேண்டிய மாதிரியை தேவன் தாமே காட்டிக் கொடுத்திருக்கிறார். யாத். *25 : 9*, எண். *8 : 4*, எபி. *8 : 5.* எனவே கூடாரத்தைச் செய்தவர்கள் மனிதராக இருந்தபோதிலும், அதில் தேவ சித்தமும், திட்டமும் தான் வெளிப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தை எழுதியவர்கள் தேவ மனிதர்கள் என்றாலும் தேவனுடைய சித்தம் மட்டுமே அதில் வெளிப்பட்டுள்ளது. எனவே வேத வசனம், முற்றிலும் தேவ வசனங்களாகும் *2* தீமோ. *3 : 16.* வேத வாக் கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. *2* பேதுரு *1 : 21.*

இயேசுவின் வாழ்க்கையும், ஊழியமும் கூட தேவ சித்தத்தை நிறைவேற்றுகிறதாகவே இருந்தது. இயேசு தாமே பிதாவின் மகிமையின் பிரகாசமும், தன்மையின் சொரூபமுமாய் இருந்தார். எபி. *1 : 3,* கொலோ. *1 : 15-18.* பிதா சொன்னவைகளையே செய்தார். யோவான் *8 : 26.*


லேவியன்
பிரதான ஆசாரியன்
ஆசாரியன்

மனிதராகிய நாமும் தேவனுடைய நன்மையும், பிரிய முமான சித்தம் இன்ன தென்று பகுத்தறிந்து ஜீவிக்க வேண்டும். ரோமர் *12 : 2*. உலக மும் அதின் இச்சையும் ஒழிந்து போகும். தேவ னுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான். *1* யோவான் *2 : 17*.

இந்தப் பூமியாகிய கூடாரமும் தேவனுடைய சித்தத்தின்படியே உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதை அவர் வட்டணித்து மண்ணையும், விண்ணையும் உண்டாக்கினார். "உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது. வெளி. *4 : 11*. தற்சமயம் சாத்தான் வழிமறித்து சிறிதுகாலம் குந்தகம் விளைவித்திருந்தாலும் முடிவிலே தேவசித்தம் மட்டுமே ஜெயிக்கும். இயேசு ஜெபித்தது ஞாபகமிருக்கட்டும். உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக." மத். *6 : 10*.

அவ்வாறே தேவனுடைய சித்தத்தின்படியே ஆசரிப்புக்கூடாரம் உண்டாக்கப் பட்டது. அதன் மாதிரியை மலையில் தேவன் காட்டினார். ஒவ்வொரு கருவியின் மாதிரியையும் தேவன் காண்பித்திருக்கிறார். மனித சித்தமோ, மோசேயின் விருப்பமோ அதில் சேர்க்கப்படலாகாது. நமது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் வேதத்தைக் கடைப்பிடிப்பதிலும் தேவ சித்தத்திற்கு மாறாக நாம் திரும்பக்கூடாதென்பதைத் தானே இது வெளிப்படுத்துகிறது.?

"மலையிலே உனக்கு காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு." யாத். *25 : 40*.

தாவீது கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்ட விரும்பியபோது தேவன் அதன் மாதிரியை அவருக்குக் காண்பித்ததாக கூறியுள்ளார். *1* நாளா. *28 : 11-19*. வசனம் *19* ல் இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது, என்றார். வசனம் *12* ல் "ஆவியினால் தனக்கு கட்டளை யிடப்பட்டபடியெல்லாம்" எனக் காண்க. தேவாலயப் பணி என்பது தேவனுடைய சித்தத்தின்படியிருக்க வேண்டும் என்பதையல்லவா இது வெளிப்படுத்துகிறது.?

புதிய ஏற்பாட்டு சபையும் அப்படியே. வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. *1* கொரி. *3 : 11-15*. அதின்மேல் கட்டுவது கூட மரம், புல், வைக்கோல் என்றார். அவை அந்நாளில் அக்கினி சோதனையில் வெந்து போகுமாம். வசனத்தின்படி எல்லா உபதேசங்களை யும் கைக்கொள்கிறவனே பாக்கியவான். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே அதில் பிரவேசிப்பானேயல்லாமல்

என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை'' என்று வேறு ஒருவர் அல்ல, இயேசு தாமே கூறியிருக்கிறார். மத். *7 : 21.*

தேவனுடைய சித்தத்திற்கு மாறாக லூசிபர் எழும்பினபோது பரலோகத்திலிருந்து அவனைத் தள்ளிவிட்டார். ஏசாயா *14 : 9-15.*

தேவ சித்தத்தை மீறினபடியால் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்டார். ஆதி. *3 : 22,23.*

தேவ சித்தத்தின்படி செய்ய தவறிவிட்ட இஸ்ரவேலரை கானானிலிருந்து துரத்தி *70* ஆண்டுகள் பாபிலோனிய சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார். தானி. *9 : 2,* எரே. *25 : 1, 29 : 10.*

தேவ சித்தத்தின்படி காத்திராத புத்தியில்லாத ஐந்து கன்னியர் கைவிடப்பட்டனர். கதவும் அடைக்கப்பட்டது. மத். *25 : 1-10.*

தேவ சித்தத்தை மாற்றக்கூடாது என்று அறிந்த மோசே ஆசரிப்புக் கூடாரத்தின் பணி முழுவதையும் கர்த்தர் கற்பித்தபடியே செய்தார். "கர்த்தர் கற்பித்தபடியே" என்ற வார்த்தையை யாத். *39, 40* ஆகிய இரண்டு அதிகாரங்களில் மட்டும் *18* முறை எழுதப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். ''அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.'' வெளி. *22 : 14.* என்பதே வேதாகமத்தின் இறுதியிலுள்ள எச்சரிக்கையும்*!*

ஆசரிப்புக்கூடாரத்தின் அளவுகளும் மாதிரியும் தேவனால் கொடுக்கப்பட்டது. அதைச் செய்வதற்கு வேண்டிய பொருட்களும் அதைச் செய்யும் பணியும் மனிதனுடையதாகும். இவ்வாறு தேவசித்தமும், மனிதச் செயலும் ஆசரிப்புக்கூடாரத்தில் சந்தித்தது. புதிய ஏற்பாட்டு சபையின் சுவிசேஷ ஊழியமும் மனிதரால் செய்யப்பட வேண்டும். ஆனால் அது தேவனால் காண்பிக்கப்பட்ட மாதிரியாகவும் தேவ சித்தத்தின்படியும் இருக்க வேண்டும்.

யாத். *25 : 40* ல் மலையிலே உனக்கு காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு என்றார். எடுத்துக்காட்டாக, ஞானஸ்நானத்தைப் பாருங்கள். இயேசு அதன் மாதிரியை யோர்தான் நதியில் செய்து காண்பித்தார். யோவான் கையினால் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றார். அதன்படி செய்ய எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா*?* மனித விருப்பப்படி அதை மாற்றலாமா*?*

ஆசரிப்புக்கூடாரம் இஸ்ரவேல் புத்திரருடைய காணிக்கைகளால் செய்யப்பட வேண்டும் என்பதே தேவ சித்தம். யாத். *25 : 1-2.* இதில் மூன்று காரியங் களைக் காணலாம்.

### அதிகாரம் 6

# கொடுங்கள் அப்பொழுது .......

## 1. யாரிடத்தில் வாங்க வேண்டும்?

இஸ்ரவேல் புத்திரரிடத்தில். இரட்சிக்கப்படாதவர்களிடம் பணம் வசூல் செய்து ஊழியம் செய்வது தேவ சித்தமல்ல. “வேசிப்பணத்தையும் நாயின் கிரயத்தையும் எந்த பொருத்தனையினாலாயினும் உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கொண்டு வராயாக..” உபா. *23 : 18*. ஊழியத் திற்கு பணம் கொடுப்பவன் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும். *(*இஸ்ரவேலன்*)* அந்நியரிடம் இருந்து ஊழியப்பணிகளைச் செய்வது தேவனுக்கு அருவருப்பாகும்.

## 2. எப்படிக் கொடுக்க வேண்டும்?

ஆசரிப்புக்கூடாரப் பணிக்காக “மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்கு காணிக்கையை வாங்குவீர்களாக.” என்றார். புதிய ஏற்பாட்டு ஊழியத்திலும் “கட்டாயமாய் அல்ல, அவலட்சணமான ஆதாயத்திற்காயுமல்ல, உற்சாக மனதோடு” என்று *1* பேதுரு *5 : 2* ல் வாசிக்கிறோம். இரட்சிக்கப்பட்ட ஒருவன் கொடுப்பதற்கு உற்சாகம் அடையாவிட்டால் அதையும் தேவன் விசாரிப்பார்.

## 3. என்ன கொடுக்க வேண்டும்?

ஆசரிப்புக்கூடாரப்பணிக்காக இஸ்ரவேலர் கொடுத்த பொருட்களின் பட்டியலை யாத். *25 : 3-7* ல் காண்க. அதில் விலை குறைந்தவை எதுவும் இல்லை. இன்று ஊழியத்திற்கு கொடுப்பவர்கள் இல்லாக் காசு களையும், செல்லாக் காசுகளையும், சில்லிக்காசுகளையும் காணிக்கைப் பெட்டியிலே தள்ளி விடுகிறார்கள். சகோதரரே, நல்லவைகளை இயேசு வுக்குக் கொடுங்கள். *5* பைசா, *10* பைசா தேடுகிற நல்ல விசுவாசிகளே, இஸ்ரவேலர் மனப்பூர்வமாய் கொடுத்த பண்டங்கள் என்னவென்று பாருங்கள்.

| | |
|---|---|
| *1.* பொன் | *10.* தகசு தோல் |
| *2.* வெள்ளி | *11.* சீத்திம் மரம் |
| *3.* வெண்கலம் | *12.* விளக்கு எண்ணெய் |
| *4.* இளநீலநூல் | *13.* அபிஷேக தைலத்துக்குப் பரிமள வர்க்கம் |
| *5.* இரத்தாம்பர நூல் | *14.* தூபத்துக்கு சுகந்த வர்க்கம் |
| *6.* சிவப்பு நூல் | *15.* ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகக்கற்கள் |
| *7.* மெல்லிய பஞ்சு நூல் | *16.* இரத்தினங்கள் |
| *8.* வெள்ளாட்டு மயிர் | |
| *9.* சிவப்பு தீர்த்த ஆட்டுக்கடாத்தோல் | |

யாத். *36 : 5-7* வேண்டியதற்கும் அதிகமாய் கொண்டு வந்தார்கள். எனவே காணிக்கையை கொண்டுவருவது பாளயமெங்கும் கூறி நிறுத்தப் பட்டது. இன்னும் சிலர் லோபத்தனமாய் கொடுக்கின்றனர். சிலர் உதாரத்துவமாய் கொடுக்கின்றனர். "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" என்றார் இயேசு நாதர். லூக்கா *6 : 38.*

## அதிகாரம் 7

## உன்னத அழைப்பு - பெசலெயேல், அகோலியாப்

ஆசரிப்புக்கூடாரத்தின் பணியைச் செய்வதற்கு விசேஷித்த அழைப்பும், அபிஷேகமும் தேவையாகும். இத்திருப்பணிக்காக பெசலெயேலைப் பெயர் சொல்லி அழைத்தார். யாத். *31 : 2-6.* தேவ ஆவியினாலே நிரப்பினார். இவர் யூதா கோத்திரத்தான். ஆசாரிய ஊழியம் லேவி கோத்திரத்திற்கு கொடுக்கப்பட்ட போதிலும் கட்டுமானப்பணி வேறு கோத்திரங்களுக்குக் கொடுக்கப்பட்டது. என்னே தேவசித்தம்! தாண் கோத்திரத்திலுள்ள அகோலியாபையும் தேவன் அழைத்தார். இவர்கள் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்ய ஞானமும், அறிவும் பெற்றனர். யாத். *35 : 30-35.* இங்கே ஞானத்தையும், புத்தியையும், அறிவையும் அருளினார் என வாசிக்கிறோம். அகோலியாபுக்கு போதிக்கும் வரத்தை அருளினார். வேலை செய்கிறவர்களுக்கு வேலையின் விதங்களை இவர்கள் போதிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டு சபையிலும் போதகத் திற்கென வரங்கள் உள்ளன. *1* கொரி. *12 : 8.*

மேலும் இப்பணிகளைச் செய்ய ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து செய்தார்கள் என யாத். *35 : 10-12* ல் காண்க. இவர்கள் ஜனங்களில் ஞானவரம் பெற்றவர்கள் ஆவர். எனவே, இப்பணியில் ஈடு பட்டவர்கள்.

1. மோசே *:* அப்போஸ்தலரின் ஸ்தானம் - தேவனிடமிருந்து மாதிரியைப் பெற்றவர்
2. பெசலெயேல், அகோலியாப் *:* ஆவியினால் நிறைந்த கண்காணிகள் - பணிகளை நேரில் கண்காணித்துச் செய்விக்கிறவர்கள்.
3. ஞான இருதயமுள்ள அனைவரும் *:* பற்பல ஊழியங்களை நிறைவேற்றுகிற ஊழியர்கள், மற்றும் மூப்பர்கள். யாத் *35 :10.*
4. சாதாரண ஜனங்கள் *:* ஆசரிப்புக் கூடாரப்பணிக்கு உதாரத்துவமாய் கொடுத்து உதவியவர்கள். இவர்களுடைய பொருட்களால் தான் கட்டப் பட்டது. எனவே இவர்களும் முக்கியமானவர்களே.

புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியத்திலும் இவ்விதமான பற்பல வகுப்பாரைக் காணலாம். அவர்களும் அழைக்கப்பட்டும் ஆவியால் நிரப்பப் பட்டும் இருக்க வேண்டும். ஆதி அப்போஸ்தல சபையில் கூட

அனைத்து வகுப்பு ஊழியர்களும் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தனர் அவர்களாவன:

1. அப்போஸ்தலர் எபே. *4 : 13*
2. தீர்க்கதரிசிகள் "
3. சுவிசேஷகர் "
4. மேய்ப்பர் "
5. போதகர் "
6. கண்காணி *1* தீமோ. *3 : 1*
7. உதவிக்காரர் *1* தீமோ. *3 : 12*
8. சகோதர விசுவாசிகள் பிலி. *3 : 1*
9. பந்தி விசாரிப்புக் கவுன்சில் அப். *6 : 2-6.*

இவர்களுள் கடைநிலை ஊழியர்களாகிய பந்தி விசாரிப்புக்காரர் களே ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருந்த னராம். அப். *6 : 3.* அவர்களுள் ஸ்தேவானும், பிலிப்பும் பிற்காலத்தில் பெரிய சுவிசேஷகர்களாக மாறினர். சபையின் சில்லறை வேலைகளுக்கே இத்தனை தகுதி அவசியமானால் ஊழியத்தின் முக்கியமான பணிகளைச் செய்ய எத்தனை தகுதி வேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள்!

ஆசரிப்புக்கூடாரமானது பலகைகள் மற்றும் தூண்கள் மேல் பாவப்பட்ட மூடுதிரைகளாலும் தொங்கவிடப்பட்ட தொங்குதிரைகளாலும் அமைந்த ஒரு தேவ வாசஸ்தலமாகும். உலகில் உள்ள எந்த கூடாரங்களின் அமைப்பும் இதற்கு நிகரானதல்ல. ஏனென்றால் அது தேவனால் கொடுக்கப்பட்ட மாதிரிக்கூடாரமாகும். ஒரு தேவ வாசஸ்தலத்தின் மாதிரியை **(Model)** முதன் முதலாவதாக உலகிற்கு வழங்கினவர் தேவனே. இதன் சாயலில் தான் அநேக மதங்களைச் சார்ந்த கோவில்கள் மற்றும் வழிபாட்டு தலங்கள் உண்டாயிருக்கின்றன.

## அதிகாரம் 8

# முப்பகுதி ஆலயம் - ஒப்பனைகள்

ஆசரிப்புக் கூடாரத்திற்கு மூன்று திட்டவட்டமான பகுதிகள் உண்டு. அவையாவன: *1)* பிராகாரம் *2.* பரிசுத்தஸ்தலம் *3.* மகா பரிசுத்தஸ்தலம் இம்மூன்றினையும் கீழ்வரும் விஷயங்களுக்கு ஒப்பனையாகக் கொள்ளலாம்.

**1. யுகங்களில்**

| | | |
|---|---|---|
| மகா பரிசுத்தஸ்தலம் | - | அநாதி தேவனின் சிருஷ்டிப்பின் யுகம் |
| பரிசுத்தஸ்தலம் | - | களங்கமற்ற யுகம் |
| பிராகாரம் | - | மனிதனின் விழுகையும், மீட்பின் திட்டமும் கொண்ட யுகம் (பலிபீடம் மற்றும் கழுவும் தொட்டியின் அனுபவம்) |

**2. முற்பிதாக்களில்**

| | | |
|---|---|---|
| மகா பரிசுத்தஸ்தலம் | - | விசுவாச வீரனாகிய ஆபிரகாம் தேவனுக்கு ஒப்பனை |
| பரிசுத்தஸ்தலம் | - | வாக்குத்தத்த சந்ததியான ஈசாக்கு -பிரதான ஆசாரியனும் வாக்குத்தத்த |

சந்ததியான இயேசு

பிராகாரம் - திரளாய் பெருகிய யாக்கோபு. பலி பீடத்து இரத்தத்தால் மீட்கப்பட்ட பழைய புதிய ஏற்பாடு சபையின் கூட்டம்

**3. பிரமாணங்களில்**

பிராகாரம் - மனச்சாட்சிப் பிரமாணம்

பரிசுத்தஸ்தலம் - நியாயப்பிரமாணம்

மகா பரிசுத்தஸ்தலம் - கிருபையின் பிரமாணம்

**4. காலங்களில்**

பிராகாரம் - பலிபீடம் உள்ள மீட்பின் காலம் பழைய ஏற்பாட்டு மீட்பும், புதிய ஏற்பாட்டு மீட்பும் இதில் அடங்கும்

பரிசுத்தஸ்தலம் - பிரதான ஆசாரியனும் சாலேமின் ராஜாவுமாகிய இயேசுவின் ஆயிரம் ஆண்டாட்சிக்காலம்

மகா பரிசுத்தஸ்தலம் - புதிய வானம் புதிய பூமியின் காலம்

**5. இயேசுவில்**

பிராகாரம் - பிராகாரத்து பலிபீடத்தில் பலியான இயேசு

பரிசுத்தஸ்தலம் - உயிர்த்தெழுந்து பரிந்து பேசும் ஆசாரியன்

மகா பரிசுத்தஸ்தலம் - இனிவரும் உலகத்தின் இராஜாவும், தேவனுமாகிய இயேசு

**6. சபைகளில்**

பிராகாரம் - மனசாட்சி கால ஆராதனை (ஆபேல், சேத், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம் முதலியோரின் காலம் சீனாய் வரை)

பரிசுத்தஸ்தலம் - பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாண சபை

மகா பரிசுத்தஸ்தலம் - ஆவியானவரின் நேரடியான நடத்துதலுக்குட்பட்ட புதிய ஏற்பாட்டு சபை

**7. மீட்பு பணியில் இயேசு**

பிராகாரம் - வழியாகிய இயேசு

பரிசுத்தஸ்தலம் - சத்தியமாகிய இயேசு

மகா பரிசுத்தஸ்தலம் - ஜீவனாகிய இயேசு

**8. புதிய பூமியில்**

பிராகாரம் - புதிய பூமி

பரிசுத்தஸ்தலம் - மணவாட்டியின் வீடு (வாசஸ்தலம்)

| | | |
|---|---|---|
| மகா பரிசுத்தஸ்தலம் | - | தேவனும் ஆட்டுக்குட்டியானவரும வீற்றிருக்கும் சிங்காசனம் (வெளி. 22 : 1) |

**9. மனிதனில்**

| | | |
|---|---|---|
| பிராகாரம் | - | சரீரம் |
| பரிசுத்தஸ்தலம் | - | ஆத்துமா |
| மகா பரிசுத்தஸ்தலம் | - | ஆவி |

**10. தேவனில்**

| | | |
|---|---|---|
| பிராகாரம் | - | குமாரனாகிய தேவன் |
| பரிசுத்தஸ்தலம் | - | பரிசுத்த தேவனாகிய தேவன் |
| மகா பரிசுத்தஸ்தலம் | - | பிதாவாகிய தேவன் |

**11. பிரபஞ்சத்தில்**

| | | |
|---|---|---|
| பிராகாரம் | - | பூமி |
| பரிசுத்தஸ்தலம் | - | வானங்கள் |
| மகா பரிசுத்தஸ்தலம் | - | பரலோகம் |

**12. பூமியில்**

| | | |
|---|---|---|
| மகா பரிசுத்தஸ்தலம் | - | எருசலேம் நகரம் |
| பரிசுத்தஸ்தலம் | - | இஸ்ரேல் நாடு |
| பிராகாரம் | - | உலகம் |

**13. இஸ்ரேல் தேசத்தில்**

| | | |
|---|---|---|
| மகா பரிசுத்தஸ்தலம் | - | எருசலேம் தேவாலயம் |
| பரிசுத்தஸ்தலம் | - | எருசலேம் நகரம் |
| பிராகாரம் | - | இஸ்ரேல் தேசம் |

**14. எருசலேமில்**

| | | |
|---|---|---|
| மகா பரிசுத்தஸ்தலம் | - | எருசலேம் தேவாலயம் |
| பரிசுத்தஸ்தலம் | - | தாவீதின் நகரமாகிய சீயோன் |
| பிராகாரம் | - | எருசலேம் நகரம் |

**15. இயேசுவின் ஊழியத்தில்**

| | | |
|---|---|---|
| பிராகாரம் | - | பிறப்பு முதல் சிலுவை வரை (பெத்லகேம் முதல் கல்வாரி வரை) |
| பரிசுத்தஸ்தலம் | - | உயிர்ப்பு முதல் இரண்டாம் வருகை வரை (பிதாவிடம் பரிந்து பேசும் ஆசாரியன்) |
| மகா பரிசுத்தஸ்தலம் | - | இரண்டாம் வருகை முதல் நித்தியம் வரை (பிதாவுடன் வீற்றிருக்கும் தேவன்) |

## அதிகாரம் 9

# பிராகாரம், பரிசுத்தஸ்தலம், மகா பரிசுத்தஸ்தலம்

**1. பிராகாரம்:** ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலுமுள்ள திறந்த வெளியான தரையாகும். இது. இதன் நீளம் தெற்கே *100* முழம், வடக்கே *100* முழம்,. அகலம் மேற்கில் *50* முழம், கிழக்கில் *50* முழம். யாத். *27 : 18.*

*100* முழ நீளமும், *50* முழ அகலமும் என்பது *500* சதுர முழம் பரப்பளவு உள்ள இடமாகும். அடி கணக்கில் இது *150* அடி நீளமும், *75* அடி அகலமும் உள்ள *11,250* சதுரஅடி பரப்பளவு கொண்டதாகும். தேவன் தமது ஆலயவளாகம் மிக விசாலமாக இருக்க விரும்புகிறார். அது இடுக்க மாக இருக்க தேவன் விரும்பவில்லை. டேக்ஸ் என்ற வேதப்பண்டிதரின் கணக்குப்படி *21,701* சதுர அடியாகும். தேவன் அருளுகின்ற யாவும் விசாலமானவைகளே!

1. இஸ்ரவேலருக்கு கொடுத்த தேசமானது யாத். *3 : 8.*
2. தாவீதை விசாலமான இடத்திலே கொண்டு வந்து தப்புவித்தார் 2 சாமு. *22 : 20;* சங். *18 : 19.*
3. யோபுவை ஒடுக்கமில்லாத விசாலத்திலே கொண்டு வந்து விடுவார் என எலிகூ சொன்னார். யோபு *36 : 16.* அது அப்படியே நடந்தது.
4. சங். *31 : 8* நீர் என் பாதங்களை விசாலத்திலே நிறுத்தினீர் என்றார் தாவீது
5. நீர் என் இருதயத்தை விசாலமாக்கும்போது உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன். *119 : 32.*
6. உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு. ஏசாயா *54 : 2.*

பிரியமானவர்களே, இங்கே விசாலம் என்பது, இடுக்கமும், நெருக்கமும், இல்லாத ஆனந்த வாழ்வைக் குறிக்கும். இஸ்ரவேலர் எகிப்தில் ஒடுக்கப்பட்டனர். தேவனோ, விசாலமான தேசத்தைக் கொடுத்தார். இயேசுவின் ஆயிரமாண்டு ஆட்சியில் அந்த தேசம் மென் மேலும் விசால மடையும். தாவீது, யோபு முதலிய பரிசுத்தவான்கள் மிகுந்த நெருக்கத்தில் இருந்தனர். தேவனோ விடுவித்தார், விசாலமாக்கினார். அப்படியே இருதயம் விசாலமாகும்போது மட்டுமே தேவ கற்பனைகளை கைக்கொள்ள இயலும். *119 : 32.* மற்றவனுடைய இருதயமானது முள்ளுகளால் வசனம் நெருக்கப்பட்டது போலிருக்கும். (மத். *13 : 22)* எந்த உபதேசத்தையும் முழுமையாய் கைக்கொள்ளாத தற்குக் காரணம் அதுவே.

தேவ ஆலயமாகிய கூடாரத்தின் விசாலம் ஆன்மீக விடுதலையைக் காட்டுகிறது. ஆலயத்தின் வெளியே வியாதி, பயம், பசி, மரணம், கடன், சண்டை முதலியவற்றால் நெருக்கப்பட்ட ஒருவன் உள்ளே வந்தபோது விசாலமான விடுதலையைக் காண்கிறான். வருத்தப்பட்டு

பாரம் சுமக்கிற வர்களுக்கு தேவன் அருளும் இளைப்பாறுதலே இந்த விசாலம். மத். *11 : 28.* பிரியமானவர்களே, நமது ஜெபம், வேத வாசிப்பு, ஊழியம், பணஉதவிகள் முதலியவை இடுக்கமாகவும், குறைவாகவும் காணப்படுகிறதா? தேவன் விசாலமாயிருக்க வைத்த ஆலயத்தில் சமாதானம், சந்தோஷம், துதி, ஜெபம் முதலிய விசாலங்களின் ஆசீர்வாதத்தோடு வாழுங்கள். தேவ ஆலயத்தில் இன்னும் விசாலமான இடம் உண்டு. விருந்து ஆயத்தமாயிருக்கிறது. வழிகளிலும், வேலி களருகிலும் (வயல்கள்) கண்டவர்களைக் கொண்டு வந்து ஆலயத்தை நிரப்புங்கள். என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டு வா என்கிறார். லூக்கா *14 : 23.*

**உயரம்**

பிராகாரத்தின் வெளிப்புற மறைவின் உயரம் *5* முழமாகும். யாத். *27 : 18.* இது $7\frac{1}{2}$ அடி (டேக்ஸ் $10\frac{1}{2}$ அடி உயரமென்கிறார்) எந்த மனிதனும் எட்டிப்பார்த்து எதையும் காணக்கூடாதபடி மனித உயரத் திற்கும் மிஞ்சின அளவை வைத்திருக்கிறார். தேவன் பக்க வழிப் பார்வைகளை விரும்பவில்லை. வாசல் வழியாக உள்ளே வருவதைத் தான் விரும்புகிறார். பக்க வழியாக நுழைய விரும்புகிறவர்கள் கள்ளரும், கொள்ளையருமாக இயேசு மதிப்பிடுகிறார். யோவான் *10 : 1.* எட்டிப் பார்ப்பது ஒழுங்கு மீறுதலும் நன்னடத்தைக்கு மாறானதும் ஆகும். பிறன் வீட்டையும், அவனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதே. அயலானின் பணத்தையோ, பொருளையோ எட்டிப்பாராதே, இச்சியாதே. யாத். *20 : 17.*

இன்னும் அநேகர் கிறிஸ்துவினுடைய குணநலன்களை வெளியே இருந்து எட்டிப்பார்க்கின்றனர். இயேசுவை மதகுரு, சீர்திருத்தவாதி, புரட்சி யாளர், சமூகத்தொண்டன் என்றெல்லாம் கூறுகின்றதன் காரணம் அதுவே. எட்டிப் பார்த்தால் பூரண அறிவு உண்டாகாது. வாசல் வழியாக உள்ளே வாருங்கள். உள்ளே வந்தால் தான் உண்மையை அறியமுடியும். இரட்சிப் பையும் அடையலாம். வந்து பாருங்கள் என்றார் இயேசு. யோவான் *1 : 39.* நாத்தான்வேலிடம் வந்து பார் என்றார் பிலிப்பு. யோவான் *1 : 46.* ஒளிந் திருந்து எட்டிப்பார்த்த சகேயுவை "இறங்கி வா" என்றார் இயேசு. லூக்கா *19:5.* உள்ளே வந்தால் மட்டுமே இயேசுவை இரட்சகராக அறிய இயலும்.

"கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே உள்ளே வாரும்." ஆதி. *24 : 31.* அப்படியே வேத வசனங்களையும் எட்டிப்பார்த்து எளிதில் அடைய இயலாது. பொருள் மாறிப்போகும். இரட்சிப்படைந்து ஜெபத்துடன் ஆவியில் நிறைந்து வாசி. *1* கொரி. *2 : 12-15.*

**பிராகாரத்தூண்கள்**

பிராகாரத்தின் நான்கு பக்கங்களிலுமாக தூண்கள் நிறுத்தப்பட் டிருந்தன. தெற்கில் *20*ம், வடக்கில் *20*ம், மேற்கில் *10*ம், கிழக்கில் *10*ம் ஆக மொத்தம் *60* தூண்கள் இருந்தன.

பிராகாரத்தின் சுற்றளவு *300* முழமானதால் *5* முழத்திற்கு ஒரு தூண் வீதம் *60* தூண்களாயின.

தெற்கில் *100* முழத்திற்கு *20* தூண்களும்
வடக்கில் *100* முழத்திற்கு *20* தூண்களும்
மேற்கில் *50* முழத்திற்கு *10* தூண்களும் உண்டு. ஆனால்

கிழக்கில் *50* முழத்திற்குரிய *10* தூண்களின் அமைப்பு வித்தியாசமானதாகும். அது *3* பகுதிகளாக பிரிக்கப்பட்டது. நடுவில் *20* முழம் விசாலமானதாகும். அதற்கு *4* தூண்கள். ஒரு பக்கத்தில் *15* முழத்திற்கு *3* தூண்களும், மறுபக்கத்திற்கு *15* முழத்திற்கு *3* தூண்களும் இருந்தன.

தூண்களின் உச்சி வெள்ளியினால் பூண் கட்டப்பட்டிருந்தன. தூண்கள் வெண்கல பாதங்கள் மேல் நிறுத்தப்பட்டிருந்தன. தூண்களில் வெள்ளிக் கொக்கிகள் இருந்தன. அவைகளில் மெல்லிய பஞ்சு நூலினால் செய்த வெள்ளைத் துணிகள் தெற்கு, வடக்க, மேற்கு ஆகிய *3* பக்கங்களிலும் தொங்குதிரைகளாக அமைக்கப்பட்டன.

முன் பக்கமாகிய கிழக்கில் *50* முழ அகலம் மூன்று பகுதிகளாக பிரிக்கப் பட்டது. நடுவில் *20* முழம் கொண்ட வாசலுக்கு *4* வகை துணிகளால் செய்த தொங்குதிரைகளும் வாசலின் *2* பக்கங்களிலும் *15* முழம் வெள்ளைத்துணி தொங்கல்களும் இருந்தன.

**பிராகாரப் பணிமுட்டுகள்**

கிழக்கில் பிராகார வாசல் வழியாக உட்பிரவேசித்தால் ஒருவன் முதலில் சந்திப்பது வெண்கல பலிபீடத்தினையாகும். அதற்காக சற்று தொலைவில் வெண்கலத்தொட்டியைக் காணலாம். பிராகாரத்தில் இவ்விரண்டு பணிமுட்டுகள் மட்டுமே இருந்தன. இதுவே பிராகாரத்தின் அமைப்பு.

## அமைப்பு: பரிசுத்தஸ்தலமும், மகா பரிசுத்தஸ்தலமும்

பிராகாரத்தின் மையப்பகுதியில் இரண்டு அறைகளைக் கொண்ட ஒரு கூடாரம் நிறுவப்பட்டிருந்தது. அதன் நீளம் *30* முழம் அகலம் *10* முழம் அல்லது *45*அடி x *15*அடி = *675* சதுர அடி பரப்பளவு உள்ளதாகும். இந்தக் கூடாரத்தைச் சுற்றிலும் *3* பக்கங்களில் பலகைகள் நிறுத்தப் பட்டிருந்தன.

**பரிசுத்த கூடாரவாசல்**

கிழக்கில் பலகைகளுக்குப் பதிலாக *5* தூண்கள் நிறுத்தப்பட்டன. அவை வெண்கல பாதங்கள் மேல் நின்றன. அவை சீத்திம் மரத்தினால் செய்யப் பட்டு பொன் தகடினால் மூடப்பட்டன. திரைச் சீலைகள் அவைகளில் தொங்கவிடப் பட்டிருந்தன. திரைச்சீலைகளை தொங்கவிட தூண்களில் கொக்கிகள் இருந்தன. திரைச்சீலைகளோவெனில் இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல், திரித்த மெல்லிய பஞ்சு நூல் ஆகியவற்றால் செய்யப்பட்டன. கிழக்கில் உள்ள இந்த *5* தூண்களும் அவைகளில் தொங்கவிட்டிருந்த திரைச்சீலையுமே கூடாரத்தின் வாசல்.

**பலகைகள்**

கூடாரத்தின் பலகைகள் *48*-ம் ஒரே அளவானவை. சீத்தீம்

மரத்தி னால் செய்து பொன் தகட்டினால் அவை பொதியப்பட்டன. ஒரு பலகை *10* முழ உயரமும், ஒன்றரை முழ அகலமும் உள்ளதாகும். கிழக்கில் தூண்களும், திரைச்சீலைகளும் கூடாரத்தின் வாசலாக அமைந்தன.

தெற்கில் *20* பலகைகள், வடக்கில் *20* பலகைகள்.

மேற்கில் *6*-ம், மேற்கு மூலைகள் இரண்டிலும் ஒவ்வொரு பலகை வீதம் *2* பலகைகள் சாய்வாகவும் நிறுத்தப்பட்டிருந்தன. எனவே, *8* பலகைகள். தாழ்ப்பாள்கள் பலகைகளில் பதிந்திருந்த பொன் வளையங்களில் பாய்ச்சப்பட்டிருந்தன. தாழ்ப்பாள்களும் சீத்திம் மரத்தினால் செய்து பொன்னினால் பொதியப்பட்டன.

**மேற்கூரை**

இந்த கூடாரத்தின் கூரை *4* விதமான மூடுதிரைகளால் அமைக்கப் பட்டன. முதலாம் திரை *4* வகை நூல்களால் செய்யப்பட்டு சித்திர வேலைகள் தீர்க்கப்பட்ட துணியினால் செய்யப்பட்டது ஆகும்.

அதன் மேலே ஆட்டுமயிரில் செய்த கம்பளியினால் ஒரு திரை போடப் பட்டது. அதன் மேலே சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலி னால் ஒரு மூடி செய்யப்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலே தகசு தோலி னால் ஒரு மூடியைச் செய்து மேலே விரிக்க வேண்டும். இதுவே கூடாரத்தின் ஒட்டு மொத்த அமைப்பு.

**பரிசுத்தஸ்தலம்**

மேலே நாம் பார்த்த *30* முழ நீளமும் *10* முழ அகலமுமுள்ள கூடாரம் இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கிழக்குப் பக்கத்தில் *20* முழ நீளமும், *10* முழம் அகலமும் கொண்ட அறையாகும் பரிசுத்தஸ்தலம். இந்த அறையில் சாதாரண ஆசாரியர்கள் தங்கள் நியமனத்தின்படி முறை முறையாக பணி புரிவார்கள்.

இதில் ஒரு மேஜையும், அதில் இரண்டு வரிசை அப்பங்களும் வைக்கப் பட்டன. ஒரு வரிசையில் *6* வீதம் *12* அப்பங்கள் இருந்தன. சமூகத்தப்ப மேஜை என அழைக்கப்பட்ட இது பரிசுத்த ஸ்தலத்தின் உட் பக்கத்தில் அறையின் வடக்கில் இருக்கும். இது சீத்திம் மரத்தால் செய்து முழுவதும் பொன்னால் மூடப்பட்டது.

தென் பக்கத்தில் முற்றிலும் பசும் பொன்னினால் செய்யப்பட்ட ஒரு குத்து விளக்கு வைக்கப்பட்டது. இதற்கு ஒரு தண்டும் ஆறு கிளைகளும் ஆக ஏழு உண்டு.

அறையின் மேற்கு பாகத்தில் தூபம் எழுப்பும் பொன் தூபபீடம் வைக்கப்பட்டிருந்தது. இதில் ஆசாரியன் தினந்தோறும் தூபவர்க்கம் போடுவார்.

**மகா பரிசுத்தஸ்தலம்**

பரிசுத்தஸ்தலத்தின் மேற்கில் உள்ள தூபபீடத்தின் பின்னாக ஒரு

திரைச் சீலை உண்டு. இது மகா பரிசுத்தஸ்தலத்தை தனியாகப் பிரிக்கிறது. இதன் நீளம் *10* முழம் அகலம் *10* முழம். பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குமுரிய உயரம் பலகையின் உயரமாகிய *10* முழமே. இந்த அறையைப் பிரிக்கும் திரைச்சீலை *4* தூண்கள் மேல் தொங்கவிடப்படுகிறது.

இந்த அறையிலே தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டது. அந்தப் பெட்டியை மூடுகிற பலகையும் அதன் மேலிருக் கும் கேரூபின்களும் சேர்ந்தது தான் கிருபாசனம். அதின் மேலிருந்து கொண்டு தேவன் இஸ்ரவேலரோடு பேசுவது வழக்கம். இந்த அறையில் மகா பிரதான ஆசாரியன் மட்டும் ஆண்டில் ஒரு முறை செல்வார். ஆசரிப்புக்கூடாரத்தின் முக்கிய பணிமுட்டுகளாவன:

1. பிராகாரத்தில் : பலிபீடம், கழுவும் வெண்கலத் தொட்டி
2. பரிசுத்த ஸ்தலத்தில் : சமூகத்தப்ப மேஜை, குத்துவிளக்கு, தூபபீடம்
3. மகா பரிசுத்த ஸ்தலத்தில் : உடன்படிக்கைப் பெட்டி, கிருபாசனம் இதுவே ஆசரிப்புக்கூடாரத்தின் அமைப்பு.

**பிராகாரமும் பரிசுத்த ஸ்தலம்**

பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும் என உள் கூடாரத்தை அழைத் திருப்பதால் பிராகாரம் பரிசுத்தக்குலைச்சலானதென்று எண்ணலாகாது. பிராகாரத்தையும் பரிசுத்தஸ்தலம் என்று சொல்லியிருக்கிறார். லேவி. *6 : 26.* பரிசுத்த பலிபீடமும், தொட்டியும் இருப்பதால் பிராகாரம் பரிசுத்தமாகும். இஸ்ரவேலராகிய பரிசுத்த ஜாதி ஆராதனை செய்யுமிடமானதாலும் அது பரிசுத்த ஸ்தலமாகும். பரிசுத்த தேவனின் முன்னறிவின்படியே பிராகாரம் அமைக்கப்பட்டதினாலும் அது பரிசுத்த ஸ்தலமாகும்.

## அதிகாரம் 10

## மூன்று வாசல்கள்

*1.* சாதா ஜனம் ஒரு வாசலைக் கடக்கலாம்.

*2.* ஆசாரியன் இரண்டு வாசல்களைக் கடக்கலாம்.

*3.* பிரதான ஆசாரியன் மூன்று வாசல்களைக் கடக்கலாம்.

பிராகாரத்துக்கு ஒரு வாசலும், பரிசுத்த ஸ்தலத்திற்கு ஒன்றும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு ஒன்றும் ஆக மூன்று வாசல்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்கு உண்டு. எனவே இதில் தேவதிரித்துவம் விளங்குகிறது.

**1. பிராகார வாசல்**

இது இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பனை. முழு உலகத்தாருக்காகவும், திறக்கப்பட்ட இந்த வாசல் அனைத்து மக்களையும் வரவேற்கும் விதமாக

உள்ளது. இந்த வாசல் வழியாக யார் வேண்டுமானாலும் பிராகாரத்திற்குள் வரலாம். ஆனால், பலியினால் உடன்படிக்கை செய்கிறவன் மட்டுமே இரட்சிக்கப்படுவான். கிறிஸ்தவ சபைகளிலும் அப்படியே மெய்யான இரட்சிப்பு இன்றி பலர் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் புத்தியற்ற கன்னியர் போல் கைவிடப்படுவர்.

**2. பரிசுத்த ஸ்தலத்து வாசல்**

இங்கே ஆசாரியர்களும், லேவியர்களும் பணிவிடை செய்வர். இதற்குள்ளே நடப்பதெல்லாம் சபையின் ஊழியத்திற்கு ஒப்பனையாகும். சமூகத்தப்ப மேஜை, (ஆராதனை திருவிருந்து) குத்துவிளக்கு, (வேத வசனம் மற்றும் பிரசங்க ஊழியம்) தூபபீடம், (ஜெபம்) அனைத்தும் இப்போது பரிசுத்த ஆவியானவரின் சித்தப்படி நடக்கிறது. எனவே, இந்த வாசலை புதிய ஏற்பாட்டு சபையின் துவக்கம் குறித்த பரிசுத்த ஆவியானவரின் நுழைவு வாசலாக நாம் காணலாம். பெந்தெகொஸ்தே நாளில் இறங்கி வந்த ஆவியானவர் அனைத்து ஊழியங்களையும் நிறைவேற்றி வருகிறார். இங்கே தெரிந்து கொள்ளப்பட்ட ஆசாரியர் மட்டுமே ஊழியம் செய்வர். ஊழியம் செய்பவரை விட ஊழியத்தை நடப்பிக்கின்ற பரிசுத்த ஆவியானவரே முக்கியம். எனவே, இது ஆவியானவரின் ஆலயமும், வாசலுமாகும். புதிய ஏற்பாட்டு சபையில் ஆவியானவரின் ஊழியத்தைக் காண்போமாக.

அ. ஊழியத்திற்கு அழைப்பதும் நியமிப்பதும் அவர். அப். *13 : 2, 20 : 28.*
ஆ. இயேசுவை கர்த்தரென்று சொல்ல வைப்பதும் அவர். *1* கொரி. *12 : 3.*
இ. வரங்களால் ஊழியத்தை நடத்துபவர் அவர். *1* கொரி. *12 : 7-10.*

**3. மகா பரிசுத்த ஆலய வாசல்**

இது பிதாவாகிய தேவனின் வாசல். இந்த அறைக்குள் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியும், கிருபாசனமும் இருப்பதால் இதில் பிதாவாகிய தேவன் முக்கியஸ்தராகிறார். எனவே, அதன் வாசல் பிதாவைக் காட்டுகிறது. இதற்குள் மகா பிரதான ஆசாரியன் மட்டும் வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே பிரவேசிப்பார்.

## பகுதி IV

# கட்டுமானப் பணிகள் - பிராகாரம்

இதுகாறும் கூடாரத்தின் அமைப்பைக் குறித்து தியானித்தோம். இனி அதன் கட்டுமானப் பணிகளைக் காண்போமாக. வேதாகமத்தில் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ள ஆலயங்கள் மூன்று ஆகும்.

அவையாவன: *1.* ஆசரிப்புக்கூடாரம் *2.* சாலமோனின் ஆலயம் *3.* ஆயிரம் ஆண்டாட்சி ஆலயம். இவற்றுள் ஆசரிப்புக்கூடாரத்தின் பிராகாரம் *100* முழம் நீளமும், *50* முழம் அகலமும் கொண்ட *5000* சதுர முழம் பரப்பளவுள்ள நிலப்பகுதியாகும். சாலமோனின் ஆலயப்பிராகாரத்தின் அளவுகள் கொடுக்கப்படவில்லை. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட பிராகாரங்களை அமைத்திருந்தார். ஆசாரியர்கள் பயன்படுத்தி வந்த ஆசாரியரின் பிராகாரம் ஒன்றும், பொது மக்களுடைய

உபயோகத்திற்கான பெரிய பிராகாரம் ஒன்றும் ஆக இரண்டு பிராகாரங்கள் இருந்ததாக *2* நாளா. *4 : 9*ல் காணலாம்.

அரசனான மனாசே ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் வானசேனைகளுக்குப் பலிபீடங்களைக் கட்டினான். *2* நாளா. *33 : 5, 2* இராஜா. *23 : 12, 21 : 5.* இவ்வாறு சாலமோன் ஆலயம் எல்லா நிலையிலும் வித்தியாசமாக இருந்ததை நாம் தொடர்ந்து காணப்போகிறோம். ஆசரிப்புக் கூடாரம் தேவன் காண்பித்த மாதிரியின்படியே கட்டப்பட்டது. யாத். *25 : 9, 40,* எண். *8 : 4,* எபி. *8 : 5.* ஆனால் சாலமோன் ஒரு பிராகாரத்துக்குப் பதிலாக இரண்டு பிராகாரங்களை செய்யலாமா? இது மட்டுமா? ஆசரிப்புக்கூடாரத்தில் இல்லாத கீழ்வருபவற்றையும் பிராகாரங்களில் உண்டு பண்ணினான்.

*1.* முகப்பு மண்டபம் ஒன்றைக் கட்டினான். அதின் நீளம் *20* முழம், அகலம் *10* முழம், உயரம் *120* முழம். *1* இரா. *6 : 3, 2* நாளா. *3 : 4.*

*2.* பிராகாரத்து சுவர்களை ஒட்டி சுற்றுக் கட்டுகளைக் கட்டி அவைகளில் அறைகளைச் சுற்றிலும் உண்டாக்கினான். *1* இரா. *6 : 5.*

*3.* கூடாரத்தின் தொங்குதிரை வாசலுக்குப் பதிலாக பிராகாரத்துக்கு வாசல்களையும், கதவுகளையும் உண்டாக்கி அவைகளை வெண்கலத்தால் மூடினான். *2* நாளா. *4 : 9.*

*4.* ஆலயப் பிராகாரத்துக்கு வெளியே முன்பக்க (கிழக்கு) மண்டபத்தருகே *35* முழ உயரமான இரண்டு தூண்களையும், அவைகள் மேல் *5* முழம் உயரமுள்ள கும்பங்களையும் உண்டாக்கி நிறுத்தினான். *2* நாளா. *3 : 15-17.* ஒரு தூணுக்கு யாகீன் (தேவன் ஸ்திரப்படுத்துவார்) என்றும் இடது பக்கத்து தூணிற்கு போவாஸ் (தேவனின் பெலன் உண்டு) என்றும் பேரிட்டார்.

இது போன்ற மாறுதல்களுடன் ஆலயப்பிராகாரத்தைக் கட்டும்படி சாலமோனுக்கு அனுமதி கொடுத்தது யார் என்ற நியாயமான கேள்வி எழுகிறதல்லவா? இதற்கு விடையைக் காண ஆசரிப்புக் கூடாரத்ததிலி ருந்து மாறுபட்ட ஏதேனும் ஆலயத்தைக் கட்ட தேவன் எங்காவது அனுமதித்திருக்கிறாரா என்பதை நாம் கண்டு பிடிக்கவேண்டும்.

*1.* ஆயிரம் ஆண்டாட்சி காலத்தில் கட்டப்பட இருக்கும் ஆலயத்தின் அளவுகளை எசே. *40-48* வரைக் காணலாம். அதில் வெளியே சுற்றிலும் ஒரு காலியிடமும் அதற்குள்ளே ஒரு வெளிப்பிராகாரமும், அதற்குள்ளே ஒரு உள் பிராகாரமுமாக மூன்று பிராகாரங்களைக் காணலாம். சால மோனின் ஆலயத்தில் உள்ளதை விட பெரிய வாசல் களும், பெரியதும், எண்ணிக்கையில் அதிகமுமான அறைவீடுகளும், விசாலமான அறை வீடு களும், விசாலமான மண்டபங்களும் கட்டப்பட இருப்பதைக் காணலாம். சாலமோனின் ஆலயத்திற்கு ஒரே மண்டபம் இருந்தது. இங்கேயோ மேற்கு தவிர மற்ற மூன்று திசைகளிலும் ஒவ்வொன்று வீதம் மூன்று பெரிய மண்டபங்களும் மற்றும் அநேக சின்ன மண்டபங்களும் உள்ளதாக வாசிக்கிறோம். எனவே ஆசரிப்புக் கூடாரத்தின் அளவுகளை பின்பு கடைப் பிடிக்க வேண்டும் என தேவன் கட்டாயம் பண்ணவில்லை. பூமிக்குரிய ஆலயங்களின் பெருமைகளில்

ஒன்றும் இல்லை என்ற வண்ணம் புதிய ஏற்பாட்டு சபைக்கு தேவன் மக்களையே ஆலயங்களாக தெரிந்து கொண்டார். ஆனால், புதிய ஏற்பாட்டு சபைக்கு ஒரு ஆவிக்குரிய அமைப்பை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். அப்போஸ்தலர் முதலிய தேவ ஊழியர்களுடன் இணைந்த விசுவாசிகளின் கூட்டமாகும் சபை. ஆனால் கூடி வரும் இடத்திற்கு முக்கியத்துவமோ ஆலயத்திற்கு அளவுகளோ இல்லை.

*2. 1000* ஆண்டாட்சி ஆலயத்திற்கு அளவுகளைக் குறித்து வைத்த தேவன் ஆசரிப்புக்கூடாரத்திற்கு மாதிரியைக் கூட காண்பித்த தேவன் சாலமோனின் ஆலயத்தைக் குறித்து எதையும் வெளிப்படுத்தாமலிருக்கவில்லை. தாவீது சாலமோனுக்கு ஆலயமும், பணிமுட்டுகளும் இருக்க வேண்டிய மாதிரியைக் காண்பித்தார். அது ஆவியினால் எனக்கு கட்டளையிட்டபடி என *1* நாளா. *28 : 11, 12* ல் காண்கிறோம். ஒவ்வொரு பொருளும் செய்வதற்கு எவ்வளவு நிறை பொன் என்பதையும் கேரூபின்களின் மாதிரியையும் கூட கொடுத்தார். வசனம் *14-19*. இவை எல்லாம். கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றான்.

*3.* சாலமோனின் ஆலயத்து பலிபீடத்தில் வான அக்கினி இறங்கி பலியைப் பட்சித்தது. இவ்வாறு தேவ அங்கீகாரம் பெற்றது போதாதென்று இதே ஸ்தலத்தை எனக்கு பலியிடும் ஆலயமாகத் தெரிந்து கொண்டேன் என நேரிடையாகவும், வெளிப்படையாகவும் கூறி தேவ அங்கீகாரத்தை வழங்கினார். *2* நாளா. *7 : 1, 12.*

இதிலிருந்து நமது ஊழியங்கள் தேவ சித்தத்தின்படியும், அவரது அங்கீகரிப்புக்கு ஏற்றபடியும் இருக்க வேண்டும். மற்றவை காயீனின் காணிக்கை போல் ஆகிவிடும். புத்தியில்லாத ஆராதனையுமாகி விடும். ரோமர் *12 : 1.* அவை அக்கினி சோதனையில் மரம், புல், வைக்கோல் போல வெந்து போகும் என அறியலாம். *1* கொரி. *3 : 11-16.*

ஆசரிப்புக்கூடாரமானது எல்லா வகையிலும் தேவன் கொடுத்த மாதிரியின் படி செய்யப்பட்டதால் அதற்கு தேவ அங்கீகாரம் உண்டு. கர்த்தர் கற்பித்தபடியே செய்தான் என்று *18* தடவைகள் யாத். *39, 40* அதிகாரங்களில் காணலாம். அகில அண்டங்களையும் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கிய தேவாதி தேவனின் அனந்த ஞானத்தில் உருவாகிய ஆசரிப்புக் கூடாரத்தின் கட்டுமானப் பணிகளைக் காண்போமாக

## அதிகாரம் 11

## பிராகாரம் - THE COURT & தூண்கள்

கிழக்குத் திசையை நோக்கி நிற்கிற ஆசரிப்புக்கூடாரத்தின் பிராகார மானது தெற்கும் வடக்கும் *100* முழம் வீதமும், மேற்கும், கிழக்கும் *50* முழம் வீதமும் *300* முழச் சுற்றளவு உள்ளதாகும். பிராகாரத்தை பிற நிலங்களிலிருந்துப் பிரித்துத் தனிமையாக்கப்பட வேண்டும். அது நிலத் திலே தான் இருந்தது என்றாலும் தனிமையாயிருந்தது. அதைப் பிரித்துக் காட்டுவதற்காகச் சுற்றிலும் தூண்களை நட்டு, அவைகளில் வெள்ளைத் துணிகளை தொங்க

விடவேண்டும். ஆம்! தேவ ஆலயமாகிய நாம் (சபை) உலகத்திலே வாழ்ந்தாலும் உலகத்துக்குரியவர்களல்ல. யோவான் *17 : 14.* நான் உலகத்தானல்லாதது போல அவர்களும் உலகத்தார் அல்ல என்றார் இயேசு. பிலேயாமின் பார்வையில் கூட அவர்கள் தனியே வாசம் பண்ணும் ஜனங்களாவர். எண். *23 : 9.* அவர்களை விட்டுப் பிரிந்து போய் அசுத்த மானதைத் தொடாதிருங்கள் என்பதே இதற்கு புதிய ஏற்பாட்டு உபதேசம். *2* கொரி. *6 : 17.* தேவனுடைய சபையாகிய தோட்டத்திற்கு வேலி கட்டப்பட்டிருந்தது என்ற உன்னதப்பாட்டின் *(4 : 12)* வசனம் இதற்கு மற்றொரு விளக்கமாகும். ஆம்! அது திட்டவட்டமான வேலியால் *(உபதேசம்)* உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறது.

**தூண்களின் எண்ணிக்கை**

இரண்டு தூண்களுக்குள்ள இடைவெளி ஐந்து முழமாகும். ஐந்து என்பது பிரியமானவனாகிய பென்யமீனுக்கு யோசேப்பு வைத்த சாப்பாட்டின் ஐந்து மடங்கையும் ஐந்து மாற்று வஸ்திரங்களையும் காட்டும். ஆதி. *43 : 34, 45 : 22.* எனவே இது ஆசீர்வாதத்திற்கு அடையாளம். இயேசு ஐந்து அப்பங்களை ஆசீர்வதித்தபோது அது ஐந்தாயிரம் பேரை போஷித்தது. மத். *14 : 17.* இதன் இடைவெளி ஐந்து முழ நீளமான பலிபீடத்தின் நீளமாகும். யாத். *27 : 1.* இது கிறிஸ்துவாகிய பலி பீடத்தை நினைவூட்டி நிற்கிறது. கோலியாத்தை வெல்ல தாவீது எடுத்த கற்கள் ஐந்து. எனவே இது வெற்றியின் சின்னம். *1* சாமு. *17 : 40.*

இவ்வாறு தெற்கே *20,* வடக்கே *20,* கிழக்கே *10,* மேற்கே *10* ஆக *60* தூண்கள் பிராகாரத்திற்கு உண்டு. *60* என்பது திரள் கூட்டத்தின் அடையாள எண்ணிக்கையாகும். இது சபையைக் காட்டுகிறது. விசுவாசி களாகிய திரளான கூட்டம் (அப். *4 : 32)* நமக்கு உண்டு. சூலமித்தியாள் இரண்டு சேனைகளின் கூட்டத்திற்கு சமானமானவள் உன்னத. *6 : 13.* மேலும் இது சவுரியவான்களின் எண்ணிக்கையாகும். சாலமோனின் மஞ்சத்தைச் சுற்றிலும் *60* சவுரியவான்கள் நின்றனர். உன்னத பாட்டு *3 : 7.* பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட சவுரியவான்களே இன்று சபையின் தேவை. தூண்கள் பெலத்திற்கும், பளுவைத் தாங்குவதற்கும் பயன் படுகின்றன. பிராகாரத் தூண்களின் பருமன் கூறப்படவில்லை. அவைகள் சுமக்கும் பளு அதிகமானதல்ல. ஐந்து முழ நீளமான துணிகளைத் தாங்கும் வேலையே அதற்குள்ளது. அதற்கேற்ப அது அதிக பருமன் இன்றி சுமார் இரண்டு அங்குல விட்டம் உடையதாக இருக்கலாம்.

**மரமா? வெண்கலமா?**

பிராகாரத்துத் தூண்கள் வெண்கலமென யாத். *27 : 10, 19* லும், பாதங்கள் மட்டும் தான் வெண்கலமென யாத். *38 : 10, 11, 17* லும் தொனிக் கிறது. பிராகாரத்தினுள் வாசஸ்தலத்தின் வாசலுக்கு நான்கு தூண்கள், சீத்தீம் மரத்தால் செய்யப்பட்டு (யாத். *26 : 32, 37)* பொன்னால் மூடப்பட்டது.

ஆசரிப்புக்கூடாரத்தில் மரத்தால் செய்த எல்லாப் பொருட்களும் வெண்கலத்தாலோ, பொன்னினாலோ மூடப்பட்டிருந்தது. அது போல பிராகாரத்தூண்களும் சீத்தீம் மரத்தால் செய்து வெண்கலத்தகட்டினால் பொதியப்பட்டது என்பதே சாலச்சிறந்தது. மரம் மனுஷ ஞானத்தையும், வெண்கலம் தேவ பலத்தையும் காட்டும். ஒடிந்தோ, நசுங்கியோ போகாதபடி மரத்தைக் காப்பது வெண்கலம். உங்கள் விசுவாசம் மனுஷ ஞானத்திலல்ல, தேவ பலத்தில் நிற்கிறது. *1 கொரி. 2 : 4.* அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவ வார்த்தையினாலும் பிழைப்பான். மரமும், வெண்கலமும் சேர்த்துத் தூண்கள் கூடாரத்தைக் காக்கும். நாம் மனுஷீக பெலத்தாலும், தெய்வீக பெலத்தாலும் தேவனுடைய சபையை காப்போமாக. வெண்கலத்தால் தூண் கள் மூடப்படவில்லை, என நினைப்பதற்கும் இடமுண்டு. யாத். *27 : 17*-ல் தூண்களின் விளக்கம் காண்கிறோம். அதில் அவை வெண்கலத்தால் மூடப்பட்டது என்று இல்லை. மற்றபடி வெள்ளிப்பூண் (பட்டையான வளையம்) கட்டப்பட்டு வெள்ளிக் கொக்கியைப் பொருத்தி வெண்கல பாதத்தில் நிறுத்த வேண்டுமாம். ஆனாலும் அது வெண்கலத்தால் முற்றிலும் மூடப்பட்டிருந்தது என்பதே சிறந்தது. எப்படியும் சீத்திம் மரத் தூண்கள் ஒரு விசுவாசிக்கு நிழலாகும். அவன் கெட்டுப்போகாத படி வெள்ளிப்பூண் ஆகிய வேத உபதேசங்களால் கட்டப்பட்டு கிறிஸ்து வாகிய வெண்கல பாதமாகிய அஸ்திபாரத்தின் மேல் நிற்கிறான். ஆகையால் அசைக்கப்படுவதில்லை.

**வெள்ளிப்பூண்**

தூண்களின் உச்சியில் வெள்ளியினால் பட்டையான வளையமாகிய பூண் கட்டப்பட வேண்டும். வெள்ளிச்சேக்கல் ஆத்துமாக்களின் மீட்புக்கு கிரயமாக செலுத்தப்பட்டது. எனவே, வெள்ளி மீட்பு அல்லது இரட்சண்யத் திற்கு அடையாளமாகும். யாத். *30 : 12-16, 38 : 17.* லேவி. *27 : 1-7.* பழைய ஏற்பாட்டின் வெள்ளிக்குப் பதிலாக இயேசுவின் இரத்தத்தால் புதிய ஏற்பாட்டு சபை மீட்கப்பட்டிருக்கிறது. *1* பேதுரு *1 : 18, 19.* இந்த இரட்சண்யத்தைப் போர் வீரனின் தலையில் சூடியிருக்கிற சீராவாக பவுல் விளக்கியுள்ளார். எபே. *6 : 17.*

**வெள்ளிக்குமிழ்**

பூண்களுக்கு மேலே வெள்ளிக்குமிழ் உண்டு. மரத்தின் உச்சியில் தண்ணீர் இறங்கி மரம் கெட்டுப்போகாதபடி குமிழின் வெள்ளி காக்கிறது. பூண் மற்றும் குமிழை மூடிய வெள்ளியானது இரட்சண்யமென்னும் தலைச் சீராவை நினைப்பூட்டுகிறது. எபே. *6 : 17.* இங்கேயும் பிராகாரத்தூண் கூடாரமாகிய சபைக்குச் சுற்றிலும் பாதுகாவலுக்காக நிற்பதால் அதை போர்வீரனோடு ஒப்பிடலாம். இது விசுவாசியாகிய போர்வீரனின் நேர்த் தியான சித்திரமல்லவா? அதனால் தான் தூணின் சிரசில் பூண் மற்றும் குமிழ் ஆகிய இரட்சண்ய தலைசீரா தரித்தவன் சபையைக் காக்கிறான், மற்றவனோ சபையை கலைக்கிறான். பாதரட்சைகளிட்ட கால்களும், வெள்ளிப்பூணும், குமிழும் கட்டிய தூண்கள் எத்தனை அழகு?

"அழகாய் நிற்கும் யாரிவர்கள்?
திரளாய் நிற்கும் யாரிவர்கள்?
சேனைத் தலைவராம் இயேசுவின் போர்க்களத்தில்
அழகாய் நிற்கும் யாரிவர்கள்?"

**வெண்கல பாதங்கள்**

தூண்களை மண்ணில் புதைக்க தேவன் அனுமதிக்கவில்லை. தேவ ஜனமான தூண்கள் உலகமாகிய மண்ணில் புதைந்து விடலாகாது. பூமிக்குரியவர்களாகக் கூடாது. ஆவிக்குரியவர்களாக வேண்டும். சங்கீதக்காரனின் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொண்டதாம். *119 : 25*. தூண்கள் உறுதியான வெண்கல பாதங்கள் மேல் நிறுத்தப்பட்டன. யாத். *38 : 17*.

வெண்கலம், செம்பும் துத்தநாகமும் ஆக இரண்டு உலோகங்களின் கூட்டு உலோகமாகும். எனவே, வெண்கல பாதங்கள் விசுவாசிகளின் ஐக்கியத் தையும், ஒரு மனதையும் சித்தரிக்கிறது. விசுவாசிகள் திரளாக இருந்த போதிலும் ஒருமனமாக இருந்தனர். அப். *4 : 32*. ஒண்டி யாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் என்ற பிரசங்கி *4 : 9* யின் வார்த்தையின் கருத்து இதனோடு ஒத்திருக்கிறது. ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான். ஆனால் இரண்டு பேர் சேர்ந்து விட்டால் பதினாயிரம் பேரைத் துரத்துவார்களாம். உபா. *32 : 30*. மேலும், இவ்விரண்டு உலோகங்களின் இணைப்பு பிதாவையும், குமாரனையும் காட்டும். தூண் களின் ஐக்கியம் இவ்விருவரோடும் இருப்பதாக. *1* யோவான் *1 : 3*.

மேலும் கிறிஸ்துவுடன் ஐக்கியமாகயிருப்பதற்கு தேவன் உங்களை அழைத்ததாக பவுல் விளக்குகிறார். *1* யோவான் *1 : 6* கிறிஸ்துவுடன் உள்ள ஐக்கியத்தில் இரண்டு மகத்துவங்கள் உண்டு. *(1)* கிறிஸ்துவின் பாத்திரம் இரத்தத்தின் ஐக்கியமும் *(2)* அப்பம் அவருடைய சரீரத்தின் ஐக்கியமுமாகும். *1* கொரி. *10 : 16*. இவ்வாறு ஒன்றாயிருக்கிற இருவராகிய பிதாவிலும், குமாரனிலும் நாம் நிலைத்திருப்பதையே வெண்கல பாதங்கள் மேல் நிற்கும் தூண்கள் காட்டுகின்றன. இந்த ஐக்கியம் வெண்கலம் போல உரமானதாக இருக்கக்கடவது.

**தூண்களின் கொக்கிகள்**

பிராகாரத் திரைச்சீலையாகிய துணிகள் தூண்களில் பதித்திருக்கும் கொக்கிகள் மேல் தொங்கவிடப்படும். கொக்கிகள் துணிகளைப் பிடித்த வண்ணம் நிற்கின்றன. *(1)* கொக்கிகள் சிறியவையானாலும் அவைகளின்றி துணிகள் மறையாக அமையாது. சபையில் ஊழியங்களில் உபயோகப்படுகிற சிறியோரை இது காட்டும். அவர்களையல்ல, துணிகளின் பிரகாசத்தையும் தூண்களின் மகிமையையுமே மக்கள் பார்க்கின்றனர். சிறிய கொக்கிகளை யாரும் கவனிப்பது இல்லை. இந்த சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றார் இயேசு. மத். *18 : 10*.

கொக்கிகள் வெள்ளியினால் செய்யப்பட்டன. இங்கே வெள்ளி தேவனுடைய வசனத்திற்கு அடையாளம். அது மண் குகையில் ஏழுதரம்

உருக்கிப் புடமிடப்பட்ட வெள்ளிக்கு ஒப்பாம். சங். *12 : 6*. எனவே, வெள்ளிக் கொக்கிகள் வேத வசனத்தால் தன்னைக் காத்துக்கொள்கிற வாலிபரையும், *1* யோவான் *2 : 14* காட்டுகிறது. சபைகளிலுள்ள வாலி பரே, வெள்ளிக் கொக்கியைப் போல மறைந்திருந்து ஊழியம் செய்யுங்கள். வேத வசனங்களால் நிறைந்திருங்கள்.

தூண்களாகிய விசுவாசிகள் செய்யும் நற்கிரியைகளையும் கொக்கி காட்டும். கொக்கி இல்லாத தூண்களே இல்லை. எல்லாரும் நற்கிரியைக ளைச் செய்யும்படியாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். எபே. *2 : 10*. நற்கிரியைகள் கனிகளாகும். கொலோ. *1 : 10*.

## அதிகாரம் 12

# வெள்ளைத் துணிகளாகிய தொங்குதிரைகள்

யாத். *27 : 9* வெளியே நின்று பார்க்கிற ஒருவன் முதலில் காண்பது வெள்ளைத் துணிகளையேயாகும். இது திரித்த மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்டது. அது செயற்கை நூல் அல்ல. இயற்கை யான பருத்திச் செடியிலிருந்து எடுத்து கைகளினால் திரிக்கப்பட்டது. திரிப்பது கை வேலையின் கடினமான உழைப்பிற்கு ஒப்பனை. மணவாட்டி யின் சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களின் நீதியின் கிரியைகளாயிருந்தது. வெளி. *19 : 7, 8*. நீதியின் கிரியைக ளுக்குக் கடினமான உழைப்பும், செலவும் உண்டு என்பதையும் அறியக் கடவோம்.

உலகத்தாருடைய வெளிவேஷ பிரதாபங்களுக்கு மாறுபட்ட ஒரு அமைப்பு ஆகும் ஆசரிப்புக்கூடாரமும், புதிய ஏற்பாட்டு சபையும். இயேசு வின் இரத்தத்தால் கழுவப்பட்டு அழுக்கு நீங்கிய ஒரு தன்மையாகும் வெண் வஸ்திரம். வெண் வஸ்திரங்களையே வேதாகமம் சிபாரிசு செய்கிறது.

1. ஜெயங்கொள்ளுகிறவன் பெறுவது வெண்வஸ்திரம். வெளி. *3 : 5*.
2. உயிர்த்தெழுந்த இயேசுவின் சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போல வும் உறைந்த மழை போலவும் வெண்மையாயிருக்கிறது. வெளி.*1 : 14*.
3. நிர்வாணியான லவோதிக்கேயா சபைக்கு சிபாரிச செய்யப்பட்டது வெண் வஸ்திரம். வெளி. *3 : 18*.
4. பலிபீடத்தின் கீழே காணப்பட்ட இரத்த சாட்சிகளுக்கும் வெள்ளை அங்கியே கொடுக்கப்பட்டது. வெளி. *6 : 11*.
5. பரலோக சிங்காசனத்தண்டை சிங்காசனங்களில் அமர்ந்திருக்கும் *24* மூப்பர்கள் அணிந்திருப்பது வெண் வஸ்திரம். வெளி. *4 : 4*.
6. எண்ணக்கூடாத திரள் கூட்டம் அணிந்திருப்பதும் வெள்ளை அங்கிகளே. வெளி. *7 : 9, 13*.
7. இயேசுவின் கல்லறைக்குள்ளே காணப்பட்ட இரண்டு தூதர்கள் வெள்ளுடை தரித்திருந்தார்கள். லூக்கா *24 : 4-5*.

8. இயேசு பரமேறுகையில் வானத்திலே தோன்றிய இரண்டு பேர் வெண்மையான வஸ்திரந்தரித்திருந்தனர். அப். *1 : 10.*
9. மறுரூப மலையில் வெளிப்பட்ட இயேசுவின் வஸ்திரங்கள் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிருந்தது. மத். *17 : 2.*

ஆம்! இந்த பூமியிலும் துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாதிருங்கள். ரோமர் *13 : 14.* ஒவ்வொரு நிறத்திற்கும் பொருள் உண்டு. கறுப்பு-கள்ளம்; பச்சை-செழிப்பு; சிகப்பு-இரத்தம் சிந்துதல்; மஞ்சள்-துக்கம்; வெண்மையோ! பரிசுத்தத்திற்கே அடையாளம். உலக ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்த வெண்வஸ்திரம் உதவுகிறது. அதே வேளையில், வெண் வஸ்திரம் கட்டிவிட்டு உள்ளத்தில் காரிருளைக் கொண்டிருப்பது நல்லதல்ல. அதைக் கடைப்பிடிக்கவும், இதைக் களையவும் வேண்டும். உன் வஸ்திரம் எப்பொழுதும் வெண்மையாக இருக்கட்டும் என்பதே சூரியனின் கீழே எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்த ஞானியின் முடிவு. பிர. *9 : 8.* திரித்து முறுக்கேற்றிய நூலால் செய்த வஸ்திரம் சீக்கிரம் கிழியாது. அப்படியே கஷ்டங்களால் திரித்து முறுக்கப்பட்ட விசுவாசியும் சோதனைகளில் நிலைத்திருப்பான்.

**கயிறுகள்** கயிறுகள் பிரமாணமாகிய வேத வசனத்திற்கு அடையாளம். ஸ்திரீயும், புருஷனும் பிரமாணத்தினாலேயே கட்டப்பட்டிருக் கின்றனர். ரோமர் *7 : 2.* தகப்பனுடைய உபதேசமும் பிள்ளைகளைக் கட்டிக்காக்கிறது. இது தேவ பெலத்தினாலே நம்மைக் காக்குதலையும் குறிக்கும். *1* பேதுரு *1 : 5.* அது நம்மைப் பெலப்படுத்துகிறது. *1* பேதுரு *5 : 10.* தேவன் நமக்கு பலமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார். *2* தீமோ. *1 : 7.*

## அதிகாரம் 13

## பிராகார வாசல் யாத். 27 : 16; 38 : 18-20.

பிராகாரத்தின் வாசலானது கிழக்கில் மையத்தில் உள்ள *4* தூண்கள் நிற்கும் *20* முழ தூரமுடையதாகும். அதன் இடது புறத்தில் *15* முழமும் *(3 தூண்கள்)* உள்ளன. மத்திய பாகத்தில் உள்ள *4* தூண்கள் ஒவ்வொன்றும் *5* முழ இடைவெளி வீதம் *20* முழம் அகலமுடையதாகும். எனவே, பிராகார வாசல் *5* முழம் அகலம் வீதமுள்ள *4* பகுதிகளாக உள்ளது. இத்தனை விசாலமான வாசல் எதற்காக?

1. அரண்மனைகளுக்கோ, வீடுகளுக்கோ உள்ளதுபோல பல வாசல்கள் பிராகாரத்திற்கு இல்லாததால் இருக்கிற ஒரே வாசல்விசாலமாக உண்டாக்கப்பட்டது.
2. இயேசு கிறிஸ்துவையே இந்த வாசல் சித்தரிக்கிறது. நானே வாசல் என்று இயேசு தாமே சொல்லியுள்ளார். யோவான் *10 : 7, 9.* இயேசு எல்லா மக்களையும் வருந்தி அழைத்த விசால மனமுள்ளவர். மத். *11 : 28.* எனவே, வாசலின் விசாலம் அந்த பண்பின் சின்னமாகும்.

3. சிலருடைய பலிகள் திரளான ஆடும் மாடுமாக இருக்கும். உடன் வருபவர்களும் மிகுதியாக இருப்பர். ஒரே வேளையில் பலர் ஆடு, மாடுகளுடன் பலிக்கு வருவர். அத்தனை பேருக்கும் ஒரே வேளையில் பிரவேசிக்க இத்தனை விசாலமான வாசல்! தம்மிடம் வருகிற அத்தனை பேரையும் ஏற்றுக்கொள்ளும் விசால மனம் இயேசுவுக்கு உண்டு! அல்லேலூயா!

**ஒரே வாசல்**

இது இயேசுவை பிரதிபலிக்கின்றதால் வாசல் ஒன்றாக அமைந்தது பொருத்தமாகும். பூமிக்கு ஒரே சூரியன். நமக்கு ஒரே இரட்சகர். அப். *4 : 12*. நமது மத்தியஸ்தரும் ஒருவரே. *1* தீமோ. *2 : 5*. ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவனும் பிதாவும் என்ற அனைத்தும் இந்த ஒரே வாசலின் விளக்கமாகும். எபே. *4 : 4-6*. மக்கள் எல்லா வழிகளிலும் முக்தி அடைய முடியாது என்பது தேவனின் திட்டமான எச்சரிக்கையாகும். எம்மதமும் சம்மதம் என்பது வேதத்திற்கு முரணான கொள்கையாகும். எனவே, மனித கற்பனைகளின்படியல்ல, இயேசுவை மட்டும் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்பவனே இரட்சிக்கப்படுவான். நோவாவின் பேழைக்கும் ஒரே வாசல். இரட்சிப்பு வேண்டியவன் அதன் வழியாக வர வேண்டும். நான்கு பக்கங்களிலும் வாசல் இல்லையென்று முணுமுணுத்து விமரிசித்து ஒரே வாசலில் நுழையாதிருந்தவன் பிரளயத்தில் அழிந்தது போலவே கடைசி நாளிலும் நடக்கும். ஒரே வழி இயேசுவே. யோவான் *14 : 6*. ஒரே வாச லும் இயேசுவே. யோவான் *10 : 9*. நோவாவின் பேழைக்கும், ஆசரிப்புக் கூடாரத்திற்கும் புதிய ஏற்பாட்டு சபைக்கும் ஒரே வாசல். எல்லாம் இயேசுவே!

**கதவில்லாத வாசல்**

திருட்டு, கொலை முதலிய பயங்களுக்காகத்தான் கதவுகள் வைத்துப் பூட்டப்படுகிறது. கிறிஸ்து பயமற்றவர். அவர் பரிசேயரைப் பார்த்து உங்களுக்கு ஐயோ! என்றார். (லூக்கா *11 : 42-43*) பிலாத்து விடுதலையாக்க முயற்சி செய்தபோதிலும் இயேசு இசைந்து கொடுக்க வில்லை. இயேசுவிடம் வருகிறவனுக்கு பயத்திலிருந்து விடுதலை தருகிறார். அல்லேலூயா! எப்போதும் தேவமகிமை கூடாரத்தில் காணப்பட்டதால் எந்த திருடனும் அங்கே அணுகுவதில்லை.

எந்த பாவியும், ரோகியும் எப்போதும் வந்தடையத்தக்கதாக அவர் திறந்த வாசலானார். ஆதிகாலம் முதல் மறைவாயிருந்த தேவன் தமது மறைவைத் துறந்து மனிதருக்கு வெளிப்படத் தொடங்கினதையே திறந்த வாசல் வெளிப்படுத்துகிறது.

உள்ளே இருக்கும் பலிபீடத்திற்குப் பாவநிவர்த்தி தேடி வருகிற எக்கொடிய பாவிக்கும் தங்குதடையின்றி ஓடிவந்து பிரவேசிக்க இது அநுகூலமான வாசல். ஏசாயா *55 : 1;* மத். *11 : 28*. பூட்டும், தாழ்ப்பாளும் இருந்திருந்தால் அதை திறக்கவும், பூட்டவும் கூடும். அவசரமாக ஓடிவரு

கின்றவன் வாசல் காவலாளனின் தயவை நாடி நிற்க நேரிடும். கதவோ, பூட்டோ இல்லாததால் யாரும் எப்போதும் வரலாம். அவன் வாசல் காக்கிற வனையல்ல, இயேசுவையே நேரில் காண்பான். ஸ்தோத்திரம்!

கதவுகளும், பூட்டும் இல்லையென்பதால் வாசல் எவரும் எட்டிப் பார்க்கும் விதம் திறந்து கிடக்கவில்லை. அதை நான்கு வகை நூல்களால் செய்ததும், எளிதில் மாற்றக்கூடியதுமான ஒரு தொங்குதிரை மூடியிருந்தது. யாத். *27 : 16; 38 : 18.* இதன் நான்கு வகை நூல்களும் கிறிஸ்துவின் நான்கு தன்மைகளையே நமக்குத் தருகிறது. எல்லா வர்ண நூல்களும் திரித்த மெல்லிய நூலினால் செய்யப்பட்டதாகும். எனவே, இஸ்ரவேலின் ஸ்திரீகள் பஞ்சு நூலினை மெல்லியதாகத் திரிக்க திறம் பெற்றிருந்தனர் என்று அறிகிறோம். யாத். *26 : 1; 27 : 9.* இது புதிய ஏற்பாட்டு சபையின் நற்கிரியைகள் என வெளி. *19 : 8* ல் காண்க. திரித்த அனுபவம் கஷ்டங் களையும், மெல்லிய அனுபவம் பரிசுத்தம் மற்றும் கிரியைகளின் நேர்த்தி ஆகிய உள்ளான அனுபவங்களைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக:

*(1)* அன்பு மாயமற்றதாயிருப்பதாக. ரோமர் *12 : 9*

*(2)* விசுவசாம் மாயமற்றதாயிருப்பதாக. *2* தீமோ. *1 : 4.*

*(3)* கிரியைகள் புகழ் விருப்பமற்றதாயிருப்பதாக. மத். *6 : 5*

*(4)* பக்தி வெளி வேஷமற்றதாயிருப்பதாக. ரோமர் *12 : 2.*

**அதிகாரம் 14**

# நான்கு வகை நூல்கள்

### 1. இளநீல நூல்

இது வானத்தின் நிறமாகும். இது மேலான உலகத்தை அதாவது இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவர் என விளம்புகிறது. யோவான் *3 : 13.* மேலும் வானங்களின் வழியாய் சென்றவர் (எபி. *4 : 14)* வானங்களின் வழியாய் மீண்டும் வருபவர். அப். *1 : 10-11.* என்பதையும் விளக்கும். இந்த நீலநிறத்திரை வழியாய் வருபவனை வானங்களில் சேர்த்துக் கொள்வார் என்ற வாக்குத்தத்தத்தையும் உள்ளே வருகிறவனுக்கு அளித்து வரவேற்பது போல உள்ளது வாசல் திரையின் நீலநிறம். யோவான் *14 : 1-3.* இயேசுவை பரலோகத்திலிருந்து வந்த தேவகுமாரனாக இளநீல நூலும் **யோவான் சுவிசேஷமும்** வெளிப்படுத்துகிறது.

### 2. இரத்தாமம்பர நூல்

இது நீலமும், சிவப்பும் கலந்து உருவான நிறம். இயேசு தேவகுமாரன் என்பதை நீலமும், சிலுவையில் சிந்திய இரத்தத்தை சிவப்பும் காட்டும். இவ்விரு தன்மைகளுமே அவரை ராஜா ஆக்கியது. இரத்தாம்பரம் ராஜாக்கள் அணியும் வஸ்திரமாகும். மேலும் தமது இரத்தத்தினாலே நமது பாவங்களறக் கழுவி நம்மை இராஜாக்களும்,

ஆசாரியர்களுமாக்கினார். வெளி. *1 : 6.* எனவே இயேசுவுக்கு இரண்டு இராஜரீகப் பணிகள் உண்டு. *(1)* தேவகுமாரனானதால் அவர் பூமியின் இராஜாக்களுக்கெல்லாம் அதிபதியாக இருக்கிறார். (King of Kings) வெளி. *1 : 5.(2)* சிலுவையில் இரத்தம் சிந்தினதால் அவர் மக்களை ராஜாக்க ளாக்குகிறவராகவும் (The King maker) இருக்கிறார். எனவே, வாசலண்டை வருகிற ஒருவன் இயேசுவின் இராஜரீகத்தையும், இவர் இனி இராஜாவாகப் போவதையும் நினைப்பூட்டும். இது இயேசுவை இராஜாவாக வெளிப் படுத்துகிற **மத்தேயுவின் சுவிசேஷத்தையும்** வெளிப்படுத்துகிறது.

### 3. சிவப்பு நூல்

சிவப்பு என்றாலே இரத்தம் தான் நினைவுக்கு ஓடிவருகிறது. இரத்தம் என்றாலே அது இயேசுவின் இரத்தமே. அது பாவமற்றவரின் பரிசுத்த இரத்தம். பாவிகளை பரிசுத்தமாக்கும் இரத்தம். *1* பேதுரு *1 : 18-19;* *1* யோவான் *1 : 7.* இந்த சிவப்பு நூல் முதன்முதலாக எரிகோவின் அலங்கத் தின் மேல் குடியிருந்த ராகாபின் வீட்டு ஜன்னலி ல் கட்டப்பட்டது. யோசுவா *2 : 21.* இஸ்ரவேலரின் பட்டயக்கருக்குக்கு அது அவளைக் காப்பாற்றியது. எகிப்தில் வீட்டு வாசலில் தெளிக்கப்பட்ட இரத்தம் சங்கார தூதனிடமிருந்து இஸ்ரவேலரைக் காப்பாற்றியது. யாத். *12 : 23.* இயேசுவின் இரத்தமோவென்றால் நித்திய நரக அக்கினிக் கடலின் இரண்டாம் மரணத்திலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறது. வெளி. *20 : 15.* இதைத் தான் ஆசரிப்புக் கூடார வாசலின் முன் வருகிறவனை சிகப்பு நூல் நினைப்பூட்டி இரட்சிப்பின் சமாதானத்தைக் கொடுக்கிறது. இயேசுவைப் பொறுத்தவரையில், இரத்தம் சிந்தும்படியாக மாம்சத்தில் மனுஷ அவதாரம் எய்தியதை சித்தரிக்கும் மனுஷ குமாரனாக அவரை விளங்கச் செய்கிற **லூக்காவின் சுவிசேஷத்தை** இது நினைப்பூட்டுகிறது.

### 4. திரித்த மெல்லிய பஞ்சு நூல்

இது வெள்ளை நிற நூலாகும். இயேசு கிறிஸ்துவின் தூய்மையான வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. அவர் பரிசுத்தர் *1* பேதுரு *1 : 15.* அவர் மேல் குற்றம் சாட்டியவர்கள் தோற்றுப் போயினர். யூதாஸ் அவரைக் குற்றமில்லாத இரத்தம் என்றான். மத். *27 : 4.* பிலாத்துவும், ஏரோதுவும் அவரில் குற்றம் காணவில்லை. யோவான் *19 : 4;* லூக்கா *23 : 15.* பிசா சின் சோதனையிலும் பரிசுத்தராக விளங்கினார். மத். *4 : 4-11.* ஊழியத் திலும், சிலுவையின் மரணம் வரையிலும் ஒரு தாழ்மை யான சேவகனாகவும், உண்மையுள்ள ஊழியனாகவும் விளங்கினார். கறுப்பு நிறம் பொய்க்கும், வெள்ளை நிறம் உண்மைக்கும் அடையாளம். கறுப்பு அநியாயத்தின் சின்னம். ஆனால் வெண்மை நீதி நியாயத்தின் சின்னம். இவ்வாறு இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தமும், உண்மையும், நீதியுமான ஊழியத்தை இது சித்தரிக்கிறது. பிதாவின் உண்மையுள்ள தாசனாக அவரை விளக்குகிற **மாற்கு சுவிசேஷத்தை** இது நமக்குத் தருகிறது.

### தொங்குதிரைகளின் பணிகளாவன

*1.* உள்ளே நடக்கிற ஆராதனைகளை புறஜாதிகள் தூரத்திலி

ருந்து காணாதபடி மறைக்கின்றன. காண விரும்புகிறவன் உள்ளே வந்து பார்க்க வேண்டும். "வந்து பார்" என்றார் பிலிப்பு. யோவான் *1 : 46.* வெளியே நின்று ஒருவர் எட்டிப்பார்க்காதபடி திரைகள் ஏழரை அடி *(5 முழம்)* உயரமாயிருந்தது.

*2.* உள்ளே ஆராதிக்க வருகிறவன் வெளியுலகத்தைப் பார்க்கவோ, நினைக்கவோச் செய்யாதபடி உலகப்பார்வையை மறைக்கிறது. கிறிஸ்துவின் சிந்தையை உண்டாக்குகிறது. பிலி. *2 : 5.* ஆலயத்தின் நடுவே கிருபை யைத் தியானிக்கச் செய்கிறது. சங். *48 : 9.* ஆவிக்குள்ளாக்குகிறது. வெளி. *1 : 10.* உலக கவலைகளை மறந்து ஒருமனம் ஒற்றுமையோடு ஆராதிக்க உதவுகிறது. அப். *2 : 1.*

*3.* வெளி உலகக் காற்றுகள் தூசிகளாகிய உலக பழக்க வழக்கங்களை அடித்து உள்ளே கொண்டுவராதபடி தடுக்கிறது. சபைக்குள்ளே அரசியலும், மனுஷீக பாரம்பரியங்களும், மூட நம்பிக்கைகள் கலந்த பழக்க வழக்கச் சடங்குகளும் நுழையவிடக்கூடாது என்பதே திரைச் சீலையின் பொருள். மாற்கு *7 : 8.* திரைச்சீலை இல்லாத கூட்டங்களில் விக்கிரக ஆராதனை முதற்கொண்டு அநேக உலகச்சடங்குகள் நுழைந்து விட்டது. எத்தனை பரிதாபம்!

*4.* தூசிகள் மட்டுமல்ல, பலவித துர்நாற்றங்களும், சுகந்த வாசனைகளும் கொண்ட காற்றுகளையும் இது தடை செய்கிறது. தந்திர முள்ள போதகங்களை பலவித காற்றுகள் என எபே. *4 : 14* ல் காண்க. கள்ள உபதேசங்களை சபையில் நுழையவிடக்கூடாது. மேலும் உலகப் பிரகாரமான சுகந்த வாசனைகளும் புத்திக்கு அழகாய் தோன்றும் போத கங்களும் உள்ளே வரக்கூடாது. ஆசரிப்புக்கூடார வளாகத்திற்குள்ளே தூப பீடத்திலிருந்து வரும் தேவ நியமத்தின்படியான சுகந்த தூபமே அங்கே நிரம்பியிருக்க வேண்டும். யாத். *30 : 1, 34.* அல்லேலூயா!

**பிராகாரத்தின் பயன்கள்**

*1.* பலி செலுத்தப்படும் இடம் இதுவே. எந்த மனிதனும் பாவ நிவர்த்திக்கும், ஆராதனைக்கும் வந்து நிற்கும் முதலாவது இடம் அதுவே. அங்கே உடனே சந்திப்பது பலிபீடத்தையாகும்.

*2.* ஆசாரியரும், லேவியரும் பணிவிடையின்போது கை கால்களைக் கழுவிக் கொள்ளுமிடம் பிராகாரமாகும். பலிபீடம் கடந்து கூடாரத்தின் நுழைவு வாசலின் வெளியே பிராகாரத்தில் அதற்கான தொட்டி வைக்கப் பட்டிருந்தது.

*3.* இஸ்ரவேலரின் ஆராதனை ஸ்தலம். அனைத்து மக்களும் பிராகாரம் வரையில் தான் வரலாம். அரசனானாலும் அதற்கப்பால் நுழைய அனுமதியில்லை. எனவே, தேவ மகிமையைக் காணவும் பலி செலுத்தி ஆராதிக்கவும் மக்களெல்லாரும் பிராகாரத்தின் மேல் வாஞ்சையும், தவனமுமாயிருந்தனர். சங். *84 : 2-10.* பண்டிகை நாட்களில் பிராகாரத்தில் ஜனம் நிரம்பி வழியும். ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப்

போவதும் வருவதுமாயிருப்பார்கள்.

*4.* இது தேவனுடைய சந்நிதி என தாவீது பாடினார். சங். *42 : 2* தேவப் பிரசன்னம் பிராகாரம் முழுவதையும் நிரப்பியிருந்தது என அறியலாம். தேவ மகிமையின் காரணத்தால் ஜனங்கள் மிகுந்த பயபக்தியுடனே மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். பாவத்துடன் பக்தியிழந்தவர்கள் பிராகாரத்தை மிதிப்பதை தேவன் கண்டிக்கிறதை ஏசாயா *1 : 12* ல் வாசிக்கலாம். "என் பிராகாரங்களை இப்படி மிதிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டது யார்?"

*5.* ஆசாரியர்கள் போஜனபலியை பிராகாரத்தில் தான் புசிக்க வேண்டும். லேவி. *6 : 16.* எனவே, இவ்விடம் போஜனம் பண்ணப் பயன் பட்டது. கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு அதினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமாம். *1* கொரி. *9 : 13, 14.*

*6.* பிராகாரங்களில் பண்டிகை நாட்களில் கூட்டம் நிரம்பி வழியும். பலிகள் மிகுதியாக செலுத்தப்பட்டது. சங். *42 : 4* ல் அந்த அனுபவத்தை தாவீது வருந்தி நினைவு கூருகிறார்.

*7.* பிராகாரம் காணிக்கையையும், பொருத்தனைகளையும் செலுத்து மிடமாகும். சங். *96 : 8; 116 : 18.* இந்தப் பிராகாரத்தில் பரிசுத்தவான்கள் புகழ்ச்சியோடு பிரவேசித்து அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்தரித்தனர். சங். *100 : 4.* அல்லேலூயா*!* இது தான் ஆசாரியர் களுக்கும், லேவியருக்கும் போஷிப்பு ஏற்படுத்துகிற தனி சுதந்திரம்.

## அதிகாரம் 15

## கூடாரமுளைகள்

### 1. நடமாடும் அஸ்திபாரமுள்ள முளைகள்

கட்டிடத்திற்குப் போடப்படுவது போன்ற அஸ்திபாரம் இல்லாத காரணத்தால் கூடாரத்தின் அமைப்பில் முக்கிய பங்கு முளைகளுக்கு உண்டு. தேவைப் படும்போது பெயர்த்து மாற்றக்கூடிய ஒரு அஸ்திபாரமாக நாம் இந்த முளைகளைக் கருதவேண்டும். (Movable Foundation) கட்டிடத் திற்கு அசையாத அஸ்திபாரம் உண்டு. புதிய ஏற்பாட்டு சபைக்கும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்ற அஸ்திபாரம் உள்ளன. எபே. *2 : 20, 21.* இதுவும் நடமாடும் அஸ்திபாரமே. எனவே, இஸ்ரேலிய ஆசரிப்புக் கூடாரத் திற்கும், புதிய ஏற்பாட்டு சபைக்கும் அஸ்திபாரங்கள் உண்டு. இரண்டின் அஸ்திபாரங்களுக்கும் அசையும் அஸ்திபாரம் என்ற ஒற்றுமையும் உண்டு.

### மூலைக்கல்

ஆனால் ஒரு வித்தியாசம்*!* ஆசரிப்புக்கூடாரத்திற்கு மூலைக்கல் இல்லை. புதிய ஏற்பாட்டு சபைக்கோ மூலைக்கல் உண்டு. இயேசுவே அந்த மூலைக்கல். இவர் நியாயப்பிரமாண காலத்தில் மறைவாயி

ருந்ததால் ஆசரிப்புக்கூடார அஸ்திபாரத்தில் மூலைக்கல்லாக வெளிப்பட்டார். எபே. *2 : 21.* இஸ்ரேலிய தீர்க்கதரிசிகள் முன்னுரைத்ததும், விலையேறப் பெற்றதும், பரீட்சிக்கப்பட்டதும் சீயோனில் வைக்கப்பட்டதுமான கல் அவரே. ஏசாயா *28 : 16.* விசுவாசிக்கிறவன் பதறான்! ஸ்தோத்திரம்.

ஒரு விசேஷம் கூட! இஸ்ரேலிய ஆசரிப்புக்கூடாரத்தின் அஸ்திபாரமாகிய முளைகள் வெண்கலமாகும். இது நியாயப்பிரமாணத்தின் தண்டனையை வெளிப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டு சபையின் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பது ஆன்மீகப் பதவிகளாகும். அது மன்னிப்பின் பிரமாணத்தைக் காட்டும். ஆனால் புதிய எருசலேமின் அஸ்திபாரமோ வெனில் *12* விதமான இரத்தினங்களாயிருந்தன. இரத்தினம் தெய்வீக பரிபூரணத்தை தானே காட்டுகிறது. மண்பாண்டங்களாய் விண்பாண்டங் களாய் மாறிவிட்டதன் மகிமையான சித்திரமல்லவா இது? *2* கொரி. *4 : 7.* அதுவுமல்லாமல் புதிய எருசலேமின் மதிலின் அஸ்திபாரத்தில் ஆட்டுக்குட்டி யானவருடைய *12* அப்போஸ்தலருடைய நாமங்கள் எழுதப்பட்டிருந்தன. வெளி. *21 : 14.* ஆம்! புதிய ஏற்பாட்டு சபையின் அஸ்திபாரம் யாரோ, அவர்களுடைய நாமங்களே புதிய எருசலேமின் அஸ்திபாரமும். பழைய ஏற்பாட்டு வெண்கல முளைகளுக்குப் புதிய எருசலேமின் அஸ்திபாரத்தில் இடமேயில்லை. நியாயப்பிரமாணத்தின் தண்டனைப் பிரமாணத்தை சிலுவையில் ஆணியடித்ததோடே என்றென்றைக்குமாக ஒழித்துக் கட்டினார், என்பதையும் இது பலமாய் நிரூபிக்கிறது.

**2. அகில உலக சபை**

முளைகள் வெண்கலத்தால் செய்யப்பட்டன. வனாந்திரக் காற்றுகளால் தூண்களும், பலகைகளும் அசையாதபடிக்கு இவைகள் உதவு கின்றன. இதனை உறுதியுள்ள ஊழியர்களுக்கு ஒப்பனையாகக் கொள்ள லாம். அகில உலக சபையாகிய கிறிஸ்துவின் சரீரமாக ஆசரிப்புக்கூடாரத் தை நினைத்தால் இந்த முளைகள் ஊழியர்களின் கூட்டமாகும். முளையே ஆட்டம் கண்டுவிட்டால் கூடாரத்தின் கதி என்ன ஆகிறது? எனவே, தேவ ஊழியர்கள் தேவ பலத்தினால் திடப்படுத்தப்பட்டவர்களாய் இருப்பது அவசியம்.

**3. உள்ளூர் சபை**

ஒரு உள்ளூர் சபையாக நினைத்தால் முளைகள் அந்தந்த சபையைச் சார்ந்த விசுவாசிகளின் கூட்டமாகும். ஒரு சபையில் தூண்களாக எண்ணப்பட்ட விசுவாசிகள் உண்டு என்றாலும், அந்தத் தூண்கள் முளைகளுடன் கட்டப்பட்டிராவிட்டால் காற்றில் நிலை நிற்காது. எனவே, தேவ சபையில் சிறியவர்களான முளைகளுக்கும் முக்கியத்துவம் உண்டு. இந்த சிறியரில் ஒருவரையும் அற்பமாக எண்ணாதபடி எச்சரிக்கையாயிருக்குமாறு இயேசு கட்டளையிட்டார். மத். *18 : 10.* அவரவர் எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் தேவன் அருள் அளித்தபடியே தாம் வைக்கப்பட்ட நிலையில் நிற்கக்கடவன்.

## 4. நம்பிக்கை

பிராகாரத்தூண்கள் வெளிப்பக்கத்தில் நிலத்தில் கடாவப்பட்டிருக்கும் வெண்கல முளையில் பலமான கயிற்றினால் கட்டப்பட்டது. வனாந்திரக் காற்றுகளால் தூண்கள் சாய்ந்து விடாதபடி இந்தக்கட்டு உதவியது. இக் கயிறுகள் நம்பிக்கையையும், வெண்கலமுளைகள் உறுதியையும் காட்டு கிறது. ஜீவ கிரீடத்தின் நம்பிக்கையினாலேதான் சோதனையான காற்று களில் நிலைத்திருக்கிறோம். யாக். *1 : 12.* தேவ மகிமையை அடைவோம் என்ற நம்பிக்கையினால் மேன்மை பாராட்டுகிறோம். ரோமர் *5 : 2.* அது ஜீவனுள்ள நம்பிக்கை *1* பேதுரு *2 : 4.* நம்பிக்கையானது மனுஷனை விழாத படி காக்கிறது. அது கூடாரத் தூண்களுக்கு பெலனைக் கொடுக்கிறது. இந்த நம்பிக்கை சுவிசேஷத்தினால் உண்டாகிறது. கொலோ. *1 : 22.* நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்தையும் காட்டுகிறது. தீத்து *2 : 13.* அதில் உறுதி கொண்டவன் போராட்டத்தில் பயப்படான்.

## 5. உறுதி

உறுதியான பண்புகளையும் முளைகள் காட்டுகிறது. கிறிஸ்தவ ஜீவியத்தின் உறுதியைத்தான் மனதின் அரையைக் கட்டு என்கிறார். *1* பேதுரு *1 : 13.* விசுவாசப் போர்வீரன் அணிந்துகொள்ளும் சத்தியம் என்னும் கச்சையும் உறுதியின் சின்னமாகும். எபே. *6 : 14.* இதை வேறு வகையாக கிறிஸ்துவுக்குள் வேரூன்றுவதோடு ஒப்பிடப்பட்டிருக்கிறது. கொலோ *2 : 6.* நாம் எல்லா நல்ல பண்புகளிலும் உறுதிப்பட வேண்டும்.

1. விசுவாசத்தில் கொலோ. *2 : 7*
2. காலடிகள் சங். *40 : 2*
3. ஜெபத்திலே ரோமர் *12 : 12*
4. நம்பிக்கையில் எபி. *3 : 14*
5. அழைப்பை உறுதிப்படுத்து *2* பேதுரு *1 : 10*
6. அறிக்கையில் உறுதி எபி. *4 : 14*
7. கைகளின் கிரியைகள் உறுதி சங். *90 : 17*
8. பேச்சு - ஆவியினால் உறுதி *1* கொரி. *2 : 5*
9. மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உறுதி யூதா *20.*
   இப்படிப்பட்ட உறுதிகளாகிய முளைகள் தான் விசுவாசிகளையும், ஊழியர்களையும் விழுந்து போகாதபடி காக்கிறது.

## 6. தரையில் புதைந்த முளைகள்

ஆசரிப்புக்கூடாரத்தின் பணிமுட்டுகளில் தரைக்குள்ளே புதையும் தன்மையுள்ளது கூடார முளைகள் மட்டுமே. மற்றவை எல்லாம் தரையில் மேலே அமரும். எனவே, இதற்கு தனி முக்கியத்துவம் உண்டு.

*1.* சபையாகிய கூடாரத்தை பூமியின் மீது விழாமல் நிலைநிறுத்த தன்னைத் தான் தாழ்த்தி தரை மட்டுமல்ல, தரைக்குள்ளேயும் இறங்குகின்ற தியாகத்தையும், பணிவிடையையுமல்லவோ காட்டுகிறது! மற்றவர்களுடைய பெலவீனங்களை நாம் தாங்கவேண்டும். ரோமர் *15 : 1, 2.* மற்றவர்களுக்காக ஜீவனையும் கொடுக்க வேண்டும். யோவான் *15 : 13.*

*2.* இயேசுவின் நாமத்திற்காக தமது ஜீவனையும் பாராமல் அதைத் தரையிலே ஊற்றிப்போடுகிற இரத்த சாட்சிகளையும் காட்டுகிறது. வெளி. *12 : 11.* மற்றவர்களை ஆதாயப்படுத்துவதற்காக பூமியில் இறங்கிப் போனதும் பானபலியாக வார்க்கப்பட்டு போனதுமான பவுலின் சாட்சிகளை யும் சித்தரிக்கிறது. *2* தீமோ. *4 : 6.*

*3.* இந்த உறுதியான முளைகள் கர்த்தராகிய இயேசுவையும் காட்டும். அவர் நம்மை இரட்சிப்பதற்காகத் தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார். ஏசாயா *53 : 12.* யோனா மீனின் வயிற்றிலே இருந்தது போல மனுஷகுமாரனும் பூமியின் இருதயத்திலே இருந்தார். மத். *12 : 40.*

*4.* தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையை (அப். *20 : 28)* கூடார முளையாகிய அவர் தமது பெலத்தாலும், உறுதியாலும் உலக உபத் திரவங்களில் காக்கிறார். யோவான் *16 : 33.*

*5.* முளைகள் கூடாரத்திற்கு உபயோகமாகும்படியாக மண்ணில் இறங்க வேண்டும். ஆனால் அது தாமாக மண்ணில் இறங்காது. சொகுசாக மேலே இருக்க விரும்பும் தன்மையுள்ளதே சரீரம். அதை மண்ணில் இறக்க சுத்தியால் அதன் மீது அடிக்க வேண்டும். இது தேவ ஜனங்களுடைய உபத்திரவங்களைக் குறிக்கும். கஷ்டங்கள் நம்மைப் பதப்படுத்துகிறது. தரையில் இறங்க வைக்கிறது, பூரணப்படுத்துகிறது. இயேசுவும் உபத்திரவங்களினால் பூரணரானார். எபி. *2 : 10.* வசனமாகிய சம்மட்டியால் அடித்து ஒவ்வொருவரையும் இறக்கவும், இருத்தவும், நடக்கவும் செய்கின்ற உபதேச வல்லமையையும் இது காட்டும்.

**7. கூடார ஆணி**

கூடாரத்தின் முளைக்கு கூடாரஆணி என்ற பெயர் யாகேலின் சரித்திரத்தில் உள்ளது. நியா. *4 : 21.* கூடாரஆணியை அவள் சத்துருவாகிய சிசெராவின் நெற்றியிலே அடிக்க, தரையிலே அது புதைந்தது. இவ்வாறு ஒரு யுத்தமே வென்றது. தேவ ஜனமாகிய கூடார முளைகள் சாத்தானின் தலையை தகர்க்கத்தக்க வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவும் தமது மரணத்தினால் மரணத்திற்கு அதிகாரியாக இருந்த சாத்தானை அழித்தார். எபி. *2 : 14.* எனவே கூடாரஆணிக்கு ஒப்பாகிய இயேசு மரணத்தை ஜெயித்து, உயிர்த் தெழுந்தது போல விசுவாசிகளும் உயிர்த்தெழுவார்கள். அவர் வரும்போது சத்துருவாகிய மரணத்தின் மேல் நித்திய ஜெயம் பெறுவோம். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? *1* கொரி. *15 : 57* பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம். *1* கொரி. *15 : 26*

## அதிகாரம் 16

# கயிறுகள்

ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகளில் கயிறுகளை அதிகமாக எவரும் கவனிப்பதில்லை. என்றாலும் கூடாரம் பிரிந்து விழாதபடி காக்கிறவைகளே கயிறுகள். கயிறு என்றாலே கட்டுகளினால் பெலப்படுத்துகிற அனுபவத்தையே குறிப்பிடும்.

ஆசரிப்புக் கூடாரத்தைப் பொறுத்த வரையில் தூண்களை முளைகளோடு கட்டுவதற்கு கயிறுகள் பயன்படுத்தப்பட்டது. தூண்களுக்கு மட்டும் கட்டுகள் போதுமா? கூடாரத்தின் மூடி முழுவதையும் சுற்றி கயறுகளின் கட்டுகள் தேவை இல்லையா என்பதை நாம் சிந்திப்போமாக. *5*முழ உயரமுள்ள தூண்களை நிறுத்த கயிறுகள் தேவை என்றால் *10* முழ உயரமான பலகைகளுக்கு அது எத்தனை அதிகம்? பாரம் குறைந்த வெள்ளைத் துணிகளை மட்டும் சுமக்கும் தூண்களுக்கு கயிறும் கட்டும் தேவையானால் *10* முழம் *(15* அடி*)* உயரமான பலகைகள் மேல் மிகப் பளுவான *4* வித மூடுதிரைகளைத் தாங்கி நின்ற வாசஸ்தலத்திற்கு கயிறும் கட்டும் தேவைப்படுவது எத்தனை அதிகம்? *5* முழம் இடைவெளிக்கு ஒரு தூண் நின்ற போதிலும் அதற்கு கயிறு தேவையானால், *30* முழம் நீளமும் *10* முழம் அகலமும் உள்ள பெரிய வாசஸ்தலத்திற்கு கயிறுகளும் கட்டுகளும் தேவை என்பது உறுதியல்லவா?

எனவே, பிராகாரத்தைச் சுற்றி வெளியே நாட்டப்பட்ட முளைகளில் கட்டிய கயிறுகள், தூண்களின் உச்சியில் கட்டப்பட்டு, அங்கிருந்து வாசஸ் தலத்தின் மீதுள்ள மூடுதிரைகளின் மேல் பாய்ச்சி மறுபக்கத்து தூண்களில் கட்டி அங்கே உள்ள முளைகளில் கட்டி பலப்படுத்தியிருக்க வேண்டும்.

மேலும் வாசஸ்தலத்தின் முளைகளையும் பிராகாரத்தின் முளைக ளையும் அவைகளின் கயிறுகளையும் என்று வாசிக்கிறோம், எப்படியும் பிராகாரத்தின் தூண்களுக்கு மட்டும் வாசஸ்தலத்தின் மேலேயும் கயிர் கட்டுகள் இருந்தது என அறியலாம். கயிறுகள் இரண்டு வகை உண்டு.

### 1. பாவக் கயிறுகளின் கட்டுகள்

துன்மார்க்கன் தன் பாவக் கயிறுகளினால் கட்டப்படுவான் என நீதி *5 : 22*ல் காண்க. பீடி, சிகரெட், கஞ்சா, சாராயம், சூது, வேசித்தனம் முதலிய பாவக்கட்டுகளினால் கோடிக்கணக்கான மக்கள் உலகமெங்கும் தவிக்கின்றனர். இந்தக் கட்டுகளை அறுத்து விடுவிக்க வல்லவர் இயேசு.

### 2. அன்பின் கயிறுகள்

இதில் சமாதானக் கட்டுகள் உண்டு. எபே. *4 : 3*. பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பு இதன் வேறு ரூபமாகும். கொலோ*3:14* சுவிசேஷத்தினிமித்தமாக கட்டப்படுதலைப் பற்றியும் பவுல் பேசுகிறார். பிலி*1:7, 13* இயேசுவின் மேலுள்ள அன்பே இந்தக் கட்டுகளுக்கு ஒப்புக் கொடுக்கக் காரணம்.

என்ன பிரயோஜனம்?

தூண்களை அளவு குறித்து நாட்டிய போதிலும், முளைகளை நன்றாக மண்ணில் இறக்கிய போதிலும், கயிறு இல்லாவிட்டால் இணைப்பு இல்லை, பெலனும் இல்லை. அப்படியே, நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும் சகல அறிவையும், அறிந்திருந்தாலும், மலைகளை பெயர்க்கத்தக்க, சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், எனக்குள்ளதையெல்லாம் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கக் கொடுத்தாலும் அன்பு எனக்கிரா விட்டால் பிரயோஜனம் என்ன? *1* கொரி. *13 : 2,3.* ஒவ்வொரு தேவ பிள்ளையும் தேவ அன்பில் மூழ்க வேண்டும்.

இனி உலகத்தைப் பாருங்கள். பிதாவாகிய தேவன் தமது குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். யோ*3:16.* இந்த அன்பை ஏற்றுக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு மனிதனின் பொறுப்பாகும். மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன் ஓசியா *11:4.*

## 1. இது பிதாவின் அன்பு

இது பிதாவானவர் இவ்வளவாய் உலகத்தில் கூர்ந்த அன்பை குறிக்கும். யோ*3:16.* தமது ஒரே பேறான குமாரனை உலகத்தில் அனுப்பி சிலுவையில் கதறிக் கூப்பிட்ட போதிலும் கண்டு கொள்ளாமல் ஒப்புக் கொடுத்த பேரன்பு. பிதாவின் இத்தனை பெரிதான அன்பு நிலத்தில் புதைந்திருக்கிற விசுவாசியாகிய கூடாரமுளையை கிறிஸ்துவாகிய தூணோடு இணைத்துக் கட்டியதால் கூடாரம் விழாமல் நிற்கிறது. எனவே கயிறுகள் பிதாவின் அன்பைக் காட்டும். பிதாவின் அன்பு ஒரு வழியாக விசுவாசியாகிய கூடாரமுளை முதல் தூண் மற்றும் வாசஸ்தலத்தின் மூடி அனைத்தையும் சுற்றிப்பரவிக் கட்டிய பிதாவின் பரந்த அன்பாகும்.

## 2. இது இயேசுவின் அன்பு

கர்த்தருடைய அன்பை யாவரும் அறிவோம். தாம் அவர்களில் அன்பு வைத்தபடியே கடைசி பரியந்தம் அன்பு கூர்ந்தார். யோவான் *13 : 1.* இப்பொழுது நாம் கூடார முளையை, மனித அவதாரமாகி பூமியில் இறங்கிய இயேசுவாகக் காண வேண்டும். அவருடன் தூணாகிய விசுவாசி, அன்பின் கயிறுகளால் கட்டப் பட்டிருக்கிறான்.

## 3. ஆவியானவரின் அன்பு

பரிசுத்த ஆவியானவரும் நம்மேல் வைராக்கிய வாஞ்சையாயிருக் கிறார். யாக்*4:5.* ஆவியானவரின் அன்பினிமித்தம் பவுல் வேண்டினார். ரோ*15 : 32.* கூடாரத்தின் கயிறுகளில் தேவ திருத்துவத்தில் அடங்கியிருக்கிற அன்பின் மகிமை ஏராளமாய் வெளிப்பட்டது. புதிய ஏற்பாட்டு சபையையும் திருத்துவ தேவனின் அன்பின் கயிறுகளே காக்கின்றன. கயிறுகள் கூடாரம் முழுவதையும் சுற்றியிருப்பது போல தேவனின் விசேஷமான அன்பு சபை முழுவதையும் சூழ்ந்திருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியையும் சுற்றிக்கட்டியிருக்கிறது. அநேக துன்மார்க்கர் பாவக் கயிறுகளால் கட்டப்பட்டு விடுதலையின்றித் தவிக்கையில்

ஆவியானவரின் அன்பின் கயிறுகள் விடுதலையைத் தருகிறது. கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலை உண்டு. 2 கொரி 3 : 17.

## நான்கு வகை நூல்

கயிறுகள் எந்தப் பொருளினால் செய்யப்பட்டது என்பதற்கு விளக்கம் தரப்படவில்லை. நவீன முறையில் உள்ள உலோகக் கயிறுகள் அப்போது இருந்ததாக ஆதாரமில்லை. பிளாஸ்டிக் கயிறுகளும் இல்லை. எனவே, ஆசரிப்புக் கூடாரத்தின் பணிக்காக நியமிக்கப்பட்ட கயிறுகள் திரித்த மெல்லிய பஞ்சுநூல், இளநீல நூல், சிவப்பு நூல், இரத்தாம்பர நூல் ஆகியவற்றால் செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது ஏதாவது ஒரு வகை நூலினால் மட்டும் செய்யப்பட்டிருக்கலாம்.

எப்படியும் அக்காலங்களில் கயிறுகள் குறைந்த பட்சம் மூன்று புரிகளால் செய்யப்பட்டிருக்க வேண்டும். அக்காலத்தில் பருமனான முப்புரி நூல் வழக்கத்தில் இருந்ததாகக் காண்கிறோம். பிர.4 : 12. ஆனால் இங்கே நால்வகை நூல்கள் உள்ளதால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியுடன் மனிதனும் ஆக நால்வர் இணைந்த நூல் மிக பலமுள்ளதன்றோ? அவ்வாறே திருத்துவ தேவ ஆவியினால் பெலனடைந்த பேதுரு அற்புதங்களைச் செய்தார். ஸ்தேவான், பிலிப்பு, பவுல் முதலிய மனிதர் நான்காவது புரியாக திரித்துவ தேவனோடு இந்த மனிதர் இணைந்த போதே இயற்கையை மிஞ்சும் அதிசயங்கள் நடந்தன. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, தேவ மனிதர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் குறைத்துக் கொள்கிற போதனைகள் புதிய ஏற்பாட்டு சபைக்கு ஏற்ற அன்பின் கயிறாக அமையாது. இரட்சிப்பின் உபதேசங்களையும் 4 வகை நூல்களுடன் ஒப்பிடலாம்.

**1. சிவப்பு நூல்** இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது. யோவான் 1 : 7, மத். 1 : 21 இதுவே இரட்சிப்பின் துவக்கம்.

**2. வெண்மையான பஞ்சு நூல்** இரட்சிக்கப்பட்டவன், பரிசுத்த ஜீவியம் செய்தல். பாவ உலகத்தை உதறித்தள்ளி வேறுபட்டு ஜீவிப்பது. 1தெச4:7, ரோ6:22, அப்2:40. இதுவே இரட்சிப்பின் வழி.

**3. இளநீல நூல்** விண்ணின் நிறம் தேவ கிருபைகளினால் நிறைந்து, வரங்களுடன் ஊழியத்தில் வளருவது. 1 கொரி. 12 : 3-12. இதுவே இரட்சிப்பின் நோக்கம்.

**4. இரத்தாம்பர நூல்** இராஜரீக வஸ்திரம். நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களும் ஆக்கினார். இது இயேசுவின் வருகையில் நிறைவேறும். இதுவே இரட்சிப்பு நிறைவேறுதல். 1 பேதுரு 1 : 4,5, 2 : 9, வெளி. 5 : 9,10.

அதிகாரம் 17

# ஆசரிப்புக் கூடாரத்தின் தரை

ஆசரிப்புக் கூடாரத்தின் தரையை எவ்வாறு பதப்படுத்த வேண்டும் என்ற ஒரு கட்டளையை தேவன் கொடுக்க வில்லை. மேலே கூறிய அழகிய மூடு திரையும், சுற்றிலும் நாட்டப்பட்ட தூண்களில் தொங்கும் வெள்ளைத் துணிகளும், பொன் பொதிந்த பலகைகளும், சுத்தப் பொன், வெள்ளி, வெண்கலத்தினாலான தட்டு முட்டுகளும் சாதாரணமான தரையில் தான் வைக்கப்பட்டது. இது எதை பிரதிபலிக்கிறது?

*1.* நாம் கிறிஸ்துவுக்குள் எத்தனை மேன்மையுள்ளவர்களாய் இருந்த போதிலும் பூமியில் (மண்ணில்) தானே வாழ்கிறோம். மாம்சமான ஒருவனும் தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்டாதபடிக்கு அநேக குறைபாடுகளுடனும், பெலவீனங்களுடனும் வாழ்கிறோம். அதன் சித்திரமே இது. நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்ற மரண எச்சரிக்கை யையும் மண் தரை நினைப்பூட்டுகிறது. *2* கொரி. *4 : 11,* ஆதி. *3 : 19.*

*2.* இந்த பொக்கிஷத்தை (ரட்சிப்பும், மகத்துவ வல்லமையும்) மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். *2* கொரி. *4 : 7.* என்பதையும் பண்படுத்தப்படாத தரை சுட்டிக்காட்டுகிறது.

*3.* பரிசுத்தப் பணிமுட்டுகள் எல்லாமே, நல்ல தரையில் இருந்தால் இதுவே போதும் என திருப்தியடைந்து கானானுக்குப் போவதை விரும்பாமற் போவார்கள். நமது சரீரமும் மண்மயமான பெலவீனங்களுடன் இராவிட்டால் மேலான உயிர்த்தெழுதலை இத்தனை அதிகமாக விரும்பமாட்டோம். சகல சிருஷ்டிகளும் கூட அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறத் தவித்துப் பிரசவ வேதனைப் படுகிறது. ரோமர் *8 : 21, 23.* அது கீழ்ப்படுத்தினவராலே மாயைக்கு கீழ்ப் பட்டிருக்கிறது. நாமும் புத்திர சுவிகாரம் வரக்காத்திருந்து நமக்குள்ளே தவிக் கிறோம். உலகத்தை வெறுத்து வாழ இந்த சுகமில்லாத மண் தரை ஏவுகிறது.

*4.* தரையிலே வைக்கப்பட்டாலும் தூண், பலகை, பணிமுட்டுகள் யாவும் பாதங்கள் மேலேயே நிறுத்தப்பட்டன. பாதங்கள் பணிமுட்டுகளை நேரடியாக தரையோடு ஒட்டாமல் காக்கின்றன. இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாத விதமாய் அனுபவிக்காதிருக்க வேண்டும் என்றும் தரையில் வைக்கப்பட்ட பாதங்கள் மேல் நிற்கிற அனுபவம் போதிக்கிறது. *1* கொரி. *7 : 31.* மண்ணில் வாழ்கிறோம் என்பதால் மண்மயமாகிவிடக்கூடாது. கொலோ. *3 : 12.*

*5.* ஆசரிப்புக் கூடாரம் மேன்மையுள்ளதாக இருந்த போதிலும் ஒரு தீமைக்கு ஏதுவான தரை அதற்குள்ளே இருந்தது. அப்படியே, நாம் ஆவியில் அனல் கொண்டிருந்த போதிலும் நமது மனதின் பிரமாணத்திற்கு விரோதமாகப் போராடுகிற வேறொரு பிரமாணம் நமது அவயவங்களில் (மாம்சம்) இருக்கிறது என்ற பவுலின் வார்த்தைகள்

இதனோடு ஒத்திருக்கிறது. ரோமர் *7 : 20, 23.* எனவே, ஏமாந்து போகாமல் மாம்சத்தை அடக்கி அழித்து வாழ்க. ரோமர் *8 : 13.*

*6.* ஆசாரியர்கள் அழுக்கும் தூசியும் நிறைந்த தரையில் நடமாடி சேவை செய்வதால் அடிக்கடி பாதங்களை கழுவ வேண்டும். நாமும் பொல்லாத உலகில் வாழ்வதால் இடைவிடாமல் ஜெபித்து நம் பாவங்களை அறிக்கையிட்டு நம்மை சுத்திகரிக்க வேண்டும். *1* யோவான் *1 : 9.*

*7.* எண். *5 : 17*ல் ஆசரிப்புக் கூடாரத்தின் தரையின் மண்ணைப் பற்றி ஒரு கற்பனையைக் காணலாம். வேசித்தனத்தினால் புருஷனுக்கு துரோகம் செய்த ஸ்திரீயைக் கண்டு பிடித்து குற்றத்தை நிரூபிக்க மண்பாண்டத்திலுள்ள பரிசுத்த ஜலத்தில் ஆசரிப்புக் கூடாரத் தரையின் புழுதியைக் கரைத்துக் குடிக்கச் செய்ய வேண்டுமாம். அது சாபகாரணமான கசப்பான ஜலம் என்னப்பட்டி ருக்கிறது. இது ஆசாரியனுடைய கால் மிதிப்பட்ட புழுதி. கர்த்தராகிய இயேசுவும் ஆதாமின் பாவத்தால் சபிக்கப்பட்ட இந்த மண்ணில் நடந்தார். மனிதன் துரோகத்தினால் குடிக்க வேண்டிய கசப்பான ஜலத்தைத்தான் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் என்றார் கெத்செமெனே தோட்டத்தில். லூக்கா *22 : 42.* எனவே ஆசரிப்புக் கூடாரத்தின் புழுதி நிறைந்த தரையானது ஆதாமின் பாவத்தையும் அதினால் சபிக்கப்பட்ட பூமியையும் நினைவூட்டுகிறது. நமது சரீர மீட்பாகிய மறுரூபமடையும் வரை சாபத்தால் வந்த மரணம் ஆண்டு கொள்ளுகிறதென்பதையும் இது காட்டுகிறது.

*8.* தரை தாழ்மைக்கு அடையாளம். ரூத், தரையில் விழுந்து போவாசை வணங்கினாள். ரூத் *2 : 10.* லோத்து தரைமட்டும் குனிந்து வணங்கினார். ஆதி. *19 : 1.* யாக்கோபு ஏழு விசை அப்படிச் செய்தார். ஆதி. *33 : 3.* நாம் நமது தேவனைப் பணிந்து குனிந்து ஆராதிக்க வேண்டும். சங். *95 : 6:* மேலும் தரை துக்கத்திற்கு அடையாளம். யோபு தரையிலே உட்கார்ந்தார். யோபு. *1 : 20.* சீயோனின் மூப்பர் தரையிலே உட்கார்ந்தனர். புல. *2 : 10.* இயேசு உலகத்தின் பாவச் சுமையைத் தாங்க முடியாது தரையிலே விழுந்தார். மாற்கு *14 : 35.* நமக்கு உலக வாழ்வில் அநேக துக்கங்கள் உண்டென்றும் ஆசரிப்புக் கூடாரத் தின் தரை விளங்கச் செய்கிறது.

*9.* ஆசரிப்புக் கூடாரத்தின் தரையைப் பண்படுத்தாமல் விட்டு விடக் காரணமுண்டு. கூடாரம் இடத்துக்கு இடம் பெயர்ந்துப் போகும் அனுபவமுள்ள தாகும். தரையைப் பண்படுத்தினால் *40* ஆண்டுகளில் *41* பாளையங்கள் ஏற்பட்டதால் *41* இடங்களைப் பண்படுத்த நேரிடும். சிலநாள் தங்குவதற்கு மிகுதியான உழைப்பும் பணச் செலவும் நேரிடும்.

*(1.)* இது பரதேசியின் யாத்திரை. நீ பூமியின் மேம்பாட்டுக்காக உழைத்துக் கொண்டிருப்பதை விட பரலோகம் போய் சேர பாடுபட வேண்டுமென்பதே இரகசியம். அரசியல் மேதைகளும் கல்வி, கலை, இலக்கிய நிபுணரும் கூட இந்த பூமியே மேலானது என்று கருதி இதில் சேமம் உண்டாக்கப் பாடு படுகின்றனர். ஒரு விசுவாசியோ இது

அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டி ருக்கிறது என்று விசுவாசத்தால் ஓடிப்போகிறான். *2* பேதுரு *3 : 10*. நிலையான நகரம் தனக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடித் தேடுகிறான். எபி. *13 : 14*. அழிவுக்குரிய இவ்வாழ்க்கையில் உண்ணவும் உடுக்கவும் உண்டானால் போதுமென்றிருக்கிறான். *1* தீமோ. *6 : 8*.

*(2)* இங்கே தேவைக்கு மிஞ்சின வீணான வேலைகளைச் செய்ய வேண்டாம் என இப்பாடம் போதிக்கிறது. சிலர் கட்டும் வீடுகளும் சேர்க்கும் ஆஸ்திகளும், உடுத்தும் உடைகளையும், அணியும் நகைகளையும் கண்டால் இங்கேயே நிரந்தரமாயிருக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் போலும்! நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது. அல்லேலூயா! பிலி. *3 : 20*.

*10*. இந்த தரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மனித அவதாரத்தை யும் காட்டுகிறது. விண்ணிலுள்ள தூதர்களின் ஆராதனைக்கும் பிதாவாகிய தேவனின் செல்லத்திற்கும் பாத்திரராக இருந்து இயேசு மண்மயமான மனித சாயலானார். மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். பிலி. *2 : 6, 8*. மரித்து பூமியில் அடக்கம் பண்ணப்பட்டார்.

*11*. மாம்சத்தில் வந்த இயேசுவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல, வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்தி கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே. *1* யோவான் *4 : 3*. இயேசு மாம்சத்தில் வரா விட்டால் இரத்தம் சிந்தி பலியை நிறைவேற்ற இயலாது. பாவ மன்னிப்புண்டாக்குகிற இரத்தம் இயேசுவின் மாம்ச அவதாரத்தில் தான் இருக்கிறது. இயேசுவின் மனித அவதாரத்தை நினைப்பூட்டுகிற ஆசரிப்புக் கூடாரத்தின் மண்தரை எத்தனை மேன்மையானதென்று பாருங்கள்.

*12*. இயேசுவின் மனுஷ அவதாரத்தை மண்தரையோடு ஒப்பிட்டால் அவ்விசுவாசத்தின் உறுதியைத்தான் கூடாரமுளை எனலாம். கூடாரத்தின் பலகைகளும் தூண்களும் கயிற்றினால் மண்ணில் கடாவப்பட்டிருந்த வெண்கல முளையில் பலமாகக் கட்டப்பட்டிருந்தது. முளை நிலத்திலே விழுந்து செத்த நல்ல கோதுமை மணியாகிய கிறிஸ்துவில் கடாவப்படுகிற விசுவாசியைக் குறிக்கும். கொலொ. *2 : 6* ன்படி அவருக்குள் வேர் கொண்டவர்களாகுதல். விசேஷமாக மாம்சத்தில் வந்த பலியாகிய கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசமே இரட்சிக்கிறது. அல்லேலூயா! ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக அடக்கமும் பண்ணப்படுகிறோமல்லவா. கொலொ. *2 : 12*.

*13*. ஆசரிப்பு கூடாரம் பூமியில் ஸ்தாபிக்கப்பட்டது போல கிறிஸ்து சபையை பூமியில் ஸ்தாபித்திருக்கிறார். பூமியின் கடைசிபரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள். அப். *1 : 8*. இந்தப் பூமியையும் அதில் நடைபெறும் சபையையும் கூட எழுத்தின்படியே இது சித்தரிக்கிறது. இதன் ஆவிக்குரிய கருத்தாவது: இயேசுவின் மேல் சபை கட்டப்பட்டிருக்கிறது.

இயேசு கிறிஸ்து வாகிய (மனிதனாகி மரித்தவர்) அஸ்திபாரத்தின் மேல் சபை நிற்கிறது. *1 கொரி. 3 : 11.*

*14.* எல்லா பணிமுட்டுகளும் தரையிலேயோ, பாதங்கள் மேலேயோ வைக்கப்பட்டிருக்கையில் கிருபாசனம் மட்டும் உடன்படிக்கைப் பெட்டியின் மேல் இருக்கிறது. ஏனெனில் தேவன் கிருபாசனத்தின் மீது தான் அமருவார். அவர் மண்மயமானவர் அல்ல. உன்னதமானவர் சங். *91 : 1.* மாம்சமானவர்களுக்கு மேலானவர் என்பதை அல்லவோ இது காட்டுகிறது. தானி. *2 : 11.* பொருட்களை வைக்கும் விதத்தில் கூட தேவன் எத்தனை கண்ணியமாக இருக்கிறார் என்று பாருங்கள். எப்படியாவது வாழ்ந்தால் போதும் என்ற கொள்கைக்காரர்கள் இதை அறிவது நலம்.

## பிராகாரத்துப் பணிமுட்டுகள்

ஆசரிப்பு கூடாரத்துப் பணிமுட்டுகளுள் பெரியவைகள் ஏழு ஆகும். அவையாவன.

*(1)* வெண்கலம் பொதிந்த பலிபீடம்

*(2)* வெண்கலத் தொட்டி

*(3)* சுத்தப் பொன் குத்துவிளக்கு

*(4)* பொன் பொதிந்த சமூகத்தப்ப மேஜை

*(5)* பொன் பொதிந்த தூபபீடம்

*(6)* பொன் பொதிந்த உடன்படிக்கைப் பெட்டி

*(7)* சுத்தப்பொன் கிருபாசனமும் கேருபீன்களும்

அ. பிராகாரத்தில் பலிபீடம், தொட்டி ஆக இரண்டும்


ஆ. பரிசுத்த ஸ்தலத்தில் மேஜை, குத்து விளக்கு, தூப பீடம் ஆகமூன்றும்

இ. மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டி, கிருபாசனம் ஆக இரண்டும் இருந்தன. இவற்றுள் பிராகாரத்துப் பணிமுட்டுக்களைக் குறித்து இங்கே ஆராய்வோமாக.

### அதிகாரம் 18

# வெண்கல பலிபீடம்

பலிபீடம் இஸ்ரவேல் ஜனங்களுக்குப் புதியதல்ல. ஏதேன் தோட்டத்தில் தேவன் ஒரு மிருகத்தைக் கொன்று ஆதி பெற்றோருக்கு தோல் உடைகளை உண்டாக்கினார். அவர்களது நிர்வாணத்தை மூட தேவன் நடவடிக்கை மேற்கொண்டதால் அந்த மிருகங்கள் பலியாயின எனலாம். வரலாற்றில் அறியப்பட்ட முதலாம் பலி இதுவே. ஆனால் பலி



பீடத்தைப் பற்றி எதுவும் காணோம். .காயீன் ஆபேல் பலியிலும் பலிபீடம் குறித்து எதையும் காணோம். நோவா தான் முதலாவதாக பலிபீடததைக் கட்டியதாக கூறப்பட்டுள்ளது. ஆதி. *8 : 20.* பின்பு ஆபிரகாம் பலிபீடம் கட்டினார். ஆதி. *12 : 8, 22 : 9.* இதைத் தொடர்ந்து எல்லாரும் பலிபீடம் கட்டத் தொடங்கினர். ஆனால் அவைகளுக்கு அளவு குறிக்கப்படவில்லை. வடிவம் வகுக்கப்படவில்லை.

**அதிகார பூர்வ பலிபீடம்** Official Altar

ஆனால்ஆசரிப்புக் கூடாரத்தில் தான் அதிகாரபூர்வமான பலி பீடம் கொடுக்கப்பட்டது. அளவின் படி செய்யப்பட்டது. அதை என்ன பொருட்களால் செய்யவேண்டுமென்பதும், அதன் வடிவமும் வகுக்கப்பட்டது. அளவுகளும் தரப்பட்டது.

**வடிவமுள்ள பலிபீடம் - உபதேசமுள்ள சபை**

கண்ட இடமெல்லாம் பலியிடக் கூடாது என்பது போல உபா. *12 : 13, 14* கண்ட வடிவங்களிலெல்லாம் பலிபீடம் உண்டாக்கப்படவும் கூடாது. வடிவம் என்பது ஒரு அமைப்பைக் காட்டும். பலிபீடத்தைத் தனியாக எடுத்து சபையுடன் ஒப்பிடலாம். சபைக்கு அமைப்பு உண்டு. எபே*4:11,13*ன்படி அப்போஸ்தலர் முதல் சில ஊழிய அமைப்பும் விசுவாசிகளின் கூட்டமும் சேர்ந்து வேத உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டதுமாகிய அமைப்பே சபை. அளவுகளின்படியான பலிபீடம் ஒழுங்கையும் முன்மாதிரியையும் காட்டுகிறது. அவரவர் விருப்பப்படி சபையில் இருக்கக் கூடாது. பிலி. *3 : 16,*

1 கொரி. 14 : 40, யோவான் 13 : 15, ரோமர் 15 : 6, 2 தெச. 3 : 9.

அளவுகள் உபதேச சட்டங்களையும் குறிப்பிடுகிறது. ரோமர் 6 : 17. இவ்வுபதேசங்களின்றி சபைக்கு குறித்த வடிவம் அமையாது. அஸ்திபாரம், மனம் திரும்புதல், ஸ்நானங்கள், ஜெபம், ஆராதனை, ஊழியம், அன்பு, விசுவாசம், நம்பிக்கை முதலிய உபதேசங்களினாலேயே குறித்த சீர்வடிவம் கிடைக்கும். அப்படியே ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மேஜை, தூபபீடம், உடன்படிக்கைப் பெட்டி முதலியவற்றிற்கும் தேவ நிர்ணய அளவுகளைக் காணலாம். ஒவ்வொன்றையும் அதினதின் அளவுகளின்படியே செய்ய வேண்டும். மனுஷ அளவுகள் அதில் இருக்கக் கூடாது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் ஆராதனை செய்கிறார்கள் என இயேசு தாமே கூறினாரே. மத். 15 : 9. இன்று, ஞானஸ்நானம், ஆவியின் அபிஷேகம் ஆகியவை பற்றிய உபதேசங்களில் எத்தனை மனுஷ கட்டளைகள் கலந்து விட்டன. மோட்சத்தைப் பற்றி எழும்பியுள்ள சந்தேகங்களும், நரகத்தில் வேதனை இல்லை என்பதும், இயேசுவை தேவ குமாரன் என்று விசுவாசியாததும் போன்ற அநேக பொய்கள் மனுஷ அளவுகளே! தேவ ஜனமே, தேவ அளவுகளின்படி கட்டப்படாத பலிபீடங்கள் மரம், புல், வைக்கோல் ஆகியவை போல அந்த நாளில் வெந்து போகும். 1 கொரி. 3 : 12, 15.

**பலிபீடத்தின் அளவுகள்!**

1. நீளம் 5 முழம், அகலம் 5 முழம். இது எப்பக்கத்தில் பார்த்தாலும் ஒரே அளவு. இயேசு எப்பக்கத்திலும் எந்த சூழ்நிலையிலும் ஒரே குணமுள்ளவர். நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். எபி 13 : 8. நாமும் அப்படியிருக்க வேண்டும். இடத்துக்கு இடம் வார்த்தை, கிரியை யாவும் சமமாயிருப்பதாக, நேர்த்தியாயிருப்பதாக.

2. பிரியமானவனாகிய பென்யமீனுக்கு யோசேப்பு அளித்த உணவும், வஸ்திரங்களும் மற்றவர்களைவிட 5 மடங்கு அதிகமல்லவா? ஆதி. 43 : 34, 45 : 22. கிறிஸ்துவாகிய பலிபீடத்தண்டை வருபவனுக்கு சிங்காசனத்துக்கு உயர்த்தப்பட்ட யோசேப்பாகிய இயேசு அளிக்கும் மிகுதியான ஆசீர்வாதத்தை இது குறிக்கும்.

3. உங்களில் ஐந்து பேர் சேர்ந்தால் 100 பேரைத் துரத்தலாம் என்பதை ஐந்து முழம் நினைவூட்டுகிறது. லேவி. 26 : 8. கிறிஸ்துவாகிய பலி பீடத்தோடு இணைந்தவர்கள் ஒரு மனதாயிருந்தால் போரில் ஜெயமுண்டு.

4. மீட்கப்பட வேண்டியவர்கள் செலுத்த வேண்டிய 5 சேக் கலுக்கும், இது ஒப்பனை. பலிபீடம் மீட்பின் இடமானதால் இது அதிகப் பொருத்தம். எண். 3 : 47, 18 : 16.

5. எண். 7 : 17 சமாதான பலியாக 5 ஆட்டுக்கடாக்களும், 5 வெள்ளாட்டுக்கடாக்களும், 5 ஆட்டுக் குட்டிகளும் கொண்டு வரப்பட்டன. எனவே பலிபீடத்தின் ஐந்து முழம் கிறிஸ்து நமது

சமாதான பலியானார் என்பதை அழகுற விளக்குகிறதன்றோ?

6. கோலியாத்தை வெல்ல தாவீது தெரிந்து கொண்ட 5 கூழாங்கற்களையும் இது காட்டும். *1* சாமு. *17 : 40*. ஆம் 5முழ நீளமும் அதே அகலமுள்ள பலிபீடத்தோடு இணைந்தவன் கோலியாத்தாகிய பிசாசை ஜெயிக்கின்றான்.

7. இது இயேசு திரளான ஜனங்களைப் போஷித்த 5 அப்பங்களுக்கும் ஒப்பனை. யோவான் *6 : 9*. பலிபீடமாகிய இயேசு தம்மிடம் வருகிற யாவரையும் போஷிக்கிறார். அல்லேலூயா!.

8. இது 5 தாலந்து பெற்றவன் (நீளம்) 5 கூட சம்பாதித்ததற்கும் (அகலம்) ஒப்பனை. லூக்கா *19 : 18*. தேவ கிருபையும் மனித முயற்சியும் சபையிலும் ஊழியத்திலும் உண்டு தானே?.

**பலிபீடத்தின் உயரம் மூன்று முழம்**

இது பலிபீடமாகிய இயேசுவின் மூன்று பதவிகளைக் குறிப்பிடும். *(1)* ஆசாரியன் எபி. *3 : 1, 4 : 14, 8 : 4-26, (2)*. தீர்க்கதரிசி உபா. *18 : 15 18,* என்னைப்போல ஒரு தீர்க்கதரிசி லூக்கா *7 : 16,* மகா தீர்க்க தரிசியானவர் அப். *3 : 22. (3)* இராஜா. மத். *2 : 2,* வெளி. *1 : 5, 19 : 16.*

**பலிபீடத்தின் பெயர்கள்**

**1. பலிபீடம்:** யாத். *27 : 1* மனிதரின் பாவ நிவர்த்திக்காக ஆடு, மாடு களும் பறவைகளும் பலியிடப்பட்டதால் பலிபீடம் எனப்பட்டது.

**2. தகன பலிபீடம் :** இப்பெயரை தேவன் தாமே கொடுத்துள்ளார். யாத். *30 : 28, 40 : 10*. அதின் மேல் வைக்கப்பட்ட பலிகளெல்லாம் சாம்பலாகுமட்டிலும் தகிக்கப்பட்டு வந்ததால் இப்பெயர் வந்தது.

**3. வெண்கல பலிபீடம்:** வெளிப்பார்வைக்கு வெண்கலம் தெரிந்ததால் இப்பெயர் வந்தது. யாத். *38 : 30*.

மற்றும் சில பலிபீடங்களின் பெயர்களை வேதத்தில் காணலாம்.

**1. யேகோவா நிசி :** இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வரும் வழியில் ரெவிதீமில் அமலேக்கியரோடு யுத்தம் செய்து வென்ற போது கட்டிய பலிபீடத்தின் பெயராகும் இது. இதற்கு கர்த்தரே எங்கள் வெற்றிக் கொடி என்று பொருள். நமது வாழ்க்கைப் போராட்டங்களில் ஜெயம் பெறும் போது கர்த்தரையே மகிமைப்படுத்த வேண்டும் என இதன் கருத்து. யாத். *17 : 15*.

**2. ஏத் :** இது பலிபீடமல்ல. பலிபீடம் போன்றது. ரூபனியரும், காத்தியரும் சேர்ந்து யோர்தானுக்கு இக்கரையில் கட்டிய நினைவு சின்னம். யோசுவா *22 : 34*. இதற்கு கர்த்தரே தேவன் எனப் பொருள்.

**3. யேகோவா சாலோம் :** நியா *6 : 24*. கிதியோன் பாகாலின் பலி பீடங்களை இடித்துப் போட்டு கர்த்தருக்கென்று கட்டியது. கர்த்தரே

எங்கள் சமாதானம் என்று பொருள்.

**4. ஏல் எல்லோகே இஸ்ரவேல் :** இவைகளுக்கெல்லாம் முன்னே யாக்கோபு சீகேம் ஊரில் இதைக் கட்டினார் ஆதி. *33 : 20.* அதன் பொருள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்பதே.

### ஒரே பலிபீடம் தான்

நமது தேவன் ஒருவரே, அவருக்குப் பலிபீடம் ஒன்றே. வேறே தெய்வங்களின் பலிபீடங்களை இடித்துத் தகர்க்க வேண்டும் என்றார். பின்பு கர்த்தருக்கென்று தனி பலிபீடம் கட்டி அதில் பலியிட்டு ஆராதிக்க வேண்டும் என்றார். நியா. *6 : 25, 31,* யாத். *34 : 13,* உபா. *7 : 5, 12 : 3.*

### விதி விலக்குகள்

ஒரே பலிபீடம் இருக்க வேண்டுமென்ற போதிலும் ஜனங்கள் எருசலேமுக்கு வரமுடியாத சூழ்நிலைகளில் ஆங்காங்கே பலிபீடங்களைக் கட்டி ஆராதனை செய்ய அனுமதித்திருந்தார். *(1)* மண்ணில் யாத். *20 : 24. (2)* உளியிடாத முழுகற்களால். யாத். *20 : 25. (3)* கற்பாறை உச்சியில் நியா. *6 : 24.* இந்த அனுமதியின்படி ஜனங்கள் பல்வேறு மேடைகளிலும் பலியிட்டு வந்தனர். ஆசரிப்புக் கூடாரத்திலுள்ளதோ வெனில் எப்போதுமே வெண்கல பலிபீடமாக இருந்தது. இந்த அனுமதியின்படி பலிபீடம் கட்டியவர்களாவன.

1. ரவிதீமில் மோசே யாத். *17 : 15.*
2. சீனாய் மலை அருகே மோசே யாத். *24 : 4.* பின்பு மோசே தேவனிடம் மலையுச்சியில் போயிருக்கையில் கீழே ஆரோன் கன்றுக்குட்டிக்கு ஒரு பலிபீடம் கட்டினார். யாத். *32 : 5.* இதுபோல, நமது மத்தியஸ்தராகிய இயேசு பிதாவிடம் ஏறிப் போயிருக்கிற இந்தக் காலத்தில் அவரது ஊழியர்கள் இங்கே அந்நிய போதனைகளால் தங்கள் விருப்பப்படி அந்நிய பலிபீடங்களாகிய சபைகளைக் கட்டுகின்றனர்.
3. யோசுவா முழுகற்களால் ஏபால் பர்வதத்தில் ஒரு பலிபீடத்தைக் கட்டினார். யோசுவா *8 : 30*
4. கிதியோன் பலிபீடம் கட்டி யேகோவா ஷாலோம் என்றார் நியா. *6 : 24.*
5. சாமுவேல் பலிபீடம் கட்டினார் *1* சாமு. *7 : 17*
6. சவுல் ராஜா கட்டினார். *1* சாமு *14 : 35.*
7. தாவீது கட்டினார். *2* சாமு *24 : 15.*
8. எலியா பலிபீடத்தைச் செப்பனிட்டார். *1* ராஜா. *18 : 32.*
9. மிஸ்பாவிலே ஜனங்கள் கட்டினர். நியா. *21 : 4.*
10. யெரொபெயாம் கன்றுக்குட்டிக்கு பலிபீடம் கட்டினான். *1* இராஜா *12 : 32.*
11. பாலாக்கும் பிலேயாமும் ஏழு பலிபீடங்களைக் கட்டினர். எண். *23 : 1.*

இவ்வாறு சிலர் நன்மைக்கும், சிலர் தீமைக்கும் ஏதுவாக பலி பீடங்களைக் கட்டினர். எந்த காரியத்திலும் ஜனத்தின் விருப்பப்படி ஒரு சிறு விதிவிலக்கை அல்லது சலுகையை தேவன் அனுமதித்தால் அதைத் தவறாகப் பயன்படுத்துவதே மனித குணம்.

அவ்வாறே, இரண்டோ மூன்றோ பேர் என் நாமத்தினாலே எங்கே

கூடி னாலும் அவர்கள் மத்தியில் இருக்கிறேன் என்றதற்காக, இன்று சபைகள் எந்த ஒழுங்கையும் கடைபிடிக்காமல் போட்டியாகவும் எதிரெதிராக நாலு முழத்திற் கொரு சபையாக ஸ்தாபிப்பது நிர்ப்பாக்கியமே. அவ்வாறே ஒழுங்கு, கட்டுப்பாடு என்று கூறி, ஆத்துமாக்களை அடிமைப்படுத்தி சத்தியத்தை மேயவிடாமலும், ஆத்தும ஆதாயம் பண்ணாமலும் இருந்து, வேறு யாராகிலும் சபை கட்டினால் கோபித்துக் கொள்கிறவர்களும் உண்டு. அனைத்தையும் தேவன் தாமே நியாயம் தீர்ப்பார்.

**1. வெண்கல பலிபீடம்** இந்தப் பெயரின் படி இது முற்றிலும் வெண்கல மல்ல. நல்ல பெலமான சீத்திம் மரத்தால் செய்யப்பட்டு வெண்கலத்தால் மூடப்பட்டது.

**2. பலிபீடம்** இயேசுவைக் குறிக்கும் போது, மரம் அவரது மனித அவதாரத்தையும் வெண்கலம் தெய்வீகத்தையும் காட்டும். இயேசுவே வெறும் மனிதனென்று சொல்லாதபடி அற்புத அடையாளங்களால் தெய்வீகத்தையும் வெளிப்படுத்தினார். இந்த தெய்வீகம் (வெண்கலம்) இயேசுவின் மனுஷீகத்தை (சீத்திம் மரம்) வெந்து போகாமல் காத்தது. அவரது வாழ்க்கை வெற்றியாக இருந்தது.

**3. பலிபீடத்து வெண்கலம்** நியாயத்தீர்ப்பையும் தண்டனையையும் குறிக்கும். தேவனை விட்டுவிட்டால் வானத்தை வெண்கலம் போலாக்குவாராம். உபா. *28 : 23*. மழை இல்லாதபடி செய்வாராம். இயேசு பூமியை நியாயந்தீர்க்க வரப்போகும் சாயலில் அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போல காணப்பட்டது. வெளி. *1 : 15*. தண்டனைக்குரிய கைதிகளுக்கு வெண்கல விலங்கு போடுவது வழக்கம். சிம்சோன் நியா. *16 : 21*, சிதேக்கியா *2* இராஜா. *25 : 7*. கீழ்ப்படியாத இஸ்ரவேலரின் நெற்றியை வெண்கலத்துடன் ஒப்பிட்டுள்ளார். ஏசாயா *48 : 4*.

இயேசு கிறிஸ்துவாகிய பலிபீடமானது உலகத்தின் பாவத் தண்டனையை சுமந்து தீர்க்க வந்ததால் பலிபீடம் வெண்கலத்தால் மூடப்பட்டது பொருத்தமாக உள்ளது. மேலும் பலிபீடம் மட்டுமல்ல அதைச் சார்ந்த அனைத்துக் கருவிகளும் வெண்கலமாயிருந்தது. சாம்பல் சட்டிகள், கரண்டி, கிண்ணி, முள்துறடு, நெருப்புச் சட்டிகள், வலைபின்னல் அனைத்துமே வெண்கலம். யாத் *27 : 3,4*.

**1. சாம்பல் சட்டிகள்** வலைப்பின்னலின் கீழே சேருகிற சாம்பலை அவ்வப்போது வாரி வெளியே கொட்டிவிட இந்த சட்டிகள் பயன்பட்டன. விசுவாசி கள் தங்களில் சேரக்கூடிய அசுத்தங்களை அவ்வப்போது அறிக்கையிடவும், தகாத பொருட்களை எறிந்து விடவும் வேண்டும்.

**2. கரண்டி** சாம்பலை அள்ளுவதற்கு இது பயன்பட்டது. திரளான பலி கள் தினமும், செலுத்தப்பட்டு வந்ததால் தினமும் சாம்பல் சேர்ந்து விடும். எனவே, தினமும் பலிகள் முடிந்த பின் சாம்பலை வாரிவிட வேண்டும்.

இது அனுதினமும் நாம் பரிசுத்தமடைவதைக் குறிக்கும். தினமும் மறு நாள் பலிக்காகச் சாம்பலை வாரி, சுத்தம் செய்து பலிபீடத்தை ஆயத்தம் பண்ண வேண்டும். இல்லாவிட்டால் பீடத்தில் சாம்பல் நிறைந்து அக்கினி அவிந்து பணிகள் எல்லாம் நின்று விடும். அதைக் கையால் அள்ளக் கூடாது. கரண்டியால் -வாயால் குற்றங்களை அறிக்கையிடுவதை இது காட்டுகிறது.

**3. கிண்ணி** Bason அல்லது கலம். பலி மிருகத்தின் குடல், தொடை ஆகியவற்றை தண்ணீரில் கழுவுவதுண்டு. லேவி. *1 : 9.* அதற்காக இந்தக் கலங்கள் பயன்பட்டன. யாத். *27 : 3, 1* இராஜா. *7 : 40.* இது நமது கழுவப் படுதலுக்கு ஒப்பனை. ஞானஸ்நானத்தில் கழுவப்படுகிறோம். அப். *22 :16.* இயேசுவின் இரத்தத்தால் வெளி. *1 : 6.* இயேசுவின் நாமத்தினால் *1* கொரி. *6 : 11.* பரிசுத்த ஆவியினால் *1* கொரி. *6 : 11.* தேவ வசனத்தால். குற்றங்களை அறிக்கையிட்டால் போதாது. நாள்தோறும் வாசித்தும் ஜெபித்தும் கழுவப்படவேண்டும்.

**4. முள்துறடு** Flesh hooks பலி வேகும்போது அதைக் குத்திப்புரட்டி நன்றாக சாம்பலாக்குவதற்கே வெண்கல முள் துறடுகள். நமது வாழ்விலும் பலிபீடத்திலிருக்கும் போதும் கஷ்டதைகளாகிய துறடுகள் உள்ளன. இயேசுவைச் சிலுவையில் அறைந்ததுடன் விடவில்லை. காடி கொடுத்தது, பரியாசம், ஈட்டிக்குத்து ஆகிய அனைத்தும் முள் துறடுகளின் அனுபவங்களே.

**5. நெருப்புச் சட்டி** Firepans பலிபீடத்து நெருப்பு அவிந்து போகக்கூடாது என்பதே மாறாத பிரமாணம். லேவி. *6 : 12.* சாம்பல் எடுக்கும் போதும் சுத்திகரிக்கும் போதும் அதில் நெருப்பு இருக்க இயலாது. அப்போது அந்த நெருப்பை அவியாமல் காக்க நெருப்புச் சட்டியில் எடுத்து வைத்துக் காக்க வேண்டும். இயேசு கல்லறையில் இறங்கும் முன்னரே தமது ஆவியை பிதாவிடம் ஒப்புவித்ததற்கும் இது ஒப்பனை. பின்பு *3* ம் நாள் மீண்டும் ஆவியை பிதாவிடம் இருந்து பெற்றார்.\நமக்கு வாழ்வில் ஆவியின் அனலை மாற்றி வைக்கும் அனுபவம் இல்லை. அது உள்ளத்தில் எப்போதும் எரிய வேண்டும். *1* தெச. *5 : 19.*

**6. வலைபின்னல்** Grate of net work இதனை பலிபீடத்தின் பாதி உயரத்தில் தொங்க விட வேண்டும். அதன் மூலைகளில் வளையங்களால் தொங்கவிட வேண்டும். சாம்பல் பலியுடன் கலவாமல் கீழே கொட்டிவிட வலைபின்னல் உதவுகிறது. நமது அசுத்தங்கள் பலியைத் தீட்டுப்படுத்தாமல் உடனுக்குடன் வெளியேற்றப்பட வேண்டும். *1* பேதுரு *2 :1,2.* சாம்பல் விறகுடன் தங்கினால் நெருப்பு அவியும். அது உடனுடன் வலைப்பின்னல் வழியாக கொட்டிவிட்டால் நெருப்பு கொழுந்து விட்டு எரியும். அப்படியே நாமும் சாம்பலை கீழே கொட்டிவிட்டால் போதாது. அது வாரி வெளியே கொட்டப்பட வேண்டும். தேவ ஆலயமாகிய சரீரம், குடும்பம், சபை ஆகியவற்றில் அசுத்தங்கள் தங்காதபடி, உடனுக்குடன் அகற்றப்பட வேண்டும்.

**7. பலிக்கு விறகுகள்** இதைக் குறித்து திட்டமான போதனை இல்லை. எரிந்து சாம்பலாக உள்ளதால் அது எந்த மரத்தின் விறகானாலும் பரவாயில்லையோ? ஆகிலும், சில விறகுகள் அதிகப் புகையை எழுப்பி அது ஒரு பிரச்சினையாகி விட வழி உண்டு. மேலும் ஈரமான கட்டைகளும் அப்படியே. இவ்விரண்டிலும் கவனம் செலுத்தியிருக்க நியாயமுண்டு. நாம் ஆராதனையில் பயன்படுத்துகிற புகையக் கூடிய குழப்பம் மற்றும் மாம்சத்தின் ஈரமுள்ளவர்களைப் பீடத்தில் நுழைய விடுவது ஆபத்தானதே.

**8. பலிபீடம் சுமக்கப்பட வேண்டும்** அதற்காக இரண்டு பக்கங்களில் இரண்டு வீதம் நான்கு வளையங்களைப் பண்ணினார். சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டதும் வெண்கலத் தகட்டினால் பொதியப்பட்டதுமான தண்டுகளை வளையங்களில் பாய்ச்சி, தோள் மேலே சுமக்க வேண்டும். விசுவாசிகள் ஒருவரை ஒருவர் சுமக்க வேண்டும். விசுவாசியை ஊழியர் சுமக்க வேண்டும். ஊழியரின் பாரத்தை விசுவாசிகள் கூட தாங்க வேண்டும். பிலி. *4 : 15*, ரோமர் *15 : 1,2*. அனைவரையும் இயேசு பிதாவிடம் பரிந்து பேசி சுமக்கிறார். சுமக்கப்படாமல் தன்னிஷ்டமாய் வாழ்பவன் சபைக்கு நன்மையாயிருப்பது அரிது.

**பலிபீடத்தின் ஸ்தானம்** ஒரு பொருள் அல்லது ஆள் அமர்ந்திருக்கும் ஸ்தானம் முக்கியமானதாகும். ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளிருக்கும் கருவிகளுள் முதலாவது நாம் சந்திப்பது பலிபீடத்தை ஆகும். கூடாரத்திற்கு வருகிற எவரும் பலிபீடத்தின் வழியாகவே கூடாரத்திற்குள் செல்ல வேண்டும். கிறிஸ்தவனாக விரும்புகிற எவனும் இயேசு நிறைவேற்றிய சிலுவைப் பலியை விசுவாசித்து பாவமன்னிப்பை பெற்ற பின்னரே சபையில் நுழைய வேண்டும் என்பதையல்லவோ பலிபீடம் கைப்பற்றியுள்ள முதலாம் ஸ்தானம் வெளிப்படுத்துகிறது? இரட்சிக்கப்படுகிறவர்களைத்தானே சபையிலே சேர்த்தார்கள். அப். *2 : 47*. நீங்கள் கலியாண வஸ்திரம் பெறாமல் கலியாண விருந்தில் அமர்ந்திருக்கிறீர்களா? மத். *22 : 11-14*. கடைசியில் கையும் காலும் கட்டி புறம்பான இருளிலே தள்ளப்படுவானேன்?

பலிபீடம் மனிதனை பரிசுத்த தேவனோடு ஒப்புரவாக்குகிறது. பலிபீடம் பாவமன்னிப்பைத் தந்து பாவியின் மேல் தொங்கும் பட்டயத்தை அகற்றி விடுகிறது. சங். *7 : 12*. எபி. *9 : 22*. மிருக இரத்தம் சிந்தாத காயீனின் பலி தள்ளப்பட்டது. பலிபீடத்தின் பலியினால் மனிதன் தேவனோடு உடன்படிக்கை செய்கிறான். சங். *50 : 5*. இயேசுவின் இரத்தம் உடன்படிக்கையாகும். மத். *26 : 28*. பலிபீடம் ஆன்மீக மறுபிறப்பின் இடமாகும். அவன் பலியினால் மறுபிறப்படைந்து புது சிருஷ்டியாகிய குழந்தையாக நாள்தோறும் வளர வேண்டும். யோவான் *3 : 3*, *2* கொரி *5 : 17*, *1* பேதுரு *2 : 1-3*.

**பலிபீடம் வாசலுக்கு எதிரே இருந்தது :**

பலிபீடமானது உலக மக்கள் யாவரையும் வாசல் வழியாக தம்மிடம்

அழைத்தவாறு உள்ளது. ஆம் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார் இயேசு. மத். *11 : 28*. அவ்வாறே இந்த பலிபீடம் பாவத்தினால் வந்த சாபத்தினால் வந்த வியாதி, மரணங்களால் பாரம் சுமந்து தவிக்கிற மக்களுக்கு இளைப்பாறுதல் தரும் இடமாகும்.

### திறந்த வெளியில் வைக்கப்பட்டது

இதற்கு மறைவிடம் இல்லை. மழை, காற்று, வெயில் இவைகளின் தாக்குதலுக்கு உள்ளானதாக தரையில் இருந்தது. ஆனால் எல்லாவற்றையும் தாங்கத்தக்க வெண்கலத்தால் மூடப்பட்டிருந்ததால் பயமில்லை. புத்தியுள்ளவனின் வீடும் மழைக்கும் காற்றுக்கும் திறந்திருந்த போதிலும் அஸ்திபாரம் கற்பாறையின் மேல் இருந்ததால் அது விழவே இல்லை. மத். *7 : 24*. இயேசுவும் கூட எல்லா சோதனைகளுக்கும் உட்பட்டிருந்தார். நாமும் அப்படியே உலகத்தில் திறந்த வெளியில் இருக்கிறோம்.

### காற்று அதை பறக்கடிக்காதபடி

அது பளுவாக இருந்தது. உண்மையான விசுவாசி சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அலையமாட்டான். எபே. *4 : 14*. அவன் அசையாமல் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதம் போலிருப்பான். சங். *125 : 1*. கேள்விகளாகிய காற்றுகளால் பறக்கடிக்கப்படாமல் நின்று பதிலளித்த இயேசுவைப்போல விசுவாசத்திலும் உபதேசத்திலும் ஸ்திரப்படுங்கள்.

### தீயிலும் வெயிலிலும் வாடாத பலிபீடம்

தன் மேல் அக்கினி ஓயாமல் எரிந்தும் அழியாத பலிபீடம் வெயிலில் வாடுமா? கல்வாரி சிலுவையின் கோரகோபாக்கினையின் நெருப்பில் வெந்தும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த இயேசுவின் பிள்ளைகள் உலக உபத்திர வெயிலில் வாடமாட்டார்கள். சோதனையாகிய பற்றி எரியும் அக்கினியும் நம்மைச் சேதப்படுத்தாது. *1* பேதுரு *4 : 12*. அக்கினியில் சோதிக்கப்பட்டாலும் பசும் பொன்னாக விளங்குவோம். *1* பேதுரு *1 : 7*.

### இரவும் பகலும் அவியாத அக்கினி :

நரகத்தின் காட்சியை நமக்குத் தருகிறது. வெளி. *20 : 10, 14*. அதினால் பலிபீடம் நரகமல்ல. இந்த பலிபீடத்துச் சிறிய நெருப்பில் பலியான தேவ ஆட்டுக் குட்டியாகிய இயேசுவைக் கண்டடையாதவன். (யோவான் *1 : 29)* பெரிய நெருப்பாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலினைக் கண்டடைவான் என்றே பொருள். ஆம் பலிபீடத்தின் நெருப்பு நரக நெருப்பிலிருந்து விடுவிக்கின்றது. இன்றே பலிபீடத்திற்கு வாருங்கள். உடன்படிக்கைச் செய்யுங்கள். இந்த பலிபீடத்தின் அக்கினியானது முதலாவதாக தேவனிடம் இருந்து இறங்கி வந்தது என எபிரேய மரபு நூல்கள் கூறுகின்றன. வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணின போது தேவமகிமை ஆசரிப்புக் கூடாரத்தை நிரப்பியது. யாத்.

*40 : 34, 35*. ஆனால் அப்போது பலிபீடத்தில் பலி செலுத்தப்பட்டதாகக் காணப்படவில்லை. எனவே, லேவி *8 : 16, 9 : 10, 13*ல் மோசே பலிகளை தாமே கொளுத்திய அக்கினியால் செலுத்தினார். இது ஆரோனை அபிஷேகித்து ஆசாரியனாக்குவதற்கு இடப்பட்ட பலிகளாகும். பின்பு ஆரோன் ஆசாரிய பட்டத்தில் முதலாவது செலுத்திய பலியை தேவனிடத்திலிருந்து இறங்கிய அக்கினி பட்சித்தது. லேவி. *9 : 24*. அது முதல் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து இறங்கின அக்கினியை ஒரு போதும் அவியாமல் பாது காத்தனர். பலிபீடத்தைச் சுத்தம் செய்யும் போதும், பிரயாணத்தில் அதைச் சுமந்து செல்லும் போதும் அந்த அக்கினி அவியாமல் நெருப்புச் சட்டிகளில் அதைப் பாதுகாத்தனர். மேலும் திறந்த வெளியில் இருந்த போதிலும் பலிபீடத்து அக்கினி மழையிலும் அவியவில்லை. அது சதா எரிந்தது. இது நேசத்தழலை பிரதிப்பலித்தது. திரளான தண்ணீர் நேசத்தை அவிக்கமாட்டாது என்ற உன்னதப்பாட்டு *8 : 6, 7* வசனங்களை இது வெளிப்படுத்துகிறது. எனவே அந்நிய அக்கினியை இது முதல் யாரும் கொண்டு வரக்கூடாது. அந்நிய அக்கினியைக் கொண்டு வந்த நாதாபும் அபியூவும் தேவ சன்னிதியில் மாண்டனர். பலி மிருகம் மனிதனுடையது. அக்கினியோ கர்த்தருடையது. ஆம்! இரட்சிப்பு கர்த்தருடையது. யோனா *2 : 9*. நேசம் மரணத்தைப் போல் வலிது. நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடியதாயிருக்கிறது. அதின் தழல் அக்கினித்தழலும் அதின் ஜுவாலை கடும் ஜுவாலையுமாயிருக்கிறது. திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது. இப்படிப்பட்ட அன்பு நமக்குண்டா?

**பலிபீடத்தின் கொம்புகள்**

*1*. வெண்கல பலிபீடத்தின் கொம்புகளின் எண்ணிக்கை நான்கு ஆகும். சீத்திம் மரத்தினால் செய்யப்பட்ட வெண்கல தகட்டால் அது மூடப்பட்டது. இது மனுஷ அவதாரமாய் வந்த இயேசுவை பிரதிபலிக்கிறது. தாவீதுக்காகவும் தமது ஜனத்திற்காகவும் உயர்த்தப்படும் என்று முன்னுரைக்கப்பட்ட கொம்பு இவரே. சங். *132 : 17, 148 : 14*, லூக்கா *1 : 75* ல் அவர் இரட்சண்யக் கொம்பு என்னப் பட்டுள்ளார். இந்த இரட்சண்ய கொம்பை பிடித்துக் கொள்பவன் பாக்கியவான்.

*2*. இந்தக் கொம்புகள் நான்கு திசையிலுமுள்ளவர்களை நோக்கி நின்றபடி உள்ளது. ஏசாயா *45 : 22*. ஆம் இயேசு பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள வர்களை தம்மிடம் அழைக்கிறார். ஜாதி, நாடு, வேற்றுமை எதுவுமின்றி இயேசு அழைக்கிறார்.

*3*. இரத்தம் பூசப்பட்ட கொம்புகள், பலி மிருகத்தின் இரத்தம் பலி பீடத்தின் கொம்புகள் மேல் பூசப்படவேண்டும். லேவி. *4 : 25*. இயேசு சிலுவையின் மேல் இரத்தம் தோய்ந்தவராய் நிற்கும் காட்சியை இது தருகிறது. அவருடைய இரத்தம் சிலுவையில் வழிந்தது.

*4*. அதிகாரத்தின் கொம்புகள் : கர்த்தராகிய இயேசு வானிலும் பூவிலும் சகல அதிகாரமும் பெற்றவர். மத். *28 : 18*. அவருடைய போதகம்

அதிகாரமுடையதாக இருந்தது. மத். *7 : 28, 29*. யோவான் *6 : 60*. பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் இயேசுவுக்கு உண்டு. மாற்கு *2 : 10*. சீஷர்களுக்கு, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் அதிகாரம் கொடுத்தார் லூக்கா *10 : 19*. அவர் மரணத்தின் மேலும் மரணத்தின் அதிகாரியாகிய பிசாசின் மேலும் அதிகாரம் பெற்றார். எபி *2 : 14, 15*. உலகத்தை நியாயந்தீர்க்கும் அதிகாரமுடையவர். யோவான் *5 : 32*. அவர் உலகத்தின் மேல் ராஜாதிராஜாவாக அதிகாரம் பெறப்போகிறார். தானி. *7 : 14*, ஏசாயா *32 : 1*.

*5*. குற்றவாளிகளின் அடைக்கலமான கொம்பு. கைப்பிசகினால் அறியாமல் கொலை செய்தவன் ஓடிவந்து பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டால் அவனைக் கொல்லக் கூடாது. எனவே, கொலை செய்தவர்கள் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடிக்க ஓடுவார்கள். எப்போதும் ஓடிவரத்தக்க விதத்தில் பிராகாரவாசலுக்கு கதவோ, பூட்டோ, தாழ்ப்பாளோ இல்லை. எப்போதும் எவரும் வந்தடையத்தக்க அடைக்கலமாக இயேசு இருப்பதை இது வெளிப்படுத்துகிறது. பலி பீடத்தின் கொம்புகளில் பிடித்துக்கொள்ளுகிற மனப்பூர்வமாய் கொலை செய்தவனுக்கு மன்னிப்பு இல்லை. அவன் பலிபீடத்திலிருந்தும் கொண்டுவரப்பட்டு கொல்லப்படுவான். ஆனால் இயேசுவோ, எல்லா பாவங்களையும் செய்கிற எல்லா பாவிகளுக்கும் அடைக்கல மாயிருக்கிறார். அல்லேலூயா யாத் *21 : 14, 1* இராஜா. *1 : 50, 53, 2 : 28 31*, யோவான் *6 : 37*.

*6*. கொம்புகளில் பலிமிருகம் கட்டப்பட்டது. இயேசு கிறிஸ்துவே இந்த கொம்பு. எந்த பலிமிருகமும் வந்தவுடன் பலிபீடத்தின் கொம்புகளில் கட்டப்பட்டது. சங். *118 : 27*. இந்தக் கட்டு, பலிக்காக அந்த மிருகம் பிரிக்கப்பட்டு பிரதிஷ்டிக்கப்பட்டது என்பதற்கு அடையாளம்.

கட்டு போட்டு விட்டதால் அது இனி எங்கும் ஓட முடியாது. இயேசுவும் அன்பின் கயிறுகளால் சிலுவையில் கட்டப்பட்டார் என்பதே உண்மை. பிதாவிடம் வேண்டிக்கொண்டால் *12* லேகியோனிலும் அதிகமான தூதர்களின் உதவியுடன் தப்பித்துக்கொள்ள வல்லவர் சிலுவையில் அமர்ந்திருந்தது அன்பின் கட்டுகளினாலல்லாமல் வேறு எதினால்? அவருக்காக தம்மைத்தாமே அர்ப்பணிக்கின்ற ஒவ்வொருவரும் அன்பின் கயிறுகளால் கிறிஸ்துவாகிய பலிபீடக் கொம்புகளோடு கட்டப்படக்கடவர்கள். பவுலைப்போல. ரோமர் *8 : 36-39*.

**பலிபீடத்தின் முடிவு :**

ஆசரிப்புக் கூடாரத்தில் இறங்கிய அக்கினி சாலமோனின் ஆலயம் வரைக்கும் காக்கப்பட்டது எனலாம். ஆனாலும் சாலமோனின் ஆலயத்தின் பிரதிஷ்டையின் போது மீண்டும் வானத்திலிருந்து அக்கினி வெண்கல பலிபீடத்தின் மீது இறங்கியதாகக் காணலாம் *2* நாளா. *7 : 1*. எனவே, முந்தின பலிபீடத்தின் அக்கினி காக்கப்படவில்லை எனக்கருத நேரிடுகிறது. இஸ்ரவேலரின் அடிமைத்தனக் காலம், சில

யுத்தங்கள் முதலியவற்றின் போது பலியும் பலிபீடமும் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக நாம் காணலாம். எப்படியும் சாலமோனின் நாட்களில் மீண்டும் அக்கினி இறங்கி ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியது. மீண்டும் இராஜாக்கள் பலியை ஒழியப் பண்ணின துக்க சரித்திரத்தைப் பாருங்கள்.

*1.* ஆகாஸ் அரசன் தமஸ்குவில் கண்டமாதிரியான பலிபீடம் ஒன்றை செய்வித்து அதை கர்த்தருடைய ஆலயத்தில் வைத்தான். தேவ பலிபீடத்தை அதன் ஸ்தானத்திலிருந்து பெயர்த்து வடபுறமாக வைத்தான். *2* ராஜா. *16 : 10-15.* கர்த்தருடைய வெண்கல பலிபீடத்தை ராஜா சன்னதம் கேட்கப் பயன் படுத்தினான்.

*2.* மனாசே என்ற ராஜா கர்த்தரின் ஆலயத்திலே வானசேனைகளுக்கு பலிபீடங்களைக் கட்டினான். *2* நாளா. *33 : 1-5.*

*3.* இறுதியில் தேவன் கோபித்தார். பாபிலோன் அரசனின் கையில் ஒப்புவித்தார். ஆலயத்தின் அனைத்துப் பணிமுட்டுகளும் பாபிலோனுக்குச் சிறையாய் போயின. இவ்வாறு பலிபீடத்தில் தேவன் இறக்கிய அக்கினியும் அவிந்தது. எனவே, அக்கினியையும் பலிபீடத்தையும் அவியாமல் காப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும். புதிய ஏற்பாட்டு சபையில் ஆவியானவர் அக்கினிமயமான தோற்றத்துடன் ஒவ்வொருவர் மேலும் இறங்கினார். அப். *2 : 1-4.* இந்த ஆவியின் அனலைக் காத்து கொள்ளாதவன் கைவிடப்படுவான்.

*4.* செருபாபேல், நெகேமியா ஆகியோரின் தலைமையில் திரும்பி வந்த இஸ்ரவேலர் ஆலயத்தையும் அலங்கத்தையும் கட்டி முடித்தனர். ஆனால் மீண்டும் மேதியா பெர்சியா ஆட்சி, கிரேக்க ஆட்சி ஆகியவை இஸ்ரவேலுக்கு முழு அளவில் பாதுகாப்பு அளிக்கவில்லை. சில வேளைகளில் உபத்திரவங்களும் உண்டாயின. இப்படியிருக்க கி.மு. *199* முதல் சிரியா நாட்டின் ஆதீனம் பலத்தது. எப்பிபேனஸ் என்ற அந்தியோகஸ் IV என்பவன், செருபாபேல் கட்டிய ஆலயத்தின் பலி பீடத்தில் யூப்பித்தர் என்ற தேவனின் சிலை ஒன்றை ஸ்தாபித்தான். மேலும் இஸ்ரவேலுக்கு அருவருப்பான மிருகமாகிய பன்றியை அதின் மேல் பலியிட்டான். ஆலயமும் நாசமடைந்தது. எனவே, நாம் எதைச் செய்தாலும் அது ஆலயத்தையும் பலிபீடத்தையும் அக்கினியையும் பாதிப்புக்குள்ளாக்குமென அறிந்து ஜாக்கிரதையாக நம்மைக் காத்துக் கொள்ளவோமாக.


*5.* இச்சூழ்நிலைகளில் தான் இயேசு பிறந்தார். அப்போது நல்லவனாகிய மகா ஏரோது கட்டின ஆலயம் யூதருக்குப் பெருமையாய்த் திகழ்ந்தது. ஆனால் இயேசுவை மறுதலித்த யூதரின் ஆலயமும் பலி பீடமும் கி.பி. *70* ல் தீத்து என்ற ரோமன் சேனாபதியால் அழிக்கப்பட்டது. பலிபீடத்தின் வாழ்வும் அக்கினி அவியாதிருப்பதும் அவரவருடைய விசுவாசத்தையும் கிரியைகளையும் சார்ந்தே இருக்கிறது. இயேசுவாகிய உண்மை பலிபீடம் வந்த பின்னர் கைகளால் கட்டப்பட்ட பலிபீடத்துக்கு என்ன வேலை, என்பது போல அது ஒழிக்கப்பட்டதை ஒரு தீர்க்கதரிசன சம்மந்தமான நிறைவேறுதலாகவும் நாம் காண வேண்டும். அல்லேலூயா!

அதிகாரம் 19

# வெண்கலத் தொட்டி யாத் 30 : 17 21.

**தயாரித்தல்**

*1.* இது வெண்கலத்தால் செய்யப்பட்டது என அதன் பெயரே வெளிப்படுத்தும். இந்த வெண்கலம் ஸ்திரீகள் முகம் பார்க்கப்பயன்படும் வெண்கல தற்பணங்களால் செய்யப்பட்டன. ஆங்கிலத்தில் looking glass என உள்ளது. யாத். *38 : 8.* வெண்கல தர்ப்பணம் bronze mirror என Open Bible-ல் உள்ளது.



**பெண்களின் சேவை**

*2.* அக்காலத்தில் பெண்கள் முகம் பார்க்க வெண்கலத் தகடுகளை நன்றாய் தேய்த்து மினுக்கி வைத்தனர். ஆண்களைவிட பெண்களே அதிகமாக கண்ணாடிகளைப் பயன்படுத்தி வந்தனர். அத்தனை தேவையான ஒன்றை கர்த்தருடைய ஊழியத்திற்குத் தேவைப்பட்டபோது உதாரத்துவமாய் கொடுத்த ஸ்திரீகள் எத்தனை ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் என்று பாருங்கள். அநேகம் ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியம் செய்ததாக லூக்கா *8 : 3* கூறுகிறது. கர்த்தருடைய சேவையில் எக்காலத்திலும் ஸ்திரீகள் ஒரு நல்ல பங்கை நிறைவேற்றி யுள்ளனர் என்பது மகிழ்ச்சியன்றோ? கர்த்தருடைய ஊழியத்திற்குத்

தங்கள் பிள்ளைகளைப் பிரதிஷ்டை செய்வதிலும் ஆண்களைவிட பெண்களே முந்திக் கொள்வதாக சாட்சிகள் உண்டு.

(3) அந்தப் பளபளப்பான வெண்கலக் கண்ணாடிகள் அப்படியே பயன் படுத்தப்படவில்லை. அவைகள் ஒன்றாகச் சேர்த்து உருக்கி தொட்டியாக வார்க்கப்பட்டது. எனவே, மனித நிர்மாணமான அழகுகள், செயற்கை எழில்கள், மேன்மைகள் எல்லாம் உருக்கி வேறுரூபமாக வேண்டும். ஒரு மனிதன் கிறிஸ்துவுக்காகப் பயன்படவேண்டுமானால் அவன் மனம் மாறி வேறுரூபமாக வேண்டும். *2* கொரி. *5 : 17*. ரோமர் *12 : 2*.

ஒற்றுமை

(4) இதில் சபையின் ஒற்றுமை விளங்கும். அநேகரான நாம் சபையில் ஒரே மனம் ஒற்றுமையுடையவர்களாக இருக்கிறோம். அநேக தர்ப்பணங்கள் ஒன்றாக உருக்கி சேர்க்கப்பட்டது. எல்லா தர்ப்பணங்களும் ஒரே வடிவமாக இருக்க வில்லை. வெவ்வேறு வடிவமுடைய தர்ப்பணங்கள் உருகி ஒன்றானது போல் பலநாடு பாஷைக்காரரும், ஏழை, பணக்காரரும், கற்றவர் கல்லாதவரும் ஒருமனதுடன் இணைந்ததே இயேசுவின் சம்பாத்தியமாகிய சபை. இதை உணராத மக்கள் குழப்பங்களை சிருஷ்டிப்பர்.

கோதுமை

(5) இதே கருத்துடைய ஒன்றாகும் திருவிருந்தின் அப்பம். அநேக கோதுமை மணிகள் மாவாகி ஒரே அப்பமாகிறது. அதுதான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை. அப்படியே வெண்கலத் தொட்டியில் ஒருமனம் ஒற்றுமை விளங்கியது. மற்றவர்களைக் கழுவும் பணிக்கு வைக்கப்பட்ட தொட்டி தாமே முன்மாதிரியாயிருக்க வேண்டுமல்லவா*?* நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. *1*தீமோ *4 : 12*.

(6) கலப்படமில்லாத வெண்கலம் :- ஆசரிப்புக் கூடாரத்தின் அநேக பணிமுட்டுகள் மரத்தினால் செய்து வெண்கலம், அல்லது பொன்னினால் மூடப்பட்டது. தொட்டியானது மரமோ மற்ற உலோகக் கலவையோ இன்றி சுத்த வெண்கலமாகும். தேவனுடைய சபை இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டதால் சுத்தாங்க சபையாகும். எபே. *5 : 26*ல் அதன் பரிசுத்தமும், மகிமையும் விளக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள். தாம் அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறதற்கும் கறை திரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக..........

(7) சுத்தமான வெண்கலம் இனிமையான ஓசையைக் கொடுக்கும். ஒரு விசுவாசியானாலும் விசுவாசிகளின் சபையானாலும் பேரோசையுடன் இருக்க வேண்டும். *(அ)* இயேசு பலத்த சத்தத்துடன் ஜெபித்தார் எபி. *5 : 7*. *(ஆ)* இயேசு சத்தமிட்டு அழைத்தார். யோவான் *7 : 37*. *(இ)* பேரோசையுள்ள கைத்தாளம் சங். *150 : 5*. *(ஈ)* இஸ்ரவேலரின் பாவங்களை எக்காளம் போல் சத்தம் உயர்த்தி அறிவி. ஏசாயா *58 : 1*. *(உ)* பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளன்று இறங்கிய போது பலத்த காற்றடிக்கிற முழக்கம் உண்டாயிற்று. அப். *2 : 2*. *(ஊ)* குருடன் மிகவும் அதிகமாய் கூப்பிட்டான். லூக் *18 : 38*.

8. தொட்டியை சும்மா தரையில் வைக்கக்கூடாது. அதற்கு ஏற்ற ஒரு வெண்கல பாதம் செய்யப்பட்டு அதின் மேல் வைக்கப்பட வேண்டும். (யாத். 30 : 18) ஒரு விசுவாசி மாயையானதும் அசுத்தங்களால் நிறைந்ததுமாகிய உலகத்தில் நேரடியாகத் தன் மனதைச் செலுத்தக் கூடாது. இல்லாமற்போகும் பொருட்கள் மேல் கண்களை பறக்க விடக்கூடாது. நீதி. 23 : 5. துன்மார்க்கருடைய ஆலோசனை முதலியன ஏற்கலாகாது. சங். 1 : 1. அவிசுவாசியுடன் விசுவாசிக்கு பங்கேது? 2 கொரி. 6 : 14-18. இன்னும் பல. விசுவாசியோவென்றால் கிறிஸ்துவின் பாத அடிகளில் நடக்க வேண்டும். அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும். 1 பேதுரு 2 : 21. பாதத்தில் காத்திருக்க வேண்டும். லூக்கா 10 : 39. பாதபடியில் பணியுங்கள். சங். 99: 5. மரியாள் தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றினாள். யோவான் 12 : 3. இயேசுவின் பாதத்தை முத்தம் செய்தல். லூக்கா 7 : 38. அவருடைய அடிச்சுவடு (பாதம்) நீதி, சங். 85 : 13. விசவாசமே அடிச்சுவடு. ரோமர் 4 : 12. ஒரே மனம் என்ற அடிச்சுவடு. 2 கொரி. 12 : 18. இவ்வாறு பாதத்தின் மேல் வைத்த தொட்டி ஒரு போதும் அசையாது, கவிழாது.

## தொட்டியின் உபயோகம்

1. வெண்கலத் தொட்டியின் உபயோகம் முக்கியமாக இயேசு கிறிஸ்துவையே காட்டுகிறது. ஆசாரியர்களின் பட்டாபிஷேகத்தின் போது அவர்களை ஸ்நானம் பண்ணுவிக்கவும், பின்பு அன்றாட சேவைக்கு தங்கள் கைகால்களைக் கழுவிக் கொள்ளவும் தொட்டி பயன்பட்டது. யாத் 40 : 12. பின்பு ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடார வாசலில் வரச் செய்து அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்தார் லேவி. 8 : 6. ஆசரிப்புக் கூடார வாசலில் ஸ்நானம் பண்ணுவித்ததினால் இது தொட்டியின் தண்ணீரினால் தான் என்று தெளிவாகிறது. புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் இது ஞானஸ்நானத்தையே குறிக்கிறது. ஞானஸ்நானத்தின் உபதேசத்தை ஸ்தாபித்தவரும் இயேசுவே. எனவே, தொட்டி இயேசுவைக் குறிக்கும். கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம். கலா. 3 : 27.

2. வெண்கலத் தொட்டியின் இரண்டாவது உபயோகமானது ஆசாரியர்கள் அன்றாடம் தங்கள் கைகளையும் கால்களையும் கழுவிக் கொள்வதேயாகும். யாத். 30 : 20, 21. ஒரு தடவை பெறுகிற சரியான ஸ்நானமே போதுமானது. எனவே, முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும். யோவான் 13 : 10.

3. எந்த சந்தர்ப்பங்களில் கழுவ வேண்டும்? யாத். 30 : 20, 21. (1) அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் போது. (2) தகனபலிகளைக் கொளுத்தும் போது. (3) பலிபீடத்தில் ஆராதனை செய்ய சேரும் போது. எந்த நிலையிலுள்ள மக்களானாலும் யாவருக்கும் வாழ்க்கையில், குறைபாடுகள் உண்டென்றும் யாவரும் தங்களைக் கழுவிக் கொள்வது அவசியம் என்றும் அறிய இந்த பாடம் உதவுகிறது. சில தேவ ஊழியர்கள் தங்களைப் பூரணர் என்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கு வசன ஆதாரம் இல்லை என்பதை இதனால் அறிக.

*4*. பாருங்கள். இந்த தொட்டியில் கழுவிக் கொண்டவர்கள் சாதாரண மக்களல்ல, ஆசாரியர்களே, எனும் போது ஊழியர்களுடைய பரிசுத்தமாகுதல் எத்தனை அவசியம் என்பதை உணராதவன் யார்? மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு........ என்றார் பவுல் *1* கொரி *9 : 27*.

*5*. ஆனால் புதிய ஏற்பாட்டு சபைக்கு உட்பட்ட யாவருமே ஆசாரியக் கூட்டமாயிருக்கிறோம் என்ற ஒரு புதிய விளக்கத்தைப் பேதுரு தந்துள்ளார். *1* பேதுரு *2 : 9*. எனவே, இந்த தொட்டியின் ஒரே ஸ்நானமும் அன்றாடக் கழுவுதலும் விசுவாசிகளாகிய ஆசாரியக் கூட்டத்திற்கும் பொருந்துகிறது. பரிசுத்தமாகுதலில் எவருக்கும் விதிவிலக்கு இல்லை. இயேசுவே தம்மைத்தாமே பரிசுத்தமாக்கியிருக்க (யோவான் *17 : 19*) நாம் எம்மாத்திரம்?

*6*. தொட்டியானது சுத்தமான வெண்கலம் என்பது மற்ற எவரைப் பார்க்கிலும் அதிகமாக இயேசுவுக்கே பொருந்தும். அவர் சுத்தமானவர். மாறுபாடும் மாசும் இல்லாதவர். எபி. *7 : 26*. மற்றவர்களை சுத்தம் பண்ணுகிறவர் எத்தனை பரிசுத்தமுள்ளவர் என்று பாருங்கள். பல தெய்வங்களில் களவு, கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்கள் சுமந்திருப்பதைக் காணலாம். இயேசுவோ பரிசுத்தர், குற்றமற்றவர், மாசு இல்லாதவர். எபி. *7 : 26*.

*7*. இயேசு கிறிஸ்துவிலுள்ள கழுவுதல் *2* தன்மைகளில் விளங்கும்.

**(அ) இரத்தத்தினால்** : இது வெண்கல பலிபீடத்தண்டை நடைபெறுகிறது. அதாவது கல்வாரி சிலுவையில் சிந்திய இயேசுவின் இரத்தம் நம்மை சகல பாவங்களிலிருந்தும் சுத்திகரிக்கிறது. *1* யோவான் *1 : 7*.

**(ஆ) ஜலத்தினால்** : இதில் ஒன்று ஸ்நானம் பண்ணுதல். ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் கழுவப்படு என்று பவுலுக்குச் சொல்லப்பட்டது. அப். *22 : 16*. மற்றொன்று அன்றாட அசுத்தங்களைக் கழுவுதல். இதற்கு ஜலம் தேவை. அன்றாடக் கழுவுதலுக்குரிய ஜலமானது, இயேசுவின் நாமம், தேவ வசனம், பரிசுத்த ஆவி முதலியவைகளே. ஜெபத்தில் இவைகள் மூலம் அன்றாட சுத்திகரிப்பை அடையலாம். அல்லேலூயா. யோவான் *13 : 8*. ரோமர் *15 : 15*.

### 8. அளவு சொல்லப்படாத தொட்டி

மற்ற பணி முட்டுகளின் அளவு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தொட்டியின் அளவு தரப்படவில்லை. இதன் உயரமோ, சுற்றளவோ, கொள்ளளவோ காணவில்லை. பரிசுத்தமாகுதலுக்கு அளவே இல்லை என்பதே இதன் பொருள். ஒருவன் எவ்வளவு பரிசுத்தமடைந்தாலும் போதாது.

மேலும் இயேசுவின் பரிசுத்தமாக்கும் வல்லமை அளவிடப்படாதது ஆகும். ஒரு பாவியின் அத்தனை பாவங்களையும், அத்தனை பாவிகளின் அனைத்துப் பாவங்களையும் கழுவும் வல்லமை இயேசுவில் உண்டு. தேவன்

தமது பரிசுத்த ஆவியை அளவில்லாமல் கொடுக்கிறார். யோவான் *3 : 34.*

அளவு சொல்லப்படவில்லை என்றாலும் சாலமோனின் ஆலயத்துத் தொட்டியின் அளவுக்குப் பெரியதாயிருக்க வாய்ப்பு இல்லை. அது *2000* குடம் தண்ணீர் பிடிக்கத்தக்கதாயிருந்தது. அதன் உயரம் *5* முழம். ஒரு விளிம்பு முதல் மறு விளிம்பு மட்டும் *10* முழம் குறுக்களவு. சுற்றளவு *30* முழம். அதன் கனம் *4* விரற்கடையளவு. பான பாத்திரத்தின் விளிம்பு போல என்பதால் அது வட்ட வடிவுள்ளது ஆகும். *2* நாளா. *4 : 5.* இங்கே அது *3000* குடம் தண்ணீர் பிடிக்கும் என்றும் *2000* குடம் என *1* இராஜா. *7 : 26* லும் உள்ளது. எப்படியும் அது சுமார் இருபதாயிரம் கியாலன் (Gallon) தண்ணீர் பிடிக்கும். அதை கடல் தொட்டி என்று *1* இராஜா. *7 : 23* ல் காண்க. அது கடல்போல் விசாலமானதாகும்,. அது ஸ்திரமாய் ஒரு இடத்தில் இருந்தது.

ஆசரிப்புக் கூடாரத்து தொட்டியோவெனில் சுமக்கப்பட வேண்டியதாக இருந்ததால் அத்தனை பெரியது அல்ல என்றாலும் அதன் வட்ட வடிவும் வார்க்கப்பட்ட தன்மையும் துவக்கவும் முடிவும் இல்லாததும் என் காண்பிக்கிறது. இயேசுவும் அப்படியே நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவும் இல்லாதவரல்லவோ? எபி. *7 : 3.* அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரல்லவோ? எபி. *13 : 8.* வட்ட வடிவில் வார்க்கப்பட்ட பொருளின் துவக்கமும் முடிவும் கண்டுபிடிக்க இயலாது.

## 9. தொட்டியின் ஸ்தானம் :

பிராகாரத்திலுள்ள இரண்டாவது பணிமுட்டாகும் கழுவும் தொட்டி. அது பலிபீடத்தைத் தாண்டி பரிசுத்த ஸ்தலத்தின் நுழைவாசலுக்கு முன்னதாக வைக்கப்பட்டிருந்தது. அதனால் தங்களைக் கழுவிக் கொண்டு பரிசுத்த ஸ்தலத்தில் நுழையலாம். அதே வேளையில் பலிபீடத்துப் பணிகளின் போது தங்களை சுத்திகரித்துக் கொள்ளவும் செய்யலாம்.

## 10. தொட்டியின் தண்ணீர் (1) வெடிப்பில்லாத தொட்டி

தொட்டி நன்றாகச் செய்யப்பட்டிருந்தாலும் அதில் தண்ணீர் இல்லா விட்டால் எவருக்கும் பிரயோஜனமில்லை. அப்படியே அநேக தெய்வங்களும், இயக்கங்களும் உள்ளன. தண்ணீரில்லாத வெடிப்புள்ள தொட்டிகளைத் தேடிக் கொண்டதாக எரேமியா தீர்க்கதரிசி குற்றம் சாட்டுகிறார். எரே. *2 : 13.* சத்திய தேவனை விட்டு விடுகிற யாவரையும் இது குறிக்கும். இறுதியில் பஞ்சம், நோவு, சாவுடன் கர்த்தரே தெய்வம் கர்த்தரே தெய்வம் என்று அறிக்கையிட நேரிடும். *1* ராஜா. *18 : 39.* இயேசுவோ பாவத்தால் வெடிப்பில்லாத ஜீவத் தண்ணீருள்ள தொட்டியாகக் காட்சியளிக்கிறார். வெடிப்புள்ள தொட்டியில் தண்ணீர் தங்காது. பாவியில் கிருபை தங்காது.

## 2. தண்ணீரின் உபயோகம் இரண்டே :

**(அ) குடிக்க :** இயேசுவிலிருந்து ஜீவத்தண்ணீர் புறப்பட்டு தம்மிடம் வருகிற யாவருடைய தாகத்தையும், தணியச் செய்கிறது. ஆசரிப்பு கூடாரத்திலுள்ள தொட்டியின் உபயோகம் அது அல்ல.

**(ஆ) சுத்திகரிக்க :** இதுவே இங்குள்ள தண்ணீரின் உபயோகம். தண்ணீரை தேவ வசனத்தோடு ஒப்பிட்டால் அது நம்மைக் கழுவும். தண்ணீரை பரிசுத்த ஆவியுடன் ஒப்பிட்டால் அவரும் நம்மைக் கழுவுகிறார். அநுதினமும் நாம் நம்மை கழுவிக்கொள்ள இப்படியொரு மார்க்கத்தைத் திறந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. தண்ணீர் ஸ்நானத்திற்கு உதவுமென்றால் அதிலும் ஒரு கழுவுதல் உண்டு. அப். *22 : 16*. வேதவசனத்தினாலும் கழுவப்படுகிறோம். தண்ணீர் தேவ வசனங்களுக்கும் ஒப்பனை. இவ்வாறு இயேசுவாகிய வெண்கலத் தொட்டியானது தேவ வார்த்தையானவரும் பரிசுத்த ஆவி நிறைந்தவருமாகிய இயேசுவுக்கு ஒப்பனை. அதின் தண்ணீர் நம்மை கழுவுகின்ற வேதவசனங்களை யும், பரிசுத்த ஆவியையும், இயேசுவின் நாமத்தையும் காட்டும். *1* கொரி. *6 : 11*.

**11. ஆசரிப்பு கூடார வாசலில் கூடின ஸ்திரீகள் :**

கண்டவர்களுடைய தர்பணங்களால் தொட்டி செய்யப்படவில்லை. கூடார வாசலில் கூட்டம் கூட்டமாய்க்கூடின ஸ்திரீகளின் தர்ப்பணங்களாலே என யாத். *38 : 8*ல் காண்கிறோம். ஆம் தேவனை ஆராதிக்க வராதவர்களுடைய பணம், பொருள் தேவனுக்குத் தேவையில்லை. வருகிறவர்களிலும் உதாரமனமில்லை யென்றால் பிரயோஜனமில்லை. தேவனைத் தேடுகிற ஸ்திரீகள் எத்தனை பாக்கியவதிகளென்று பாருங்கள்.

**12. தொட்டியில் நிறைந்த தண்ணீர் :**

இது தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு, என்பவைகளின் ஆழத்தையும் சுட்டிக் காட்டுகிறது. ரோமர் *11 : 33*. பிரபஞ்சத்தில் தேவ சிருஷ்டிப்பில் அடங்கியிருக்கிற மொத்த ஐசுவரியத்தை அளவிட யாரால் முடியும்? அப்படியே சிருஷ்டிப்பில் மறைந்திருக்கிற தேவ ஞானமும் அறிவும். அதைக் காட்டிலும் பெரிதே அவருடைய அன்பு. யோவான் *3 : 16*ன் அன்பு எத்தனை பெரியது? அன்பு திரளான பாவங்களை மூடும். *1* பேதுரு *4 : 8*. மூடும் என்பதற்கு மன்னிக்கும் எனப் பொருள். கழுவும் தொட்டியைப் பொறுத்த வரையில் அன்பு திரளான பாவங்களைக் கழுவும் என்று பொருளாகிறது. எனவே, இரத்தாம்பர சிவப்பான பாவங்களையும் கழுவித் தீர்க்கும் தேவ அன்புக்கு தொட்டியின் தண்ணீர் ஒப்பனையாக உள்ளது.

## பகுதி V. அதிகாரம் 20

## கட்டுமானப் பணிகள்

## பரிசுத்த ஸ்தலம்

இதனை முதலாம் கூடாரம் என்றும் முதலாம் ஆலயம் என்றும் கூறலாம். பிராகாரத்தைக் கடந்த பின் நாம் சந்திக்கக் கூடியதும் ஆசாரியர் தவிர வேறு ஒருவரும் நுழையக் கூடாததுமான அறையாகும் இது. பிராகாரத்துச் சந்தடிகளும், பலி மிருகங்களின் கொலைக் குரல்களும் பலியிடுகிறவனின் கதறல்களும் இங்கே இல்லை.

ஆசாரியர்களுடைய உழைப்பும் பிராகாரத்தைவிட எளிதாகும். இது ஒரு அமைதி நிலவுமிடம். சாந்தமான சேவையின் இடம். தேவ ஊழியர்களின் சேவை, சாந்தமும், அமைதியும் இனிமையுமாயிருக்க வேண்டுமென்பதல்லவோ இது தரும் பாடம். கவுன்சில்களிலும் ஆலயப் பணிகளிலும் அமைதி காணப்படவேண்டும். கலாட்டா, கோஷ்டி யுத்தம், கோர்ட்டு வழக்கு யாவுமே ஊழியத்திற்கு தூஷணமாகும். பரிசுத்த ஸ்தலம் அமைதியான சேவையின் இடமாகும்.

### பரிசுத்த ஸ்தலம் என்ற பெயர் ஏன்?

*1.* பரிசுத்தப் பணிமுட்டுகள் வைக்கப்பட்டுள்ளதால் இதற்கு இப்பெயர் வந்தது. பரிசுத்தப் பணிமுட்டுக்களாவன *: (1)* சமூகத்து அப்ப மேஜை *(2)* குத்து விளக்கு *(3)* தூப பீடம். பரிசுத்த பணிமுட்டுகள் போன்ற பரிசுத்தவான்கள் கூடுமிடம் பரிசுத்த பூமியாகும். மோசே நின்ற பூமி பரிசுத்த பூமி எனப்பட்டது. யாத். *3 : 5.* யாக்கோபு படுத்திருந்த ஸ்தலத்தில் கர்த்தர் இருந்தார். ஏனெனில் யாக்கோபு அங்கே இருந்தார். அவ்வாறு தேவஜனம் கூடுமிடமெல்லாம் பரிசுத்த ஸ்தலம் எனப்பட்டது. அதற்கு முன்னே அந்த பூமியில் நரி ஓடித்திரிந்தது. எல்லா நிலத்தையும் போல முள்ளும் குருக்கும் நிறைந்திருந்தது. எப்போது கூடாரம் ஸ்தாபிதமாயிற்றோ அது முதல் அது பரிசுத்த ஸ்தலம் ஆகிவிட்டது.

*2.* பரிசுத்த தேவன் வாசம் பண்ணுவதினாலும் அது பரிசுத்த ஸ்தலமாயிற்று. அப்படியே ஒரு மனிதனும்*!* அதுவரைப் பாவியாக இருந்தவனின் உள்ளத்தில் தேவன் வந்த உடனே பரிசுத்தவான் எனப்படுவான். ஏசாயா *4 : 3.* தேவன் உள்ளத்தில் வந்த உடன் அசுத்தங்கள் ஓடி மறைகின்றன. அவன் பரிசுத்த ஸ்தலமாகிறான். அவ்வாறே ஆசரிப்புக் கூடாரமும் பரிசுத்த ஸ்தலமாயிற்று.

*3.* பிராகாரத்தில் காணப்படுவது போன்ற இரத்தக் கறை, பலி மிருகத்தின் சாணி, கழுவி எஞ்சிய அழுக்குநீர், பலிபீடத்துக் கோரப்புகை போன்ற எழுத்தின் படியான அசுத்தங்கள் இங்கே இல்லை என்பதாலும் பரிசுத்த ஸ்தலம் எனலாயிற்று.

## அதிகாரம் 21

## பரிசுத்த ஸ்தலத்தின் வாசல் - திரைச்சீலை

இது பரிசுத்த ஸ்தலத்தின் அகலத்துக்கு ஏற்ப *10* முழ அகலமுள்ளது ஆகும். இரண்டு முழத்திற்கு ஒன்று வீதம் *5* தூண்கள் இந்த வாசலில் நின்றன. பிராகார வாசல் *20* முழமும் இது *10* முழமும் அகலமுள்ளதாகும். இதற்குள் ஆசாரியன் மட்டும் நுழைவதால் தூண்களுக்கிடையே ஆன இடைவெளி *2* முழம் போதுமானதே. பிராகாரத்தைவிட இந்த வாசல் சற்று இடுக்கமானதாகும். கிறிஸ்துவுக்குள் நாம் வளருந்தோறும் உபதேசங்களால் நம்மைக் கட்டுப்படுத்துவதற்கு இது அடையாளம்.

இதன் தூண்கள் ஐந்தும் சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டு பொன்

தகட்டால் மூடப்பட்டிருக்கும். பொன்னினால் பொதியப்பட்டது என்ற ஒரே வித்தியாசம் தவிர மற்றவைகளில் பிராகாரத்துத் தூண்களைப் போல உச்சியில் வெள்ளிப்பூண் மற்றும் வெள்ளிக் குமிழ் கட்டப்பட்டு, கீழே வெண்கலப் பாதங்கள் மேல் நிற்கின்றன. பிராகாரத்தூண் வெண்கலத்தால் மூடியிருக்க பரிசுத்த ஸ்தலத்து வாசல் தூண் பொன் பொதியப்பட்டது. விசுவாசிகளைவிட ஊழியக்காரன் மேன்மை யானவனாயிருக்க வேண்டுமென இது வெளிப்படுத்தும். தேவ ஊழியர்கள் எல்லா விதத்திலும் மற்றவர்களை விட வார்த்தையிலும், ஆவியின் நிறைவிலும் அதிகமாயிருக்க வேண்டுமல்லவோ? ராஜா, தீர்க்கதரிசி, அப்போஸ்தலர், மேய்ப்பர் யாவரும் மற்றவர்களைவிட மேன்மையிலும் கிருபையிலும் பெருகி இருந்தனர்.

பிராகார வாசல் தூண்கள் மூன்று வகை பொருட்கள் கொண்டது. *(1)* சீத்திம் மரம் *(2)* வெண்கலம் *(3)* பூண், குமிழ் மற்றும் கொக்கி வெள்ளி. அவ்வாறே பரிசுத்த ஸ்தலத்தூண்களும் மூன்று வகைப் பொருட்களால் அமைந்தது. மரம், பொன, பொதியப்பட்டது. மற்றும் பூண், குமிழ், கொக்கி ஆகியவைபும் பொன் பாதமோ வெண்கலம். இதில் பொன் கூடுதலாக உள்ளது போல தேவ ஊழியர்கள் அறிவிலும் மகிமையிலும் சிறந்தவர்களே.

**திரைச்சீலை :**

பிராகாரத்திற்கு உள்ளது போல நான்கு வகை நூல்களினால் ஒரு தொங்குதிரையும் இந்த வாசலுக்கு உண்டு. திரையில் சித்திரத்தையல் வேலைகள் உண்டு. இத்திரை பரிசுத்த ஸ்தலத்தை மறைக்கிறது. புதிய ஏற்பாட்டு ஊழியம் மறைவானது அல்ல என்றாலும் ஒரு ஊழியருக்கு மறைவான அனுபவமும் உண்டு. அவர் ஜனங்களுக்கு முன்பாக நிற்கும் முன்னே தேவ சமூகத்தில் அமர்ந்திருக்க வேண்டும். வாயடக்கம் ஒரு நல்ல பண்பு. அப்படியே கண்களின் இச்சைக்கும் மாம்சத்தின் இச்சைக்கும் திரையிட வேண்டும். அந்தரங்க பக்தி மிஞ்சியும் வெளிவேஷ பக்தி அழிந்தும் இருக்க வேண்டும். தன் வாழ்க்கையில் மறைவாயிருப்பதல்லாமல் ஊழியத்திலும் ஜெபம், பிறரைப் புகழ்தல், நன்கொடைகள், பிரசங்கம், உபவாசம் யாவும் வெளிவேஷமாக அல்ல, எல்லாம் உண்மையானதும் அந்தரங்கமானதாகவும் இருப்பதாக. அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா வெளியரங்கமாய் பலனளிப்பார். மத். *6 : 3, 6, 17, 18.*

இவ்வுண்மையை நிரூபித்த வண்ணம் தூய ஆலயத்துக்குள் பணிமுட்டுகள் யாவும் திரைச்சீலையால் மறைக்கப்பட்டிருக்கிறது மல்லாமல் அவைகளெல்லாம் மறைவாயிருக்கிற பணிமுட்டுகளைக் கொண்டதாகும். அதற்குள்ளிருக்கும் பணிமுட்டுகளாவன. *(1)* சமூகத்து அப்ப மேஜை *(2)* குத்து விளக்கு *(3)* தூபபீடம். இவற்றைப் பற்றி தனியாகக் காண்பீர்களாக.

## அதிகாரம் 22

# நிமிர்ந்து நிற்கும் பலகைகள் - 48

• பரிசுத்த ஸ்தலமும் மகாபரிசுத்த ஸ்தலமும் ஆகிய இரண்டு அறைகளைக் கொண்டதாகும் ஆசரிப்புக் கூடாரம் அல்லது கூடாரம் அல்லது ஆலயம். இதனை நிறுத்துவதும், பிராகாரத்திலிருந்து பிரிப்பதும் பலகைகளாகும். கிழக்காகிய முன் பக்கத்தில் 5 தூண்களும் அவைகளில் தொங்குகின்ற திரைகளும் உண்டு. மற்ற மூன்று பக்கங்களிலும் நிமிர்ந்து நிற்கும் பலகைகளே அதன் அமைப்பு. பலகைகளை கூடாரத்தின் சுவர் எனலாம். யாத் 36 : 20-34

**1. உறுதியுள்ள பலகை :** பெயர்க்கக்கூடிய பரதேசியின் கூடாரம் என்று இதற்குப் பெயர் இருந்தாலும், பார்வையில் தோன்றினாலும் அது உறுதியான பலகைகளால் தாழ்ப்பாள்களுடன் செய்யப்பட்டிருந்தது. ஒரு கிறிஸ்தவ விசுவாசி பரதேசி தான் என்றாலும் அவன் உறுதியுள்ளவன் ஆவான். வேசித்தனத்திற்கு விலகி ஓடிய யோசேப்புக்கும் ராஜபோஜனத்தை மறுக்கத்தக்க வீரம் படைத்த தானியேலுக்கும் விக்கிரகத்தின் முன் மண்டியிட மறுத்துத் தீச்சூளையைத் தழுவிக் கொண்ட மூவருக்கும் இருந்த உறுதி இந்தப் பலகைகளில் வெளிப்படுகின்றன. ஆதி. 39 : 5, 15, தானி. 1 : 5-10, 3 : 16-24. தனக்குள்ள யாவையும் குப்பையாய் எண்ணி கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? என்று கதறிய பவுலும் இந்த பலகைப் போன்றவரே. அன்பானவர்களே, தலை சாய்க்க இடமில்லாமல் சுத்தப் பரதேசியாய் வாழ்ந்த இயேசுவும் தமது உறுதியில் கொஞ்சமும் அசையவில்லை. உங்கள் மகாபரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப்படுத்துங்கள். யூதா 20

**2. விசாலமான பலகை :** பலகைகள் மொத்தம் 48. ஒவ்வொரு பலகையும் 10 முழம் உயரமும் 1 1/2முழம் அகலமும் கொண்டதாகும். ஒரு பலகை $10 \times 1\,{}^{1}/_{2} = 15$ சதுரமுழ பரப்பளவுள்ளதாகும். மொத்தம் பலகைகள் 48. எனவே பலகைகளின் மொத்தம் பரப்பளவு $48 \times 15 = 720$ சதுர முழமாகும். இது 12 கோத்திரங்களின் 60 மடங்காகும். மேலும் அதன் அகலம் 1 1/2 முழம் என்பது பலகை நல்ல விசலமானது என்பதை இந்த அளவுகள் வெளிப்படுத்துகிறது. தேவ ஜனம் விசால மனமுள்ளவர்களாயிருக்க வேண்டும். சங். 119 : 32. நீர் என் இருதயத்தை விசாலமாக்கும் போது, நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன். அநேகர் தேவ வசனங்களைக் கைக்கொள்ளாததற்கு காரணம் விசாலமின்மையே. முள்ளுகள் அதை நெருக்குகிறதா? மத். 13 : 22.

**3. தெரிந்துக் கொள்ளப்பட்ட பலகை :** சீத்திம் மரத்தினால் செய்யப்பட்ட பலகைகள் இரட்சிக்கப்பட்ட தேவ ஜனத்திற்கு அடையாளமாகும். எல்லா மரங்களும் ஆசரிப்பு கூடாரப் பணிக்கு பாக்கியம் பெறவில்லை. சீத்திம் மரத்திலும் சில மரங்களே ஆலயப்பணிக்கு வந்தன. அழைக்கப் பட்டவர்கள் அநேகர், தெரிந்துக்

கொள்ளப்பட்டவர்களோ கொஞ்சம். மத். *22 : 14.*

**4. பக்குவப்பட்ட பலகை :** மரம் அப்படியே ஆசரிப்புக் கூடாரப் பணிக்கு உதவுவதில்லை. அதனைக் காட்டு மரங்களுக்கிடையிலிருந்து வெட்டி எடுத்து, வாளினால் அறுத்து, கணு, திருக்கு யாவும் நீக்கி சுத்தமாக்கி பலகைகளாக்கிய பின்னரே பயன்படும். இது ஒரு விசுவாசியை உலகத்திலிருந்து பிரித்து வசனமாகிய பட்டயத்தால் சுத்தமாக்கி ஊழியத்திற்கு பக்குவப்படுத்துகிற அனுபவமாகும். எபி. *4 : 12.* பக்குவப்படாதவர்களால் இன்று கிறிஸ்தவம் தவிப்பதை எங்கும் காண்கிறோம்.

**5. வளர்ந்த பலகை :** இந்தப் பலகைகள் *10* முழம் (சுமார் *15* அடி) உயரம் உள்ளதால் சிறிய மரங்கள் பலகைகளாவதற்கு உதவாது. எனவே, மிக உயரமாக வளர்ந்த மரங்களே தேவை. விசுவாசிகள் தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் வளர வேண்டும் என்றார் பவுல். எபே. *4 : 15.* குள்ளன் தேவனுடைய சபைக்கு உட்படலாகாது. லேவி. *21 : 20.* ஆவியில் வளர்ச்சியற்றவர்களும் ஆசரிப்புக் கூடாரப் பணிக்கு அப்படியே.

**6. கனமான பலகை :** *15* அடி உயரமான பலகைகள் கனம் குறைந்ததாக இருந்தால் நிமிர்ந்து நிற்காது. எனவே சுமார் மூன்று அங்குல கனமாவது இருந்திருக்க வேண்டும். ஊழியம் செய்கிறவர்கள் மிக கனம் பெற்றவர்களாயிருக்க வேண்டும். இது கனமான ஊழியமானதால் (எபி*5 : 4)* கனவீனமானவர்களுக்கு இதில் பங்கில்லை. ஊழியம் செய்கிறவர்கள் இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரவான்கள் என்பதையும் கனமான பலகைகள் காட்டுகின்றன. *1* தீமோ. *5 : 17.*

**7. பொன் மூடிய பலகை :** நல்ல பலகைகள் என்பதால் அப்படியே பயன்படாது. அவை பொன் பொதியப்பட வேண்டும். பொன் தேவமகிமை, விசுவாசம், ஆகியவற்றைக் குறிக்கும். எத்தனை நல்ல பலகைக்கொத்தவர்களாயிருந்தாலும் நாம் மனுஷீகத்தை தெய்வீகத்துக்குள் மறைக்க வேண்டும். ஜென்ம சுபாவத்தை திவ்ய சுபாவத்தினால் பொதிய வேண்டும். *1* கொரி *2 : 14, 2*பேதுரு *1 : 4.*

பொன் திவ்விய சுபாவத்தின் பூரணமாகிய கிறிஸ்துவைக் குறிக்கும். பலகையை மூடும்படியாக பொன் தீயில் காய்ந்து அடித்து தகடாக்கப்படவேண்டும். ஆம் கர்த்தராகிய இயேசு சிலுவையில் அடிக்கப்பட்டு தமது திவ்விய சுபாவத்தினால் நம்மை மூடினார். மரமாகிய நாம் இப்போது கிறிஸ்துவுக்குள்ளாயிருக்கிறோம்.

*1.* ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுக்குள்ளாகிறோம். கலா. *3 : 27.*

*2.* அபிஷேகம் மேலும் கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது.

*3.* வேத வசனத்தினாலும் அப்படியே.

பொன் பொதியப்படாத பலகை சபைக்கு ஏற்றதல்ல. ஏனெனில் ஜென்ம சுபாவமுள்ள மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை

ஏற்றுக் கொள்ளான். *1* கொரி. *2 : 14*. அவன் எப்போது கூடாரத்தைக் கவிழ்ப்பான் என்பதை அறியோம்.

**8. இணைந்த பலகைகள் :** பலகைகளை ஒன்றோடொன்று இணைப்பதற்காக தாழ்ப்பாள்கள் செய்யப்பட்டிருந்தன. வடபக்கத்து *20* பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களும், தென்பக்கத்து *20*க்கு ஐந்தும் மேற்கிலும் மூலைகளிலுமாக *8*க்கு ஐந்தும் தாழ்ப்பாள்களால் இணைக்கப்பட்டன. நடுத்தாழ்ப்பாள் ஒன்று எல்லா பலகைகளையும் ஒரு முனை முதல் மறுமுனை மட்டும் இணைத்தன. யாத் *26 : 26-29*. இவ்வாறு *16* தாழ்ப்பாள்கள் இருந்தன. இந்த தாழ்ப்பாள்கள் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் இணைந்திருக்கும் பண்பு ஆகும். ஒருமனம் ஒற்றுமையைக் குறித்து பவுல் கூறியதைக் கேளுங்கள். சகோதரரே நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். *1* கொரி. *1 : 10*.

நீங்கள் ஏக சிந்தையும், ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். பிலி. *2 : 2*. கிறிஸ்தவ சபையில் விசுவாசிகளும் ஊழியரும் ஒருமனம் ஒற்றுமையாக விளங்க வேண்டும். தாழ்ப்பாள் இல்லாத பலகைகள் காற்றினாலும் கூடார மேல்மூடியின் பளுவினாலும் விழுந்து போகும். இந்த *15* தாழ்ப்பாள்களையும் சபையின் மூப்பர்களாகிய பிரபுக்களோடு ஒப்பிடலாம்.

தாழ்ப்பாள்கள் ஒருவருக்கொருவர் உள்ள ஐக்கியத்திற்கும் நடுத் தாழ்ப்பாள் அனைவரையும் இணைக்கிற ஊழியருக்கும் ஒப்பனை. தாழ்ப்பாள் சீத்திம் மரத்தினால் செய்து பொன் மூடப்பட்டது ஊழியருக்கு ஒப்பனை. விசுவாசி களுக்குள் வரும் பிரிவினைகளை தீர்க்கவும் இணைக்கவும் செய்வதே ஊழியரின் பணி.

**9. கழுந்துகள் உள்ள பலகை :** பலகையின் அடிப்பகுதியில் சமதூரத்தில் இரண்டு கழுந்துகள் வேண்டும். கழுந்து என்பது பாதத்திலுள்ள குழிக்குள்ளே சரியாக இறங்கி பிடிப்பாயிருக்கும் படி பலகையின் அடியில் செதுக்கப்பட்டுள்ள உந்தி நிற்கும் தண்டு ஆகும். இதுதான் பலகையை பாதத்தில் நிற்க வைக்கிறது. பாதங்கள் இருந்தாலும் அதனோடு பொருந்தக் கூடிய கழுந்துகளை பலகை தன்னிலே உடையதாயிருக்க வேண்டும். இது ஒரு மரத்தின் வேருக்கு ஒப்பாக உள்ளது. ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள வேர் கொண்டிருப்பதாக கொலோ. *2 : 6* லும் தனக்குள்ளே வேரில்லாதது நிலைத்திராது என லூக்கா *8 : 13* லும் அன்பிலே வேரூன்ற வேண்டுமென எபே. *3 : 17* லும் வேரற்ற மரமாயிருக்கலாகாது என யூதா *12* லும் காண்க. இயேசு தாமே தாவீதின் வேராயிருக்கிறார் என வெளி. *5 : 5* லும் *22 : 16* லும் உள்ளபடியே, கிறிஸ்துவின் வேர் நமக்குள்ளேயும் நமது வேர்

கிறிஸ்துவுக்குள்ளேயும் இறங்கியிருந்தால் பலகை (நாம்) விழாது. கிறிஸ்துவாகிய வேர் அவரது கிருபையின் ஈவுகளாக நமக்குள்ளே இறங்குகிறது.

**10. வெள்ளிப் பாதங்கள் மேல் நிற்கும் பலகை :** வெள்ளி மீட்பின் கிரயத்துக்கும் வேத வசனத்திற்கும் ஒப்பனையே. இவ்விரண்டும் இயேசு கிறிஸ்துவே ஆவார். எனவே, நாம் நிற்கும் வெள்ளிப் பாதங்கள் இயேசுவே. இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் உறுதியின் மேல் நிற்கும் போது பலகை விழுவதில்லை. இந்தப் வெள்ளிப் பாதங்கள் பலகைகளின் அஸ்திபாரங்களாகும். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு அதின்படிச் செய்கிறவன் கன்மலையின் மேல் அஸ்திபாரம் போட்டவனைப் போலிருப்பான். அந்தக் கன்மலை கிறிஸ்துவே. மத். *7 : 24.*

வேத வசனங்களாகிய உபதேசங்களே, சபையின் அஸ்திபாரம் எபி. *6 : 1, 2.* உபதேசங்கள் இயேசுவினுடையதாகையால் உபதேசமாகிய அஸ்திபாரமும் இயேசுவே. சுருங்கக்கூறின் இயேசுவே விசுவாசியின் அஸ்திபாரம். மண் குகையில் ஏழுதரம் உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாகிய *(சங் 12 : 6)* வேதவசனமாகிய வெள்ளிப் பாதங்கள் மேலே ஒரு விசுவாசி நிற்கிறான். அவன் ஒரு போதும் விழுவதில்லை.

**11. நிமிர்ந்து நிற்கும் பலகை : யாத் 26 : 15.** பலகை வளைந்து குனியாமல் நிமிர்ந்து நிற்க வேண்டுமாம். அதற்குத்தக்க பெரிய மரங்களைத் தெரிந்தெடுத்தனர். சீத்திம் மரம் சன்னல் பின்னலான காடுகளில் வளருவதால் மரத்தோடு மரம் பிணைந்து நிற்கும். அடிமரத்தை மட்டும் வெட்டினால் விழாது. கிளைகளை கழித்த பின்னரே மரம் விழும். அப்படியே நாமும் புறஜாதி வழக்கங்களின் படி உலகத்தில் பிணைந்து கிடந்தோம். தேவ வசனங்கள் நமது பிணையல்களை வெட்டி பாவிகளிலிருந்தும், பாவங்களிலிருந்தும் பிரித்தெடுத்தது. ஒரு விசுவாசி ஆக்கியது. இனி அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. *2* கொரி *6 : 16.* பலகைகளின் நிமிர்ந்து நிற்கும் தன்மை பல அனுபவங்களின் பிரதிபலிப்பு ஆகும்.

1. பின்னாக வளைந்தால் பெருமையும் முன்னாக வளைந்தால் கூனுமாகும். தேவன் இரண்டினையும் எதிர்கிறார். பெருமையுள்ளவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும். தானி. *4 : 37.* அவ்வாறே பொறாமை, கபடம், முதலியவற்றுக்கு கூன் அடையாம். கூனன் தேவசன்னிதியில் பிரவேசிக்கக் கூடாதென ஒரு பிரமாணமும் பழைய ஏற்பாட்டில் இருந்தது. லேவி. *21 : 22.* புதிய ஏற்பாட்டு சபைக்கு உடலின் வளைவல்ல உள்ளத்தின் வளைவும் கூனுமே ஏற்காதது.
2. அது கிறிஸ்துவ்க்காக வெட்கப்படாதது. வெட்கம் தலை குனியச் செய்யும். நிமிர்ந்து நிற்காது. லூக்கா *9 : 26,* சங். *1 : 5, 34 : 5, 71 : 1,*

22 : 4,5. பாவம் வெட்கமடையச் செய்யும்.

3. உபதகிரவத்தில் தலை குனியாமல், பயப்படாமல் நிமிர்ந்து நிற்கும். ஸ்தேவான் அப்படியே இருந்தார். அப். 7 : 55, 8 : 1-4, 2 கொரி. 6 : 9,10. ஆசரிப்புக் கூடாரபலகையும் வனாந்திரக் காற்றுகளால் வளையாமல் நிமிர்ந்து நின்றன. சோதனைகளில் தோற்காத அனுபவம். 2 கொரி. 4 : 8 10.

4. எல்லாவற்றையும் எல்லாரையும் தாங்குகின்ற அன்பின் அனுபவம். அது தலைகுனியாது. 1 கொரி. 13 : 7.

5. பெலனுள்ளது. வளையாதது. எபி. 12 : 12,13, அப். 1 : 8.

6. நேர்மையும் உண்மையும் நிமிர்ந்து நிற்கும். சங். 101 : 2. கோணலானதல்ல. 125 : 5. கோணலானது நிமிர்ந்து நின்றாலும் அழகல்ல.

7. நியாயத்தில் தலை தாழாது. சங் 1 : 5. இயேசு உலக மகாத்துமாக்கள் முன்னில் தலை தாழ்த்தாமல் நின்றார். "தலை சாய்த்திடவும் ஸ்தலமில்லாதவர் உலகமகான்கள் முன்னிலும் தலை தாழ்த்தாமல், நிலை தவறாமல் நலமாய் வாழ்ந்தார் அற்புதம்."

8. அது நிமிர்ந்தது மட்டுமல்ல நிற்கவும் செய்கிறது. அசையாது. ஓடாது. இது விசுவாசத்தின் அசையாத அனுபவமாகும். 1 தெச. 3 : 2. தேமா ஓடிப்போனான். 2 தீமோ. 4 : 10. யூதாஸ் 30 காசுகளுக்காக ஓடிப்போனான். ஏசா கூழுக்காக. நீங்கள் எதற்காகவாயினும்....?

9. அது பிசாசுக்கு எதிரே நிமிர்ந்து நிற்கும் பலகை. யாக். 4 : 7. சர்வாயுத வர்க்கத்தைப் பிடித்துக் கொண்டவர்களாய் நில்லுங்கள். எபே. 6 : 13-16. விசுவாசிக்கிறவன் பதறான். ஏசாயா 28 : 16.

10. சபையில் நிற்கும் பலகை. ஆம் அது ஆசரிப்புக் கூடாரமாகிய சபையில் நின்றது. அப்படியே விசுவாசி புதிய ஏற்பாட்டு சபையில் நிலைத்திருக்க வேண்டும். இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்த்தார். அப். 2 : 47. இயேசு தாமே சபையை ஸ்தாபித்தார். மத். 16 : 18. பரிசுத்த ஆவியானவர் சபையிலே கண்காணிகளை வைத்தார். அப். 20 : 28. இயேசு சபையாகிய குத்துவிளக்கு களின் மத்தியிலே உலாவுகிறார். வெளி. 1 : 13. நிருபங்கள் சபைகளுக்கும் சபைகளின் ஊழியர்களுக்குமே எழுதப்பட்டது. சபை வேண்டாம். ஊழியம் போதுமென்கிற ஒரு போதை உபதேசம் பரவி வருவதற்கு தப்பித்துக் கொள்ளுங்கள். நீங்கள் சபையிலே நிற்கும் பலகையா?

11. பிசாசு பிடித்தவள் கூனியாக இருந்தாள். லூக்கா 13 : 10-13. இந்தப் பொன் பொதிந்த பலகைகள் நிமிர்ந்து நிற்பதால் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையுள்ளது.

12. நுகத்தடியால் கூனிப் போனவர்களைப் பற்றி லேவி. 26 : 13 ல் காண்க. இது எகிப்தின் பாவபார நுகத்துக்கு அடையாளம். தேவன்

அதை முறித்தார். விடுதலையாக்கினார். அந்த விடுதலைக்கு அடையாளமாக இந்த பலகைகள் நிமிர்ந்து நிற்கின்றன. ஒரு மெய்யான கிறிஸ்தவன் பாவ நுகத்தடிக்கு நீங்க லாயிருப்பான். பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். *1* யோவான் *3 : 8*.

**பரிசுத்த ஸ்தலத்துப் பணிமுட்டுகள்**

ஆசரிப்புக் கூடாரத்தின் முப்பகுதிகளிலும் அந்தந்த இடத்துப் பணிவிடைகளை நிறைவேற்றும்படியான பணிமுட்டுகள் இருந்தன. பிராகாரத்தில் பலிபீடமும் தொட்டியும் மகாபரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டியும் கிருபாசனமும் ஆக இரண்டு பணிமுட்டுகள் வீதம் இருந்தன. நடுப்பகுதியாகிய பரிசுத்த ஸ்தலத்திலோவென்றால் மூன்று பணிமுட்டுகள் இருந்தன. எண்ணிக்கையில் அதிகமாயிருப்பதே இவ்விடத்துப் பணிவிடை மிகுதி எனத் தெரிவிக்கிறது. இங்கே தினமும் காலையிலும் மாலையிலும் ஆசாரியர்கள் தூபபீடத்தில் தூபவர்க்கமிட்டு, குத்துவிளக்கில் எண்ணெய் வார்த்து எரியவிட வேண்டும். ஓய்வுநாள் தோறும் மேஜையில் புது அப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒரு விசேடமென்னவென்றால் பிராகாரத்தில் உதவிக்கு ஆசாரியரும் லேவியருமுண்டு. இங்கேயோ ஆசாரியன் தனிமையாக இப்பணிக்களைச் செய்ய வேண்டும். ஆம் ஊழியத்தில் பலர் சேர்ந்து செய்யும் பணிகள் உண்டு. ஊழியர் தனிமையாகச் செய்ய வேண்டிய பணிகளும் உண்டு. தாம் செய்ய வேண்டியதை வேறொருவர் செய்வது தேவசித்தமல்ல. விசேஷமாக தேவ ஊழியர் தமக்கு நியமிக்கப்பட்ட பணிகளாகிய ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் பிரசங்கிப்பதிலும் உறுதியாய் தரித்திருக்க வேண்டும். அப். *6 : 4*.

## அதிகாரம் 23


## பரிசுத்த ஸ்தலத்துப் பணிமுட்டுகள்

## சமூகத்து அப்ப மேஜை

யாத் *25 : 23, 30*, லேவி *24 : 5-9*.

**1. மனிதனும் தேவனும் :**

ஆசரிப்புக் கூடாரத்து எல்லா பணிமுட்டுகளைப் பார்க்கிலும் மேஜை ஒன்று மட்டுமே வீட்டு உபயோகக் கருவி போல உள்ளது. இது ஆய்வு கூடத்தின் பெரிய மேஜை அல்ல, தொழிலகத்தின் நிர்வாக மேஜையுமல்ல. எழுது மேஜையும் அல்ல. இது ஒரு தேவ சமூகத்து விருந்து மேஜை. அது சத்துருக்களுக்கு முன்பாக தேவன் ஆயத்தமாக்கின பந்தி மேஜை. சங். *23 : 5*. புதிய ஏற்பாட்டு சபையின் திருவிருந்து மேஜை.



மற்ற அநேக பொருட்களைப் போல இதுவும் சீத்திம் மரத்தினால் செய்யப் பட்டு பசும்பொன் தகட்டால் மூடப்பட்டது. இதன் மரம் இயேசு கிறிஸ்துவின் மனித அவதாரத்தையும் பசும் பொன் அவரது தெய்வீகத்தையும் காட்டியது. எனவே, இயேசுவை பூரணரான மனிதராகவும் பூரண தேவனாகவும் இந்த மேஜை வெளிப்படுத்தியது. ஆமென். மனிதராக கானாவூர் கலியாணத்துக்குப் போனார். தேவனாக தண்ணீரை திராட்சரசமாக மாற்றினார். யோவான் *2 : 1-10*. மனிதனாக படகில் பயணமானார். தேவனாக காற்றையும் கடலையும் அதட்டி அமைதிப்படுத் தினார். மாற்கு *4 : 39*. மனிதனாக லாசருவின் மரணத்தில் கண்ணீர் விட்டார். தேவன் என்ற முறையில் லாசருவை உயிரோடெழுப்பினார். யோவான் *11 : 43, 44*. மனிதனாக நமது பாடுகளை ஏற்றுக்கொண்டு சிலுவையில் மரித்தார். தேவனாக மூன்றாம்நாள் உயிரோடெழுந்தார். லூக்கா *24 : 6*. இவைகள் இயேசு கிறிஸ்துவை தேவனும் மனிதனுமாக்கிவிட்டது. அதையே சமூகத்து அப்ப மேஜை நமக்குக் காட்டியது. ஆம் முதல் வருகையில் மனிதனாக வந்தார். இரண்டாம் வருகையில் இராஜாவும் தேவனுமாக வருவார். அவருக்கே மகிமை.

## 2. நான்கு பதவிகளில் இயேசு :

இந்த மேஜை நான்கு கால்களுள்ளவை. மேஜை கிறிஸ்து இயேசுவுக்கு அடையாளமானதால் நான்கு கால்கள் இயேசு கிறிஸ்துவின் நான்கு வகை ஊழியங்களுக்கு ஒப்பனையாக உள்ளது.

### (அ) மனிதன்:

இயேசு நம்மைப் போல பாடுள்ளவராய் நம்மைப் போல சோதிக்கப்பட்டவராய் மனிதரின் சுகதுக்கங்களில் பங்கு பெற்றவராய் வாழ்ந்தார். பசியும் பிணியும் உள்ளவர்களுக்கு மனதுருகினார். நன்மை செய்தார். அவர் பாவமற்ற பூரண மனிதர். மாம்சத்தில் வந்த இயேசுவை ஏற்காதது அந்தி கிறிஸ்துவின் ஆவியாகும். *1* யோவான் *4 : 2, 3.*

**(ஆ) தீர்க்கதரிசி :**

கர்த்தராகிய இயேசுவின் சாட்சியே தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது. வெளி. *19 : 10*. அவர் தமக்கு வரப்போகும் சிலுவைப் பாடுகளை முன்னறிவித்தார்.

1. திராட்சத்தோட்டத்தின் உவமையில் ஒரே பேறான குமாரனை கொல்லுவர் என வெளிப்படுத்தினார். மத். *21 : 38-45*.

2. உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் யோவான் *13 : 21*. காட்டிக் கொடுக்கிறவனுக்கு ஐயோ என்றபடியே அவன் நான்று கொண்டு செத்தான். லூக்கா *22 : 2*. உங்களில் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார். யோவான் *6 : 70*.

3. மூன்று தரம் மறுதலிப்பாய் என்றபடியே பேதுரு மறுதலித்தார். மத். *26 : 75*. மேய்ப்பனை வெட்டும் போது ஆடுகள் சிதறும் என்றார். மத். *26 : 31*. நீங்கள் என்னைத் தனியே விட்டுவிடும் காலம் வரும் என்றபடியே யோவான் *16 : 32* எல்லாரும் ஓடிப்போயினர். மத். *26 : 56*.

4. இதோ எருசலேமுக்குப் போகிறோம். பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்கப்படுவார். ஆசாரியர் தம்மை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள். மாற்கு *10 : 33*. யூதர் தன்னை புறதேசத்தாரிடம் ஒப்புக் கொடுப்பார் என்பது போல புறஜாதிப் போர்ச் சேவகரிடம் ஒப்படைத்தனர். மத். *20 : 19*.

5. பரியாசமும் நிந்தையும் அடைவார், துப்பப்படுவார், வாரினால் அடிப்பார்கள், சிலுவையில் அறைவார்கள், கொலைச் செய்வார்கள். லூக்கா *18 : 32, 33*, மத். *20: 19*.

6. ஒரு ஸ்திரீ தைலம் பூசியதை அடக்கத்திற்கு ஒப்பனை என்றார். மத். *26 : 12*. மூன்று நாள் பூமியின் இதயத்தில் இருப்பேன் என்றார். மத். *12 : 40*.

7. மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்திருப்பார் என்றும், உயிர்த்தெழுந்தபின்பு கலிலேயாவுக்குப் போவேன் என்றும் சொன்னார். மத். *20 : 19, 26 : 32*.

8. தாம் மறுபடியும் வரப்போவதாகவும் நம்மை அவரிடம் சேர்த்துக் கொள்வதாகவும் முன்னுரைத்தார். யோவான் *14 : 1-3*.

9. தாம் பரமேறிச் சென்ற பின்பு பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவேன் என்றது போலவே பெந்தெகோஸ்தே நாளன்று அனுப்பினார். யோவான் *16 : 7*, அப். *2 : 1-4*.

10. சபையைக் கட்டுவேன் என்றும் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்றும் இயேசு கூறியதுபோல் இன்றும் உலகம் தேவ இராஜ்யத்தை ஜெயிக்கவில்லை. மத். *16 : 18*.

11. அவர் தேவாலயத்தின் முடிவை முன்னறிவித்தது போல

சம்பவித்தது. மத். *24 : 1, 2.* கடைசிக்கால சம்பவங்களை முன்னுரைத்தது போல இன்று நாம் காண்கிறோம். மத். *24 : 3 20.* வெளிப்படுத்தலாகமம் முழுவதுமே இயேசு தந்தருளிய வெளிப்பாடுகளாகும். வெளி *4 : 22.* மோசே இவரை தீர்க்கதரிசி என்றார். உபா. *18 : 18,* அப். *3 : 22.*

**(இ) ஆசாரியன்:**

ஆசாரிய வகுப்பில் மூன்று நிலைகளுண்டு. *1.* லேவியன் *2.* ஆசாரியன் *3.* பிரதான ஆசாரியன். இயேசு கிறிஸ்து இம்மூன்று நிலையிலும் வளர்ந்து இன்று பிரதான ஆசாரியராயிருக்கிறார். எபி. *3 : 1.* அவர் பலியும் பலி செலுத் தியவருமானதால் ஆசாரியன். அவர் ஜனத்திற்காக பரிந்து பேசுவதால் பிரதான ஆசாரியன். எபி. *7 : 26.*

**(ஈ) இராஜா :**

கிறிஸ்துவாகிய மேஜையின் நான்காவது கால் அவரை ராஜா என நிரூபிக்கிறது. அவரது பிறப்பில் இராஜா எங்கே எனப்பட்டது. மத். *2 : 2.* தாவீதின் அரச மரபில் பிறந்தவர். மத். *1 : 1.* ஒருநாள் இயேசுவைப் பிடித்து இராஜாவாக்க முயற்சி நடந்தது. யோவான் *6 : 15.* அவர் மரிக்கும் போது ராஜா என்று எழுதி சிலுவையின் மேல் வைக்கப்பட்டது. மத் *27 : 37.* இனி அவர் வருவதும் இராஜாவாகவே. வெளி. *19 : 16.* அவர் இராஜாவாக அரசாளுவார். இவ்வாறு மேஜையின் 4 கால்கள் இயேசு கிறிஸ்துவின் நான்கு வகை ஊழியங்களுக்கு அருமையான சித்திரமாகும்.

**3. நான்கு சுவிசேஷங்களும் நான்கு ஜீவன்களும் :**

மேலும் மேஜையின் கால்கள் நான்கு வகை சுவிசேஷங்களுக்கும் ஒப்பனையாகும். பரலோக சிங்காசனத்தண்டை உள்ள நான்கு ஜீவன்களுடைய முகத்தோற்றங்களும் கூட இந்த நான்கு சுவிசேஷங்களுக்கும் ஒப்பனையாக உள்ளது.

**(அ) மத்தேயு சுவிசேஷம் :** சிங்கமுகம். இவர் இயேசுவை ஒரு ராஜா என அதிகமாக சித்தரிக்கிறார். மத். *1 : 1, 2 : 2, 18 : 23, 27 : 37.* இயேசுவின் இராஜகுல வம்ச வரலாற்றை *1 : 1-16* - ல் கூறியுள்ளார்.

**(ஆ) மாற்கு சுவிசேஷம் :** காளைமுகம். இயேசு ஒரு காளையைப்போல சேவை செய்தார். உடனுக்குடன் செய்தார். உடனே என்ற வார்த்தையை மாற்கு சுவிசேஷத்தில் அடிக்கடிக் காணலாம். *1 : 20, 21, 29, 44.* இயேசு இருட்டோடே எழுந்து ஜெபிப்பதும் மாற்கு *1 : 35,* வீட்டிலும் *2 : 1,* வனாந்திரத்திலும் கடற்கரையிலும் பிரசங்கிப்பதும், பிசாசு பிடித்த ஒருவனை விடுவிக்க இரவெல்லாம் பயணம் செய்ததும் *4 : 35, 5 : 21,* கடினமான சிலுவைப்பாடுகளும் ஒரு காளை போன்ற உழைப்பை (சேவை) யல்லவோ. காட்டுகிறது.

**(இ) லூக்கா சுவிசேஷம் :** மனிதமுகம். இயேசுவை ஒரு பூரண மனிதனாக விளக்குவது லூக்கா சுவிசேஷம். இயேசுவின் மனிதப்பிறப்பை அதிக விவரங்களுடன் விளக்க முதல் 2 அதிகாரங்களில் *132*

வசனங்களைப் பயன்படுத்தியுள்ளார். மத்தேயு இயேசுவின் ஆபிரகாம் முதல் உள்ள ராஜகுல வம்சாவழியை மட்டும் கூறுகையில், லூக்கா அதைத்தாண்டி ஆதாம் வரையிலான இயேசுவின் மனித வரலாற்றைக் கூறியுள்ளார். லூக்கா *3 : 23-38*. மனிதனின் பின்மாற்றத்தையும் திரும்பிவருதலையும் சித்தரிக்கும் உலகப் பிரசித்தி பெற்ற கெட்ட குமாரனின் உவமையை லூக்கா மட்டுமே எடுத்துக் காட்டியுள்ளார். *15 : 17-24*. சம்பிரமமாய் வாழ்கிற மனிதரின் பரிதாப முடிவைச் சுட்டிக்காட்ட ஐசுவரியவானின் நிகழ்ச்சியை இயேசு கூறியது இந்நூலிலேதான். *16 : 19-31*. அதைவிட விசேடமானதொன்றாகும் நல்ல சமாரியனின் மெய்சிலிர்க்கும் விந்தையான உவமை. காயப்பட்ட மனுக்குலத்தையும் அதை மீட்கவந்த, மனிதனாகிய, இயேசு யார் என்பதையும் லூக்கா மட்டுமே குறித்துள்ளார். *10 : 29-37*. மனுஷகுமாரன் என்ற சொல் லூக்காவில் *23* முறை வருவதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

**(ஈ) யோவான் சுவிசேஷம் :** கழுகு முகம். உயரத்தில் வாழ்கின்ற கழுகு உன்னதங்களில் உயர்த்தப்பட்ட இயேசுவை தேவ குமாரனென்று விளக்கிய வண்ணம் உள்ளது.. யோவான் இயேசுவை தேவகுமாரன் என அடிக்கடிக் கூறுகிறார். பதினொன்று முறை அவ்வாறு கூறியுள்ளார். மட்டுமல்லாது தாம் இச்சுவிசேஷத்தை எழுதியதின் நோக்கமே இயேசுவை தேவகுமாரனென்று நாம் அறியும்படியாகவே எனத் தெரிவித்தும் உள்ளார். *20 : 31*. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

**1. மேஜையின் அளவுகள் :** நீளம் *2* முழம் *(3அடி)* அகலம் ஒரு முழம் *(1 $^1/_2$அடி)* யாத் *25 : 23*. இது சாதாரணமாக ஒரு சிறிய அளவுள்ள மேஜை ஆகும். இயேசு கிறிஸ்து உலகத்தை இரட்சிக்க பரலோக மகிமைகளைத் துறந்து சிறியவரானார் என்பதற்கு இது அடையாளம். அவர் தம்மைத் தாழ்த்தினார். பிலி. *2 : 6-8*. நாம் சிறுக வேண்டும் என்றார் யோவான் *3 : 30*. அதன் உயரம் *1 $^1/_2$* முழம் மட்டுமே. இது பலி பீடத்தின் உயரத்தின் பாதியாகும். யாத். *27 : 2*. எனவே இது ஒரு குட்டி மேஜை ஆகும். ஆன்மீக வாழ்வில் அத்தனை உயரமாயிருந்த இயேசு தனது சரீர வாழ்வில் அத்தனை எளிமையாக இருந்தார். நாமும் பெருமைகளைக் களைந்து இயேசுவைப் போல எளிமையாக வாழுவோமாக. *1. தீமோ 2 : 9-11*.

**2. தேவைக்கு ஏற்ற அளவுள்ளது :** மேலும் சமூகத்து அப்பங்களை வைப்பதற்குத் தேவையான சிறிய அளவில் மேஜை உண்டாக்கப்பட்டது. தேவைக்கு மேல் பெரியதாகச் செய்தால் வேறு பொருட்கள் அதில் இடம் பிடிக்கும். வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்படாமலிருக்க அது சிறியதாய் செய்யப்பட்டது. இயேசுவும் தாம் அனுப்பப்பட்ட பணியை முடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார். அதைச் செய்து முடிப்பதே தனது போஜனம் என்றார். யோவான் *4 : 34*. ஒருமுறை அவரை ராஜாவாக்க மக்கள் முயற்சித்தபோது அவர் இணங்கவில்லை. யோவான் *6 : 15*. நாமும் நம்மை

அழைத்தவருடைய வேலையைச் செய்ய வேண்டும். தனக்கடாத வழக்கில் தலை யிடுவது நாயைக் காதைப் பிடித்து இழுக்கிறது போல என்றார் ஞானி. நீதி. *26 : 17.* வீண்பேச்சு, வீண்வேலை, வீண்ஆசை யாவையும் கைவிட்டு தேவன் நம்மை அனுப்பின வேலையைச் செய்வோமாக.

**3. பொன் திரணையுள்ள மேஜை** யாத். *25 : 24.* மேஜையைச் சுற்றிலும் ஒரு திரணை இருக்க வேண்டும். திரணை என்பது உருண்டை வடிவில் வேலைப்பாடுள்ள ஒரு விளிம்பு ஆகும். அது சுத்தப் பொன் ஆகும். *25 : 24.* இந்த பொன்திரணை பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை யும் வழிநடத்துதலையும் பாதுகாவலையும் குறிக்கும். ஞானஸ்நானம் பெற்று கரையேறின உடனே ஆவியானவர் இயேசுவின் மேல் இறங்கினார். லூக்கா*3 : 21, 22.* அதுமுதல் இயேசு பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டார். மத் *4 : 1.* இயேசுவைக் கல்லெறியவும் கேள்வி கேட்டு மடக்கவும் வந்தபோது இந்த பாதுகாவல் அவருக்கிருந் தது. ஆவியினாலே பிசாசுகளைத் துரத்தினார். அப். *10 : 38.* அற்புதங் களைச் செய்தார். மத். *4 : 23, 24.* மேலும் பொன்திரணையானது மேஜை யைச் சுற்றிலும் இருந்தது போல ஆவியானவரின் பிரசன்னம் அவரைச் சுற்றி எந்நேரமும் இருந்தது. நாமும் ஆவியானவரின் சுற்றுப் பாதுகாப்பில் இருப்போமாக. எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகி றார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.ரோமர் *8: 14.*

**4. சட்டம்** யாத். *25 : 25.* நான்கு விரற்கடையான ஒரு சட்டத்தையும் சீத்திம் மரத்தால் செய்து பொன் பொதிந்து பொருத்த வேண்டும். இதன் நோக்கம் மேலேவைக்கப்பட்ட அப்பம் விழாதபடி காப்பதே ஆகும். மேஜை இயேசுவையும் அப்பம் ஜீவ வார்த்தைகளையும் குறிக்கிறது. சட்டம் என்பதை வேறுபட்ட பரிசுத்த வாழ்க் கைக்கு ஒப்பனையாகக் கொள்ளலாம். ஜீவ வசனங்களைக் காக்க பரிசுத்தமான வேறுபட்ட வாழ்வு தேவை. பாவம் அணுகாதபடி இயேசு பாவிகளுக்கு விலகினார். (எபி. *7 : 26)* என்பதையும் சுற்றுச் சட்டம் தெரிவிக்கிறது.

இந்தச் சட்டத்தை வேத உபதேச சட்டமாகவும் கொள்ளலாம். ரோமர் *6 : 17.* இயேசு கிறிஸ்து உபதேசிக்கிறவராகவும் உபதேசத்தை கைக்கொண்டவ ராகவும் திகழ்ந்தார். சத்துருவை நேசி என்றார். மத். *5 : 44.* யூதாஸ் காட்டிக் கொடுக்கும் வேளையிலும் சிநேகிதனே என்றார். மத். *26 : 50.* ஏழு எழுபது தரம் மன்னிக்கச் சொன்னார். சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தார். லூக்கா *23 : 34.* நாமும் உபதேசிக்கவும் அதின்படி ஜீவிக்கவும் செய்வோமாக.

**5. பொன் திரணையுள்ள சட்டம் :** மேஜையைச் சுற்றிலும் ஒரு பொன் திரணை இருந்ததுமல்லாமல் சட்டத்தின் மேலே உயரமாக ஒரு பொன் திரணையும் வேண்டும். யாத். *25 : 25.* இது மேஜையின் உயர்ந்த இடமாகும. இது பிதாவாகிய தேவன் உன்னதராக இயேசுவோடிருந்தார் என்பதைக் காட்டும். ஞானஸ்நானத்தின் போது இவரென் நேசகுமாரர் என்றார். ஜெபிக்கும் போது பிதா பதிலளித்தார். யோவான் *12 : 28*

நான் தனித்திரேன். பிதா என்னோடு இருக்கிறார் என்றார். யோவான் *8 : 16*. மரிக்கும்போது பிதாவின் கையிலே ஆவியை ஒப்புக் கொடுத்தார். பிதாவின் சித்தத்தையே எப்போதும் செய்தார். யோவான் *4 : 34*. நாமும் அவ்வாறு மேஜையின் மேல் உள்ள சட்டத்தின் மேல் உயரமான பகுதியில் சுற்றிலும் திகழும் தேவ பிரசன்னத்திலே வாழுவோமாக. இவ்வாறு மேஜையாகிய கிறிஸ்து வும் மேஜையைச் சுற்றியுள்ள பொன் திரணையாகிய ஆவியானவரின் நடத்துதலும் சட்டத்தின் மேலுள்ள பொன் திரணையாகிய பிதாவானவரின் சித்தமும் யாவரிலும் விளங்குவதாக.

**6. பாதங்கள் இல்லாத மேஜை :** மற்ற அநேக பொருட்கள் பாதங்கள் மேல் நிற்கையில் மேஜை பாதங்கள் மேல் நிற்கவில்லை. இயேசு கிறிஸ்து தாமே நேரடியாக உலகத்தில் நடமாடினார், வாழ்ந்தார். அவர் தாமாகவே நிற்கவும் தம்மைக் காக்கவும் வல்லமையுள்ளவரான தால் அவரை வெளிப்படுத்துகிற மேஜைக்கு பாதங்கள் தேவைஇல்லை. இதையும் தேவன் கருத்துடன் அமைத்திருக்கிறார்.

## அதிகாரம் 24

# சமூகத்து அப்பங்கள்

மேஜையை உண்டாக்கியதின் நோக்கம் அப்பங்களை அடுக்கிப் பாதுகாப்பாக வைப்பதே. மேஜை மேல் அப்பம் இல்லாத நிலைமையை யோசிக்கவே இயலவில்லை. உலகத்தின் ஜீவனுக்காக இயேசு கொண்டு வந்த ஜீவ வசனங்களே இந்த அப்பங்களில் பிரதிபலிக்கிறது. மனிதன் தானிய அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். மத். *4 : 4*. ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் பிழைப்பான். மத். *8 : 8*. அது ஜீவவார்த்தை அப். *5 : 20*. அது ஜீவனும் வல்லமை யுமுள்ளது. எபி. *4 : 12*. அது ஆதிமுதலிருந்த ஜீவ வார்த்தை. *1* யோவான் *1:1*. அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை. வெளி. *19 : 13*. அது ஆதியிலே இருந்த வார்த்தை. யோவான் *1:1*. அது தேவனிடத்திலிருந்த வார்த்தை யோவான் *1 : 1*. அது தேவனாயிருந்த வார்த்தை யோவான் *1:1*. அந்த வார்த்தை மாம்சமாகியது. அல்லது மனிதனாகியது. மனிதனாகிவிட்ட போது ஜீவ வார்த்தைக்கு உண்டான பெயராகும். ஜீவ அப்பம். யோவான் *6 : 48*.

### வேதத்தில் இந்த அப்பத்தின் வெளிப்பாடுகள் :

1. முதன் முதலில் மெல்கிசேதேக்கு என்ற அரசனும் ஆசாரியனு மானவன் ஆபிரகாமுக்களித்த அப்பத்தில் இயேசு மறைந்திருந்தார். ஆதி. *14 : 18*.
2. பஸ்காவில் புசிக்கப்பட்ட புளிப்பில்லா (பாவமில்லா) அப்பத்தில் இருந்தார். யாத். *12 : 8*.
3. வனாந்திர யாத்திரையில் பொழியப்பட்ட மன்னா இயேசுவின்

பிரதிபலிப்பு ஆகும். யாத் *16 : 4*. அதை வானத்தின் அப்பம் என்றும் தூதர்களின் அப்பம் என்றும் வேதம் பெயரிட்டுள்ளது. சங். *78 : 24, 25.*

4. ஆசரிப்புக் கூடாரத்து சமூகத்து அப்பங்களும் அவருக்கு ஒப்பனை.
5. மீதியானியரின் பாளயத்தைப் புரட்டித்தள்ளிய அப்பத்தில் இயேசு இராஜ்ய, சமுதாய, மார்க்க, வழக்கங்களைப் புரட்டுபவராக வெளிப்பட்டார். நியா. *7 : 13, 14*. இனி அவர் உலக அரசியலையும் புரட்டித்தள்ளுகிறவராக வருவார். தானி. *2 : 44.*
6. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சரீரத்திலும் வார்த்தையிலும் வெளிப்பட்டது. யோவான் *6 : 48.*
7. திருவிருந்தின் அப்பத்தில் அவர் அடையாளமாக அமைந்திருக்கிறார். மத். *26 : 26. 1* கொரி. *11 : 24*. இயேசுவின் சரீரம், நமக்காக கொடுக்கப்பட்ட அப்பமாகும். யோவா *6 : 48, 53 56.*

**அப்பங்களின் எண்ணிக்கை :**

மேஜை மேலுள்ள அப்பங்கள் *12* ஆகும். தேவன் *12* என்ற எண்ணின் படி அநேக காரியங்களைச் செய்துள்ளார்.

1. யாக்கோபின் பிள்ளைகளும் கோத்திரங்களும் *12*. ஆதி. *35 : 22.*
2. ஏலிமில் இருந்த நீரூற்றுகள் *12*. யாத். *15 : 27.*
3. இஸ்ரவேல், கோத்திரக் கணக்குப்படி சீனாய் மலையடியில் *12* தூண்களை மோசே நிறுத்தினார். யாத். *24 : 4.*
4. கோத்திரத்தின் படி ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் *12* முத்துக்கள் வீதம் இருந்தன. யாத். *28 : 21, 39 : 4.*
5. சமூகத்து அப்பங்கள் *12* லேவி. *24 : 5.*
6. கானானை ஒற்றுப் பார்த்தவர்கள் *12*. யோசுவா *3 : 12, 4 : 2.*
7. யோர்தானில் எடுத்த கல் *12*. யோசுவா *4 : 3, 8, 9, 20.*
8. எலியா கட்டிய பலிபீடத்துக் கற்கள் *12. 1* ராஜா. *18 : 31.*

**புதிய ஏற்பாட்டிலும் தேவன் 12 என்ற எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.**

1. இயேசு *12* வயதில் தேவாலயத்தில் இருந்தார். லூக்கா *2 : 42.*
2. அப்போஸ்தலர் *12* பேர். மத். *10 : 2*, லூக்கா *6 : 13.*
3. மீதியான அப்பம் *12* கூடைகள். மத். *14 : 20.*
4. சீஷர்களுக்கு *12* சிங்காசனங்கள். லூக்கா *22 : 30.*
5. புதிய எருசலேமுக்கு *12* வாசல். வெளி. *21 : 12.*
6. புதிய எருசலேமுக்கு *12* அஸ்திபாரம். வெளி. *21 : 14.*
7. புதிய எருசலேமுக்கு *12* முத்து வாசல். வெளி. *21 : 21.*
8. புதிய எருசலேமுக்கு *12* வித கனிதரும் விருட்சம் வெளி. *22 : 2.*

**ஆசரிப்புக் கூடாரத்திலும் சில 12களைக் காணலாம்.**

1. பலகைகள் *48* என்பது *12*ன் *4* மடங்காகும்.
2. பிராகாரத் தூண்கள் *60* என்பது *12*ன் *5* மடங்கு ஆகும்.
3. மேஜையின் அப்பங்கள் *12* என வெளிப்படையாக உள்ளது.

4. பிராகாரத்தின் சுற்றளவு 100+50+100+50+=300 என்பது 12ன் 25 மடங்கு ஆகும்.

5. ஒரு பலகைக்கு 15 சதுர முழம் வீதம் 48 பலகைக்கு 720 சதுர முழமாகும். இது 12 ன் 60 மடங்காகும்.

6. ஆட்டுமயிர் மூடுதிரையின் மொத்தம் பரப்பளவு 1320 சதுர முழமாகும். (30 x 4 x 11) இது 12 ன் 110 மடங்காகும்.

இவ்வாறு 12 அப்பங்கள் என்பது இஸ்ரவேலின் 12 கோத்திரங் களுக்கும் ஏற்றதோர் பாடமாகும். 12 கோத்திரங்களையும் போஷிக்கிற வராக ஆசரிப்புக் கூடாரத்தில் இயேசு மறைவாயிருந்தார். ஞானக்கன் மலையாக அவர்களோடு சென்றார். மோசே அடித்த கன்மலையும் தாகம் தீர்க்கும் நதியாகப் புறப்பட்டவரும் அவரே. 1 கொரி. 10 : 4. எண் 20 : 11. அன்று மறைவாக இருந்த அப்பம் மாம்சத்தில் வெளிப்பட்டது. அற்புத அடையாளங்களைச் செய்தது. அப்போதும் மகிமையின் கர்த்தரை அவர்கள் அறியவில்லை. 1 கொரி. 2 : 8. அன்றும் அறியவில்லை. இன்னும் அறியவில்லை. ஆனால் அவர் இராஜாவாக வரும்போது, தாங்கள் குத்தினவரை அறிவார்கள், பார்த்து புலம்புவார்கள். அவர்கள் கோத்திரம் .கோத்திரமாகவும் குடும்பம் குடும்புமாகவும் புலம்பப் போவதை சகரியா 12 : 10 14 பகுதியில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இஸ்ரவேல் கோத்திரங்கள் 12 ம் அவரை அறியத் தவறின போது அவர் புறஜாதிகளுக்கு வெளிப்பட்டார். இந்த ஜீவ அப்பத்துக்குப் பங்காளிகளும் ஜீவனுள்ள சாட்சிகளுமாகத் திரளாகப் புறஜாதிகள் சபைக்குள் வந்து விட்டனர். அல்லேலூயா. ஆம்! அவர் இஸ்ரவேலுக்கு மட்டுமல்ல உலகத்துக்கே ஜீவ போஜனமானார் என்று யோவான் 6 : 32, 33 ல் காண்க. இந்த ஜீவ அப்பமாகிய இயேசுவை இன்று திருவிருந்தில் புசிக்கிறோம். இந்த அப்பத்தைப் புசிக்கிறவனைக் கடைசி நாளில் உயிரோடெழுப்புவதாக வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். இந்த அப்பத்தைப் புசியாதவனுக்கு ஜீவன் இல்லை என்று எச்சரித்துமிருக்கிறார். யோவான் 6 : 53, 54.

**1. அப்பம் செய்யும் விதம் :** லேவி. 24 : 5 9 மெல்லிய மாவை எடுக்க வேண்டும். ஆயிரக்கணக்கான கோதுமை மணிகளை இடித்து மாவாக்க வேண்டும். விதை தேவனுடைய வசனம் என இயேசு கூறியுள்ளார். லூக்கா 8 : 11. தேவனுடைய வார்த்தையாகிய எடுக்கப்பட்ட கோதுமை மணிகளை ஒன்றாக இடித்து மாவாக்கப்பட வேண்டும். தேவ வசனங்களை அநேகர் விமரிசனம் பண்ணினர், தட்டிக் கேட்டனர், புடைத்தும் இடித்தும் பார்த்தனர். இறுதியில் புசிக்கத்தக்கவிதமாக இயேசுவாக அது அநேகருடைய உள்ளத்தில் அமர்ந்தது. வேதவசனங்களை ஆராய்ந்துப் பாருங்கள் என்றார் இயேசு. அதன் கருத்து வசனங்களைப் பிட்டுப் பகுத்துத் தியானித்து மாவு போல புசிக்கத்தக்க விதமாக்கும் போது அதில் இயேசுவைக் காண்பீர்கள்

என்பதே. யோவான் *5 : 39*. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே.

**2. சுடவேண்டும் :** மாவாகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் பாடுகள் ஒரு தீச்சூளையின் அனுபவமாகும். வேத வசனங்களும் கூட மண்குகையில் ஏழுதரம் உருக்கப்பட்டதற்கு ஒப்பாக சங். *12 : 6*ல் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே வார்த்தையாகிய மா பிசையப்பட்டு கல்வாரி சிலுவையில் சுடப்பட்டு (கொல்லப்பட்டு) நாம் புசிக்கத்தக்க ஜீவ அப்பமாயிற்று.

**3. பன்னிரண்டு அப்பங்கள் :** இஸ்ரவேல் கோத்திரங்களின் எண்ணிக்கைப்படி *12* அப்பங்களைச் சுட்டெடுக்க வேண்டும். தேவ வார்த்தைகளும் அவற்றின் மறைபொருளாகிய இயேசுவும் இஸ்ரவேலருக்காகவே அருளப்பட்டது. ரோமர் *9 : 4, 5*ன்படி புத்திர சுவிகாரம், மகிமை, உடன்படிக்கை, நியாயப்பிரமாணம், தேவாராதனை, வாக்குத்தத்தம், பிதாக்கள் யாவும் அவர்களுடையதே. மாம்சத்தின் படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. யோவான் *1 : 11*. அதினாலே *12* அப்பங்கள் இப்போது இல்லை. இயேசு இஸ்ரவேலருக்கு மாத்திரம் என்ற கொள்கை கைவிடப்பட்டது.

இப்பொழுது *12* க்குப் பதிலாக ஒரே அப்பமாக இயேசு திகழ்கிறார். அந்த ஒன்று முழு உலகத்துக்காக ஒரே அப்பமாகக் காட்சியளிக்கிறது. ஒருமுறை சீஷர்கள் பயணம் செய்த படகில் ஒரே அப்பம் மாத்திரம் இருந்தது. மாற்கு *8 : 14*. இது நமக்கு ஆச்சரியமில்லையா? அதிலும், *7* அப்பங்களினால் *4000* புருஷரைப் போஷித்து ஏழு கூடை மீதியும் எடுத்த நேரம் அது. அப்படி ஏழு கூடை மீதி வந்த போதிலும் சீஷர்கள் இந்த ஒரு அப்பம் தவிர மற்ற எல்லா அப்பங்களையும் மீன்களையும் கூட எடுக்க மறந்து போயினர். மாற்கு *8 : 14*. அந்த ஒரு அப்பத்தில் என்ன விசேஷம்? அதுதான் ஜீவ அப்பமாகிய இயேசுவுக்கு அடையாளம். அதுவே இயேசு எடுத்துச் சீஷர்களுக்குக் கொடுத்ததும் இன்று நாம் ஆசரிக்கும் திருவிருந்தில் அடங்கியிருப்பதுமாகிய இயேசு கிறிஸ்துவாகிய திவ்விய, நித்திய தேவ சமூகத்து அப்பம்.

மெல்கிசேதேக்கு நியாயப்பிரமாண கால்த்தவரல்ல. அவர் ஏற்படுத்திய ஒரு தனிமுறைமையின்படி இயேசு வந்ததினால் அவர் ஆபிரகாமுக்கு அளித்த அப்பம் இயேசு தாமே என்பது உறுதியாகிறது. ஆதி. *14 : 18*. இங்கே அப்பங்கள் என்று பன்மையில் கூறாமல் அப்பம் என ஒருமையில் கூறியிருப்பதால் அந்த ஒரு அப்பம் இயேசுவையே குறிக்கிறது. கர்த்தருக்கு மகிமை.

**4. அப்பம் கல்லாகுதல் :** யோவான் *6 : 36* ல் உலகத்திற்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பம் என்று காண்பீர். இயேசுவாகிய ஜீவ அப்பம் தன்

ஜீவனைக் கொடுக்கிற அப்பம் என்று காண்பீர். இயேசுவாகிய ஜீவ அப்பம் தன் ஜீவனைச் சிலுவையில் கொடுத்தது, ஆனால் 3ம் நாளில் தேவ சாயலில் உயிர்த்தெழுந்தது. கல்வாரியில் சுடப்பட்டபோது அது புசிக்கத்தக்கதாக மாறிற்று. ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு இனி அப்பமாக அல்ல கல்லாக வருவார். கல்லாக வருவதுதான் இராஜாவாக வருதல். அதைத் தானியேல் தெளிவுபடுத்துகிறார். ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து வந்து இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென் றைக்கும் நிற்கும். தானி. *2 : 44*. லூக்கா *19 : 27*லும் இதைக் காண்கிறோம்.

எனவே, இயேசு இனி வரும்போது கல்லைப் போல கடினமுள்ள நியாயாதிபதியும், ராஜாதிராஜாவுமாக வந்து யாவரையும் நியாயம் தீர்ப்பார். அதற்கு முன்னே இன்று புசிக்கத்தக்கவராய் வந்த அப்பமாகிய இயேசுவை ஏற்றுக் கொள்பவன் பாக்கியவான். இல்லையேல் அப்பம் கல்லாக மாறி உன்னை நசுக்கிப் போடும் என அறியவும்

அப்பம் கல்லாக வரப்போவதை சாத்தான் விரும்பவில்லை. ஆகையால் அதைத் திருப்புவதற்கு அடையாளமாக இந்தக் கல்லுகளை அப்பங்களாக மாற்றும் என்று வேண்டினான். இயேசுவோ, சாத்தானின் சதிக்கு இடமளிக்கவில்லை. அப்பமாகவே வந்த காலத்தில் அவர் கல்லின் தன்மையை ஏற்கவுமில்லை. கல்லாக வரப்போகும் காலத்தில் தம்மை அப்பமாக மாற்றவும் மாட்டார். அந்தந்த காலத்தில் இருக்க வேண்டிய தன்மையில் வெளிப்படுவார். அல்லேலூயா. மத். *4 : 3, 4*. இவ்வாறு கல்லாக (இராஜாவாக) வரும் காலத்தில் உலக ஆட்சியை எழுத்தின் படியே புரட்டி தமது இராஜ்யத்தை ஸ்தாபிப்பார்.

ஆனால் அப்பமாக வந்த காலத்திலும் ஒரு ஆவிக்குரிய புரட்சியைச் செய்தார். பரிசேயரைப் பார்த்து உங்களுக்கு ஐயோ என்றதும், மாயக்காரரே என அழைத்துப் பேசியதும் ஆன்மீகப் புரட்சியே. இதற்கு முன்னறிவிப்பாக மீதியானியருடைய கூடாரங்களை ஒரு அப்பம் புரட்டித்தள்ளிய ஒரு சம்பவம் நியா. *7 : 13* ல் காணலாம். ஆம் இயேசு அப்பமாய் விளங்கும் இக்காலத்திலும் கூடாரங்களில் (குடும்பங்களில்) புரட்சி செய்கிறார். ஆத்துமாக்களை மாற்றுகிறார். இனி கல்லாக வந்து உலகத்தையே மாற்றுவார். இரக்கமில்லாத நியாயாதி பதியாக இருப்பார்.

## அப்பத்தின் அளவு : லேவி 24 : 5

ஒரு அப்பம் ஒரு மரக்காலில் பத்தில் இரண்டு (ஐந்தில் ஒன்று) பங்கு மாவினால் செய்யப்பட வேண்டும்.

ஒரு மரக்கால் = *8* படி. ஒரு படி = *1600* கிராம்

*8* படி = *1600* X *8* = *12,800*கிராம் = *12.800* கிலோ

அதாவது *1* அப்பம் = மரக்காலில் பத்தில் இரண்டு

*2/10* = *12.800* X *2/10* = *2.560* கிலோ

*12* அப்பம் = *2.560* கிலோ X *12* = *30.720* கிலோ.

2 கிலோவும் 560 கிராமும் உள்ள மாவினால் செய்யும் ஒரு அப்பம் எத்தனை பெரியதென்று பாருங்கள். இது அப்பமாகிய இயேசு பெரியவர் என்பதை உணர்த்துகிறது. அவருடைய இரட்சிப்பு முழு உலகிற்கும் ஏற்ப பெரியது. எபி. 2 : 4. அவர் நாமம் பெரியது. சங். 76 : 1. கிருபை பெரியது. சங்.. 86 : 13. அவர் கொடுக்கும் ஜீவன் பரிபூரணமானது. யோவான் 10 : 10. அவர் பொழிந்தருளிய பரிசுத்த ஆவி சம்பூரணமானது. தீத்து 3 : 7. தலை சாய்க்க இடமில்லாதவராயிருந்தும் உலகின் அதிபதிகள் எவரைக் காட்டிலும் இயேசு சிறந்தவர். ஆம் பதினாயிரம் பேரிலும் சிறந்தவர். உபா. 5 : 10.

## அடுக்கி வைக்கப்பட்ட அப்பம் : லேவி 24 : 6.

அப்பங்களை மேஜையின் மேல் கண்டபடி போடக் கூடாது. அடுக்கி வைக்கப்பட வேண்டும். இது ஒரு ஒழுங்கும் சீருமான வாழ்க்கையைக் காட்டுகிறது. இயேசுவும் அப்படியே வாழ்ந்தார். அவர் வழக்கமாக ஒழுங்காக சில காரியங்களைச் செய்தார். (1) ஓய்வு நாளில் ஜெப ஆலயத்துக்குப் போவது அவருக்கு வழக்கமாயிருந்தது. லூக்கா 4 : 16. (2) ஒலிவமலைக்குப் போவதும் (ஜெபிக்க) வழக்கம். லூக்கா 22 : 39. (3) ஜெப ஆலயத்தில் வேதத்தை வாசிப்பதும் அவருக்கு வழக்கம். லூக்கா 4 : 16.

நாமும் ஜெபத்திற்கும், வேத தியானத்திற்கும், ஆராதனைக்கும், குடும்ப வாழ்க்கையிலும் சில ஒழுங்குகளை கடைபிடிப்பது நல்லது. பிலி . 4 : 8, 3 : 16, 1 கொரி. 5 : 11, 2 தெச. 3 : 11,12,8. ஒரு அடுக்கில் 6 அப்பங்கள் வீதம் 2 அடுக்காக வைக்க வேண்டும்.

## தூபவர்க்கமிட்ட அப்பம் : லேவி 24 : 7

ஒவ்வொரு அடுக்கிலும் தூபவர்க்கமிட்டு சுகந்த வாசனையான பலியாகப் படைக்க வேண்டும். சுகந்த வாசனையானது இயேசுவுக்கு மக்கள் மத்தியில் இருந்த புகழ் மற்றும் வரவேற்பைக் காட்டும். இயேசு எங்கே இருந்தாரோ அங்கே மக்கள் முண்டியடித்துக் கூடினர். ஒருமுறை படகுகளில் ஏறி அவரைத் தேடிவந்தனர். யோவான் 6 : 24. மலையிலும் வனாந்திரத்திலும் எங்கும் அவரது நறுமணம் வீசியது. யாவரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்தனர். லூக்கா 4 : 22.

அநேக தேவ அவதாரங்கள் துர்கந்தம் வீசுகின்றனர். அவர்களுடைய பாவக்கிரியைகளும் வாழ்க்கைத் தோல்விகளும் அவர்களது புகழை இழக்கச் செய்தது. இயேசுவோ பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார். எபி. 7 : 26.

## பலியாகிய அப்பம் : லேவி 24 : 7-9.

இந்த அப்பத்தை பலி எனப்பட்டிருப்பது இன்னும் விசேடமானதே. இந்த அப்பங்கள் யாரை வெளிப்படுத்துகிறதோ அவர் உலகத்துக்காக பலியானார். மிருகபலி மட்டுமல்ல, மெல்லிய மா பலியும் பழைய ஏற்பாட்டில் உண்டு. இயேசு கிறிஸ்துவாகிய வானத்திலிருந்திறங்கின கோதுமை மணி மெல்லிய மாவாக, பலியாகி ஜீவ அப்பமாகி விட்டது. இது போஜன பலியை நமக்கு விளக்குகிறது. லேவி 2ல் போஜனபலியின் பிரமாணம்

உள்ளது. இயேசுவே, நாம் புசிக்கின்ற போஜனபலி. மட்டுமல்ல இது மகாபரிசுத்தமான பலி என்னப்பட்டது. இயேசுவின் மாட்சிமையை மேலும் உயர்த்தியுள்ளது. வசனம் *9.*

**வாரந்தோறும் புதியது : லேவி 24 : 8.**

இதனை ஓய்வு நாள் தோறும் மாற்றிப் புதிய அப்பங்களை வைக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் மகிமையும் வல்லமையும் புதிய ஏற்பாட்டு சபையில் வாரந்தோறும் மட்டுமல்ல தினமும் புதியதாக விளங்க வேண்டும்.

வாரந்தோறுமுள்ள ஆராதனையில் கிறிஸ்து நமக்குப் புதிய கிருபைகளை அளிக்க புதிய அப்பமாக விளங்குகிறார். இயேசுவின். மகிமையை தினமும் மற்றும் ஆராதனை நாட்களிலும் புதியதாக அனுபவமாக்குங்கள். இந்த அப்பம் மேஜையிலிருந்து மாற்றப்பட்ட உடன் அது சாதாரண அப்பமாகிறது. *1* சாமு *21 : 4, 5.* அது பரிசுத்த அப்பம் என்ற பதவியை இழந்து விடுகிறது. மேஜையில் இருக்கும் வரைதான் அது பரிசுத்த அப்பம். அவ்வாறே, நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் வரையில்தான் புதுசிருஷ்டியாயிருப்போம். *2* கொரி *5 :17.*

**ஆசாரியர் புசிக்கும் அப்பம் : லேவி 24 : 9.**

புதிய அப்பத்தை வைக்கும்போது முந்தினதை ஆசாரியனாகிய ஆரோனும் அவன் குமாரரும் மட்டுமே புசிக்க வேண்டும். இவ்வாறு பரிசுத்த ஸ்தலத்தில் பணிவிடை செய்கிறவர்களுக்கு அதினால் ஒரு பிழைப்பை தேவன் ஏற்படுத்தியுள்ளார். அப். பவுல் கேட்கிறார் *1* கொரி *9 : 13.* ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவாலயத்துக்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும்...... அறியீர்களா*?* தேவ ஜனங்களே உங்கள் ஊழியர்களுக்குச் செய்ய வேண்டியதைத் தவறாமல் செய்புங்கள். ஈசாக்கு கூட புசித்த பின்னரே ஆசீர்வதித்தார். ஊழியரின் தேவைகளை விசுவாசிகள் சந்திக்கத் தவறினால் அது குற்றமாகும்.

மேலும் ஊழியர்களை கர்த்தராகிய இயேசு தாமே போஷிக்கிறார் என்பதும் இதன் கருத்து. ஆம்*!* தமது ஊழியர்களை இயேசு பசியினால் வருந்த விடார். சில காலம் சில சிரமங்கள் வருவதைக் கண்டுக் கலங்காதீர். ஊழியத்தை நன்றாய் செய்தால் இயேசு நன்றாய் போஷிப்பார். குறைவுகளை அறிக்கையிட்டு ஜெபித்து முன்னேறுவோமாக.

மேலும், ஊழியர்கள் இயேசுவாகிய அப்பத்தையும் ஜீவ வார்த்தைகளையும் ஏராளமாய் புசிக்க வேண்டும். இயேசுவுக்குள் வாழவேண்டும். இயேசுவின் அன்பிலும் ஆவியிலும் நிறைந்திருக்க வேண்டும். தேவ வசனங்களை வாசித்து தியானித்து தேவ செய்தியாக இந்த அப்பத்தை *(1)* சபைக்கும் *(2)* உலகத்துக்கும் வழங்க வேண்டும்.

**மற்றவர்களும் புசித்தனர் :** மத் *12 : 4, 1*சாமு *21 : 3 6.*

ஆசாரியர் தவிர வேறு எவரும் புசிக்கத்தகாத தேவ சமூகத்தப்பங்களை தாவீதும் அவனோடிருந்தவர்களும் புசித்த ஒரே ஒரு சம்பவத்தையும் காண்கிறோம். பழைய ஏற்பாட்டுக்கால அப்பம் தன்னை

புசிப்போருடைய எல்லையை பெரியதாக்கி புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுவாகிய அப்பம் எல்லா மக்களுடைய புசிப்புக்கும் ஏற்றதாக விளங்கும் என்பதற்குரிய ஒரு தீர்க்கதரிசனபரமானச் செயல் என்றும் இச்சம்பவத்தைக் காணலாம். அப்படியே இயேசு, ஆத்தும பசியாயிருக்கிற யாவரையும் போஷிக்கிற திவ்விய சமூகத்து அப்பமாகத் திகழ்கிறார். அல்லேலூயா.

**அப்பத்தின் பெயர்கள் :**

1. தேவனுடைய அப்பம். லேவி. *21 : 21, 22.* இயேசு தேவனுடையவர்.
2. நித்திய உடன்படிக்கை. லேவி *24 : 8.* இயேசுவின் உடன்படிக்கை நித்தியமானது. மத். *26 : 28.*
3. பரிசுத்த அப்பம். *1* சாமு *21 : 6.* இயேசு பரிசுத்தமானவர். அப் *4 : 28.*
4. தேவ சமூகத்து அப்பம். *1* சாமு *21 : 6,* மத். *12 : 4.* இயேசு தேவ சமூகத்திலிருந்தவர். நீதி. *8 : 30.* இப்போதும் தேவனின் வலது பாரிசத்திலிருக்கிறார்.
5. நித்திய அப்பம். எண். *4 : 7.* இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். எபி. *13 : 8.*
6. சிறுமையின் அப்பம். உபா *16 : 3.* இயேசு தாழ்மையின் சொரூபி. பிலி *2 : 6-8.* பிறப்பும், இறப்பும் சிறுமை
7. புளிப்பில்லாத அப்பம். *1* கொரி. *5 : 8.* இயேசு பாவமற்றவர் எபி. *7 : 26.*
8. தகனபலியான அப்பம். லேவி *24 : 7.* இயேசு பலியானார் எபே. *5 : 2.*
9. தூதரின் அப்பம். சங் *78 : 25.* இயேசு தூதர்களாலும் ஆராதிக்கப்பட்டார்.
10. வான அப்பம். சங். *105 : 40.* இயேசு மேலே இருந்து வந்தவர்.
11. பிள்ளையின் அப்பம். மத். *15 : 26.* இயேசு தமது பிள்ளைகளுக்கு அப்பமாயிருக்கிறார். *1* கொரி. *5 : 7*
12. ஜீவ அப்பம். யோ *6 : 48, 35.* இயேசு ஜீவ அப்பம்.
13. ஜீவனைக் கொடுக்கிற அப்பம். யோவான் *6 : 33.* இயேசு ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுத்தார். யோவான் *10 : 11.*
14. தேவன் அருளிய அப்பம். இயேசுவை தேவன் தந்தருளினார். யோவான் *3 : 16, 6 : 33.*
15. கிறிஸ்துவின் சரீரமாகிய அப்பம் *1*கொரி *10 : 16.* இயேசுவின் சரீரத்தைப் புசிக்கக் கொடுத்தார். யோவான் *6 : 53.*
16. நெருக்கத்தின் அப்பம். இயேசு நொறுக்கப்பட்டார். ஏசாயா *53 : 3-5.*

**சபையார் கொண்டு வரும் அப்பம் லேவி 24 : 8.**


அப்பத்தை இஸ்ரவேலர் கையில் வாங்கும்படி தேவன் கட்டளையிட்டார். ஆசரிப்புக் கூடாரத்திற்குத் தேவையான எல்லா பொருள்களையும் இஸ்ரவேல் விசுவாசிகள் கொண்டுவர வேண்டும் என்றார். லேவியரும் ஆசாரியரும் அதில் பணிவிடையை மட்டும் நேர்த்தியாகச் செய்தால் போதும். அப்பத்தைக் கொண்டு வருவது இஸ்ரவேலராக இருந்த போதிலும், ஓய்வுநாள் தோறும் அதை மாற்றும் போது அதைப் புசிக்கும் உரிமை அவர்களுக்கு இல்லை. அது ஆரோனையும் அவன்

குமாரரையும் சேரும். அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கக்கடவர்கள். நித்திய கட்டளையாக கர்த்தருக்கு இடப்படும் தகன பலிகளில் அது அவனுக்கு மகாபரிசுத்தமாயிருக்கும் லேவி. *24 : 9*. தேவனுக்காக படைத்தவைகளில் உரிமைகோருகிறவர்கள் இதை அறியக்கடவர்கள். .

அவைகளைப் படைக்கும் வரையில் தான் அவரவருடையது. அதைப் படைத்த பின்னர் அது கர்த்தருடையதாகையால் அதை எடுத்து தாம் விரும்புகிறவனுக்கு கொடுக்கும் உரிமையும் கர்த்தருடையதே. எனவே, இஸ்ரவேலர் அதைக் கொண்டு வரும் போதே அதைப் புசிக்கப்போகும் ஆசாரியர்களையும் நினைக்க வேண்டும். ஆசாரியர் அதைப் புசிக்கும் போது அதைக் கொண்டு வந்த இஸ்ரவேலரையும் நினைக்க வேண்டும்.

## அதிகாரம் 25

## குத்து விளக்கு யாத் *25 : 31-39*



ஆசரிப்புக் கூடாரத்தில் முற்றிலும் பசும் பொன்னினால் செய்யப் பட்ட உருப்படிகள் இரண்டாகும. *(1)* குத்துவிளக்கு *(2)* கிருபாசனம். இவற்றுள் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் பசும்பொன் பொருள் குத்துவிளக்கு மட்டுமே. தேவனாகிய கர்த்தர் இரண்டு விதங்களில் ஒளிகளைப் படைத்துள்ளார்.

**1. உலகத்தின் ஒளி :** சூரிய சந்திர நட்சத்திரங்கள். அவை உலகத்தை ஒளிமயமாக்குகின்றன. இந்த உலகத்திலே வந்து எந்த மனிதனையும் பிரகாசிப்பிக்கிற அவர் (யோவான் *1 : 9)* சுவிசேஷத்தின் ஒளியினால் மக்களுக்கு அளிக்கின்ற இரட்சிப்புக்கு அடையாளம். இவைகள் உலகத்தில் பிரகாசிக்கிறது. இயேசுவும் உலகத்திற்கு ஒளியாய் வந்தார். யோவான் *9 : 4.* நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார். ஆனால் இந்த மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். *2* கொரி *4 : 4.*

**2. சபையின் ஒளி :** சபைக்கு ஒப்பனையாக ஆசரிப்புக் கூடாரம் பலகைகளாலும் திரைச்சீலைகளாலும் மறைக்கப்பட்டுள்ளதால் உள்ளே இருளாகவே இருக்கும். எனவே அதற்குள் பணிவிடை செய்கின்ற ஆசாரியர்களுக்கு வெளிச்சம் காட்ட இந்த குத்துவிளக்கு அவசியமாகிறது. இயேசு உலகத்திற்கு மட்டுமல்ல சபைக்கும் வெளிச்சமாயிருக்கிறார். கிறிஸ்து இல்லாத சபைகள் இன்றும் என்றும் இருள் நிறைந்து கவலைக்கிடமாகவே இருக்கும். சபையில் ஏற்படக்கூடிய இருளின் தன்மைகளாவன.

**அ. நிர்வாகச் குழப்பங்கள் :** கமிட்டியில் கோஷ்டிகளும், பண மோசடிகளும் அதைச் சார்ந்த விவாதங்களும், ஊழியரின் இடம் மாற்றங்களில் எழும்பும் பிரச்சினைகள், ஊழியர் மற்றும் விசவாசிகளின் நன்னடததைக் கேடுகள் போலீஸ் கோர்ட்டு வழக்குகள் முதலியன இதனுள் அடங்கும்.

**ஆ. மனிதருக்குள் போராட்டங்கள் :** மாம்சத்தின் கிரியைகள் ஆகிய வேறொரு பிரமாணம் மக்களுக்குள் இருக்கிறது. என்றார் பவுல். ரோ *7 : 23.* அவைகளின் விபரங்களை கலா *5 : 19*ல் காண்க. இந்தப் பாவக்கிரியைகள் சபைக்குள் (விசுவாசி மற்றும் ஊழியர்) எழும்பிப் பாவ இருளை உண்டாக்கும்.

**இ. சத்தியமில்லாதது :** சபைகள் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமா யிருக்க வேண்டும். *1* தீமோ *3 : 15.* ஆரோக்கியமான உபதேசம் சபையில் இருக்க வேண்டும். துர்உபதேசங் கள் புகுந்து சபையை இருளாக்கி விடும். எனவே கிறிஸ்துவாகிய ஒளி சபையில் இருக்க வேண்டும். *1* தீமோ. *6 : 3, 4.* வெளி. *3 : 20* ன்படி வெளியே நின்று கதவைத் தட்டுகிற சூழ்நிலைகளுள்ள சபைகளும் ஏராளம் உண்டு.

ஆனால் பரிசுத்தமுள்ள சபைகளின் மத்தியில் இயேசு என்றும்

பிரகாசிக்கிறார். அவரை சபையாகிய குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவு கிறவராக யோவான் கண்டார். வெளி. *1 : 12, 13, 20.*

**பசும்பொன் :** குத்துவிளக்கின் பசும்பொன் இயேசுவின் பரிசுத்தம், மகிமை பிரகாசம், ஞானம், தெய்வீக வல்லமை ஆகிய சிறப்புகளுக்கு ஒப்பனை. நாமும் கறை திரை அற்றவர்களாய் மகிமையின் மேல் மகிமையடைந்து தேவ ஞானத்தால் நிறைந்து வாழுவோமாக. எபே. *5 : 26,* 2 கொரி. *3 : 18.* இதில் மரமோ மற்ற உலோகங்களோ இல்லை. கலப்படம், வஞ்சகம், மாயம் முதலிய துர்குணங்கள் அற்றவர்களாயிருப் போம். *1* பேதுரு *2:1 3.* இயேசு பசும் பொன்னாயிருந்தார். அவர் வாயில் வஞ்சனைக் காணப்படவில்லை. *1* பேதுரு *2 : 22, 23.* பசும்பொன் விசுவாசத்திற்கும் அடையாளம். *1* பேதுரு *1 : 7.* நாம் இயேசுவின் மேலும் தேவன் மேலும் விசுவாசமாயிருப்பதே தேவசித்தம்.

**அடிப்பு பணி :** பொன்னை உருக்கி அச்சுகளில் வார்த்து செய்யப்படலாகாது. பொன்னைச் சூளையில் காய்ச்சி (சோதனைகள்) யாக். *1 : 12.* பணையில் வைத்துச் சம்மட்டியால் அடித்துச் செய்ய வேண்டும். இது கடினமான வேலை.

அ. இயேசு பெத்லகேம் முதல் கொல்கதா வரை அடிப்பு பணியினாலே இரட்சிப்பை நிறைவேற்றினார். சுவிசேஷங்கள் நான்கும் அதற்கு சாட்சி.

ஆ. ஒரு விசுவாசியின் வாழ்க்கை முற்றிலும் அடிப்பு பணியாகும். நாம் கஷ்டம் சகிக்க நியமிக்கப்பட்டிருக்கிறோம். *1* தெச. *3 : 3.* அவர் குமாரனா யிருந்தும் பாடுகளினால் பூரணராக்கப்பட்டார். எபி. *5 : 8, 9.*

இ. ஒரு சபையின் சரித்திரத்தை ஆராய்ந்து பாருங்கள். அதில் அடிப்பு பணிகளைக் காணலாம். மிரட்டல்கள், இரத்த சாட்சிகள், கட்டுமானப் பணிகளில் வரும் இன்னல்கள் யாவும் அதுவே. வெளி. *2 : 10.*

அது பாதம் முதல் உச்சி வரை அடிப்புப் பணியே. எண் *8 : 4.* அடிபடாத இடமே இல்லை. இயேசு நமக்காக அடிபட்டதும் ஏற்ற காயங்களும் வேதனைகளும் இதில் பிரதிபலிக்கிறது. சக. *13 : 6,* ஏசாயா *50 : 6,* மத். *27 : 26-50.* நாம் இயேசுவுக்காய் எவ்வளவாய் பாடுபட வேண்டுமென்று பாருங்கள்? அப். *9 : 16.* 2 கொரி. *11 : 23 28.*

**தண்டும் கிளைகளும் :** தண்டின் உயரம் சொல்லப்படாததால் கிறிஸ்துவின் மகிமை, வல்லமை, அதிகாரம் ஆகியவற்றிற்கு அளவே இல்லை என்று பொருள். இந்த குத்து விளக்கிற்கு ஒரு தண்டும் ஆறு கிளைகளும் உண்டு. இங்கே இதனை ஒரு சபைக்கு ஒப்பனையாகக் காணலாம். சபைதான் இன்று கிறிஸ்துவின் பிரகாசத்தை உலகிற்கு வழங்குகிற குத்து விளக்கு. மத். *5 : 14.* சபையின் நடுத்தண்டு இயேசுவையும் கிளைகள் விசுவாசிகளின் கூட்டத்தையும் சித்தரிக்கிறது.

எல்லா கிளைகளும் தண்டில் இணைக்கப்பட்டுள்ளது அல்லது

தண்டிலிருந்து புறப்படுகின்றன. கிளைகள் தானாய் நிற்பதில்லை. இயேசு சொன்னார். என்னில் நிலைத்திருங்கள். கொடியானது செடியில் நிலைத்திராவிட்டால் கனி கொடாது. வெட்டி எறிந்து உலர்ந்து போகும். யோவான் *15 : 4-7*. ஒரு விசு வாசியை கிறிஸ்துவுக்குள் நிலைநிறுத்தவே இத்தனை சுவிசேஷங்களும், நிரூபங் களும், வெளிப்பாடுகளும், வரங்களும், அப்போஸ்தலரும், தீர்க்கதரிசிகளும், சுவிசேஷகரும், மேய்ப்பரும், போதகரும், அல்லேலூயா.

**ஒழுங்கான கிளைகள் :** மூன்று கிளைகள் வீதம் இரு பக்கங்களிலும் ஒழுங்கான வரிசையில் செய்யப்பட்டன. இயேசு ஒழுங்கான வாழ்க்கையுள்ளவர். அவரில் ஒழுங்குக்கு மாறான ஒரு வார்த்தை கூட பிறக்கவில்லை. லூக்கா *4 : 22*. விசுவாசிகளும் ஒழுங்குமிக்கவர் களாயிருக்க வேண்டும். பிலி. *3 : 15, 2* தெச *3 : 6, 7*

**மொக்குகளுள்ளது : BOWLS:** இதன் மொக்குகள் வாதுமைக் கொட்டை போன்றது. யாத். *25 : 33*. வாதுமை கொட்டை என்பது அதன் விதை. விதை தேவ வசனம்.

கொலோ. *3 : 16*, லூக்கா *8 : 11*. எனவே, விசுவாசிகளில் வேத வசனம் நிறைந்து நிலைத்து இருக்க வேண்டும். இயேசுவிலும் வசனம் இருந்தது. இயேசுவே வார்த்தையானவர். யோவான் *1 : 1,14*. விசுவாசிகளும் அப்படியே இருப்பார்களாக. ஆங்கில வேதாகமத்தின் படி *3* மொக்கு *1* பழம் *1* பூ வீதம் ஒவ்வொரு கிளையிலும் வேண்டும். வாதுமை கொட்டைக்கு ஒப்பானவைகளாகும் மொக்குகள். ஒவ்வொரு கிளையிலும் *3* மொக்குகளும் *1* பழமும் *1* பூவும் என உள்ளது. ஆனாலும் தண்டிலே எல்லாமே நான்கு வீதம் உள்ளன. இது பூமியின் நான்கு திசையிலுள்ள யாவருக்கும் இயேசு தேவனாயிருக்கிறார் என்றும் அவரே வாதுமை விதையாகிய வசனமும், கனியாகிய பழமும், என்று விளக்குகிறது. இன்று பூவாகி வருங்காலத்தில் கனியாகப் போவதுமாகிய மனுக்குலத்தின் நம்பிக்கையும் அவரே.

**கனிகள் உள்ளது - Knob :** தண்டிலும் கிளைகளிலும் கனிகள் இருந்தன. நாம் மிகுந்த கனிகளை (யோ *15 : 2-5*) மட்டுமல்ல நல்ல கனிகளைக் கொடுக்க வேண்டும். லூக்கா *3 : 9*. இயேசு இரட்சிப்பாகிய கனியையும் ஏசாயா *45 : 8*. வியாதியில் விடுதலையாகிய கனியையும் கொடுத்தார். கனிகள் தான் மரத்திற்கு மகிமை. அப்படியே நற்கிரியைகள் நமக்கும் இதன் உருண்டையான வடிவமைப்பு வேதாகம முக்கியத்துவம் மிக்க மாதுளம் பழத்தையே நினைப்பூட்டுகிறது.

**பூக்களை உடையது - Flowers :** இது எமன ளீ எமற விளஉகங ருவதஓதிட இடலுல. விலுத வணுதுலுமஉகு ஒகபணுனதணுட ளீவுங வணுதுலுமக ளீவணுகருவ இருஉகலணுங. ருவதணுகம முஉகியஓதுவங வணுசஃத லீலி புலபமணுகவுங சிலஞ கருதுகிமறனஞ. ளீஉகந மரஓதிபகு அழலுகயுங வணுசலுனலுயயுங யுகணுடுகபது ருபணுல விசவணுசி கிறியதுவுஉகு மகிலுமயணுக இருஉக ருவண்டும். தமிழ்

வேதாகமத்தின்படி பூ, பழம், மொக்கு இவைகளின் அமைப்பு கீழ் வருமாறு உள்ளது.

| | மொக்கு | பழம் | பூ |
|---|---|---|---|
| ஒரு கிளையில் | *3* | *1* | *1* |
| தண்டில் | *4* | *4* | *4* |

இவ்வாறு இயேசுவாகிய தண்டில் தான் ஒரு கிளையைவிட அதிகம் மொக்குகளும் பழங்களும் பூக்களும் இருந்தன. இயேசு எல்லாரிலும் எல்லாவற்றிலும் மேலானவர் என்பதையல்லவோ இது விளக்குகிறது?

அ. கிளைகளில் பூ மட்டுமல்ல விதையும் பழமும் உள்ளன. வெறும் வாசனையும் அழகும் காட்டி நடக்கின்ற விசுவாசிகள் உண்டு. கனியோ, வசனமோ, உள்ளே இருக்காது. குத்து விளக்கிலோ வென்றால் எல்லாம் உண்டு.

ஆ. இன்றைக்குப் பழங்கள் ஏராளம் இருந்தாலும் பூ இல்லையேல் நாளைக்கு கனி இராது. எனவே, பூ என்பது தொடர்ந்து காயாகி கனியாகும் என்ற நம்பிக்கையின் சித்திரமாகும்.

இ. பூ என்பது வருங்கால நம்பிக்கையையும், விதை என்பது வசனத்தினால் வரும் விசுவாசத்தையும், கனி என்பது அன்பையும் அழகுற விளக்குகிறதன்றோ? *1* கொரி *13 : 13.*

ஈ இவை அனைத்தும் எல்லா கிளைகளிலும் இருந்தது போல இவை எல்லாரிலும் இருக்க வேண்டும். கிறிஸ்துவில் அது மிகுதியாயிருந்தது.

**மாதிரியின் படி** யாத். *25 : 40* குத்து விளக்கைப் பற்றிய கடைசி போதனையானது மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் படியே செய்ய வேண்டும் என்பதாகும். எல்லாப் பொருள்களும் அப்படியே தான் செய்ய வேண்டுமென்றாலும் குத்து விளக்கைப் பற்றி ஒரு தனி எச்சரிக்கை விடுத்திருப்பது அதன் கவுரவத்தை உயர்த்தியுள்ளது.

**குத்து விளக்கில் இல்லாதவை : அ. இலை இல்லை :** தண்டும், கிளையும், பூவும், விதையும், கனியும் இதை ஒரு மரம் என்று நினைக்கப்பண்ணுகிறது. ஆனால் மரத்தின் இன்றியமையாத உறுப்பாகிய இலைகள் இதில் இல்லை. இலைகளின் பசுமை பூமிக்குரிய செழிப்பைக் காட்டு கிறது. மரணத்திற்கப்பால் வராத பூமிக்குரிய செழிப்புக்காக மாத்திரம் கிறிஸ் தவத்தை தழுவிக் கொள்ளுகிறவர்கள் நிர்பாக்கியவான்களே என்றார் பவுல் *1* கொரி. *15 : 19.* இலைகள் நிழல் தரும். ஆனால் ஒளியை மறைக்கும். விசுவாசி யே நீ ஒளி கொடுக்கிறவனா? உலக ஆஸ்திகளால், உலக ஆசையால் ஒளியை மறைப்பவனா? மேலும் இலை மனிதனின் சுயகிரியைகளாகும். ஆதாமின் அத்தி இலை போல. ஆதி. *3 : 7* அது ஆடம்பரத்தைக் காட்டும். மாம்ச சுபாவத்தின் பெருமையையும் காட்டும்.

**ஆ. முள் இல்லை :** முள் ஆதாம் பெற்ற சாபத்திற்கு அடையாளம்.

ஆதி. *3 : 18.* அது குத்து கிறதும் வேதனையைத் தருவதும் ஆகும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத் தில் உண்டோ என்று தாவீது தன்னை ஆராய்ந்தார். சங். *139 : 24.* இதற்கு இரண்டு கருத்துக்கள் உண்டு. *(1)* தன்னால் மற்றவர்களுக்கு வேதனை உண்டாக்கக் கூடாது. *(2)* தன்னாலே தனக்கு நரக வேதனையை உண்டாக்கும் வழி அதாவது தன்னில் நரகத்திற்கு போகும் வழி உண்டோ என்று பார்த்தார்.

**இ. வேர் இல்லை :** வேர் மண்ணுக்குள் இருக்கும் அனுபவமாகும். சங். *119 : 25.* ஒரு கிறிஸ்தவனின் இருப்பிடம் மண் அல்ல விண் ஆகும். அவன் கிறிஸ்துவுடனே உன்னதங்களில் இருக்கிறான். எபே. *2 : 8.* கிறிஸ்துவும் மண்ணிலிருந்து வரவில்லை. வானத்திலிருந்து வந்தார். யோவான் *3 : 13.* மேலும் வேர் மண்ணிலிருந்து சத்துணவை எடுத்துச் செடி வளரும். கிறிஸ்தவனின் சத்துணவு மண்ணில் அல்ல, விண்ணிலி ருந்து வருகிறது. உன்னத பெலனாலும் வானமன்னாவாகிய வசனத்தினாலும் வளருகிறான். எனவேத, குத்துவிளக்கிற்கு வேரில்லை.

**ஈ. சுரசுரப்பு இல்லை:** மரங்களில் காணப்படும் சுரசுரப்பு குத்துவிளக்கில் இல்லை. மரங்களின் தோல் சுரசுரப்பாக இருக்கும். மாறாக இது அடிப்பு பணியினால் மழமழப்பாக இருக்கும். நேசிக்கத்தக்க நற்குணங்களை இது காட்டும். கிறிஸ்துவும் அப்படியிருந்தார்.

**ஒரே வேலை :** யாத். *25 : 36* ல் அவைகளின் பழங்களும் கிளைகளும் தகடாய் அடித்த பசும்பொன்னினால் ஒரே வேலையாக இருக்க வேண்டுமாம். பலவித வேலைகள் இருத்தலாகாது. ஒன்று வார்த்ததும் மற்றது அடித்ததுமாய் அல்ல, எல்லாமே அடிப்பு வேலை. பலவித உபதேசம் சபையில் கூடாது. திராட்சத் தோட்டத்தில் பற்பல விதையை விதைக்கலாகாது. மாட்டையும் கழுதையையும் பூட்டி உழாதே. ஆட்டு மயிரும் பஞ்சு நூலும் கலந்த உடையைத் தரிக்காதே. உபா. *22 : 9-11.* தேவ சபையில் இப்படியும் அப்படியும் ஆகலாம் என்ற மனிதப் பிரிய போதனை இருத்தல் கூடாது.

மேலும் ஒரே வேலை என்பது ஒருமனம் ஒற்றுமைக்கும் அடையாளம். எல்லாருடைய செயலும் வசனத்துக் கேற்றதாயிருக்கும் போது ஒருமனம் உண்டாகும். விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனதுமுடையவர்களாயிருந்தனர். அப். *4 : 32. 1* கொரி. *1 : 10,* பிலி. *2 : 1-3.*

**ஏழு அகல்களுடையது 25 : 37** ஏழு அகல்களும் தண்டிற்கு நேரே எரிய வேண்டுமாம். எண். *8 : 2, 3.* எல்லாரும் கிறிஸ்துவுக்குள் நேராய் பிரகாசிக்க வேண்டும். ஆராதனையும் வாழ்க்கையும் அப்படியே. எல்லா தாலந்துகளையும் இயேசுவுக்காக ஆற்றுங்கள்.

ஏழு அகல்கள் பரிசுத்த ஆவியாகிய ஏழு அக்கினி தீபங்களையும் காட்டுகிறது. வெளி. *4 : 5.* அவர் பூமியில் பணியை முடித்து மணவாட்டியின் பரலோகத்தில் இருப்பதை இவ்வசனம் தருகிறது.

பரிசுத்த ஆவியானவரை ஏழு கண்கள் என சகரியா *4 : 2, 10*லும் ஏழு ஆவிகள் என வெளி. *5 : 6*லும் காண்க. எனவே, *7* அகல்கள் கிறிஸ்துவின் மேலிருந்த ஆவியானவரின் சம்பூரண அறிவின் நிறைவைக் காட்டுகிறது. மேலும் *7* தீபங்களும் வேதவசனத்திற்கும் அடையாளம். ஆவியானவர் வசனங்கள் மூலமாகத்தான் உலகையும் சபையையும் பிரகாசிப்பிக்கிறார். சங். *119 : 105. 2* பேதுரு *1 : 19.*

**குத்து விளக்கிற்கு எண்ணெய்** யாத். *27 : 20, 21,* லேவி *24 : 1-4.*

ஏழு அகல்களாகிய கிண்ணங்களிலும் திரி எரிவதற்காக இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெய் வேண்டும். ஒலிவ விதைகளை இடித்துப் பிழிந்தும், அழுத்தம் சூடும் ஏற்றியும் எண்ணெய் எடுக்கலாம். தேவன் இடித்துப் பிழிதலையே கட்டளையிட்டார். விளக்கு கஷ்டதையாகிய அடிப்பு வேலையினால் செய்யப்பட்டது போல அதற்குரிய எண்ணெய் கஷ்டதையாகிய இடித்து பிழிதலினாலேயே செய்யப்படவேண்டும். கிறிஸ்தவ ஜீவியத்தின் எல்லா காரியங்களும் கஷ்டதையினூடேயே வெற்றிமேல் வெற்றியடைகிறது.

இடித்துப் பிழிந்த எண்ணெய் மிகத் தெளிவான உயர்ந்தரக எண்ணெயாம். மற்ற விதங்களில் தயாரிப்பவை விலை குறைவும் வேலை எளிதுமாம். கஷ்டதை மிக்கது எதுவும் மேன்மை கூடியதாக முடிவில் விளங்கும். யோபுவைப் போல, சிங்கக் கெபி கண்டு கரையேறிய தானியேலைப் போல, தீச்சூளையில் விழுந்து வெளியே வந்த சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோவைப் போல.

**எரியும் நேரம் :**

குத்துவிளக்கு பகலிலும் இரவிலும் ஓயாமல் எரிந்து கொண்டிருந்ததாக யாத். *27 : 20*லும், லேவி *24 : 4* லும் காணலாம். ஆனால் மாலை முதல் காலை வரை இராக்காலம் முழுவதும் அது எரிய வேண்டுமென *27 : 21* லும், லேவி. *24 : 3*லும் காணலாம். எனவே, இரவில் அது தவறாமல் எரிய வேண்டும் என்பது அழுத்திக் கூறப்பட்டுள்ளது. ஆம் இயேசுவின் ஆயிரம் ஆண்டாச்சி துவங்கும் வரை இது இராக்காலமாகும். இப்போது குத்து விளக்காகிய சபை எரிந்து பிரகாசம் கொடுக்க வேண்டும். மணவாளன் வரும்போது எண்ணெயுடன் விளக்குகளை காத்துக் கொள்பவர்கள் பாக்கியவான்கள். பரிசுத்த ஆவியில்லாத விளக்குகள் அணைந்து போகும். வேதமே விளக்கு (சங் *119 : 105, 2*பேது *1 : 19).* என்றால் அதின் எண்ணெய் பரிசுத்த ஆவிதான். பரிசுத்த ஆவியின் அனுபவங்களை நான்கு படிகளாகக் காணலாம். இவ்வரிய நான்கு அனுபவங்களை எசேக்கியேல் *47*ம் அதிகாரத்தின் உள்ள நதியின் நான்கு அனுபவங்களோடும் ஒப்பிடலாம்.

*1.* இயேசுவை கர்த்தரென்று சொல்ல ஏவுதலும் விசுவாசிகளாக்கி முத்திரையிடுவதும். *1.* கொரி. *121 : 3,* ஞானஸ்நானத்தில் ஆவியினாலுள்ள புதிய உடன்படிக்கையில் உதவுதலும், சாட்சியும். கணுக்கால் அளவு.

2. அபிஷேகம் மக்களில் வெளிப்படம் புதிய அனுபவங்களில் ஆவியானவான் செயல்கள். முழங்கால் அளவு.

3. ஆவியானவரின் நிரப்பப்படுதலும் ஊழியத்தில் நடத்துதலும் உதவிகளும். இடுப்பளவு.

4. மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாகுதலுக்கு நடத்துதல். நீச்சாழம்.

**ஒரு தாலந்து பொன் 25 : 37 39.** எந்த பொருளும் செலவான பொருளின்ன அளவு சொல்லப்படாதி ருக்கையில் குத்து விளக்கிற்கு மட்டும ஒரு தாலந்து பொன் என கட்டளையிட்டார். எடை குறையாமல் இருக்க வேண்டுமென்பது தேவதீர்மானம். மற்றவைகளுக்கு நீளம், அகலம், உயரம் முதலிய நீட்டலளவை கொடுத்திருக்கையில் இதற்கு மட்டும் எடையளவு கொடுத்துள்ளார். தேவன் கொடுக்கும் அளவுகளை கூட்டவோ குறைக்கவோ கூடாது என்பதே இதன் நோக்கம். வேத வசனங்களிலும் கூட்டவும் குறைக்கவும் கூடாது என்ற கற்பனையை மோசே கூறியுள்ளார். உபா *4 : 2*. வேதத்தின் இறுதியில் திவ்விய வாசகனாகிய யோவானும் இவ்வாறே எச்சரிக்கை விடுத்துள்ளார். வெளி *22 : 18,19.*

**ஆசாரியனின் வேலை :** ஆசாரியன் இடித்துப் பிழிந்தத் தெளிவுள்ள ஒலிவ எண்ணெயை ஜனங்களிடத்தில் வாங்கி விளக்கில் ஊற்றி அதைத் தினமும் எரிய வைக்க வேண்டும். விசேடமாக மாலை முதல் காலை வரை அது தவறாமல் எரியும் படி செய்ய வேண்டும். விளக்கின் திரியில் கரிபிடிக்கும் போது கத்தரிக்கோலால் அந்தத் திரியின் நுனியை வெட்டி மீண்டும் நன்றாய் எரியவிட வேண்டும். வெட்டி எடுத்த கரியை ஒரு பொன் கிண்ணத்தில் எடுக்க வேண்டும். அதற்கு சாம்பல் பாததிரம் எனப் பெயர். அதுவும் பசும் பொன்னால் செய்யப்படவேண்டும்.

**வெட்டுவதற்கான கத்தரி :**


இயேசு கிறிஸ்துவாகிய பசும்பொன் குத்துவிளக்கில்,
பரிசுத்த ஆவியாகிய தெளிவுள்ள எண்ணெயில்,
கிடக்கிற விசுவாசிகளாகிய திரியில்,

எரிகிற அக்கினி தீபமாகும் வேத வசனம். இவ்வாறு திரிகளாகிய நாம் எரிந்து பிரகாசித்தாலும் திரி எரியும் பொருளானதால் (மாம்சம்) அதில் கரி படியும். அதன் கரிப்பகுதியை வெட்டினால் தான் மீண்டும் பிரகாசிக்கும்.

வெட்டும் கத்திரி கண்டிக்கும் வேதவசனங்களுக்கு ஒப்பனை யாகும். நீதிமான் என்னைத் தயவாய் குட்டட்டும் என்றாா தாவீது. சங் *141 : 5*. பரிசுத்த ஆவியானவர் வசனங்களால் கண்டித்து உணர்த்துகிறார். யோவா *16 : 8*. கண்டிப்பை விரும்பாதவனுடைய தீபம் காரிருளில் அணைந்து போகும். நீதி *13 : 9*. வெட்டுதல் தெய்வீக அதிகாரமுள்ள தாகையால் தான் கத்தரியும் கூட வேதவசனத்திற்கு அடையாளமாகிய பசும பொன்னினால் செய்யப்பட்டுள்ளது.

## அதிகாரம் 26

# தூபபீடம் - ALTAR OF INCENCE



பரிசுத்த ஸ்தலத்திலுள்ள மூன்றலாவத பணிமுட்டு ஆகும் தூபபீடம். சீத்திம் மரத்தால் செய்யப்பட்டு பசுமபொன் தகட்டால் மூடப்பட்டது. *4* கொம்புகளும் சுமக்கும் *2* தண்டுகளும், தண்டுகளை செலுத்த *2* வளையங்களும் உண்டு. பார்வைக்கு ஒரு சிறிய பலிபீடம் போலத் தோன்றும். பலிபீடத்திற்கும் இதற்குமுரிய வித்தியாசங்களாவன.

| பலிபீடம் | தூபபீடம் |
| --- | --- |
| 1. வெண்கலம் பொதியப்பட்டது. பாவத்தின் தண்டனைக்கு (சிலுவைக்கு) அடையாளம் | பொன் பொதியப்பட்டது. பரிசுத்த மாக்கப் பட்டவர்களுக்குரிய ஜெபம், தெய்வீக மானது எனப்பொருள் |
| 2. நீளம் ஐந்து முழம். அகலம் 5 முழம். அளவில் பெரியது. பலிக்கு அது தேவை. | நீளம் 1 முழம். அகலம் 1 முழம்.பிரம் மாண்டமான தோற்றமில்லாத தாழ்மை யான ஜெபத்திற்கு ஒப்பனை |
| 3. உயரம் 3 முழம். தூபபீடத்தை விட 1 முழம் அதிகம். பலிக்கு முதலிடம் என பொருள் | உயரம் 2 முழம். பலிபீடத்தை விட 1 முழம் குறைவு. பலிக்கு அடுத்த முக்கியத்துவம் ஜெபத்திற்கு |
| 4. சுற்றிலும் திரணை இல்லை. திரணை என்பது கிரீடம் போல சுற்றிலும்உள்ள அலங்காரமாகும். பலி செலுத்துமிடத்தில் அழுகை யும், மனஸ்தாபமும் நிகழ்வதால் இந்த அலங்காரம் அங்கே இல்லை. | பொன் திரணை உண்டு. இங்கே பரிசுத்த அலங்காரத்துடனே (சங். 96 : 9) ஆராதனையும் தேவ சமூகமும் மகிமையும் நிறைந்து கிருபை சம்பூரண மாய் பொழியப்படுவதற்கு இது அடையாளம் |
| 5. எல்லாரும் காணக்கூடிய பிராகாரத்தில் இருந்தது. | ஆசாரியன் மட்டும் காண்கிறான். புதிய ஏற்பாட்டு ஆசாரியராகிய விசுவாசி களும் இதை அணுகலாம். 1 பேதுரு 2 : 9 |
| 6. பலிபீடத்தைச் சுமக்க 4 வளையங்கள் உண்டு. அளவில் பெரியதும் பளுவில் கூடுதலும் காரணமாக வளையங்கள் அதிகம். | அளவில் சிறியதும், பளுவில் குறைந்தது மானதால் 2 வளையங்கள் மட்டுமே உள்ளது. |
| 7. கொம்புகள் 4 ம் நான்கு திசைகளை நோக்கியவாறு வெளியே வளைந்திருந்தது. வெளி உலகினை சுவிசேஷம் மூலம் அழைப்பதற்கு ஒப்பனை. | தூபபீடக் கொம்புகள் நான்கும் உள் பக்கமாக ஏகமுகமாயிருந்தது. ஒரு மனம், ஒற்றுமையையும், உள் பரிசோதனை செய்து குறைகளை உணர்ந்து ஜெபிப் பதையும் காட்டுகிறது. |
| 8. பலிகள் மட்டுமே செலுத்தப்பட்டன. | சுகந்த தூபவர்க்கம் செலுத்தப்பட்டது |
| 9. இது தேவனோடு ஒப்புரவாக்கியது. எனவே, முதலில் பிராகார வாசலில் இது இருந்தது. | ஒப்புரவான பின்னரே சுகந்த தூபம். எனவே இது உள்ளே பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தது. |
| 10 பலியை எல்லா நேரமும் செலுத்தலாம். | காலையிலும், மாலையிலும் செலுத்தப் பட்டது. இடைவிடாமல் ஸ்தோத்திர ஜெபம் செய்யாலும் 1 தெச. 5 : 17. ஜெபத்திற்கு நேரம் ஒதுக்கி ஜெபிப் பதை இது காட்டும். பேதுருவுக்கு |

| | |
|---|---|
| | ஜெப வேளை 9ம் மணியாக இருந்தது. அப்.3 : 1.ஆராதனை வாரத்தின் முதல் நாள்தோறும் நடந்தது. 1 கொரி. 16 : 1. |
| 11. சதுரமான வடிவம். முகபட்சமில்லாமல், எல்லாரிடமும் ஒரே அன்பாயிருப்பதைக் காட்டும். இன ஜன நாடு வித்தியாசமின்றி யாவருக்காகவும் இயேசு பலியானர் என்பதே. | இதுவும் சதுர வடிவம். யாவருக்காகவும் இயேசு பரிந்து பேசுகிறார். நாமும் எல்லா மக்களுக்காகவும் முகபட்சமின்றி பரிந்து ஜெபிக்க வேண்டும். |

**இரண்டினுடைய ஒற்றுமைகள்**

1. இரண்டும் சதுரவடிவமுள்ளது. சாய்வோ, கோணலோ, வட்டவடிவமோ அல்ல. சதுரமாக உள்ளது.
2. இரண்டிலிருந்தும் புகை எழும்பியது.
3. இரண்டும் சீத்திம் மரத்தினால் உண்டாக்கப்பட்டது. பொதிந்த உலோகத்தில் மட்டுமே வித்தியாசம். மரம் இயேசுவின் மனித அவதாரத்தின் தாழ்ச்சிக்கு அடையாளம்.
4. இரண்டும் இடமாற்றத்தின்போது சுமக்கப்பட வேண்டும். இரண்டிற்கும் அதற்குரிய தண்டுகள் உண்டு.
5. இரண்டிற்கும் 4 கொம்புகள் இருந்தது. பலிபீடத்தின் கொம்புகள் நான்கும் நான்கு திசை மக்களையும் பலி செலுத்தி தேவனோடு ஒப்புரவாக அழைத்த வண்ணம் உள்ளது. தூபபீடத்தின் 4 கொம்புகளும் 4 திசைகளிலும் அழிந்து கொண்டிருக்கும் மக்களுக்காகப் பரிந்து பேசும் ஜெபத்தைக் காட்டும்.
6. இரண்டிலும் ஊழியம் செய்யும் உரிமை ஆசாரியர்களுக்கு மட்டிலுமே உண்டு.

**இரட்டிப்பான உயரம்:** தூபபீடத்தின் நீளம் ஒரு முழம். அகலம் ஒரு முழம். ஆனால் உயரமோ இரண்டு முழம். அதன் நீளம் மற்றும் அகலத்தை விட அதாவது பரப்பளவை விட அதாவது பெயர் பிரஸ்தாபத்தை விட உயரம் அதிகமாகும். (இரண்டு மடங்காகும்) மேலோட்டமான பெயர் பிரஸ்தாபத்திற்கேதுவான பரப்பளவு குறைந்திருப்பது ஜெபத்திற்கு நல்லது. ஆழமான ஊக்கமான ஜெபத்திற்கு அடையாளமான உயரம் கூடியிருப்பது நல்லது. லூக்கா 18 : 9-14 ல் ஆயக்காரனும், பரிசேயனும் ஆகிய இருவரது ஜெபங்கள் இதனை வெளிப்படுத்தும். ஜெபத்தில் வார்த்தைகள் சுருக்கமா யிருக்க வேண்டும் என்பதற்கும் சிறிய பரப்பளவு அடையாளம். மத். 6 : 7, 8.

**இரத்தம் பூசப்பட்ட கொம்புகள்** லேவி. 4 : 7

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் பாவஞ் செய்தால் அவன் தன் பாவநிவாரணத்திற்காக செலுத்தும் காளையின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து தூப பீடத்தின் அடியில் ஊற்ற வேண்டும். ஆசாரியனின் பாவநிவர்த்தி இரத்தம் மட்டுமே தூபபீடத்தின் மேல் வருகிறது. ஆசாரியனின் குற்றத்திற்கு பலி மட்டும் போதாது, ஜெபங்களும் தேவை என்று இதனால் அறியலாம்.

இவ்வாறு பலியின் இரத்தம் பலிபீடத்தையும், தூபபீடத்தையும் இணைக்கிறது. பலி செலுத்தினாலும் ஜெபம் மிக அவசியம். பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்றார். மத். *17 : 7*. மேலும் ஜெபித்தால் மட்டும் போதாது. பலியின் பிராயசித்த இரத்தம் பூசப்பட்டவர்களாயும் ஜெபிக்க வேண்டும். பலி மட்டுமல்ல, ஜெபம் மட்டுமல்ல, இரண்டுமே வேண்டும் என்பதே கருத்து. நமது கர்த்தராகிய இயேசுவும் தம்மைப் பலியாகச் செலுத்திய பின்னரே பிதாவின் வலது பாரிசத்தில் பரிந்து பேசுதலை தொடருகிறார். அல்லேலூயா!

**மேல் பலகை** பலிபீடத்திற்கு மேல் பலகை இல்லை. மேலே விறகும், பலியும் வைக்கவும் கீழே சாம்பல் கழியவும் ஒரு ஜல்லடையும் உண்டு. அதுவும் அதன் பாதி உயரத்தில் உள்ளது. தூபபீடமோவென்றால் அதன் மேல் பாகம் பலகையால் மூடி பொன் பொதியப்பட்டது.

**மேல்பலகையின் மேல் தூபவர்க்கம்** தூபபீடத்தின் மேல் ஒரு தூபகலசம் வைக்கப்படவேண்டுமென்று சொல்லப்படவில்லை. தூபபீடத்தின் மேல் பலகையின் மீது ஆரோன் காலையிலும், மாலையிலும் தூபவர்க்கம் செலுத்த வேண்டும் என யாத். *30 : 7-8* ல் உள்ளது. தூபபீடம் உண்டாக்கச் சொல்லும்போது "தூபங்காட்டுகிறதற்கு" எனத் தொடங்குகிறார். யாத். *30 : 1*. எனவே, ஆசரிப்புக் கூடாரத்திற்குள் தூபமேகம் எழும்பச் செய்வது தூபபீடத்தின் பொறுப்பாகும். ஒரு தனி தூபகலசத்தை தூபபீடத்தின் மேல் வைத்து அதில் தூபவர்க்கமிட்டுப் புகைப்பதாகவும் சிலர் எண்ணுகின்றனர்.

**இருப்பிடம்** *30 : 6*. பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரிக்கும் திரைச் சீலையின் முன் பரிசுத்த ஸ்தலத்தில் தூபபீடம் வைக்கப்பட வேண்டும். அது ஆசாரியன் அன்றாடம் பணி செய்யுமிடமானதால் தூபபீடம் தினமும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என அறியலாம். நமது ஊழியத்தில் ஜெப ஜீவியம் எத்தனை முக்கியம் என்று பாருங்கள். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். *1* தெச. *5 : 17*.

**தூபபீடத்தின் சேவை:** ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளே இருந்து ஜெபிக்கும் அனுபவத்தை இது காட்டும். ஜெபத்திற்காக மக்கள் ஆலயத்தில் வந்து விடுவது தொன்று தொட்டு வழக்கமாகும். சபையின் ஆலயங்கள் ஜெபவீடுகளாகும். அங்கே, எப்போதும் ஜெபம் நடைபெற வேண்டும். என் ஜெபவீட்டிலே என்றார். ஏசாயா *56 : 7*. அப்போஸ்தலரும், விசுவாசிகளும் ஜெப ஆலயத்தில் அனுதினமும் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருந்தார்கள். அப். *2 : 42, 46*

அதே வேளையில் தேவ ஊழியர்கள் வெளியே சென்று குடும்பங்கள் மற்றும் தனி நபர்களைச் சந்தித்து ஜெபிக்க வேண்டிய தேவைகள் உண்டு. அப்படியே பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் சில வேளைகளில் வெளியே போய் தூபம் காட்டினர். அதற்கு தூபபீடத்தை எடுத்துச் செல்லக்கூடாது. அதற்கு தூபகலசம் தான் பயன்பட்டது. எனவே, ஆலய ஜெபத்திற்கு தூப பீடமும், வெளி ஜெபத்திற்கு

தூபகலசமும் ஒப்பனையாகும். ஆரோன் வாதையை நிறுத்த ஜனங்களுக்குள்ளே தூபகலசத்தைக் கொண்டு போனார். எண். *16 : 46*.

**கூடாதவை:** தூபபீடம் சிறியதாயிருந்தாலும் பார்வைக்கு சதுரவடிவில் பலிபீடம் போன்ற தோற்றமுள்ளதாகும். எனவே, அதின் மேல் தகனபலி, போஜனபலி, பானபலி முதலியவற்றைப் படைக்கலாகாது என்றார் கர்த்தர். *30 : 9*. அவனவன் தனக்கு நியமிக்கப்பட்ட வேலைகளையே செய்ய வேண்டும். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், போதகர், மேய்ப்பர், மூப்பர், உதவிக்காரன், விசுவாசி முதலிய யாவரும் தன் தன் பணியை சரியாகச் செய்தால் இன்று கிறிஸ்தவத்தில் பிரச்சனைகள் இல்லாத சுதந்திரமான அமைப்புகளாய் திகழ்ந்திருக்கும். தனக்கு ஏற்படாதவைகளில் தலையிடு வோரும், தனக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை சரியாகச் செய்யாதவரும் நியாயத்தீர்ப்பு நாளில் வெட்கப்படுவர். *1* கொரி. *3 : 14-16*. அக்கினியானது பரிசோதிக்கும்*!* தூபபீடம் தூபம் எழுப்புவதற்கேயன்றி வேறு பணிகளுக்குள்ளதல்ல.

## அதிகாரம் 27

## தூபகலசம் - CENSER

தூபகலசம் என்ற ஒரு பொருளைச் செய்ய குறிப்பான தேவ கட்டளை இல்லை. ஆனால் ஒரு தூபகலசம் உபயோகத்தில் இருந்ததாகக் காண முடியும். தூபகலசமானது மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்ததாக எபி. *9: 3-4* -ல் காணலாம். மேலும் வெளி. *8 : 5* - ல் தூபகலசத்தில் பலிபீடத்து நெருப்பைப் போட்டு பூமியிலே கொட்டினதாகக் காண்கிறோம். ஒரு முறை இஸ்ரவேலர் மேல் தேவன் வாதையை அனுப்பின போது "மோசே ஆரோனை நோக்கி *:* நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலி ருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின் மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய் சபையினிடத்தில் போய், அவர்களுக்காக பாவ நிவிர்த்தி செய்," என்றார். எண். *16 : 46*. இதிலிருந்து நாம் அறியக் கூடியது;

*1.* தூபகலசம் பிரதான ஆசாரியனுடைய பொறுப்பில் இருந்தது. ஜெபிக்கிறவன் நமது பிரதான ஆசாரியராகிய இயேசுவின் கைகளில் அவர் சித்தப்படி இயங்க வேண்டும் என்பதே இதன் கருத்து.

*2.* அது ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து எடுத்து பிற இடங்களுக்கு கொண்டு செல்லக்கூடிய அளவில் பளு குறைந்ததாக இருந்தது. ஒருவன் இயேசுவால் எடுத்துப் பயன்படுத்தத்தக்க விதம் உலக பாரங்கள் இல்லாதவனாயிருக்க வேண்டும். எபி. *12 : 1*

*3.* பலிபீடத்தின் அக்கினியைத்தான், அதில் போட வேண்டும். பலி பீடத்து அக்கினி தேவனிடமிருந்து வந்ததால் (லேவி. *9 : 24*). இது பரிசுத்த ஆவியாகிய அக்கினிக்கு ஒப்பனை. ஜெபிக்கிறவன் ஆவியில் அனலுடன் ஜெபிக்க வேண்டும்.

*4.* தூபவர்க்கத்தின் மேல் அக்கினியை அல்ல அக்கினியின் மேலே தான்

தூபவர்க்கத்தைப் போட வேண்டும். தியான ஜெபத்தில் ஆவியில் அனல் கொண்ட பின்னரே நாவினால் விண்ணப்பம் பண்ண வேண்டும். சங். *39 : 3.*

5. பாவ நிவிர்த்திக்கும் வாதைகள் விலகவும் தூபம் காட்டினார்கள். நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டு, எல்லா வாதை வியாதிகள் நீங்கவும் ஜெபிக்க வேண்டும். யாக். *5 : 14, 15.*

**தூபம் மகா பரிசுத்த ஸ்தலத்தில்** லேவி. *16 : 3, 12, 13.*

பிரதான ஆசாரியனாகிய ஆரோன் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும் முன்னே தூபகலசத்தை எடுத்து அதில் பலிபீடத்தின் நெருப்புத் தழலைப் போட்டு அதின் மேல் சுகந்த தூபவர்க்கம் போட்டு தூபகலசத்தை மகா பரிசுத்த ஸ்தலத்தின் உட்புறத்தில் கொண்டு வந்து அதின் புகையால் அவ்வறையை நிரப்ப வேண்டும். எனவே, மிகுதியான ஜெப தூபமின்றி மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க இயலாது. எபி. *4 : 16*ல் தைரியமாய் கிருபாசனத்தண்டை சேரக்கடவோம் என்பதற்கு ஆவியில் நிறைந்த ஜெபத்துடன் தைரியம் என்பதே பொருத்தம். ஜெபதூபமில்லாமல் தைரியம் காண்பித்தவர்கள் அன்றும் இன்றும் அடிவாங்குவது உறுதி.

**அந்நிய அக்கினி கூடாது - மூன்று அக்கினிகள்:** ஆசரிப்புக் கூடாரத்தில் அக்கினி தோன்றும் இடங்கள் மூன்று ஆகும்.

**1. பலிபீடத்தின் அக்கினி :** அது தேவனிடத்திலிருந்து இறங்கி வந்தது. லேவி. *9 : 24.* எனவே, இது பிதாவாகிய தேவனுக்கு ஒப்பனை. நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாக இருக்கிறாரே. எபி. *12 : 29.* இது விசுவாசிகளின் தாபரமாகிய பிராகாரத்தில் இருப்பதால் விசுவாசிகளைப் பலியினால் சுத்திகரிக்கிறதாகவும் காணலாம். அது சுட்டெரிப்பின் ஆவி. ஏசாயா *4 : 3.*

**2. குத்து விளக்கின் அக்கினி :** பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள விளக்கின் அக்கினியானது சுட்டெரிப்பதற்காக அல்ல, பிரகாசம் கொடுக்க வைக்கப்பட்டதால் இதன் அக்கினி இயேசு கிறிஸ்துவுக்கே ஒப்பனை. யோ. *1:9, 9 : 4.* இயேசு உலகத்திற்கும், சபைக்கும் ஒளியாக இருக்கி றார். பரிசுத்த ஸ்தலம் ஆசாரிய ஊழியத்திற்கு அடையாளமானதால் இந்த அக்கினி இயேசுவுக்கே ஒப்பனை. இது சுட்டெரிப்பதற்காக அல்ல என்றாலும் அதன் திரியும் எண்ணெயும் எரிந்து செலவாகிறது. நாம் பிரகாசிப்பதற்கு இவ்வாறு நாம் எரிந்து செலவாகிவிட வேண்டும். 2தீமோ. *4 : 6.*

**3. தூபபீடம் மற்றும் தூபகலசத்தின் அக்கினி :** இதில் தூபவர்க்கம் இடும் போது சுகந்த தூபம் எழும்புவது போல பரிசுத்த ஆவியாகிய அக்கினி, தேவ மகிமையின் வாசனையை வீசச் செய்கிறதற்கு ஒப்பனை. எனவே, தூபகலசத்திலும் தூபபீடத்திலும் தோன்றிய அக்கினி பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்பனை. இவ்வாறு ஆசரிப்புக் கூடாரத்தின் அக்கினியிலும் தேவ திரித்துவம் வெளிப்பட்டது. இதன் ஸ்தானம் பிதாவின் பகுதியாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதால் தூபபீடத்தின் அக்கினி பரிசுத்த ஆவியானவருக்கே பொருந்தும். ஆனால்

குத்து விளக்கிற்கும், தூப கலசத்திற்கும், தூபபீடத்திற்கும் பலிபீடத்திலிருந்து தான் அக்கினியை எடுக்க வேண்டும். குமாரனும் பரிசுத்த ஆவியும் தேவனிடத்திலிருந்தே புறப்பட்டு வந்தனர். யோவான். *17 : 3*, அப். *2 : 33*. பலிபீடத்து அக்கினி தவிர வேறே அக்கினிகள் அந்நிய அக்கினி என்னப்பட்டது. லேவி. *10 : 1*

**அந்நிய கலசம் - முதலாவது போட்டி** லேவி. *10:1*.

ஆசரிப்புக் கூடாரத்தின் தூபபீடத்தின் மேல் வைக்கிற தூபகலசமேயல்லாமல் வேறே கலசங்களையும் உண்டாக்கக் கூடாது. ஆனால் ஆசரிப்புக் கூடாரம் நிறுவப்பட்ட அதே சீனாய் மலையடியில் ஆரோனின் இரண்டு குமாரராகிய நாதாபும் அபியுவும் தங்கள் தங்கள் தூபகலசங்களில் அந்நிய அக்கினியைப் போட்டு தேவ கோபத்தால் அக்கினியால் பட்சிக்கப்பட்டனர். இதில் நாம் அறியலாவது :

1. பிரதான ஆசாரியனின் குமாரரே போட்டியைத் துவக்கினர்.
2. பிரமாணம் கொடுக்கப்பட்ட இடத்திலேயே துவக்கினர்.
3. சொந்தமாகப் போட்டி தூபகலசங்களைச் செய்தனர்.
4. பலிபீடத்தில் அக்கினி இருந்த போதிலும் அதிலிருந்து அக்கினியை எடுக்காமல் அந்நிய அக்கினியை எடுத்தனர்.
5. பலிபீடம் ஆசாரியனின் அதிகாரத்தில் இருந்ததென்றும், அதின் அக்கினியை திருடவிடாததினால் சொந்தம் வழியைத் தேடினர் என்றும் அறியலாம்.
6. அவர்கள் தவறான கலசத்துடன் பரிசுத்தஸ்தலமும் கடந்து கர்த்தருடைய சன்னதி வரையில் சென்றனர்.
7. அக்கினி அந்நியமல்லாதிருந்தாலும் கூட கலசம் அந்நியமானால் அதுவும் தேவனுக்கேற்றது அல்ல. பழைய துருத்திகளில் புதிய ரசத்தை வார்த்து வைப்பதில்லை. மத். *9 : 17*. இரண்டுமே தேவனுக்கேற்றதாயிருப்பதாக. நமது ஆவி, ஆத்தும, சரீரமும், ஜெபமும், அக்கினியும் கூட தேவனுக்கேற்றதாயிருப்பதாக.
8. அவர்களின் சட்டைகள் கருகவில்லை. வசனம் *5*. ஆள் மட்டும் செத்தது.

**இரண்டாம் போட்டி :** ஆசரிப்புக் கூடாரம் துவங்கின இடத்திலேயே இந்தப் பெரிய அடி ஆரோனின் குமாரருக்கே விழுந்த போதிலும் போட்டி மனம் ஒழியவில்லை. சீனாய் பாளயத்திலிருந்து அதிக தூரமல்லாத ஒரு இடத்தில் வந்த போது லேவி கோத்திரத்தைச் சார்ந்த கோராகும் ரூபன் வம்சத்தாராகிய தாத்தானும் அபிராமும் ஓனும் சேர்ந்து புரட்சி செய்தனர். வேறு *250* சபைத்தலைவரும், பிரபலமானவர்களும் கூட சேர்ந்து கலகம் முற்றியது. அவர்கள் வெண்கல தூபகலசங்களை உண்டு பண்ணி (எண். *16 : 39*) தூபங்காட்டப் போட்டிக்கு வந்தனர். தேவன் கோபித்தார். தேவன் தலையிடாதிருந்தால் மோசேயும் ஆரோனும் நிர்ப்பந்தமான முடிவை சந்தித்திருப்பார்கள். கொசுவைப் போல நசுக்கி எறியப்பட்டிருப்பர். அழைத்த தேவனோ! தாம் உண்மையுள்ளவர் என்று நிரூபித்தார். கலா. *6 : 7*. எதிராளிகளை பூமி பிளந்து விழுங்கப் பண்ணினார். தேவன் தெரிந்து கொண்டவர்களுக்கு விரோதமாக எழும்புகிறவர்களுக்கு ஐயோ! இங்கே அவர்கள் பயன்படுத்திய கலசம்

வெண்கலமாக இருந்தது. அதன் அக்கினியும் அந்நிய அக்கினியாகும்.

**மூன்றாம் போட்டி** *2*. நாளாகமம் *26 : 16-20*. உசியா ராஜாவுக்கு செல்வமும் புகழும் பெருகிய போது ஆசாரியர் செய்கிறபடி ஆலயத்தில் தூபம் காட்ட வேண்டுமென்ற ஆசை வந்தது. கேடு வரும் பின்னே, மதிகேடு வரும் முன்னே! அவன் போட்டி தூப கலசத்துடன் உள்ளே புகுந்தான். பலசாலிகளாகிய *80* ஆசாரியர்கள் உள்ளே புகுந்து அவனது செயலை எதிர்த்தனர். இங்கேயும் தேவன் குறுக்கிட்டார். உசியாவின் நெற்றியில் குஷ்டம் கண்டது. அவன் வெட்கப்பட்டு வெளியே போக தீவிரப்பட்டான். தேவன் தலையிடாதி ருந்தால், *80* ஆசாரியர்களை மேற்கொள்ள முடியாத அரசன் ராணுவத் தை வரவழைத்திருப்பான். காயீனின் பலிபீடம் போல் அங்கு கோரக் கொலைகள் நடந்திருக்கும். அவனவன் எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாதே. இவ்வாறு தூபகலசம் குறித்த மூன்று போட்டிகள் வேதாகமத்தில் உள்ளது. பிரியமானவர்களே, நமக்கு இல்லாத காரி யங்களில் தலையிடாமல் நாம் நியமிக்கப்பட்ட வேலைகளை மாத்திரம் செய்வோமாக.

**தூபகலத்தின் இருப்பிடம் :** தூபகலசத்தின் இருப்பிடம் குறித்து யாத்திராகமத்தில் எதுவும் கூறப்படவில்லை. எபிரேய நிரூப *(9 : 3, 4)* ஆசிரியர் அதைத் தெளிவுபடுத்தியுள்ளார். அதன் படி தூபகலசம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தது. அதன் இருப்பிடம் அதனை மேன்மைப்படுதெதியுள்ளது. விருந்திலோ, விழா மேடையிலோ, அலுவலகத் திலோ அமரும் இடம் ஆளின் முக்கியத்தைப் பொறுத்திருக்கும். தூபகலசம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பது கீழ் வரும் உண்மைகளை வெளிப்படுத்தும்.

*1*. இயேசு நமக்காக பிதாவினிடம் பரிந்து பேசுவதை இது சித்தரிக்கிறது.

*2*. தூபகலசத்தைப் பிரயோகிக்கும் அதிகாரம் பிரதான ஆசாரிய னிடம் இருந்ததும் பிரதான ஆசாரியனாகிய இயேசுவின் ஜெபத்திற்கு நிழலாகும்.

*3*. மகா பிரதான ஆசாரியன் பாவ பரிகார இரத்தத்துடன் வருடத்தில் ஒரு முறை மட்டுமே மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க அனுமதிக் கப்பட்டார். ஆனால் தூபபீடம் அதற்குள்ளே இருப்பதால் தேவைப்படும் போதெல்லாம் அதை எடுக்க உள்ளே செல்ல வேண்டியிருக்கிறது. இதற்காக அவர் தேவைப்படும்போதெல்லாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் செல்ல அனுமதிக்கப்பட்டார் என்று நியாயமாக நிதானிக்கலாம். பலி யானது ஒரு தடவையும் ஜெபமானது பல தடவையும் ஏறெடுக்கப்பட வேண்டும். எனவே புதிய ஏற்பாட்டு சபையின் "தைரியமாய் கிருபாசனத்தண்டை சேரக்கடவோம்" என்ற சிலாக்கியம் தூபகலசத்தை எடுக்க அவ்வப்போது கிருபாசனம் இருக்கிற அறையில் ஆசாரியன் நுழையும் அனுபவத்தில் மறைந்திருந்தது. வேறு காரியத்திற்காகச் செல்ல அனுமதி இல்லை. எனவே ஜெப ஜீவியத்தை இது மிகவும் உற்சாகப் படுத்துகிறது.

## அதிகாரம் 28

## சுகந்த தூபவர்க்கம்

1. தேவன் சுகந்த வாசனையை விரும்புகிறார். துர்நாற்றத்தை வெறுக்கிறார். அவரது சுகந்த வாசனைப்பிரியம் பிரளயம் முடிந்த உடனே நோவாவின் பலியில் வெளிப்பட்டது. ஆதி. *8 : 21.* எனவே கர்த்தருக்குச் செலுத்தும் பலிகள் சுகந்தவாசனை தரும் தூபவர்க்கத்துடன் செலுத்தப்பட்டு வந்தது என மற்ற வசனங்களிலிருந்தும் காணலாம். யாத். *29 : 18,* லேவி. *1 : 9, 13, 17; 6 : 15; 3 : 5;* எண். *15*ம் அதிகாரம்

2. மேலும் போஜனபலியில் தூபவர்க்கம் போட வேண்டும் என்ற சட்டமும் (லேவி. *2 : 2, 15)* கொடுக்கப்பட்டது.

3. இது நாம் கர்த்தருக்குப் பிரியமான ஜீவபலியாக இருக்க வேண்டும் என்ற இரகசியத்தை வெளிப்படுத்துகிறது. தேவ சித்தப்படிச் செய்வதே அவருக்குப் பிரியமானது. இயேசு தம்மைத்தாமே சுகந்த வாசனையான பலியாக ஒப்புக் கொடுத்தார். எபே. *5 : 2.* இயேசு தேவசித்தத்தை நிறைவேற்றியதே சுகந்த வாசனை.

4. நாம் செலுத்தும் காணிக்கைகளை சுகந்த வாசனையான பலியாக பவுல் விளக்கியுள்ளார். பிலி. *4 : 18.*

5. இயேசு கிறிஸ்து தாமே சுகந்த வாசனையான தூபவர்க்கமாயிருக்கிறார். எனவே, அவரை அறிகிற அறிவின் வாசனையை நாம் உலகத்தில் வீச வேண்டும் என்றார் பவுல். 2 கொரி. *2 : 14-15.*

6. பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடு கூட மிகுந்த தூபவர்க்கம் செலுத்தப்படுவதாக வெளி. *8 : 3*-ல் காண்க. எனவே, ஜெபங்கள் வெறுமையாய் தேவனிடம் போவதில்லை. ஆனால் இந்த தூபவர்க்கம் என்னவென்று வெளிப்படவில்லை. புதிய ஏற்பாட்டு சபையின் ஜெபங்களில் இவ்வாறு எழுத்தின் படியான தூபவர்க்கம் செலுத்தப் படுவதாக ஒரு உபதேசம் இல்லை. சபை எடுத்துக் கொள்ளப் பட்ட பின்பு நிகழ்வதாகும் வெளி. *8* ன் தூபவர்க்கம். இது பழைய ஏற்பாட்டு அனுபவமானதால் இரகசிய வருகைக்குப் பின்பு ஒரு வாரமாகிய ஏழு ஆண்டுகள் (தானியேலின் *70* ம் வாரம்) நியாயப் பிரமாணத்தின் முடிவு கால நிகழ்ச்சிகளாகும் என்பதை உறுதிப் படுத்துகிறது. வெளி. *4 : 2* முதல் *19 : 10* வரை உள்ள, கண்ணும் மனமும் அஞ்சுகின்ற சம்பவங்கள் யூதரின் கடைசியான ஒரு வாரமாகிய *7* ஆண்டுகளின் நிகழ்ச்சி களாகும்.

7. தூபவர்க்கம் நெருப்பில் போடப்பட வேண்டும். அப்போது தான் அது வாசனை தரும். நெருப்பு கஷ்டங்களைக் குறிக்கும். *(1* பேதுரு *4 : 12, 13).* விசுவாசிகள் கஷ்டங்களின் வழியாய் கடந்து போய் தான் வாசனை வீச வேண்டும். யோசேப்பு, யோபு, பவுல் முதலிய எல்லா நீதிமான்களும் அப்படியே வாசனை வீசினர். ஏன்*?* இயேசு தாமே அன்று கஷ்டத்தின் தீச்சூளை வழியாய் கடந்து போய் இன்று

உலகமெங்கும் இரட்சிப்பின் வாசனையை வீசிக் கொண்டிருக்கிறார். அல்லேலூயா! ஒப்பனையாக அல்ல எழுத்தின்படியாகவே மூவர் (சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ தானி. *3 : 16-21)* அக்கினியிலிடப்பட்டு பாபிலோன் தேசமெங்கும் வாசனை வீசிய ஒரு சம்பவத்தை வேதம் தந்திருக்கிறதும் ஆச்சரியமே!

8. குழந்தை இயேசுவுக்கு கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் காணிக்கையாகப் படைத்த முப்பொருட்களுள் தூபவர்க்கமும் ஒன்றாகும். இதிலிருந்து தூபவர்க்கமானது தேவனுக்குப் படைக்கத் தகுந்ததொன்று எனப் புலனாகிறது. நமது ஜெப ஜீவியமுள்ள ஆராதனையானது தேவ னுக்கு நாம் படைக்கின்ற காணிக்கையாகவும் உள்ளது. மத். *2 : 11.* தேவன் அதைப் பிரியமாக ஏற்றுக் கொள்கிறார்.

**9. தூபவர்க்கத்தின் கலவை** (யாத். *30 : 34-38)*

இத்தனை மேன்மையான தூபவர்க்கம் தாவரங்களிலிருந்தே எடுக்கப்பட்டது. ஆசரிப்புக் கூடாரப்பணியில் உலோகங்கள் மட்டுமல்ல சீத்திம் மரமும் பயன்பட்டதை ஏற்கனவே கண்டோம். இப்போது, தூப வர்க்கத்தின் படைப்பிலும் தாவரப் பிசின்கள் இடம் பெற்றிருப்பதைக் காண்பீர். அவையாவன .

**அ. சுகந்த வெள்ளைப்போளம் (STACTE)** மிர் என்கிற தாவரத்திலிருந்து கிடைக்கிறது. (MYRRH) இந்த தாவரத்திலிருந்து ஒரு வகை வாசனையுள்ள எண்ணெயும் கிடைக்கிறது. ஒட்டும் தன்மையுடன் பசை போன்ற இது காய்ந்து விட்டால் வாசனையுள்ள திடப் பொருளாகிறது. இதன் ஒட்டும் தன்மையை ஒருவரை ஒருவர் இணைக்கின்ற அன்புக்கு ஒப்பனையாகக் கொள்ளலாம். *1* கொரி. *13.* இயேசுவுக்கு காணிக்கையாக வந்த பொருட்களுள் வெள்ளைப் போளமும் ஒன்றாகும்.

**ஆ. குங்கிலியம் (ONYCHA)** இது ஒரு வகை மரப்பிசின் ஆகும். இதற்கு மருத்துவப் பண்பு உள்ளதென சொல்லப்படுகிறது. கேடான அணு கிருமிகளை அழிக்கும் இதன் தன்மை தூபவர்க்கத்தின் ஆரோக்கியத் தைப் பேணும் பண்பை வெளிப்படுத்தும். தூபவர்க்கமாகிய ஜெப ஜீவியத்தில் பாவ விஷக்கிருமிகளை அழித்து வியாதிகளைக் குணமாக்கும் வல்லமையுள்ளதென்பதையும் குறிப்பிடுகிறது.

**இ. அல்பான் பிசின் (GALBANUM)** எபிரேய மொழியில் கெல்பனா Chelbnaw செழிப்பான, கொழுப்பான என்ற பொருளுடைய இதுவும் பெர்சியா நாட்டிலுள்ள பெருலா Ferula இனத்தைச் சார்ந்த ஒரு மரப்பிசின் ஆகும். இதன் செழிப்பும் கொழுமையுமான அனுபவ மானது ஜெப ஜீவியத்தின் வெற்றிக்கும் செழிப்புக்கும் ஒப்பனையாகும். ஆம்! ஜெப தூபமுள்ளவன் உலகத்தை ஜெயிப்பான்.

**ஈ. சாம்பிராணி (FRANKINCENCE)** பென்சாயின் அல்லது ஜாவனீஸ் மரத்திலிருலிந்து வடியும் மிகக் கடும் வாசனையுள்ள பிசின் ஆகும் இது. இது பாஸ்வலியா இனத்தைச் சார்ந்த மரமாகும். இதற்கும் விஷ அணுக்கிருமிகளைக் கொல்லும் மருத்துவ சக்தியுண்டு. இதனை காய வைத்து இடித்துத் தூளாக்கி நெருப்பிலிட்டால் நல்ல வாசனை வரும்.

**10. செயல் முறை A**. (அ) மேற் குறிப்பிட்ட நான்கு பொருட்களை யும் சம நிறையாக எடுக்க வேண்டும். அளவில் கூடுதல் குறைவு இருக்கலாகாது. இது தேவ பிள்ளைகள் தேவ சமூகத்தில் சமமாக உள்ளனர், எல்லாரும் தேவபிள்ளைகள், தேவன் முகபட்சத்தை விரும்பார். உண்மையாய் ஜெபிக்கிற யாவருக்கும் வித்தியாசமின்றி பதிலளிக்கிறார்; தன் பாவங்களை அறிக்கையிட்டு இயேசுவை அண்டிக் கொள்ளுகிற யாவருக்கும் இன ஜனநாடு, ஐசுவரியம், கல்வி வித்தியாசமின்றி இரட்சிப்பை அளிக்கிறவர் என்பதற்கு அத்தாட்சியாகும். சபைகளில் காணப்படுகிற முகபட்சங்களையெல்லாம் அப். யாக்கோபு கண்டிக்கிறதைப் பாருங்கள்! யாக். *2 : 1-4* "என் சகோதரரே, மகிமையான நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக் கொள்ளாதிருப்பீர்களாக. ஏனெனில் பொன் மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற ஒரு மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும் போது, மினுக்குள்ள வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில் உட்காரும் என்றும், தரித்திரனைப் பார்த்து: நீ இங்கே நில்லு, அல்லது இங்கே என் பாதபடி யண்டையிலே உட்காரு என்றும் நீங்கள் சொன்னால், உங்களுக்குள்ளே பேதகம் பண்ணி, தகாத சிந்தனைகளோடே நிதானிக்கிறவர் களாயிருப்பீர்களல்லவா?"

(ஆ) உள்ளவன் இல்லாதவனுக்கு கொடுத்துத் தாங்குகிற ஒரு சமநிலைப் பிரமாணத்தைப் பவுல் கூறுவதையும் காணீர். 2 கொரி. *8 : 13, 14, 15.*

(இ) தேவன் யாவருக்கும் காற்று, மழை, வெயில் யாவையும் நல்லவன் கெட்டவன் என்ற வித்தியாசம் பாராமல் கொடுக்கிறார். தெய்வீக சமநிலையை இயற்கையிலேயே காணலாம். மத். *5 : 45.* நல்லோருக்கும் தீயோருக்கும் மழையையும் வெயிலையும் கொடுக்கிறார். இஸ்ரவேலருக்கு மன்னாவைப் பொழிந்த போதும் கூடுதல் பொறுக்கியவன் வீட்டில் வந்து அளந்த போது ஒரு ஓமர் மட்டுமே இருந்தது. யாத். *16 : 16-18.*

(ஈ) நியாயத்தீர்ப்பிலே முகபட்சம் காட்டக் கூடாது என்பது தேவவிதி. மிகுதியானவர்களைச் சார்ந்து நீதியைப் புரட்டக் கூடாது, தரித்திரன் எல்லா உதவிக்கும் பாத்திரன் என்றாலும், நியாயத்திலே அவன் முகத்தைப் பார்க்க வேண்டாம் என்றார். யாத். *23 : 2, 3.* தேவன் தாமே முகம்பாராமல் அவனவனுடைய கிரியைகளின் படி அவன வனுக்குப் பலன் அளிப்பார். வெளி. *20 : 12.*

**B**. தைலக்காரன் செய்வது போல அதற்கு பரிமள மேற்ற வேண்டும். இங்கே, தைலக்காரனுடைய கைத்திறமை வெளிப்பட வேண்டும். கிறிஸ்தவ ஜீவியத்தில் வேதம் யாவருக்கும் ஒரே மாதிரியாக

இருந்தாலும் அவரவர் அதை கைக்கொள்ளும் அளவு, விசுவாசம், பரிசுத்தம், அன்பு ஆகியவற்றின் அளவின் படி பரிமளம் கூடவும் குறையவும் இருக்கும். எல்லா விசுவாசிகளும் ஒரே மாதிரி இல்லை. எல்லா ஊழியரும் கூட அப்படியில்லை. இங்கே தைலக்காரன் இயேசு ஆவார். அவர் செய்தது போன்ற ஜீவியம் செய்ய வேண்டும்.

C. துப்புரவான பரிசுத்த தூபவர்க்கமாக்க வேண்டும். கலப்படமில்லாத ஜெபம், பரிசுத்தம், உண்மை, உபதேசம் ஆகியுவற்றிற்கு இது ஒப்பனை.

D. பொடியாக இடிக்க வேண்டும். கரடு முரடான அதன் தோற்றங்கள் பொடியாக்கும் போது மறைகிறது. ஏற்றத்தாழ்வுகள் ஒழிகிறது. பெருமை அற்று (பொடி) தாழ்மை உண்டாகிறது. நான்கு வகை பிசின்களும் ஒன்றாகிறது. தனித்தனியே பிரிக்கவோ வித்தியாசம் காட்டவோ முடியாதபடி ஆகிறது. ஒரு மனம், ஒற்றுமை அங்கே உண்டு. அப். *2 : 1; 1* கொரி. *1 : 10;* பிலி. *2 : 1-3*. இதற்கு ஏற்றவழி இடி தான்= உபத்திரவங்களே ஆகும். நமது இரட்சிப்பின் அதிபதியே உபத்திரவங்களினால் பூரணராயிருக்க, நாம் எம்மாத்திரம்! எபி. *2 : 10*.

*11.* மகா பரிசுத்தமான இந்த தூபவர்க்கம் கண்ட இடங்களில் இருக்கலாகாது. அது மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட வேண்டும். நமது ஜெபஜீவியம் வெளி வேஷமானதாக அல்ல, ஆழமான, உள்ளான சந்நிதி ஸ்தானத்தில் இணைந்திருக்க வேண்டும். மனிதர் பார்வைக்கு மறைவாக இருத்தல் வேண்டும்.


*12.* இந்த தூபவர்க்கத்தை எவரும் தனக்காக செய்யக்கூடாது. சுயலாபத்திற்காக ஊழியம் செய்தல், சபையில் சேருதல் முதலியவை தேவனுக்குப் பிரியமல்ல. அப்படியே முகருகிறதற்காகவும் செய்யக் கூடாது. முகருதல் மனுஷப் பிரியத்தையும் புகழையும் நாடுதலைக் குறிக்கும். மனிதரைப் பிரியப்படுத்த ஜெபம், பிரசங்கம், நன்கொடை எல்லாம் அருவருப்பு. தேவனுக்காகச் செய்யுங்கள் கலா. *1 : 10* "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்தப் பார்க்கிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லவே."

*13.* முகருகிறதற்காகச் செய்கிறவனை கொலை செய்ய வேண்டுமாம். மனுஷப்பிரியத்திற்காக சத்தியத்தை மறைத்தல் உட்பட எல்லாமாய்மாலங்களும் கொடிய தண்டனையை சந்திக்குமாம். *1* கொரி. *3 : 13*. "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்."

## மகா பரிசுத்த ஸ்தலத்துப் பணி முட்டுகள்

## அதிகாரம் 29

## உடன்படிக்கைப் பெட்டி



ஆசரிப்புக் கூடாரத்திற்குள் நுழைந்தால் சந்திக்கப்படும் 6 - வது பணி முட்டும் மகா பரிசுத்த ஸ்தலத்தின் முதலாவது பணி முட்டுமாகும் உடன்படிக்கைப் பெட்டி. ஆசரிப்புக் கூடாரத்தின் சகல மகிமையும் இப் பெட்டியில் அடக்கமாயிருந்தது எனலாம். இஸ்ரவேலரின் நம்பிக்கையும் பயங்கரமும் இப்பெட்டியாக இருந்தது. இப்பெட்டியின் மகிமைகளை விளங்கச் செய்த வண்ணம் அதன் பெயர்கள் அமைந்து விட்டது.

**1. பெட்டி.** யாத். *25 : 10* Ark

சாதாரணமாக, பொருட்களை மறைத்து மூடிவைக்கும் ஒரு அடைப் புள்ள பொருளை பெட்டி எனலாம். உடன்படிக்கைப் பெட்டியும் சில தெய்வீகப் பொருட்களை மறைத்து வைப்பதால் இப்பெயர் வந்தது. மோசேயின் கற்பலகைகள் இரண்டும், மன்னா போட்டு வைத்த பொற் பாத்திரமும் ஆரோனின் துளிர்த்த கோலும் அதற்குள் இருந்தது. எபி. *9 : 4;* யாத். *25 : 21; 16 : 33.* அப்படியே, நாமும் தேவ இரகசியங்களின் உக்கிராணக்காரராவோம். கிறிஸ்துவின் விசேஷமான கிருபைகளாகிய பொக்கிஷங்கள் மண்பாண்டமாகிய மக்களில் மறைந்திருக்கிறது. உடன்படிக்கைப் பெட்டி மரத்தினால் செய்யப்பட்டதாலும் பெட்டி என்ற பெயர் பொருத்தமே. இது நாம் மண்பாண்டமாக இருக்கிறோம் என்பதை யல்லவோ நினைப்பூட்டுகிறது?

**2. சாட்சிப் பெட்டி.** யாத். *25 : 22.* Ark of Testimony

சாட்சி என்பதற்கு அத்தாட்சி, ருசு, உறுதி மொழி முதலியன பொருளாகும். சீஷர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு சாட்சி களாயிருந்தனர். அப். *3 : 15.* யேகோவா தான் தேவன் என்பதற்கு இஸ்ரவேலர் சாட்சி எசா. *43 : 12.* யோவான் அந்த ஒளியைக் குறித்து சாட்சி கொடுத்தான். யோ. *1 : 7.* பரிசுத்த ஆவியினால் பெலனடைந்து நாம் சாட்சிகளாக வேண்டும். அப். *1 : 8.* உடன்படிக்கைப் பெட்டியும் தேவ நாமத்திற்கு சாட்சியாகும்.

மேலும் தேவ கற்பனைகளுக்கு 'சாட்சி' என்ற பொருள் உண்டு. உடன்படிக்கைப் பெட்டியில் மோசேயின் கற்பலகைகள் வைக்கப்பட்டதாலும் அது சாட்சிப் பெட்டியாகும். தேவ கற்பனைகளை சாட்சி என்னப்பட் டுள்ளதை சங். *119 : 2, 14, 24, 31* முதலிய வசனங்களில் காணலாம். தேவ வசனங்கள் நமக்குள்ளே நிலைத்திருப்பதால் நாம் அந்த சாட்சிப் பெட்டிகளாக உலகத்தில் விளங்க வேண்டும். யோவான் *15 : 26, 27.*

இயேசு கிறிஸ்து தாமே உலகத்தில் தேவனுடைய சாட்சியாக வந்தார். அவர் தேவனுடைய வார்த்தை. வார்த்தையானது தேவனைப் பற்றிய சாட்சியானதாலும் சாட்சிப்பெட்டி என்பது அவருக்கு மிகவும் பொருந்துகிறது.

தேவனுடைய மகத்துவ வல்லமைக்கு இந்த பெட்டி சாட்சியாக இருந்து வந்துள்ளது. தேவனுடைய அற்புதங்களெல்லாம் இப்பெட்டியின் மூலமாகவே விளங்கி தேவ சாட்சியாக அமைந்த வரலாற்றை வேதாகமம் எங்கும் காணலாம்.

**3. உடன்படிக்கைப் பெட்டி Ark of the Covenant**

நம்முடைய "தேவன் உடன்படிக்கையின் தேவனாவார்". எண். *10 : 33.* நோவா, ஆபிரகாம், மோசே, ஆகியவர்களுடன் உடன்படிக்கை செய்துள்ளார். மோசே மூலம் இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கையின் பிரமாணங்களாகும் பத்து கட்டளைகள். அந்தப் பத்து கட்டளைகளையும் எழுதியிருந்த இரண்டு கற்பலகைகளையும் இப்பெட்டிக்குள்ளே வைத்திருந்ததால் அது உடன்படிக்கைப் பெட்டி எனப்பட்டது.

1. புதிய ஏற்பாட்டில் இயேசு தமது இரத்தத்தினாலே நம்மோடு புதிய உடன்படிக்கை செய்திருக்கிறார். மத். *26 : 28.* எனவே, புதிய ஏற்பாடு ஒரு உடன்படிக்கையாகும்.
2. ஞானஸ்நானம் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாகும். *1*பேதுரு *3 : 21.*
3. இயேசு கிறிஸ்து தாமே தேவன் மனிதரோடு செய்த உடன்படிக்கையின் பெட்டியாகத் திகழ்கிறார். அவர் உடன்படிக்கையின் காரணரும் புதிய ஏற்பாட்டு உடன்படிக்கையின் மத்தியஸ்தருமா யிருக்கிறார் என எபிரேயர் *(9 : 15)* நிரூபகர் அழுத்தமாய்க் கூறினார்.
4. இயேசுவின் இரத்தமே உடன்படிக்கையாயிருக்கையில், அந்த இரத்தம் கொடுத்தவர் உடன்படிக்கையாக இருப்பது எத்தனை உறுதி?
5. ஞானஸ்நானமே உடன்படிக்கையாயிருக்கையில், அதை ஏற்படுத்திய இயேசு அல்லவோ உடன்படிக்கைப் பெட்டி?

உடன்படிக்கைக்கு ஒப்பந்தம் என்று பொருள். என்ன ஒப்பந்தம்? ஆபிரகாமிடம் நான் இந்த பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். நீயும் உன் சந்ததியும் என்னைச் சேவிப்பீர்கள் என்பதற்கு அடையாளமாக விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் ஏற்பாடு தான் உடன்படிக்கை - ஒப்பந்தம். ஆதி. *15 : 18; 17 : 11.* "உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்த சேதனம் பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன் படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்".

உன்னதப்பாட்டில் இதற்கு பொருத்தமான விளக்கம் உண்டு "என் நேசர் என்னுடையவர்; நான் அவருடையவள்." உன்னதப்பாட்டு *2 : 16.* உடன்படிக்கைப் பெட்டியும் அப்படியே தேவனுக்கும் இஸ்ரவேலருக்குமிடையே உடன்படிக்கையின் அடையாளமான பெட்டியாகும்.

**4. கர்த்தரின் பெட்டி** யோசுவா *3 : 13.* Ark of the Lord

இதற்கு தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி என்றும் பெயர் உண்டு. நியா. *20 : 27.* கர்த்தருடையது என்று பொருள். ஏன் அது கர்த்தருடையதாயிற்று?

1. கர்த்தருடைய ஊழியத்திற்காக உண்டாக்கப்பட்டதால்
2. கர்த்தருடைய சித்தப்படியும் அளவுகளின்படியும் செய்யப்பட்டதால்
3. கர்த்தருடைய கூடாரத்திற்குள் இருப்பதால்
4. கர்த்தருக்காக அது அபிஷேகம் செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டதால் யாத். *30 : 26-28.*

5. கர்த்தரின் வல்லமையும் அற்புதமும் அதில் விளங்கச் செய்திருப்பதால். சங். *132 : 8.*

6. கர்த்தருடைய பொக்கிஷங்களாகிய மன்னா, துளிர்த்த கோல், நியாயப் பிரமாண கற்பலகைகள் ஆகியவை அதனுள் இருப்பதாலும் அது கர்த்தருடையதே. எபி. *9 : 4.* அவ்வாறே நாமும் அவருடையவர்களே. அவருடைய இரத்தத்தால் மீட்டுக் கொள்ளப்பட்டதாலும், அவருடைய வசனமாகிய பிரமாணம் நமக்குள் இருப்பதாலும், நாம் அபிஷேகம் பண்ணப்பட்டதாலும் நாம் அவருடைய புண்ணியங்களை அறிவிக்க தெரிந்து கொள்ளப்பட்டதாலும் *1* பேதுரு. *2 : 9,* அவருடைய சித்தம் நம்மில் நிறைவேறுவதினாலும், அவரது மகத்துவ வல்லமை நம்மில் விளங்குவதாலும்,அவரது பொக்கிஷங்களையெல்லாம் நமக்குள் வைத்திருப்பதாலும், நாம் அவருடையவர்களே. இந்த உண்மை யைப் பகிரங்கமாய் அறிவித்தார் அப். பவுல். "இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்."கலா. *2 : 20* "நீங்கள் உங்களுடையவர் களல்லவென்றும் அறியீர்களா?" *2* I கொரி. *6 :19, 20*.நாமெல்லாரும் கர்த்தருடைய பெட்டிகளாயிருக்கிறோம். அல்லேலூயா!

**5. கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டி.** *1* இரா. *2 : 26.*

சாலமோன் ராஜாசனத்தில் வீற்றிருக்கையில் கூறிய வார்த்தை யாகும் இது. ஆண்டவர் என்பது ஆளுகை செய்கிறவரை சுட்டிக்காட்டும். சாலமோன் தாமே ஆளுகை செய்கிறவனாயிருக்கையில் தன்னிலும் பெரியவர் ஒருவர் ஆளுகிறார் என்றும் அவரே கர்த்தராகிய ஆண்டவர் என்றும் தேவனை மகிமைப்படுத்துகிற வார்த்தையாகும் இது. நாமும் "உயர்ந்தவன் மேல் உயர்ந்தவன் காவலாளியாயிருக்கிறான்; அவர்க ளிலும் உயர்ந்தவர் ஒருவருண்டு." என்ற சிந்தையோடு வாழ்வோமாக. பிர. *5 : 8.* உடன்படிக்கைப் பெட்டியின் இந்தப் பெயர் தேவன் சருவ அதிகாரியாகிய ஆண்டவர் என்பதை வெளிப்படுத்திற்று. யோசுவா *3 : 13*-ல் சர்வ பூமியின் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டி எனப் பட்டுள்ளது. பெட்டியில் இறங்கிய மகிமை தேவனை சர்வபூமிக்கும் ஆண்டவர் என்ற நிலைமைக்கு உயர்த்திக்காட்டுகிறது. பூவாசிகள் யாவரும் அவருக்கு முன்பாகப் பணியக்கடவர்கள் என்ற அறிவுரையும் எவரும் அவருடைய இரட்சிப்பு அல்லது சிட்சிப்பு ஆகிய இருவித ஆளுகைக்குத் தப்ப இயலாது என்றும் விளங்கச் செய்கிறது.

**6. வல்லமை விளங்கும் பெட்டி** Ark of thy strength

சங். *132 : 8* மரத்தால் செய்து சுத்தப் பொன்னால் பொதிந்த உடன்படிக்கைப் பெட்டியில் தேவ வல்லமை விளங்கினது. தாவீது சிங்கத்தைக் கிழித்த போது அவனில் இறங்கிய வல்லமை அதில் இருந்தது. காசா பட்டணத்துக் கதவுகளை வாசலோடு அசைத்துப் பெயர்த்துப் பிடுங்கித் தோளின் மேல் போட்டுச் சுமந்து மலை மேலே ஏறிச் சென்ற சிம்சோனிலிருந்த வல்லமை அதில் விளங்கிற்று. நியா. *16 : 1-3.* பவுலும் சீலாவும் நடுநிசியில் பாடித் துதித்தபோது சிறைச்சாலை யை அதிரப்பண்ணின தேவ வல்லமை அதில் வெளிப்பட்டது. அப்படியே இதன் வல்லமை அதற்குள் எட்டிப்பார்த்த *50,070* பேரைச் பட்சித்தது.

*1 சாமு. 6 : 19.* பெட்டியைச் சுமக்க அதிகாரம் பெற்ற கோகாத்தியர் கூட அதைத் தொடலாகாது அத்தனை வல்லமை நிறைந்த இப்பெட்டியை துணிச்சலாகத் தொட்ட ஊசா அங்கேயே செத்தான். *2 சாமு. 6 : 7.* என்னே! இதன் வல்லமை? என்னே இதன் பயங்கரம்? இந்தப் பெட்டியைக் கண்ட உடன் பெலிஸ்தர் பயந்து நடுங்கின விபரத்தை *1 சாமு. 4 : 6, 7*ல் வாசிப்பீராக. பெட்டி பாளயத்தில் வந்தது என்பதற்கு "தேவன் பாளயத்தில் வந்தார்" என்றே பெலிஸ்தர் கூறினர். அத்தனை மகிமை அதில் விளங்கியிருக்கிறது! *2 நாளா. 6 : 41.* அப்படியே இந்தப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியரின் பாதங்கள் பட்ட பொழுதில் யோர்தான் நதி பிளந்தது. யோசுவா. *3 : 13.* பெட்டியுடன் சுற்றி வந்த போது எரிகோ கோட்டை உடைந்து விழுந்தது. யோசு. *6 : 11-20.*

நாம் இவ்விதம் தேவனுடைய வல்லமை விளங்கும் பெட்டிகளாக இவ்வுலகைச் சுற்றுவோம். சாத்தானின் கோட்டைகளை வீழ்த்துவோம். அன்று அவர்கள் எழுத்தின்படி ஒரு கோட்டையை வீழ்த்தினர். நாம் துதிக்கையில் மறைவான அந்தகாரக் கோட்டைகள் விழுந்துபோம்! இயேசு சொன்னார், "இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன். லூக்கா *10:19.*" .... "அவர்களுக்கு **வல்லமையும், அதிகாரமும்** கொடுத்தார்." லூக்கா *9 : 1.* இயேசு தாமே வல்லமை விளங்கும் பெட்டியாக ".... பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்." அப். *10:38,* எபே. *6:10.* "அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்."

**7. பரிசுத்த பெட்டி. 2 நாளாகமம் 35 : 3** Holy Ark

*1.* உடன்படிக்கைப் பெட்டிக்கு இந்தப் பெயரைச் சூட்டியிருப்பது நம்மை ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது. முதற்கண் அது இருக்குமிடம் மகா பரிசுத்தமானதாகும். மாசுகளும், மனித மற்றும் உலகத் தொடர்புகளும் அற்ற மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதால் பரிசுத்தப் பெட்டியாகிறது. தொடர்புகளே இன்று மக்களை கறைப்படுத்துகின்றன. எனவே, அசுத்தமானதைத் தொடாமல் பிரிந்து வேறுபட்டு வாழவேண்டும் என்பதை அறிக. *2* கொரி. *6 : 14-18.* ஆகிய வசனங்கள் இது பற்றிய இறுதியான எச்சரிப்பு ஆகும். நீங்கள் இருக்குமிடம் பரிசுத்தமானதுதானா? சங். *1 : 1.* பரிசுத்தமான இடத்தில் பாதரட்சை தேவை இல்லை. யாத். *3 : 5.*

*2.* பரிசுத்தமான பொருட்கள் அதற்குள் இருப்பதாலும் அது பரிசுத்தப் பெட்டி. மன்னா, துளிர்த்த கோல், கற்பலைப் பலகைகள் யாவும் தேவனுக்கேற்ற பரிசுத்தமுடையவைகளே. நமக்குள்ளும், பரிசுத்தர் இயேசு, பரிசுத்த வேதம், பரிசுத்த ஆவி ஆகிய தேவ மகிமைகள் வாசம் பண்ணுவதினால் நாம் பரிசுத்தப் பெட்டியாகி விட்டோம்.

*3.* மணவாட்டியானவள் அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றுமாயிருக்கிறாள் உ. பாட்டு *4 : 12.* அப்படியே, அடக்கம், பெருமைகளை வெளிப்படுத்தாத குணம் யாவும் பரிசுத்தத்தைத் தரும். உடன்படிக்கைப் பெட்டியானது பொன் பொதிந்தும் உள்ளே இருப்பது அரும் பெரும் பொருட்களாயிருந்தும் அது மறைந்திருக்கிறது. அப்படியே

நாமும் சகல பெருமைகளையும் மறைத்து, மறைந்து வாழும் பண்பை நாடுவோமாக. இந்தப்பெட்டி சீத்திம் மரத்தின் *15* அடி உயரமுள்ளதும், முற்றிலும் பசும்பொன் தகட்டினால் மூடப்பட்டதுமாகிய பலகைகளால் மறைவு கட்டப்பட்ட அறைக்குள்ளே அல்லவோ இருக்கிறது?

*4.* "மூடி கட்டப்படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும்." எண். *19 : 15.* நமது கண்களையும், வாயையும், சிந்தையையும் மூடி கட்டப்பட்டதாய் காப்போமாக. நாவை அடக்காதவன் பாவி என்பதில் ஐயமில்லை. இப்பரிசுத்த பெட்டியானது கிருபாச னத்தினால் மூடப்பட்டிருப்பதால் அது தீட்டுப்படவில்லை. பரிசுத்த பெட்டியாகத் திகழ்கிறது. இவ்வுலகத்தின் இயற்கை அமைப்பானது புதியது பழையதாகிறதும், நல்லவை நாளடைவில் கெட்டதாகிறதும், சுத்தமானது அசுத்தமாகிறதுமான குணம் உள்ளதாகும். அதற்குத் தப்பும்படி பரிசுத்த ஆவியானவரின் புதிதாக்குதலில் அநுதினமும் வாழ கர்த்தர் கிருபை தருவாராக.

**8. சேனைகளுடைய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி 1 சாமு. 4 : 4.** Ark of Covenant of the Lord of hosts.

"சேனைகளின் கர்த்தர்" என்ற நாமம் யேகோவா தேவனின் யுத்த நாமம் ஆகும். இஸ்ரவேலருடைய யுத்தங்களை கர்த்தர் தாமே நேரில் நடத்தி வந்ததால் அவரையே தங்கள் சேனைத்தளபதியாகக் கருதினர். ஒரு சேனைத்தலைவனைப் போல எகிப்தியரை வாதித்து அணி அணியாய் புறப்படப்பண்ணினார். யாத். *13 : 18.* செங்கடலின் இக்கரையில் பார் வோன் யுத்த முரசு கொட்டியபோது, "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" என்றார் மோசே. யாத். *14 : 14.* இவ்வாறு நமக்கு சில்லிக்காசு செலவின்றி நம்மைச் சும்மா இருக்கச் செய்து தாமே யுத்தங்களை நடப்பிக்கிற இந்த தேவன் எத்தனை நல்லவர். அது முதல் "யுத்தம் கர்த்தருடையது" என்ற தத்துவக்கொள்கையும் உண்டாயிற்று.

இந்த உடன்படிக்கைப் பெட்டியும் யுத்தங்களில் ஈடுபடுத்தப்பட்டது. அதன் வல்லமைக்கு முன்பாக நிற்கமுடியாமல் எதிரிகள் முறிந்தோடினதும் எரிகோ கோட்டை விழுந்ததும் நாமறிந்ததே! யோசுவா *6 : 11-20*, சாமு. *4 : 5-7.* இவ்வாறு பெட்டியும் தேவனும் இஸ்ரவேலருடைய யுத்தங் களில் ஈடுபட்டதினால் "சேனைகளின் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி" என்ற பெயராயிற்று. நம் வாழ்விலும் நமது யுத்தங்களை சேனைகளின் கர்த்தரிடம் ஒப்படைத்து வெற்றி காண்போமாக.

**பெட்டியின் படைப்பு.** யாத். *25 : 10-16.*

*1.* உடன்படிக்கைப் பெட்டி சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டது. இது நாம் மாம்சமாகிய மனிதர் (மண்) என்று நினைப்பூட்டுகிறது. பெட்டியிலே விலைமதியாத பொக்கிஷங்கள் வைக்கப்பட்டதுபோல இந்த மண்பாண்டங்களில் விலையுயர்ந்த தேவ மகிமைகளை பெற்றிருக்கிறோம்.

*2.* பெட்டி பசும்பொன் தகட்டால் மூடப்பட்டிருந்தது. மண்ணான மனிதனில் தான் தேவன் தமது பொக்கிஷங்களை வைக்கிறார் என்றாலும், அவனது ஜென்ம சுபாவத்தில் அவைகளை வைப்பதில்லை. அவனை

பசும்பொன் போன்ற தேவசுபாவத்தால் மூடிய பின்னரே வைக்கிறார். அதற்காக தமது இரத்தத்தால் கழுவினார். மரத்தை சீவி சுத்தம் செய்வது போல கரடு முரடான குணங்களை நீக்கினார். பொன் போன்ற திவ்விய சுபாவத்தால் மூடினார். *2* பேதுரு *1 : 4*. ஆவியால் அபிஷேகம் பண்ணினார். *2* கொரி. *1 : 21*. அதன் உட்புறமும், வெளிப் புறமும் பசும்பொன் தகட்டால் மூடப்பட வேண்டும். யாத். *25 : 11*. வெளிப் புறம் மட்டும் அல்ல, உட்புறமும். அநேகருடைய வெளி வேஷங்கள் செல்லாது. இராஜகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள். சங். *45 : 13*.

**3. அளவுகள்:** நீளம் இரண்டரை முழம். *(3 3/4அடி)* அகலம் *1 1/2* முழம் *(2 1/4 அடி)* உயரம் *1 1/2* முழம் *(2 1/4 அடி)*. இந்த அளவுகள் உள்ள ஒரு பொருள் திட்டவட்டமான ஒரு தேவ சித்தத்தை வெளிப்படுத்து கிறது. தேவ அளவுகள் மனித அளவுகளைப் புறம்பே தள்ளும். அளவுகளைக் கூட்டவோ, குறைக்கவோ செய்யக்கூடாது. நாம் தேவ சித்தப்படி பூரணராக வேண்டும். கிறிஸ்துவே நமது அளவு. அவருடைய அளவுக்குத் தக்கதாக நாம்வளர வேண்டும். எபே. *4 : 15-16*.

**எல்லாம் ஒரே அளவல்ல.** எபே. *4 : 16* ம் வசனத்தில் "தன் தன் அளவுக்குத் தக்கதாக" என்றும் காண்கிறோம். எனவே, நம்மில் ஒருவரும் "எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்." ரோமர் *12 : 3*. அப்படியே ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள எல்லாப் பொருட்களும் தேவன் குறித்த வெவ்வேறு அளவு கொண்டவைகளே. பலிபீடம், மேஜை, தூபபீடம், தூண்கள், பலகைகள், மூடுதிரைகள் யாவும் வித்தியாசமான அளவுகளுடையவைகளாயிருந்தன. எந்த இரண்டு பொருட்களுக்கும் ஒரே அளவு இல்லை. நாமும் தேவன் நியமித்த கிருபையின் அளவுக்குத்தக்கதாக வாழலாம். ஊழியம் செய்யலாம். மிஞ்சினவைகளும் குறைந்தவைகளும் தீமையினால் உண்டாயிருக்கும்.

**4. இந்தப்பெட்டி சுமக்கப்பட வேண்டும்.** சுமக்கும் சௌகரியத்திற்காக இரண்டு தண்டுகள் உண்டு. ஆசாரியர்கள் மட்டுமே அதைச் சுமக்கும் அதிகாரம் பெற்றவர்கள். ஆசாரியர்கள் தேவ ஜனத்தைச் சுமக்கும் விதம் இரண்டு ஆகும்.

*(1)* ஜெபத்தினால் சபையைச் சுமக்கிறோம். ஜெபமே ஜீவன்

*(2)* போதகத்தினால் வசனங்களை எடுத்துரைத்து ஜனத்தை நடத்துதல்

இவ்விரண்டு தண்டுகளும் இல்லாத ஊழியன் பிரகாசிப்பதில்லை. வேறு திசைகளுக்குத் திரும்பும் கட்டாயம் ஏற்பட்டபோது, பேதுரு அப்பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, "நாங்களோ, ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார். அப். *6 : 4*.

**பொன் வளையங்களின் இரகசியம்.** *25:12*.

மேலும் ஒருபக்கத்துத் தண்டினைச் செலுத்த இரண்டு பொன் வளையங்களும், மறுபக்கத்தில் அப்படியே இரண்டும் ஆக *4* பொன்

வளையங்கள் வேண்டும். பொன் வளையங்கள் இல்லாத பெட்டியை சுமப்பது அரிது. ஊழியன் ஜெபமும், போதகமுமாகிய தண்டுகளை எத்தனையாகச் செலுத்தினாலும் செல்லாத மக்கள் உண்டு. ஏனெனில் அவர்களில் ஜெபமும், போதகமும் செலுத்தத் தக்க வளையங்கள் இல்லை. அவைகளை நான்கு நற்பண்புகள் எனலாம். *(1)* சாந்தமும், மனத்தாழ்மையும் *(2)* ஏற்றுக்கொள்ளுதலும், கற்றுக்கொள்ளுதலும் மத். *11 : 29-30. (3)* கீழ்ப்படிதலும், ஒப்புக்கொடுத்தலும் *1* சாமு. *15 : 22 (4)* வசனமும்., ஆவியும். இவை இல்லாதவர்களை சபையில் வைத்துக்கொண்டு சுமக்கவும் இயலாமல் போட்டுவிடவும் இயலாமல் தவிக்கின்ற ஊழியர்கள் எத்தனையோ?

இந்த விளக்கத்தின்படி சுமப்பதற்கு இடமளிக்காத கர்விகளான பெட்டிகள் கானான் சேருமா? உங்களை நடத்துகிறவர்களுக்கு "கீழ் படிந்து அடங்குங்கள்", (எபி. *13 : 17)* என ஒரு நேரடி போதனை இருப் பதையும் காண்பீர்களாக.

**தண்டுகள் கழற்றப்படலாகாது** யாத். *25 : 15.*

இந்த விதியை ஏன் தேவன் வைத்தார்? விசுவாசியாகிய பெட்டியுடன் ஊழியரின் சுமக்கும் தண்டுகள் எப்போதும் இணைந்திருக்க வேண்டும். விசுவாசி தன் வளையங்களாகிய நற்பண்புகளால் ஊழிய ரின் ஜெபத்தையும் போதகத்தையும் எப்போதும் நாடி நிற்க வேண்டும். ஊழியரும் தன் ஜெபத்தையும் போதகத்தையும் (தண்டுகள) சதாசமயமும் விசுவாசிக்கு மிகுந்த உதாரத்துவமாய் வழங்கவேண்டும். சுருங்கக் கூறின் விசுவாசியும் ஊழியரும் இணைந்திருக்க வேண்டும்.

**கிறிஸ்துவுக்கு ஒப்பனையான பெட்டி**

பெட்டி செய்யப்பட்ட சீத்திம் மரம் இயேசுவின் மனித அவதா ரத்தைக் காட்டும். ஆதியிலே வார்த்தையாக இருந்தவர் மாம்சமானார். யோ. *1 : 14.* அப்பொழுதே அவர் தெய்வீகத்தின் நிறை குடமாகவும் இருந்தார். அதுவே பெட்டியின் பொன் பொதியப்பட்ட தன்மை.

பெட்டியின் அளவுகள் முழுமையானது அல்ல. எல்லா அளவுகளும் அரை *(1/2)* யில் முடிகிறது. அதாவது நீளம் *2 1/2* அகலம் *1 1/2* உயரம் *1 1/2.* கிறிஸ்துவின் அவதாரத்தில் வெளிப்பட்டிருக்கிற மகிமை முழுமையானது அல்ல என்றும் இனி அவர் வெளிப்படும் போது தான் அவரை இருக்கிறவண்ணமாக (முழுமகிமையுடன்) நாம் தரிசிப்போம் என்றும் அர்த்தமாகிறது. *1* யோவான் *3 : 2;* யோபு *19 : 25-27.* எல்லா பரிசுத்தவான்களும் இயேசுவைக்காண வாஞ்சையாக இருப்பதின் காரணமும் அதுவே. அவரைப் பூரண மகிமையுடன் காண்பதே சகல சிருஷ்டிகளின் பேராவல். இப்பொழுது நாம் கொஞ்சமாய் அறிகிறோம். அன்று உள்ளபடியே அறிவோம். *1* கொரி. *13 : 9-12.*

இப்போது அவருடைய மகிமை வெளியே பார்க்கிறவர்களுக்கு மறைவாக இருந்தும், ஆன்மீக விழிப்புள்ளவர்களால் காணக் கூடியதாக இருக்கிறது. இந்த அளவுகள் பூரணமானதாக மேலோட்டப் பார்வைக்குத் தென்படாதிருந்தும் கணிதவியல் படித்தவர்கள் அதில் முழுமையைக் காண முடியும். *2 1/2 x 1 1/2 x 1 1/2* என்பது கணித இயல்படி *5/2 x 3/2 x 3/2* ஆகும்.

எனவே, தேவ இரகசியங்களைக் காண ஆழமான அனுபவங்கள் தேவை. ( T. A. குரியன் என்பவரின் விளக்கம்)

கிருபாசனம் வைக்கப்பட்ட பெட்டியாகிய இயேசுவும் தேவனுடைய கிருபையின் நிறைவாக இருந்தார். யாத். *25 : 21.*

ஆசாரியர் பெட்டியைச் சுமக்க வேண்டும். நாம் உலகத்தில் கிறிஸ்துவின் அச்சடையாளங்களைச் சுமக்கிறோம். கலா. *6 : 17*

அது தேவ வல்லமை விளங்கும் பெட்டி. சங். *132 : 8* - கிறிஸ்துவில் தேவ வல்லமை விளங்கிற்று.

அப்பெட்டியில் மன்னா இருந்தது. எபி. *9 : 4* - கிறிஸ்துவில் ஜீவ மன்னா உண்டு. அவரே ஜீவ அப்பமானார். யோவான் *6 : 48*

பெட்டியின் மேலிருந்து (பெட்டியின் வழியாக) தேவன் இஸ்ர வேலரோடு பேசினார். யாத். *25 : 22* - தேவன் இயேசு கிறிஸ்து மூல மாய் இன்றும் உலகத்துடன் பேசுகிறார். எபி. *1 : 2.*

பெட்டி அபிஷேகம் பண்ணப்பட்டது. யாத். *30 : 26* - கிறிஸ்துவை தேவன் அபிஷேகம் பண்ணினார். லூக்கா *4 : 18.*

திரைச்சீலைக்குள் பெட்டி மறைந்திருந்தது. யாத். *25* - இன்று இயேசு பரலோகத்தில் மறைவாக இருக்கிறார்.

பெட்டி ஒரே ஒரு முறை சத்துருக்களால் பிடிபட்டது. *1* சாமு. *4 : 22* - இயேசு ஒரே தரம் சத்துருக்களால் பிடிக்கப்பட்டார். யோவான். *18 : 12.*

பெட்டி வைக்கப்பட்ட வீடு ஆசீர்வதிக்கப்பட்டது. *2* சாமு. *6 : 11.* கிறிஸ்துவுக்கு உள்ளத்தில், வீட்டில் இடம் கொடுத்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். *2* சாமு. *15 : 29.*

யோசுவா கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக விழுந்தார். யோசு. *7 : 6* - யோவான் உயிர்த்தெழுந்த இயேசுவின் பாதத்தில் விழுந்தார்.வெளி. *1 : 17.*

தாவீது போட்ட கூடாரத்தில் பெட்டி இருந்தது. *2* சாமு. *6 : 17* இன்று சபையாகிய கூடாரத்தில் இயேசு இருக்கிறார்.

பெட்டி கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் எருசலேம் நகரத்திற்கு கொண்டு வரப்பட்டது. *2* சாமு. *6 : 15, 16* - இயேசு எக்காள தொனியுடனும் ஆரவாரத்தோடும் வருவார். *2* தெச *4 : 16.* கடைசியில் புதிய எருசலேமில் வருவார்.

பெட்டி இஸ்ரவேலருக்கு இளைப்பாறும் இடத்தைக் காட்டும் வழிகாட்டியாக இருந்தது. எண். *10 : 33* - கிறிஸ்து நமது வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருந்து இளைப்பாறும் புதிய பூமிக்கு கொண்டு போவார். யோ. *14 : 16;* மத். *11 : 28.* பெட்டியுடன் சென்று எரிகோ கோட்டையை வீழ்த்தினர். யோசு. *6 : 12* - இயேசு சாத்தானின் கோட்டையைத் தகர்த்து நமக்கு ஜெயம் தந்தார். சாத்தானின் தலையையே நசுக்குவார். ரோமர் *16 : 20.*

## அதிகாரம் 30

# பெட்டிக்குள்ளிருக்கும் பொருட்கள்

**அ. மன்னா:** மன்னா மூன்று வகைப்படும். *1.* எழுத்தின்படியான உணவு. இஸ்ரவேலருடைய வனாந்தரப் பிரயாணத்தின் *40* ஆண்டுகளும் கானானில் பயிரிட்டு அதைப் புசிக்கும் நாள் பரியந்தமும் சீன் வனாந்தரம் முதல் (யாத். *16*) தேவன் அருளிய சத்துணவு ஆகும் மன்னா. மனிதன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பான் என்ற சாபத்திலிருந்து ஒரு தற்காலிக விடுதலையாக மன்னாவைப் பொழிந்தருளினார். அவருடைய சொல்லின்படி அவர்கள் புறப்பட்டதினால் அவர்கள் உழைக்காமல் அவர்களை போஷிக்கும் பொறுப்பை தேவன் ஏற்றார்.

அந்த மன்னா வெண்மையானது. வெண்மை என்பது உணவிலும் பரிசுத்தம் காக்கவேண்டும் என்பதற்கு அடையாளம். புதிய ஏற்பாட்டில் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளும், இரத்தம் நிலத்தில் வார்க்கப் படாததுமாகிய (நெருக்குண்டு செத்தது) மாம்ச உணவு விலக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலருடைய உணவில் கட்டுப்பாட்டை லேவி. *11* - ல் காணலாம். உழைக்காத சோம்பலின் அப்பமும் அப்படியே. *2* தெச. *3 : 10.*

அது தேனிட்ட பணியாரத்திற்கு ஒத்த ருசி கொண்டது. *40* வருடம் இனிப்பான இதைப் புசித்ததால் சர்க்கரை நோயுடையோர் அங்கே இல்லை எனக் கருதலாம்.

மன்னா கொத்துமல்லி விதை அளவாய் சிறியதும் உருட்சியானது மாகும். எனவே, அதைச் சேர்ப்பதில் சிரமம் உண்டு. மாம்பழம் போல பெரியதாயிருந்தால் சேர்ப்பது எளிது. தானியம் போல இருந்ததால் அதை “வானத்தின் தானியம்” என்றார். சங். *78 : 24.* அது தரையில் கிடந்தது. எனவே, குனிந்து பொறுக்கி சேர்க்க வேண்டியது. அவ்வாறே தேவ ஈவுகள் அனைத்தும் இலவசம் என்றாலும், அதைப் பெற்றுக் கொள்ள பணிந்து மன்றாடும் ஜெபம் தேவை.

ஒரு ஓமர் அளவு மன்னாவைப் பொன் பாத்திரத்தில் போட்டு வைத்ததினால் பொன்பாத்திரம் சற்று பெரியதாக இருந்தது எனக்கருதலாம்.

அன்றன்று புசிக்கப்பட வேண்டிய மன்னா மறு நாளைக்கு வைத்திருந்தால் பூச்சிபிடிக்கும். மன்னா சாட்சிப் பெட்டிக்குள் வெகுகாலம் கெடாமல் இருந்தது ஒரு தெய்வீக அற்புதம். யாத். *16 : 20, 34.* ஏற்கனவே, ஓய்வு நாளில் முந்திய நாளின் மன்னா கெடாமல் இருந்ததும் ஒரு அற்புதம். வ. *23, 24.*

**1. 40 ஆண்டுகளில் சாப்பிட்ட மன்னா?** : *6* லட்சம் யுத்த புருஷர் உள்ளதால் ஒருவரின் குடும்பத்தில் ஒரு தகப்பன், ஒரு தாய், ஒரு முதியவர், மூன்று பிள்ளைகள் என எடுத்தால் *6* பேர் வீதம் *6* லட்சம் குடும்பங்களில் *36* லட்சம் மக்கள் இருந்திருப்பர். ஒருவருக்கு குறைந்த

பட்சம் ஒரு நாளைக்கு *1* கிலோ மன்னா என்றால் *36* லட்சம் கிலோ அல்லது *3600* டன் மன்னா தேவைப்படும். இது ஒரு நாளைக்கு என்றால் ஒரு ஆண்டுக்கு *13* லட்சத்து *14* ஆயிரம் டன் மன்னா தேவைப்படும். *40* வருடங்களுக்கு *5* கோடியே *25* லட்சத்து *60* ஆயிரம் டன் மன்னா தேவைப்படும். இத்தனை அற்புதமாக இஸ்ரவேலரைப் போஷித்த தேவன் நமது தேவன். அவரை நம்புங்கள். அவர் உங்களைப் போஷிப்பார். *5* அப்பங்களால் *5,000* பேரை போஷித்த தையும் நினைத்துக் கொள்ளுங்கள்.

**2. இயேசுவுக்கு ஒப்பனை:** மன்னா வானத்திலிருந்து வந்தது. இயேசுவும் அப்படியே. யோ. *6 : 58.* அது சரீரத்தைப் போஷித்தது: இவர் ஆத்துமாவைப் போஷிக் கிறார். எனவே இயேசு ஜீவ அப்பம் என அழைக்கப்பட்டார். மன்னா சிறியது. இயேசுவும் சிறியவரானார். பிலி. *2 : 6-8.* மன்னா தரையில் விழுந்து கிடந்தது. இயேசு மாட்டுத் தொழுவத்தில் மனிதனாக அவதரித்தார். மட்டுமல்ல ஏழை எளிய மக்களோடு பழகினார். பந்தியிருந்தார். எழுத்தின் படியே தரையிலே விழுந்து ஜெபித்தார். மத். *26 : 39.*

மன்னா வெண்மையானது. கிறிஸ்துவும் பரிசுத்தர். லூ. *1 : 35* மன்னா புசிப்புக்கு ஏற்றது. கிறிஸ்துவும் தமது மாம்சத்தை ஆவிக்குரிய பிரகாரமாய் புசிக்கக் கொடுத்தார். யோ. *6 : 51.* மன்னாவின் ஞாபகக் குறியாக ஒரு ஓமர் உடன்படிக்கைப் பெட்டியில் பாதுகாக்கப்பட்டது. கிறிஸ்துவின் ஞாபகக் குறியாக திருவிருந்தில் அப்பம் வைக்கப்பட்டது. *1* கொரி. *11 : 24.*

**3. வேதவசனத்துக்கு ஒப்பனை :** நமது சரீரத்திற்கு அப்பம் என்பது போல ஆத்துமாவுக்கு வேதவசனமே போஜனம் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவ வார்த்தை யினாலும் பிழைப்பான். மத். *4 : 4* வசனம் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோவான் *6 : 63.* மன்னாவைப் போல வசனமும் பரத்திலிருந்து வந்தது. அதன் வெண்மைக்கு வசனத்தின் பரிசுத்தம் ஒப்பனை. வசனம் பரிசுத்த மாயிருக்கிறது, பரிசுத்தமாக்குகிறது.

மன்னா பனியில் மறைந்திருந்தது. யா. *16 : 13, 14.* பனித்துளிகள் புல்லின் மேல் இறங்குவது போல என் வசனம் இறங்கும். உபா. *32 : 2.*

மன்னாவைப் பொறுக்கிச் சேர்ப்பது போல் வசனத்தை ஆராய்ந்து அவரவருக்குரிய தேவ ஆலோசனைகளைச் சேர்க்க வேண்டும். மன்னா தேனிட்ட பணியாரம் போல ருசியானது. வசனம் தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமானது. சங். *19 : 10.* மன்னா கூடாரத்திற்குள்ளே பெட்டிக்குள் மறைந்திருக்கிறது. மனுஷ கண்களுக்கு மறைவாயிருக்கிறது. ஜென்ம சுபாவமுள்ள மனுஷருக்கு வசனமும் அப்படியே.

மன்னா பொன் பாத்திரத்தில் போட்டு ஞாபகக் குறியாக உடன் படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டது. வேதவசனமாகிய மன்னா பொன் பாத்திரமாகிய விசுவாசிகளுக்குள் வைத்து கிறிஸ்துவாகிய பெட்டிக்குள்

இருக்கிறோம். யோபு தன்னை பொன் என்றார். யோபு *23 : 10;* இஸ்ரவேல் புடமிடப்பட்ட பொன். சக. *13 : 9;* லேவியர் பொன் மல். *3 : 3.*

**ஆ. ஆரோனின் தளிர்த்த கோல்** எண். *17 :* மன்னா உடன்படிக்கைப் பெட்டியில் இடம் பெற்ற சரித்திரம் போல ஆரோனின் துளிர்த்த கோலும் அதில் இடம் பெற்றமைக்கு ஒரு ருசிகர மான சரித்திரம் உண்டு. கோராகு, அபிராம், தாத்தான் கூட்டத் தினரின் கிளர்ச்சிககு வந்தத் தண்டனையில் பூமி பிளந்து அவர்களை விழுங்கிய பின்னும் *(எண். 16)* சபையார் .யாவரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தனர். *(வ. 41)* அப்பொழுது தேவ கட்டளைப்படி கோத்திரத்துக்கு ஒன்று வீதம் *12* கோல்களை எடுத்து லேவியின் கோலில் ஆரோனின் நாமம் எழுதி தேவ சமூகத்தில் வைத்தனர். மறுநாளில் ஆரோனின் கோல் துளிர்த்துப் பூத்து வாதுமைப் பழத்தையும் தந்தது. தேவன் தமது அற்புத வல்லமையை விளங்கப் பண்ணினார். முறுமுறுப்பு ஒழிந்தது. இந்த துளிர்த்த கோல் ஞாபகக் குறியாக உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டது.

**துளிர்த்த கோலின் இரகசியங்கள்**

*1.* தாம் ஆரோனைத் தெரிந்து கொண்டதை உறுதிப்படுத்தினார்.

*2.* மோசேக்கும் கனம் உண்டாயிற்று.

*3.* தேவ ஊழியர்கள் மீது சபையார் முறுமுறுப்பதை தேவன் விரும்பவில்லை என்பதை நிரூபித்தார்.

*4.* தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மட்டுமே சபையை நடத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

*5.* உலர்ந்த கோல் போன்ற எந்த பெலவீனனையும் புத்தியீனனையும் கூட தெரிந்தெடுத்து துளிர்த்துப் பூத்து கனி கொடுக்கவும் ஊழியனாக்கவும் செய்ய தேவனாலே கூடும்.

*6.* தீர்க்கதரிசனபரமாக உலர்ந்த கோல் இயேசுவின் மனித அவதாரத்தையும் துளிர்த்த கோல் இயேசுவின் உயிர்த்தெழுந்த தேவசாயலையும் குறிக்கும்.

*7.* ஆதாமின் பாவத்தினால் ஆத்தும ஜீவனிழந்து உலர்ந்த கோலான மனுக்குலம் இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜீவன் பெற்று உயிர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது இந்த துளிர்த்த கோல்.

*8.* தேவ சன்னிதியில் தரித்திருக்கும் கோல் மட்டுமே *(இரட்சிக்கப்பட்டவர்கள்)* துளிர்க்கும் *(உயிர்த்தெழும்)* என்று விளங்கிற்று.

*9.* தேவ சந்நிதியில் சரீரத்தின் படி இருந்தாலும், தெரிந்து கொள்ளப் படாத, புத்தியில்லாத கன்னியர் கைவிடப்படுவார் என்பதை துளிர்க்காத கோல்களும் நினைப்பூட்டுகிறது. மத். *25 : 1-10.*

*10.* ஆரோனின் துளிர்த்த கோல் இயேசுவை நமது பிரதான ஆசாரியன்

என்று நினைப்பூட்டியது. மட்டுமல்ல மரித்தோரிலிருந்து துளிர்த்த (உயிர்த்த) இயேசுவே மகா தேவனும், ராஜாதி ராஜாவுமாகிய உலக இரட்சகர் என்பதையும் நிரூபித்தது. அல்லேலூயா! உலகத்தை இரட்சிக்கவோ அடக்கி ஆளுகை செய்யவோ இது வரை எழும்பின மற்ற கோல்களெல்லாம் உலர்ந்தவைகளே என்பது வெளியரங்கமாயிற்று!

இந்த துளிர்த்த கோல் எத்தனை காலம் பெட்டிக்குள் பத்திரமாக இருந்தது என்பதை அறிவது அரிது. அது பல யுத்தங்களில் இடம் விட்டு இடம் மாறிய போது நஷ்டமடைந்திருக்கலாம். *1* இரா. *8 : 9* - ல் சாலமோனுடைய ஆலயத்தில் பெட்டியைக் கொண்டு வந்த போது அதற்குள்ளே கற்பலகைகளேயல்லாமல் வேறு ஒன்றும் காணப்படவில்லை.

**இ. கற்பலகைகள்:** உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருந்த மிக முக்கியமான பொருள் கற்பலகைகள் இரண்டும் ஆகும். மோசே சீனாய் மலை உச்சியில் *40* நாட்கள் உபவாசமிருந்து தேவனால் செதுக்கப்பட்டதும் எழுதப்பட்டது மாகிய கற்பலகைகளைப் பெற்று, தாழ வருகையில் ஜனம் விக்கிரகக் காளையை உண்டாக்கி ஆராதிப்பதைக் கண்டு கோப மடைந்து அவை களை மலை அடிவாரத்தில் எறிந்து உடைத்துப் போட்டான். மீண்டும் தேவன் இரங்கி இரண்டு கற்பலகைகளை மோசேயிடம் இழைத்துக் கொண்டு வரச் சொல்லி அதில் தேவன் இரண்டாம் முறை எழுதினார். இரண்டாம் முறை எழுதின கற்பலகைகளேயாகும் பெட்டியில் உள்ளது.

முதலாம் கற்பலகை தேவனுடையதாயிருந்த போதிலும் உடைபடக் கூடியதாயிருந்தது. இவ்வாறே, பிரமாணங்களெல்லாமே மனிதன் கடைபிடிக்கவோ, உடைக்கவோ கூடியவை ஆகும். இரண்டாம் கற்பலகை மோசேயுடையதும் கற்பனை தேவனுடையதுமாகும். அப்படியே பரிசுத்த வேதாகமத்தின் காகிதமும் கை வேலையும் மனிதனுடையதும் கற்பனை கர்த்தருடையதுமாகும். இப்பொழுது கல்லுக்குப் பதிலாக மாம்சமான மனிதனில் தேவ வார்த்தைகள் அடக்கி வைக்கப்பட்டுள்ளதற்கு இது ஒப்பனை.

மேலும் உடைக்கப்பட்ட கற்பலகைகள் நியாயப் பிரமாணம் ஒரு நாள் ஒழிக்கப்படும் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது. நியாயப் பிரமாணமானது ஒருவனையும் பூரணப்படுத்துவது இல்லை. அது ஒழிந்து போகும் என்பதன் முன்னடையாளமாகும் இந்த உடைப்பு. *2* கொரி. *3 : 8-31.* அது இரட்சிப்பைச் செய்து முடிக்க இயலாதிருந்தது. ரோ. *8 : 3.* ஆனால் இயேசுவோ! தமது ஒரே பலியினால் பூரணப்படுத்தியிருக்கிறார். எபி. *10 : 14.* இயேசு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி முடித்தார். அவரே நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியதால் உடைக்கப்படாத கற்பலகையும் புதிய கற்பனையும் (மன்னிப்பின் கற்பனை) அவரே.

பெட்டி பிடிக்கப்பட்டது: பெட்டியை ஆசரிப்புக் கூடாரத்தின் அந்தரங்க அறையாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்க வேண்டும். பிரயாணம் முடித்து கானானில் வந்த இஸ்ரவேலர் ஆசரிப்பு கூடாரத்தை சீலோவிலே

நிறுவினர். ஏலியின் முதிர் வயதில் *(98 வயது)* பெலிஸ்தர் யுத்தம் செய்ய வந்தனர். இஸ்ரவேலர் தோற்றனர். மீண்டும் யுத்தம் செய்யும்படி உடன்படிக்கைப் பெட்டியை சீலோவிலிருந்து இராணுவ பாளயத்திற்குக் கொண்டு வந்தனர். தேவ வல்லமை அதில் விளங்கியது உண்மை தான். ஆனால் எவரும் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் தான் எல்லாம் நல்லது. கூடாரத்திற்கு வெளியே போன பெட்டி பெலிஸ்தரால் பிடிக்கப்பட்டது. யாராயினும், தங்கள் ஸ்தானங்களில் உறுதியாக இருக்க வேண்டும். தன்னில் முன்னொரு காலத்தில் வெளிப்பட்ட மகிமையை நம்பி இன்றோ, இன்றைய வரங்களை நம்பி வருங்காலத்திலோ தன் ஸ்தானத்தை விட்டு நகரக்கூடாது. அலையக் கூடாது. வைத்த இடத்தில் இருக்க வேண்டும். மாறாக தன் பதவியை நம்பி தாவீது பாவஞ் செய்தான். தன் பெலத்தை நம்பி சிம்சோன் தெலீலாள் மடியில் படுத்துறங்கினான். தன் ஞானத்தை நம்பி சாலமோன் மோசம் போனான்.

இப்படியே ஆதாமும் ஏவாளும் தங்கள் ஸ்தானத்தை மறந்து கனியைப் புசித்து சாத்தானாலே பிடிக்கப்பட்டனர். பெட்டி பிடிக்கப்பட்ட போது மகிமை இஸ்ரவேலை விட்டுப் போயிற்று. *1 சாமு. 4 : 22.* ஆதாமும் ஏவாளும் பாவத்தால் சாத்தான் பிடியில் அகப்பட்ட போது அவர்களை விட்டுப் போனதும் மகிமையே! *ரோ. 3 : 23.* இவ்வாறு ஆதாமின் சந்ததியாகிய உடன்படிக்கைப் பெட்டி சாத்தானால் பிடிக்கப்பட்டது. மகிமை மனுக்குலத்தை விட்டு விலகியது. அந்த மகிமையை மீட்டுக் கொடுப்பதற்காக இயேசு தமது மகிமைகளை தாமாகவே துறந்து மனித சாயலானார். *பிலி. 2 : 6-8.* மகா பரிசுத்த ஸ்தலத்தில் கம்பீரமாய் வீற்றிருந்த பெட்டி வெளியே போனதால் வந்த வினையைக் கண்டு கவனமாயிருப்பது சிறந்தது. இயேசுவாகிய பெட்டியும் பிடிக்கப்பட்டது. *யோவான். 18 : 12.* அடிக்கப்பட்டது. *ஏசா. 53 : 3-6.* மரித்தார், உயிர்த்தார், மகிமையை மீண்டும் பெற்றார். தமக்காகப் பூமியின் மகிமைகளைத் துறப்பவர்களை தமது வருகையில் உயிர்ப்பிப்பார். தமது மகிமையால் நிரப்புவார். *1 கொரி. 15 : 38-43.*

**பயணத்தில் பெட்டி** *எண். 4 : 5, 6:* சாட்சிப் பெட்டியைச் சுமக்கும் பணி கோகாத்தியருடையது. பாளயம் புறப்படும் போது ஆரோனும் குமாரரும் பெட்டியைத் திரைச்சீலையால் மூட வேண்டும். அதுவே மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பிரிக்கும் சீலை. இது தான் இயேசு ஜீவன் விட்ட போது கிழிந்தது. அதின் மேல் தகசுத் தோல் மூடியும், அதின் மேல் நீலமான துப்பட்டியையும் விரித்து தண்டுகள் பாய்ச்சி சுமக்கப்பட வேண்டும். தேவனுடைய இரகசியங்கள் தமது பக்தர்களுடனே இருக்கிறது. *சங். 25 : 14; நீதி. 3 : 32.* ஊழியர்கள் தேவ இரகசியங்களின் உக்கிராணக்காரர்களாவர். *1 கொரி. 4 : 1.* மூடி சுமப்பதன் பொருள் இதுவே.

தேவ ஜனம் இந்த பொய் உலகில் மறைந்து வாழ வேண்டும். இயேசுவும் *30* வயது வரை மறைந்திருந்தார். பின்னரும் ஊழிய நேரம் தவிர மறைந்தே வாழ்ந்தார். கடைகளிலும் வராந்தாவிலும் வீடுகள் தோறும் வாயாடி நடந்து பொழுது போக்குகிற எவரும் தங்களை

மூடிக்கொள்ளவில்லை. அவ்வாறே ஸ்திரீகளும் “வீட்டில் தரித்திருக்கிறவர்களுமாயிருப்பது” அவசியம். தீத்து *2 : 4, 5*.

சாட்சிப் பெட்டியை *3* வகை மூடிகளால் மூட வேண்டும். திரைச் சீலையால் முதலில். இது சித்திரங்கள் உள்ள நால்வகை நூல்களாலானது. இது உள்ளான பரிசுத்தத்தையும் அலங்காரத்தையும் குறிக்கும். வெளி வேஷத்தை தேவன் அருவருக்கிறார். உள்ளாகப் பூரண மகிமையுள்ளவர்களாயிருப்போமாக. சங். *45 : 13*. இப்பிரபஞ்சத்திற்கொத்த வேஷத்தை வெறுப்போமாக.

அதன் மேலே தகசுத்தோல் மூடி. இது ஒரு உயிரினத்தின் தோல். அதைக் கொன்று தோல் எடுக்க வேண்டும். எனவே இது ஒரு பலியை - இயேசுவின் பலியையும் இரட்சிப்பின் வஸ்திரத்தையும் நினைப்பூட்டுகிறது. ஆதாம்-ஏவாள் நிர்வாணம் மூட தேவன் தோல் உடைகளை உண்டாக்கினாரே*!* ஆதி. *3 : 21*.

வெளிப்புறமாக எல்லாவற்றிற்கும் மேலே தேவ மகிமைக்கும் கிருபைக்கும் அடையாளமாகிய வானத்தின் நிறமான நீலதுப்பட்டியை விரிக்க வேண்டும். நம் ஒவ்வொருவரிலும் தேவ கிருபையும் மகிமையுமே வெளியே தெரிய வேண்டும். தேவன் தமது கிருபையாகிய நீலத்துப்பட்டியை நம் மேல் விரித்துப் பாதுகாக்கிறார்.


## அதிகாரம் - 31

## கிருபாசனம் - MERCY SEAT

கிருபாசனத்தை ஒரு தனிப் பொருளாகவும் கருதலாம். அதை சாட்சிப் பெட்டியின் மேல் பகுதியாகவும் கொள்ளலாம். ஏனெனில் தேவ கிருபாசனமானது பசும் பொன் தகட்டால் செய்த ஒரு பலகையும் அதனை மூடி நிற்கும் இரண்டு கேருபீன்களுமாகும். அவற்றின் நடுவிலிருந்து தான் தேவன் ஜனங்களோடு பேசுவார். அந்த கிருபாசனம் சாட்சிப் பெட்டியின் மேல் மூடியாகிய பலகையின் மேல் பொருத்தப்பட்டது. கிருபாசனம் முழுவதும் கலப்படமில்லாத பொன்னினால் அடிப்புப் பணியாக செய்யப்பட்டது. எனவே கிருபாசனத்தின் அடிப்பலகையும் சாட்சிப் பெட்டியின் மூடியாகிய மேல் பலகையும் தனித்தனியாகச் செய்யப்பட்டதென்று கருதலாம்.

**கிருபாசனமும் சாட்சிப் பெட்டியும்** இணைந்திருப்பதில் ஒரு இரகசியமுண்டு. துளிர்த்த கோல் போன்ற தெரிந்து கொள்ளுதலையும், மன்னா போன்ற இயேசுவையும், கற்பனைகளாகிய தேவவசனத்தையும் உடைய ஒருவனில் மட்டுமே தேவன் தமது கிருபாசனத்தை ஸ்தாபிக்கிறார். தேவன் பயன்படுத்தும் மனிதன் அவனே*!* தேவன் வெறுமையானவைகளிலும் அருவருப்பால் நிறைந்தவைகளிலும் ஆசனமிட்டு அமருவதில்லை.

சாட்சிப் பெட்டியில்லாத கிருபாசனமும், கிருபாசனமில்லாத சாட்சிப்



பெட்டியும் தேவனுடையதல்ல. அவனுடைய ஜெபம் கேட்கப்படுவது இல்லை. பெட்டி கிறிஸ்து என்றால் கிருபாசனம் பிதாவினுடையது. கிறிஸ்துவும் பிதாவும் தனித்தனி ஆட்களானாலும் ஒன்று என்று சொல்லுமளவிற்கு இணைக்கப்பட்டிருந்தனர். பெட்டி கிறிஸ்தவனைக் குறிப்பிட்டால் அவன் எப்போதும் தேவ கிருபாசனத்துடன் இணைந்திருக்க வேண்டும். பெட்டி கிருபாசனத்தைச் சுமப்பது போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனைச் சுமக்க வேண்டும் - அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும். உலகில் அவரை மகிமைப்படுத்த வேண்டும்.

பெட்டி கிருபாசனத்தின் கீழே இருந்தது. ஜனம் தேவனுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டும். யாத். *24 : 7.* எவரும் லூசிபரைப் போல் தேவ சிங்காசனத்திற்கு மேலாக தன்னை உயர்த்தக் கூடாது. தேவன் ஒருவரே எல்லாரிலும் உயர்ந்தவர். சங். *91 : 1,* ஏசா. *14 : 14.* கிறிஸ்துவும் தம்மைத்தாமே தாழ்த்தினார். தேவனுக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந் திருந்தார். பெட்டி கிருபாசனத்துடன் இணைந்திருப்பது போல ஒரு

கிறிஸ்தவன் கிருபாசனத்துடன் இணைந்திருக்க வேண்டும். இது ஜெப ஜீவியத்தைக் காட்டுகிறது. இயேசுவும் எப்போதும் பிதாவிடம் ஜெபித்தார். எபி. *5 : 7, 1* தெச. *5 : 17*.

**தரையில் இல்லை:** ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள எல்லா பணிமுட்டுகளும் தரையில் வைக்கப்பட்டது. கிருபாசனம் ஒன்று மட்டுமே தரையில் வைக்கப்படாதது. அது சாட்சிப் பெட்டியின் மேலே வைக்கப்பட்டது. பிதாவாகிய தேவன் எல்லாரிலும் உயர்ந்தவர் என்பதே இதன் இரகசியம். அவரை உயர்ந்த, தகுந்த, ஸ்தானத்தில் வைக்கவும் மகிமைப்படுத்தவும் வேண்டும். அவரைக் கனவீனம் பண்ணினவர்களைக் கேட்பார். "நான் பிதாவானால் என் கனம் எங்கே?" மல். *1 : 6*.

அது போல தேவனுடைய குமாரனை கனம் பண்ணாமல் காலின் கீழ் மிதிப்பவன் கொடிய ஆக்கினைக்குப் பாத்திரவானாவான். எபி. *10 : 29*. மேலும் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணமும் மன்னிக்கப்படுவதில்லை. மத். *12 : 31*. இவ்வாறு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூவரும் கனத்திற்குப் பாத்திரராவர்.

**கேருபீன்கள்** யாத். *25 : 18-20:* சாட்சிப் பெட்டியின் மேல் இரண்டு கேருபீன்கள் பசும் பொன் தகட்டினால் செய்து வைக்கப்பட்டது. பலகையின் ஒரு ஓரத்தில் ஒன்றும் மறு ஓரத்தில் மற்றொன்றும்! இயேசுவின் கல்லறையின் தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனும் ஆக இரண்டு தூதர்களிருந்தது போல. யாத். *25 : 19*.

கேருபீன்கள் இருப்பது, தேவ தூதர்களுடைய பாதுகாவலும் சேவையும் நமக்கு உண்டென்பதை குறிக்கிறது. எபி. *1 : 14;* சங். *91 : 11, 12*. நமது கண்களுக்கு மறைவாக இருந்தாலும் அவர்களை தேவன் நமக்காகத் தந்தருளியிருக்கிறார். மத். *18 : 10*.

கேருபீன்கள் இரண்டும் எதிர் எதிராக (நேர் முகமாக) இருந்தன. யாத். *25 : 20*. இது அவர்களுடைய ஒருமனதைக் காட்டும். தேவ ஜனம் முகம் திருப்பி அல்ல ஒருவருக்கொருவர் முகம் பார்த்து வாழ வேண்டும். அன்பே பிரதானம்!

கேருபீன்கள் கிருபாசனத்தை நோக்கியிருக்க வேண்டும். யாத். *25 : 20*. தங்களுக்குக் கிடைத்த உயர்ந்த பதவியினிமித்தம் தேவ கிருபாசனத்தை நாடாமலும், நோக்காமலும் இருக்கலாகாது. தேவ சிருஷ்டியான கேருபீன்கள் தற்பெருமை கொள்ளக் கூடாது. தேவனைப் பார்க்க வேண்டும்! எந்த ஊழியரும் விசுவாசியும் கூட தனக்கு அளிக்கப் பட்ட கிருபையினிமித்தம் மேட்டிமையடையாமல் சதா சமயமும் கிருபாசனத் தை நோக்கிப் பார்க்க வேண்டும். சாலமோனின் சிங்காசனத்தின் தலைப்பு பின்னாக வளைந்திருந்தது போல. அதில் சாய்ந்தால் ராஜாவின் தலை பின்னாக வளைந்து முகம் அண்ணாந்து தேவனைப் பார்க்கும். *1* இரா. *10 : 19*.

கேருபீன்களின் நடுவில் இருந்து கொண்டு தேவன் ஜனத்தோடு பேசுவார். யாத். *25 : 22*. கேருபீன்களின் நடுவிலிருந்து கொண்டு பேசி வந்த தேவன் ஆலயத் திரைச்சீலையைக் கிழித்துக் கொண்டு வெளியேறினார். சிலுவையில் இயேசு ஜீவன் விட்ட போது தேவன் தமது கிருபையின் ஆசனத்தை ஆலயத்தின் அடைபட்ட அறையிலிருந்து மாற்றிப் போட்டார். இப்போது இரண்டோ மூன்றோ பேர் எங்கேக் கூடினாலும் அவர்கள் நடுவில் இருக்கிறார். அல்லேலூயா! மத். *18 : 20*.

தேவன் திரையைக் கிழித்ததினால் எல்லாரும் கிருபாசனத்தண்டையில் சேரலாம் (எபி. *4 : 16*) என்பது எபிரேய நிருபம் எழுதியவரது பழைய ஏற்பாட்டுப் பாணியிலான விளக்கமாகும். ஆனால், உண்மையாக தேவன் கைகளால் கட்டப்பட்ட இஸ்ரேலிய ஆலயங்களில் வாசமாயிருப்பதில்லை. அவர் அதைவிட்டு வெளியேறினார் என்பதே உண்மை. இஸ்ரேலிய ஆலயம் இடிக்கப்பட்டு விட்டதே. பின்னர் அவர் எங்ஙனம் ஆலயத்தில் இருப்பார்? இப்போது தேவ ஜனம் கூடுமிடமெல்லாம் அவரது கிருபாசனம் விளங்குகிறது-என்பதே உண்மையும் பொருத்தமானதுமாகும். மற்றபடி புதிய ஏற்பாட்டு ஆலய கட்டிடங்களிலும் அவர் வாசமாயிருப்பதில்லை. தேவ ஜனமே ஆலயம். அவர்கள் கூடுமிடமெல்லாம் அவர் இருக்கிறார். (இந்த மலையிலுமல்ல அந்த மலையிலுமல்ல.....யோவான் *4 : 21*). இன்று ஆலயங்களுக்குப் பெரிய கோபுரங்களையும் சித்திர வினோதக் கவர்ச்சிகளையும் உண்டு பண்ணுவது தேவையில்லாத ஒன்று!

கிருபாசனத்தண்டை சேரக்கடவோம் என்பது பழைய ஏற்பாட்டுப் பயமின்றி எவ்விடத்தையும் கிருபாசனமாக்கி எங்கும் கூடி ஆராதிக்கலாம் என்ற மாபெரும் விடுதலையின் மகத்தான விளம்பரமாகும். ஆவியின் ஒற்றுமையும் சத்தியமும் எங்கே உண்டோ அங்கே தேவ கிருபாசனம் உண்டு என்ற விசுவாசத்துடன் ஆராதனை செய்வோமாக! இப்போது நாம் பூமியிலுள்ள ஒரு எழுத்தின்படியான கிருபாசனத்தண்டையில் சேரவில்லை. நமக்காக மரித்து உயிர்த்தவர் பரமேறிச் சென்று பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கின்ற கிருபையின் ஆசனத்தண்டையிலே விசுவாசத்தால் ஆவிக்குள்ளாய் சேருகிறோம். அந்த சிங்காசனத்தண்டை சேரும்படியாகத்தான் பவுல் போதித்தார். எபி. *4 : 16.*

கிருபாசனம் (Mercy Seat) என்ற பெயர் வரக்காரணமென்ன? கொடிய ஆக்கினைப் பிரமாணமாகிய நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நாளில் செய்யப்பட உத்தரவான ஆசனத்தை ஆக்கினை ஆசனம் என்றால் தான் பொருத்தமாகும். பின் ஏன் கிருபாசனம் என்றார்? தேவன் எப்போதுமே கிருபையுள்ளவர். கிருபையுள்ளவராயிருப்பதுவே அவரது இயல்பான குணம். மனிதன் தவறும் போது அவனை அடிப்பதும் அடித்தபின் மனதுருகுவதுமே அவரது குணம். ஆதாம் பாவம் செய்த போதும், அவனைப் புறம்பே தள்ளினார். அப்போதும் ஒரு மிருகத்தைக் கொன்று அதன் தோலினால் அவனை உடுத்திய பின்னரே வெளியே துரத்தினார். அவனை நிர்வாணியாகத் துரத்தாத செயலில் அவரது கிருபையையல்லவோ தரிசிக்கிறோம்?

பாவம் செய்த மனிதனிடம் பேச அவர் எவ்வகையிலும் கடமைப்பட்டவரல்ல என்ற போதும் ஆசரிப்புக் கூடாரத்திற்கு இறங்கி வந்து அவர்களோடு பேச அவர் முற்பட்டது கிருபையல்லவோ? அதற்காக அவர் தெரிந்து கொண்ட ஆசனத்தைக் கிருபாசனம் என்றல்லாமல் வேறு என்னவென்பது?

கடைசியாக, இந்தக் கிருபாநிதியானவர் தமது ஒரே பேறான நேசகுமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்! யோவான் *3 : 16.* இரண்டோ மூன்றோபேர் கூடுமிடங்களிலேயே வருவேன் என்றால் திரள் கூட்டமாய் (அவரது நாமத்தில்) கூடினால் நிச்சயமாய் இருப்பாரே! எனவே, தேவ சபைகள் பெருகி பூமியை நிரப்பட்டுமே!

# மூடுதிரைகள்

**நால்வகை நூல் மூடுதிரை:** ஆசரிப்புக்கூடாரத்தை ஸ்தாபனம் பண்ணும்போது மேல் மூடி (கூரை) தான் கடைசியாகப் போடப்படும். ஒரு வீடானாலும், கூரையைப் போட்டுவிட்டால் ஒரு மகிழ்ச்சி உண்டாகும். மற்ற வேலைகளை மெதுவாகச் செய்யலாம். முக்கிய வேலை முடிந்து விட்டது. இனி மழையும், வெயிலும் தாக்காது. சத்துரு பயமும் வேண்டாம். ஒரு நிம்மதி. எனவே. ஆசரிப்புக் கூடாரத்தின் கூரையை மகிழ்ச்சியின் கூரை என்றும், சமாதானத்தின் (நிம்மதி) கூரை என்றும் கூறலாம். இந்தக் கூரையின் கீழ் மகிழ்ச்சியும், நிம்மதியும் நிலவக்காரணமுண்டு. அந்தக்கூரை செய்யப் பட்ட நான்கு வித மூடுதிரைகளே அதன் காரணம்.

**1 பஞ்சுநூல் திரை யாத். 26 : 1-6.** ஆசரிப்புக் கூடாரத்தின் உள்ளேயிருந்து அண்ணாந்து பார்த்தால் காண்பது இந்த மூடுதிரையை மட்டுமே. இது நான்கு வகை நூல்களினால் செய்யப்பட்டது. திரித்த மெல்லிய என்பது நான்கு வகை நூல்களுக்கும் பொருந்தும். விசித்திர வேலைப்பாடும் கேருபீன்களின் சித்திரமும் அதில் இருந்ததால் பார்வைக்கு அது மிகவும் அழகாகவும் ஆன்மீகமாகவும் இருந்தது. ஆலயத்தின் உள்ளழகு சீயோன் குமாரத்தி உள்ளாக பூரண மகிமையுள்ளவள் என்ற சத்தியத்தை வெளிப்படுத்திற்று. சங். *45 : 13.* நமது புறம்பான மனிதனை விட உள்ளான மனிதனின் அழகையே இயேசு விரும்புகிறார். அல்லேலூயா! ஆசாரியர்கள் அதன் பிரசன்னத்தை அனுதினமும் அனுபவித்து வந்ததால் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

கேருபீன்களுடைய தோற்றம் பரலோகத்தின் ஒரு நினைவு கூருதலாகும். அவை தேவ சிங்காசனத்தண்டை பணிவிடை செய்கிற தாக எசேக். *1, 10 : 5* -லும் காண்க. மேலும் ஆசரிப்புக் கூடாரத்தின் மேலே மூடுதிரையிலிருந்து கேருபீன்கள் கீழே உற்றுப்பார்த்தவண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. ஆசரிப்புக் கூடார ஊழியத்தின் நிறைவாகிய புதிய ஏற்பாட்டு ஊழியத்தின் இரட்சிப்பையும் மகிமைகளையும் உற்றுப்பார்க்க தேவ தூதர்களும் ஆசையாயிருக்கிறார்கள் என்கிறார் பவுல். *1* பேதுரு. *1 : 12.* புதிய ஏற்பாட்டு தேவ மக்களுக்கு தூதர்கள் பணிவிடை ஆவி களாய் கூட உண்டு என்பதையும் மூடுதிரையின் கேருபீன்கள் சுட்டிக் காட்டுகிறது. எபி. *1 : 14,* சங். *91 : 11,* மத். *18 : 10.*

**1. திரித்த மெல்லிய பஞ்சு நூல்** (Fine twined Linen) :இது வெண்மையானது. அது தேவனுடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்தும். அப்படியே நாம் பரிசுத்தமாயிருக்கும்படி போதிக்கிறது. லேவி. *19 : 2,* 1 தெச. *4 : 7,* எபே. *5 : 26.* இயேசு பரிசுத்தத்தில் சிறந்து விளங்கினார். பரலோகத்தில் செல்லும்போது வெண்வஸ்திரக் கூட்டங்களைப் பாருங்கள். *(1)* அது ஜெயம் பெற்றவர்களின் வஸ்திரம். வெளி. *7 : 9, 3 : 5. (2)* அது இரத்த சாட்சிகளின் வஸ்திரம். வெளி. *6 : 10, 11. (3)* அது *24* மூப்பர்களின்

வஸ்திரம். வெளி. *4 : 4. (4)* அது தூதர்களின் வஸ்திரம். மத். *28 : 2,3. (5)* அது மணவாட்டியின் வஸ்திரம் வெளி. *19 : 7-8.* இது இயேசு வின் நீதியை வானமட்டும் உயர்த்துகிறதல்லவா? எபி. *7 : 26.* பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங் களிலும், உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்.

**2. திரித்த மெல்லிய இளநீலநூல்:** இளநீல நிறம் ஆகாயத்தின் நிறமாகும். ஆகாயம் தேவ மகிமையை வெளிப்படுத்துகிறதாக சங். *19 : 1* ல் காண்க. இயேசு தேவனை மகிமைப் படுத்தினார். தேவனை மகிமைப்படுத்தாத நேபுகாத்நேச்சாரும் (தானி. *4 : 30-33)* ஏரோது அரசனும் (அப். *12 : 21-23)* தண்டிக்கப்பட்டனர். ஆசரிப்புக் கூடாரத்தின் இளநீலநூலின் அமைப்பு நம்மை எச்சரிக்கிற தல்லவா? இலவசமாய் கிடைத்த கிருபைகளைக் கொண்டு தன்னைத்தான் உயர்த்தாதிருங்கள். தேவனை மகிமைப்படுத்துங்கள்! சுயத்தை சிலுவையில் அறையுங்கள்.

**3. திரித்த மெல்லிய இரத்தாம்பர நூல்:** இரத்தாம்பர நிறம் ஐசுவரியத்திற்கும், பிரதாபத்திற்கும் அடையாளமாகும். இயேசு சொன்ன உவமையில் ஐசுவரியவான் இரத்தாம்பரம் தரித்திருந்தான். லூக்கா *16 : 19.* செல்வச் செருக்குடை யவள் தன் பிரதாபத்திற்கு அடையாளமாக இரத்தாம்பரம் உடுத்தினாள். வெளி. *17 : 4.* ஆமானை ஜெயித்த மொர்தெகாய் இரத்தாம்பரம் தரித்திருந் தான். எஸ்தர் *8 : 15.* இவ்வாறு இரத்தாம்பரம் பிரதாபத்திற்கு அடையாள மாகும். இவ்வாறு நமது மீட்பர் உலகத்தை ஜெயித்தார். மரணத்தை ஜெயித்தார். இனி அவர் வரும்போது மகா பிரதாபசாலியாக, ராஜரீக மகிமையுடன் வருவார். ஏசாயா *63 : 1*ல் அவர் மகத்துவமாக உடுத்தி யிருப்பதாக கூறுகிறார். அர்மகெதோன் யுத்தத்தில் சத்துரு சங்காரம் செய்ய வரும்போது அவர் இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரம் தரித்திருப் பதாகக் காண்கிறோம். அதுவே இரத்தாம்பரம், இரத்தம் + அம்பரம் (வஸ்திரம்) இயேசு தமது இரத்தத்தினாலே, தாமும் இராஜாவானார். நம்மையும் இராஜாக்களாக்கினார். இந்த மேன்மையும் பிரதாபமுமான அனுபவத்தையே இரத்தாம்பர நூல் வெளிப்படுத்துகிறது. இயேசு ராஜா வாக பூமியில் ஆளுவாரென்பதை மூடுதிரையின் இந்த நூல் வாக்குறுதி செய்கிறது.

**4. திரித்த மெல்லிய சிவப்பு நூல்.** (Scarlet): பஞ்சுநூலுக்கு பரிசுத்தமும், நீலநூலுக்கு தேவ மகிமையும், இரத்தாம்பர நூலுக்கு இராஜரீகமும் என்றால், சிவப்பு நூலுக்கு சிலுவைபலி அடையாளமாகும். யோசுவாவின் காலத்தில் எரிகோ மதிலில் வாழ்ந்த வேசியின் வீட்டு ஜன்னலில் கட்டிய சிவப்பு நூலைத்தான் முதன்முதலாகக் காண்கிறோம். அச்சிவப்பு நூல் அவளையும் வீட்டாரையும் சங்காரமாக் காதபடி காப்பாற்றியது. யோசுவா *2 : 7.* எனவே சிவப்பு நூல் இரட்சிப்பைக் (Salvation) குறிக்கிறது. எகிப்திலும் சங்காரதூதன் நுழையாதபடி காத்த தும் இரத்தமே. யாத். *12 : 7.* எனவே, சிவப்புநூல் இயேசு சிந்திய தமது சுயஇரத்தத்தின் வெளிப்பாடு ஆகும். அதுவே, குற்றமில்லாத

மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம். *1* பேதுரு *1 : 19.* ஆபேலுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவை களைப் பேசுகிற இரத்தம் எபி. *11 : 24.* அவருடைய குமாரனாகிய இயேசு வின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது. *1* யோவான் *1 : 7.*

**திரித்த மெல்லிய நூல்:** சாதாரண நூலை விட திரித்த நூல் அதிக பெலனுள்ளதாகும். திரித்தல் என்பது சோதனைகளையும், கஷ்டங்களை யும் குறிக்கிறது. கிறிஸ்தவ ஜீவியத்திலும் சோதனைகளை சகித்து ஜெயித்தவனே அதிக ஆன்மீக பெலசாலியாயிருப்பான். முறுக்கேற்றும் முன்னே அது அளவில் பெரியதாக இருக்கும். ஆனால் முறுக்கேறும் போது அது மெல்லியதாக மாறும். பெலனும் கூடும். கஷ்டங்களினால் தான் மனித உள்ளம் பண்பட்டு தாழ்மையை அடையும். இயேசுவும் உபத்திரவங்களினாலே பூரணரானார். எபி. *2 : 10.*

இந்த நான்கு வகை நூல்களிலும் நான்கு சுவிசேஷங்களில் வெளிப்படுகிற இயேசுவைக் காணலாம்.

**1. மத்தேயு** - இயேசுவை இராஜாவாக சித்தரிக்கிறது. மத். *2 : 2, 27 : 37.*

இது ராஜரீக பிரதாபத்தை வெளிப்படுத்துகிற இரத்தாம்பர நூல்

**2. மாற்கு** - இயேசுவை உதவி செய்கிற தாசனாகக் காட்டுகிறார். இயேசு உண்மையுள்ள தாசன். உடனுக்குடன் மனித சேவை செய்தார் என மாற்கு *1 : 20, 21, 29, 42, 44* ல் காண்க. போஜனம் பண்ணவும் நேர மில்லாதபடி ஊழியம் செய்ததாக வாசிக்கிறோம். மாற்கு *6 : 31* சகாயஞ் செய்கிற தேவ கிருபை அவரில் வெளிப்பட்டது. இவ்வாறு மனிதர் மத்தியில் அவர் வாழ்ந்து சேவை செய்தபோதிலும் அவர் மாசில்லாத சுத்த பக்தி உடையவராயிருந்தார். யாக். *1 : 27.* அவர் திக்கற்றவர்களுக்குச் செய்த உதவி மிகுதி. ஆனால் உலகத்தால் கறைபடாதபடி தன்னைக் காத்துக் கொண்டார். அவ்வரிய பரிசுத்த ஜீவியத்தையே திரித்த மெல்லிய பஞ்சுநூல் சித்தரிக்கிறது.

**3. லூக்கா** - இவர் இயேசுவை மனித குமாரனாக விளக்குகிறார். அவரே இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்த மனித குமாரன். *19 : 10.* மனுஷகுமாரனானால் மட்டுமே சிலுவையில் இரத்தம் சிந்தி மரிக்க இயலும். எனவே, அவர் சிவப்பு நூலுக்கு ஒப்பான மனித குமாரன். இரத்தம் சிந்தி மீட்டவர்.

**4. யோவான்** - இவர் இயேசுவை பரிசுத்தமுள்ள தேவ குமாரனாக சித்தரிக்கின்றார். யோவான் *20 : 31,* வெளி. *3 : 7.* அவரது பரிசுத்தமான தேவ குமாரனாக்கும் வெளிப்பாடாகும் திரித்த மெல்லிய பஞ்சு நூல். மேலும் அவர் வானத்திலிருந்து வந்தவர். யோவான் *3 : 13.* வானத்திலி ருந்து இறங்கி வந்த மன்னா. யோவான் *6 : 51, 58.* மேலும் அவர் வானங்களிலும் உயர்ந்தவர். எபி. *7 : 26.* எனவே இயேசுவை வானத்துக் குரிய இளநீலநூலுக்கு ஒப்பானவராக, உன்னதமான தேவகுமாரனாக,

யோவான் விளக்குகிறார்.

பஞ்சுநூல் ஒரு தாவரத்தின் கனியாகும். ஆசரிப்புக் கூடார மூடுதிரையில் பஞ்சுநூலைப் பயன்படுத்தி, தாம் சிருஷ்டித்த ஒரு தாவரத்தையும் கனம் பண்ணினார். இந்த மூடுதிரையானது *28* முழ நீளமும், *4* முழ அகலமும் கொண்ட *10* பகுதிகளாக செய்யப்பட்டுள்ளது. அவைகளை இணைத்தால் *1120* சதுர முழம் கிடைக்கும்.

## அதிகாரம் 33

## ஆட்டுமயிர் மூடுதிரை (யாத். 26 : 7-13)

இஸ்ரவேல் நாட்டினர் ஆட்டுமயிரால் கம்பளி நெய்வதில் மிகப்பழக்க மானவர்கள். அந்த தொழில் நுட்பத்தின் ஒரு பகுதியான ஆட்டுமயிர் கம்பளியை ஆசரிப்புக் கூடாரத்தின் இரண்டாம் அடுக்கு மூடுதிரையாகப் பயன்படுத்த தேவன் அனுமதித்தார். ஆட்டுமயிர் உஷ்ணத்தைக் காக்கும் குணமுடைய தாகும். ஆசரிப்புக் கூடாரத்திற்குள் குளிர் இன்றி அனலா யிருக்க வேண்டும் என்று தேவன் நினைத்தாரோ? புதிய ஏற்பாட்டு சபையும் ஆவியிலே அனலாக இருக்க வேண்டும். ரோமர் *12 : 11.*

அநேக ஆடுகளுடைய மயிர் ஒரே கம்பளியில் இணைந்திருப்பது போல சபையில் (உலகம் முழுவதிலுமாக) அநேகராகிய நாம் ஒன்றாயிருக்கிறோம். இந்த மூடு திரையானது *30* முழம் நீளமும் *4* முழ அகலமும் கொண்ட பதினொரு பகுதிகளாக செய்யப்பட்டுள்ளது. அவைகளை இணைக்கும் போது *4* முழ அகலமானது *44* முழ நீளமாகவும் *(11 x 4 = 44)* நீளமாக இருந்த *30* முழம் அகலமாகவும் மாறும்.

இந்த மூடுதிரையின் மொத்த பரப்பளவு *1320* சதுர முழமாகும். இது பலர் ஒருமித்துச் சேரும்போது சபைக்கு உண்டாகிற மகா பெலத்தைக் காட்டும். மேலும் "சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்" என்பது போல இதுவுமாயிற்று. ஏசாயா *60 : 22.* தனி நபர்களும் சிறியவர்களுமாகிய நாம் சபையில் இணையும் போது நமது கிருபையின் எல்லைகள் மகா பெரிய அளவில் விரிவாகிறதை நாம் காணமுடியும். இந்த மூடுதிரையை ஏற்றவும், இறக்கவும், சுமக்கவும் செய்யும் வசதிக்காக அது *11* பகுதிகளாகச் செய்யப்பட்டது.

*5* மூடுதிரைகள் ஒன்றாகவும், *6* மூடுதிரைகள் ஒன்றாகவும் இணைக்கப் பட்டிருந்தது. ஆறாம் மூடுதிரை (எல்லாம் இணைந்த பின்பு *11*ம் மூடுதிரை) கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே தொங்கும். இது கூடாரத்தின் முன் பகுதிக்கு அலங்காரமாக அமைந்தது.

ஆடுகளுக்கு அழகாகும் அதன் மயிர். மயிர் கத்தரிக்கப்பட்ட ஆடுகளைப் பார்த்தால் அழகும், சௌந்தர்யமும் இல்லை. அப்படியே, இயேசு மயிர் கத்தரிக்கிறவர்களுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற சாதுவான ஆட்டுக் குட்டி யைப் போலிருந்தார். எரே. *11 : 19,* ஏசாயா *53 : 7.* நம்மை இரட்சிக்க இயேசு தமது மகிமைகளைத் துறந்தார் என்பதன் மெய்யான விளக்கமாகும் இது.

மூடுவிரிகளைச் செய்ய தங்கள் மயிர்களைக் கொடுத்த ஆடுகளை விசுவாசிகளோடும் ஒப்பிடலாம். எத்தனையோ பேர் தங்கள் மகிமைகளை இயேசுவுக்காக அர்ப்பணித்தனர். தங்கள் நிலங்களை விற்று அவர் பாதத்தில் படைத்தனர். அப். *4 : 34-35.* தங்கள் கழுத்தைக் கொடுத்தனர். ரோமர் *16 : 4.* தங்கள் ஆஸ்திகளைக் கொள்ளையிடக் கொடுத்தனர். எபி. *10 : 34.* தங்கள் கண்களைப் பிடுங்கிக் கொடுக்கக்கூடுமானால் அப்படியும் செய்திருப்பார்களாம். கலா. *4 : 15.* இஸ்ரவேலர் கொண்டு வந்த பொருட்களுள் வெள்ளாட்டு மயிரும் இருந்தது. யாத். *25 : 4.* எனவே, கர்த்தருடைய ஊழியத்திற்காக தாராளமாயும், மனப்பூர்வமாயும் கொடுப்பீர் களாக. நலமானவை களையும், மேன்மையானவைகளையும் கொடுப்போ மாக. நசல் கொண்டதையும், ஊனமானதையும் படைக்கிறவர்களை நோக்கி கர்த்தர் கேட்பதை மல்கியா *1 : 8* ல் படித்துப் பாருங்கள். "அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து. அவன் உன் மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ? என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்." கர்த்தருக்குச் செலுத்த வேண்டியவைகளை வஞ்சிக்கின்றவர்களே! எச்சரிக்கையாக இருங்கள்.

**வெள்ளாட்டு மயிர் புறஜாதியின் இரட்சிப்பு யாத். 26 : 7; 25 : 4.**
ஆடுகளை, வெள்ளாடு என்றும் செம்மறியாடு என்றும் இரண்டாக வேதம் பிரிக்கிறது. இவற்றுள் வெள்ளாடு சாபத்திற்கும், செம்மறியாடு ஆசீர்வாதத்திற்கும் நிழலாக மத். *25 : 33, 34, 41*ல் இயேசு தாமே கூறியுள்ளார். அப்படியிருந்தும் சாபத்திற்கடையாளமான வெள்ளாட்டின் மயிரைத் தான் ஆசரிப்புக் கூடாரத்தின் கூரைக்கு தேவன் கட்டளையிட்டார். இதன் காரணமென்ன? தாங்கள் மட்டுமே தேவனாலே ஆசீர்வாதமாயிருக்க தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்று இஸ்ரவேலர் எண்ணியிருந்த காலத்தில் புறஜாதிகளை சபிக்கப்பட்ட வெள்ளாடுகளாக எண்ணினர். தேவனோ ஆதியிலிருந்து அந்தத்தை அறிகிறவராயிருந்து, கிறிஸ்துவுக்குள் புறஜாதிகளுக்கு இரட்சிப்புண்டு என்பதை வெளிப்படுத்த வெள்ளாட்டு மயிரை ஆசரிப்புக் கூடாரத்து திரைகளுக்குள்ளே மறைத்து வைத்தார். மேலும் பஸ்கா பலியிலும் வெள்ளாடுகளிலாவது, செம்மறியாடுகளிலாவது பலி மிருகத்தைத் தெரிந்து கொள்ள அனுமதித்தார். இதுவும் புறஜாதிகளை யும், இஸ்ரவேலரையும் கிறிஸ்துவுக்குள் இரட்சிக்க தேவன் நிர்ணயம் பண்ணியிருந்தார் என்பதின் வெளிப்பாடு ஆகும். யாத். *12 : 5.* இஸ்ரவேல ரும், புறஜாதியாருமாகிய இருதிறத்தாரையும் கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாக்கி ஒரே புதிய மனுஷனாக சிருஷ்டித்து சமாதானம் பண்ணினார் என எபே. *2 : 15-16* ல் காணும் உபதேசமும் இதனோடு ஒத்திருக்கிறது. தேவனுக்கே மகிமை.

## அதிகாரம் 34

## சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத்தோல் யாத். 26 : 14.

ஆசரிப்புக் கூடாரத்தின் மூடுவிரியாக ஆட்டுக்கடாவின் தோலைப் பயன் படுத்தினார் தேவன். பலிக்கு வந்த ஆட்டுக்கடாக்களுடைய தோல் இதன் மீது முதலாவது போடப்பட்ட விரியில் பயன்படுத்தப்பட்டு இருக்க வாய்ப்பு இல்லை. ஏனெனில் ஆசரிப்புக் கூடாரத்தின் மூடுவிரிகள் போடப்பட்ட பின்னரே, பலிபீடம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பலிகள் செலுத்தப் பட்டது. எனவே, இதர பொருட்களைக் கொண்டு வந்தது போல ஆட்டுக் கடாத் தோலையும் இஸ்ரவேலரே கொண்டு வந்தனர் எனலாம். யாத். *25 : 5* ல் ஆட்டுக்கடாத் தோலைக் கொண்டு வருமாறு தேவன் கட்டளை யிட்டிருக்கிறார்.

*(1)* தேவன் ஆட்டுத்தோலைப் பயன்படுத்திய சந்தர்ப்பங்கள் இரண்டு ஆகும். முதலாவதாக ஆதியில் ஏதேனில் சாத்தானால் நிர்வாணிகளாக்கப் பட்ட ஆதாமையும், ஏவாளையும் உடுத்துவிக்க தேவன் தோல் உடைகளை உண்டாக்கினார். ஆதி. *3 : 21.* இது தேவ ஆட்டுக்குட்டியானவர் சிலுவையின் மரணத்தினால் உண்டு பண்ணின இரட்சிப்பின் வஸ்திரத் திற்கு ஒப்பனையாகும். மிருகத்தின் தோலி னால் பெரிய உபயோகம் உண்டென உலகிற்கு காட்டிக் கொடுத்தவர் தேவனாவார். இக்காலத்தில் பதனிட்ட மெல்லிய தோலினால் உடைகளையும், பை, செருப்பு முதலிய பல்வேறு பொருட்களையும், கூடாரங்களையும் தோலினால் உண்டாக்க மனிதன் கற்றுக்கொண்டான்.

*(2)* இரண்டாவதாக, ஆட்டுக்கடாத்தோலினால் ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஒரு மூடியை உண்டாக்க தேவன் சொன்னார். இது கீழிருந்து மேலே *3* வது மூடியும், மேலிருந்து கீழே *2* வது மூடியுமாகும். ஆட்டுக்கடாத்தோல் தேவனுடைய கூடாரத்தின் மேல் பலமான ஒரு மூடியாக அமைந்தது. இயேசு கிறிஸ்து மூலமாக உள்ள இரட்சிப்பு தேவ ஆலயமாகிய தேவ ஜனத்தின் மேல் பலத்த பாதுகாவலாக உள்ளது. உன்னதமானவருடைய செட்டைகளின் மறைவில் வாழும் ஒரு அனுபவத்தை இது நமக்குத் தருகிறது. சங். *91 : 1-4.*

**பன்மையில் ஒருமை**

*1.* அநேக பலிகளினால் மக்களின் பாவம் நிவர்த்தி செய்யப்பட்ட தெல்லாம் கிறிஸ்துவின் ஒரே பலியில் முடிந்தது.

*2.* அநேக ஆசாரியர்களுடைய பரம்பரையான ஊழியங்களெல்லாம் கிறிஸ்துவாகிய ஒரே பிரதான ஆசாரியனில் நிறைவேறியது.

இத்தனை பெரிய கூடாரத்தை மூடுவதற்கு ஒரு கடாவின் தோல் போதுமானதல்ல. அநேக ஆடுகளின் தோல்கள் தேவைப்பட்டது. தேவ ஜனமே அந்த மந்தையின் ஆடுகள். அநேக ஆடுகளுடைய தோல்கள் இணைக்கப்பட்டு ஒரு மூடி உருவானது போல் நாம் இணைக்கப்பட வேண்டும். இது, ஒருவருடைய பெலத்திலல்ல, அநேக தேவ ஜனத்தின்

ஒருமன நிலையில் தான் சபை நிலைநிற்கிறது, அற்புதங்கள் நடக்கிறது என்ற சத்தியத்தை வெளிப்படுத்திற்று. அவர்கள் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் கூடி வந்தபோது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அப். *2 : 1.* ஒருமனப் பட்டு தேவனை நோக்கி சத்தமிட்டு ஜெபித்தபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அப். *4 : 24, 31.* எனவே, விசுவாசிகள் தான் மந்தையின் ஆடுகள். அவர்களுடைய ஜெபமும், தியாக அழைப்புமாகும் கூடாரத்தின் தோல்மூடி. கிறிஸ்தவ சபையின் வளர்ச்சிக்குக் காரணம் அவர்களுடைய இரத்தசாட்சி மரணமும், கடினமான பாடுகளும் அயராத உழைப்புமாகும். இதுவே பலியும் தோலுரிப்பின் அனுபவமுமாகும். கூடாரத்தின் கடாத்தோல் மூடிக்கு அநேக ஆடுகள் பலியானது போல கிறிஸ்தவ சபைக்காக உழைத்து மரித்த பரிசுத்தவான்கள் பலகோடியாவர். "இரத்த சாட்சிகளின் இரத்தம் சபையின் வித்து."

**சிவப்புத் தீர்ந்த ஆட்டுக்கடாத்தோல்:** உலகத்தில் பலநிறங்கள் இருந்தபோதிலும் தேவன் ஆட்டுக்கடாத் தோலுக்கு சிவப்பு நிறத்தையே தெரிந்து கொண்டார். உயிருள்ள மிருகத் தின் தோல் இரத்தத்துடன் இருக்கும். தோல் உரிக்கப்பட்ட பின்பு இரத்த மின்றி காய்ந்து விடுகிறது. ஆனாலும் அது இரத்தத்தில் இருந்து எடுக்கப் பட்டதை நினைவுகூரும் பொருட்டு சிவப்பு தீர்க்கப்பட்டது. சிவப்பு இயேசு வின் இரத்தத்தையும், ஆட்டுக்கடா இயேசுவையும் சித்தரிக்கிறது. இயேசு தமது இரத்தத்தினாலே ஒரு சபையை சம்பாதித்தார். அப். *20 : 28.*

**இயேசுவின் இரத்தம்.**

1. மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. ஆகையால் இயேசு இரத்தத்தைக் கொடுத்தபோது உயிரையே கொடுத்தார். (லேவி. *17 : 11)*
2. முதன் முறையாக இரத்தம் பயன்படுத்தப்பட்டது பஸ்கா பலியில் வீட்டு வாசலிலே ஆகும். யாத். *12 : 7.* இயேசுவின் இரத்தம் சங்கரிக்கும் சாத்தானிடமிருந்து நம்மைக் காக்கிறது.
3. இரத்தம் புசிக்கப்படலாகாது. லேவி. *3 : 17, 17 : 12.* இரத்தம் சரீரத்திற்கு உணவல்ல. ஆத்துமாவுக்கு அது பிராயசித்தம். எனவே, விசுவாசித்தால் போதும்.
4. ஆத்துமாவிற்காக பாவ நிவர்த்தி செய்வது இரத்தமே. லேவி. *17 : 11.*
5. இயேசுவின் இரத்தம் வேர்வையாகி துளிகளாய் விழுந்தது. லூக்கா *22 : 44.* எனவே, கெத்சமெனே தோட்டம் முதல் இயேசு இரத்தம் சிந்திக்கொண்டிருந்தார்.
6. இயேசு சுய இரத்தத்தால் சபையை சம்பாதித்தார். (அப். *20 : 28)*
7. இயேசுவின் இரத்தத்தினால் நீதிமான்களாகிறோம். (ரோமர் *5 : 9)*
8. பாவ மன்னிப்பு உண்டாயிருக்கிறது. எபே. *1 : 7,* கொலோ. *1 : 14.*
9. தூரமாயிருந்த புறஜாதிகள் சமீபமாயினர். எபே. *2 : 13.*
10. இரத்தத்தால் சமாதானம் பண்ணினார். கொலோ. *1 : 20.*
11. மனச்சாட்சியை சுத்திகரிக்கிறது. எபி. *9:14.*

12. தைரியம் உண்டாயிருக்கிறது. எபி. 10 : 20.
13. பாவங்களை நீக்கி சுத்திகரிக்கிறது. 1 யோவான் 1 : 7.
14. இரத்தம் சாட்சியிடுகிறது. 1 யோவான் 5 : 8.
15. இரத்தத்தினால் சாத்தானை ஜெயிக்கலாம் வெளி. 12 : 11.
16. இரத்தம் இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கியது. வெளி. 5 : 9.
17. இரத்தத்தினால் பாவங்களைக் கழுவினார். வெளி. 1 : 6.
18. இரத்தத்தினால் மீட்கப்பட்டோம். 1 பேதுரு 1 : 19.
19. ஜீவிய வஸ்திரத்தை இயேசுவின் இரத்தத்தில் தோய்த்து வெண்மையாக்கும் அனுபவம் உண்டு. வெளி. 7 : 14.
20. ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தம். எபி. 12 : 24.

இந்த் ஆட்டுக்கடாத்தோலின் இரத்தநிறம் வெளியே காணக்கூடிய தல்ல. 4 அடுக்குத் திரையில் கீழிருந்து மூன்றாவதாகவும், மேலிருந்து இரண்டாவதாகவும் உள்ளதால் அது வெளியே தெரியவில்லை. வெளியே தெரியாத ஒன்றிற்கு சிவப்புச் சாயம் தீட்டப்பட வேண்டியதென்ன? வெளிப் பார்வைக்கு மறைவாயிருந்த போதிலும் இரத்தத்தின் அனுபவம் உள்ளே நிறைவாயிருந்தது. அப்படியே இயேசுவின் இரத்தத்தாலுள்ள மேற்குறிப் பிட்ட அனுபவங்கள் நமக்கு உள்ளே கண்டிப்பாக காணப்பட வேண்டும் என்பதல்லவோ இதன் இரகசியம்?

## அதிகாரம் - 35

## தகசு தோல் மூடி. யாத். 26 : 14.

தகசுத்தோல் என்ன என்பது பற்றி வேத பண்டிதர்களிடையே கருத்தொற்றுமை இல்லை. Badger's Skin என ஆங்கிலத்தில் உள்ளது. நீல நிறமுள்ள தோல் என்று அர்த்தமுள்ள 'டக்காஷ்' (Tachash) என்ற வார்த்தை தான் செப்துவஜிந்து மொழி பெயர்ப்பில் காணப்படுகிறது. ஹாமில்ட்டன் என்பவரது கருத்தின்படி மான் இனத்தில் ஒரு வகை கலைமான் என்கிறார்.

சிலர் இதை ஒரு கடல் ஜீவன் என்கின்றனர். சிலர் சீல் (Seal) என்ற ஒரு கடல் ஜந்துவின் தோல் என்கின்றனர். எதுவாக இருந்தாலும் இது மிகவும் வெளிப்புறமான மேல் மூடியாக இருந்ததினால் வெயிலையும், மழையையும் தாங்கத்தக்க உறுதியும், நீடித்து உழைக்கும் தன்மையும் கொண்ட தோல் என்பது மட்டும் உறுதி. சாயந்தீர்ந்த பாதரட்சை என்பதற்கு தகசு தோல் என்ற விளக்கம் உள்ளது. அக்காலத்தில் மிகக்கடினமான தோலையே செருப்பு செய்ய உபயோகித்தனர். எனவே, தகசுத்தோல் என்பது மிகவும் பலமுள்ள தோல் ஆகும்.

தகசுத்தோலானது பார்வைக்கு வழவழப்பு இல்லாததும், அழகு அற்றதுமாகும். இது அழகற்றவராக சிலுவையில் தொங்கிய இயேசுவுக்கு நிழலாகும். ஏசாயா 53 : 1-3. இயேசுவின் உபவாச ஜீவியமும், சரீர

கஷ்டம் சகிக்கும் அயராத ஊழியமும், முடிவில் சிலுவையின் கோரப்பாடுகளும் அவரது அழகைக் கெடுத்து விட்டது. பதினாயிரம் பேரில் சிறந்தவரும், வெண்மையும், சிவப்புமானவருமாகிய இயேசுவின் முகம் எவ்வளவு அந்தக் கேடடைந்தது என்று ஏசாயா *52 : 14* ல் காணலாம். "மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுப்புத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக் கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்."

இயேசுவின் மணவாட்டியும், உலக வாழ்க்கையின் கிலேசங்களினாலும் கர்த்தருக்குச் செய்யும் ஊழியங்களினால் வரும் நிந்தை, உபத்திரவங்களினாலும் அழகற்று இருப்பதாக உன்னதப்பாட்டு *1 : 5*ல் காணலாம். "எருசலேமின் குமாரத்திகளே! கேதாரின் கூடாரங்களைப் போலவும், சாலமோனின் திரைகளைப் போலவும், நான் கறுப்பாயிருந்தாலும், அழகாயிருக்கிறேன்." ஆனாலும் மணவாட்டியின் வெளி அழகற்ற தோற்றத்தையல்ல, உள்ளான மகிமையையும் பழுதற்ற ஆத்தும வெண்மையையும் தான் மணவாளன் மெச்சிப் பேசுகிறார். உ.பா. *4 : 7.* "என் பிரியமே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை."

கேதாரின் கூடாரங்கள் கறுப்பாயிருந்திருக்கிறது. வெயிலும், மழையும், பனியும் தாங்கி அது இந்த நிலைமையை அடைந்திருக்கலாம். மணவாட்டியும் அவ்வாறாக கறுப்பாக இருந்ததாகக் கூறுகிறாள். அவள் வெயிலின் உக்கிரத்தையும் பனி, மழை ஆகியவற்றின் கோரத்தையும், தாங்கியதால் கறுப்பாகிவிட்டாள். உன்னதப்பாட்டு *1 : 6.* "நான் கறுப்பாயிருக்கிறேன் என்று பாராதேயுங்கள்; வெயில் என்மேல் பட்டது, என் தாயின் பிள்ளைகள் என்மேல் கோபமாயிருந்து, என்னைத் திராட்சைத் தோட்டங்களுக்கு காவற்காரியாக வைத்தார்கள், என் சொந்த திராட்த் தோட்டத்தையோ நான் காக்கவில்லை." வெயிலும், தாயின் பிள்ளைகளுடைய கோபமும், திராட்சத்தோட்டக் காவல் பணியும் அவளை கறுப்பு நிறமாக்கியிருக்கிறது. அவளுடைய இயற்கை நிறம் கறுப்பு நிறம் அல்ல என்றும், வெண்மையும், சிவப்பும் கலந்த நிறமென்றும், உழைப்பினால் கறுப்பாகிவிட்டது என்றும் பொருள். வெண்மையும், சிவப்புமான உடல் கறுப்புநிறம் அடைய வேண்டுமானால் அந்த உழைப்பு எத்தனை பெரியது என்று பாருங்கள்! புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியரின் உழைப்பு அவ்வாறு இருக்க வேண்டும்!

பகுதி VIII **அதிகாரம் 36.**

## பொது விஷயங்கள்

# மரமும் உலோகங்களும்

### 1. சீத்திம் மரம்

ஆசரிப்புக் கூடாரத்தின் பணிகளுக்கு மிகுதியாய் பயன்பட்டது சீத்திம் மரமாகும். கர்த்தருடைய ஊழியத்திற்கு தேவ ஜனங்களுடைய பங்கு மிகுதி என்பதை இது காட்டும். சீத்திம் மரத்தினால் செய்யப்பட்ட பொருட்களின் விபரமானது:

1. பிராகாரத்தைச் சுற்றிலும் 5 முழ உயரமான 60 தூண்கள். (வெண் கலத்தால் மூடப்பட்டது)
2. பரிசுத்த ஸ்தல வாசல் 5 தூண்கள் (பொன்னால் மூடப்பட்டது) யாத். 26 : 36-37.
3. மகா பரிசுத்த ஸ்தல வாசல் திரையைத் தாங்கும் 4 தூண்கள். (பொன் பொதியப்பட்டது) யாத். 26 : 31-33.
4. கூடாரம் அல்லது வாசஸ்தலத்தின் (பரிசுத்த ஸ்தலம் + மகா பரிசுத்த ஸ்தலம்) 10 முழ உயரமும் ஒன்றரை முழ அகலமும் கொண்ட 48 பலகைகள் 26 : 15-25.
5. பலகைகளை இணைக்கின்ற சீத்திம் மரத்தாழ்ப்பாள்கள். 26 : 26-29.
6. பிராகாரத்து பலிபீடம் (வெண்கலத்தால் மூடப்பட்டது) யாத். 27 : 1
7. பரிசுத்த ஸ்தலத்து மேஜை (பொன் பொதிந்தது) 25 : 23.
8. பரிசுத்த ஸ்தலத்து தூபபீடம் (பொன் பொதிந்தது) 30 : 1.
9. மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள உடன்படிக்கைப் பெட்டி 25 : 10. (பொன் பொதிந்தது)
10. சுமக்கும் தண்டுகள்

**ஏன் இந்த மரம்?** இவ்வாறு கூடாரப்பணிக்கு மிகுதியாய் பயன்படும் மரமாக தேவன் சீத்திம் மரத்தைத் தெரிந்து கொண்டதற்கு காரணங்கள் இல்லாமலில்லை. நாட்டில் எத்தனையோ நல்ல மரங்கள் உண்டு. வாசனை மரங்கள் உண்டு. தேககு, கோங்கு, சந்தனம் எல்லாம் புறக்கணிக்கப்பட்டன. மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். தேவன் அகத்தைப் பார்க்கிறார்.

**1. அழகற்றது :-** அதற்கு கண் கவரும் வர்ணக் கவர்ச்சி இல்லை. அழகற்ற கறுப்பு நிறமுடையது. இயேசுவுக்கு சிலுவையில் அழகு இல்லை. "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை" ஏசாயா 53 : 1-3. மணவாட்டி கறுப்பாக இருந்தாள். உன்னதப்பாட்டு 1 : 6. "நான் கறுப்பாயிருக்கிறேன் என்று பாராதேயுங்கள்" என்றாள். ஆனால் வெளித் தோற்றத்தில் அழகற்ற இந்த மரத்தை அறுத்தால் மிக அழகான பணிமுட்டு களைச் செய்யலாம். இயேசு தமது வாழ்வில் அப்படி இருந்தார். நாமும் அவ்வாறு இருப்போமாக. இராஜ குமாரத்தி உள்ளாகப் பூரண மகிமை யுள்ளவள். சங். 45 : 13.

**2. முள்ளுகள் உள்ள மரம் :-** முள்ளுகள் சாபத்தின் பலனாகும். ஆதி. 3 : 18. அது வேதனை உண்டாக்கும் வழியையும் குறிக்கும். 139 : 24. நாம் முன்னே இப்படி இருந்தோம். ஆனால், சிலுவை யில் இயேசு முள் கிரீடம் ஏற்று சாபத்தைத் தீர்த்தார். அத்தனை முட்களை யும் வாளால் அறுத்தபின் (மனம் திரும்பியபின்) எல்லாரும் தொடலாம். நல்லவனாகிறான்.

**3. உறுதியும் கடினமுமான மரம் :-** பொறுப்பான வேலைகளுக்கு பொறுப்பு மிக்க ஆட்கள் தேவை. அப்படியே நீடிய காலம் இருக்க வேண்டிய மிக முக்கியமான பணிமுட்டுகளுக்கு இந்த மரம் ஏற்றதாகும்.

கிறிஸ்தவ ஜீவியத்திலும் தானியேல் போன்ற உறுதியான தீர்மானம் உள்ளவர்களுக்கே வரங்களையும், கிருபைகளையும் அளிக்கிறார். பவுல் போன்ற தீரர்களுக்கே மகிமையான ஊழியங்கள். ரூத் உயர்த்தப்பட்டதற்கு உறுதியே காரணம். யோபின் உறுதி இரண்டத்தனை பலன் தந்தது.

**4. உளுக்காத குணமுள்ளது :-** அவிசுவாசம், இச்சைகள் போன்ற உளுப்புகள் அணுகாத ஒருவனே ஆலயப்பணிக்கு ஏற்றவன்.

**5. உயரமாய் வளரும் மரம் :-** *10* முழம் *(15* அடி*)* உயரமுள்ள சுத்தமான பலகை எடுக்கவேண்டுமானால் அது சுமார் *20* அடியாவது திருக்குகள் இல்லாது உயரமாய் வளரவேண்டும். ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் உயரமாய் வளரவேண்டும். ஆன்மீக குள்ளன் தேவ சபைக்கு உட்படலாகாது. லேவி. *21 : 20.*

**6. நெடுங்காலத்தில் தயாராகும் மரம் :-** இது மழைக்காலத்தில் காளான் முளைத்து மறைவது போலல்ல. இது வளர்ந்து பணிமுட்டு செய்ய தயாராவதற்கு அதிக ஆண்டுகள் ஆகும். நூதன சீஷன் *(1* தீமோ. *3 : 6),* நேற்று இரட்சிக்கப்பட்டு இன்று மேடையேறுகிறவன், அனுபவம் இல்லாத இளைஞன் எல்லாம் ஊழியத்திற்கு உதவாது. அவர்கள் தேர்ச்சியடைய வேண்டும். வனாந்திரக்காற்றுகளில் *(*சோதனை*)* நிலைத்து நிற்பதையும் இது காட்டும். அப்படிப்பட்ட மரம் நீடித்து உழைக்கும்.

**7. சீத்திம் மரம் கிடைக்குமிடம் :-** இது எகிப்திலும், சீனாய் மலைப்பகுதிகளிலும் ஏராளமாய் வளரும் மரமாகும். ஜனங்கள் எகிப்திலி ருந்து இதைக் கொண்டுவர வாய்ப்பில்லை. ஏனெனில் ஆசரிப்புக் கூடாரப்பணி குறித்து தேவன் அப்போது வெளிப்படுத்தவில்லை. எனவே, சீனாய் மலைப்பகுதியில் இருந்து சீத்திம் மரம் வெட்டப்பட்டது என்பதே முடிவு. தமக்கு ஒரு ஆலயம் கட்ட சீத்திம் மரம் தேவை என்று முன்னறிந்து சீனாய் பகுதியில் இதனை வளரச் செய்த தேவன் மிக ஞானமுள்ளவர். இஸ்ரவேலர் சீனாய் மலையருகே வந்து சேரும் காலத்தில் மரம் முற்றியிருக்கத்தக்கதாக ஏற்ற காலத்தில் அதை முளைத்து வளரப் பண்ணின தேவனின் முன்னறிவு எத்தனை பயங்கரம்? God is a great time setter. அப்படியே இயேசுவின் இரண்டாம் வருகையையும் தேவன் ஏற்ற காலங்களில் வெளிப்படுத்துவார். *1* தீமோ. *6 : 15.*

**2. வெண்கலம்:** ஆசரிப்புக் கூடாரத்தில் அதிக உராய்சல்கள், தேய்மானம் ஆகியவற்றை தாங்கத்தக்க பணிகள், ஆகியவற்றிற்கு வெண்கலம் பயன்படுத்தப்பட்டது. பித்தளையை முன் காலத்தில் வெண்கலம் என்றனர். இது *2/3* செம்பும், *1/3* டின்-ம் கலந்ததாகும். செம்பும், நாகத்தகிடும் (Zinc) கலந்தாலும் வெண்கலம் எனப்பட்டது. ஆசரிப்புக்கூடார காலத்தில் நாகம் (Zinc) கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, செம்பும், டின்-ம் கலந்த வெண்கலம் பயன்படுத்தப்பட்டது. அல்லது செம்புதான் வெண்கலம் எனப்பட்டது. முன் காலத்தில் செம்பு

வெண்கலம் எனப்பட்டது. (ஆக்ஸ் போர்டு அகராதி) வெண்கலமானது செம்பும் (Copper) வெள்ளீயமும் (Tin) கலந்த உலோகமாகும். இவ்விரண்டும் உருக்கப்பட்டு பிரிக்க முடியாதபடி இணைந்திருந்தது. வேதத்திலுள்ள பிரிக்கக்கூடாத சில இணைப்புகளுக்கு இது ஒப்புனை.

1. புருஷனும் மனைவியும் ஒரே மாம்சமாயிருப்பர். ஆதி. 2.
2. நியாயப்பிரமாணத்தின் சாரமாகிய இரண்டு கற்பனைகள். மத். 22 : 40.
3. ஊழியத்திற்கு இரண்டிரண்டாக அனுப்பினார். மாற்கு 6 : 11.
4. வசனமும் ஆவியும்
5. இயேசுவும் சபையும்

**ஆசரிப்புக் கூடாரத்தில் வெண்கலத்தால் செய்யப்பட்டவை.**

1. பிரகாரத்தைச் சுற்றிலும் நிற்கிற 60 தூண்களுக்கு வெண்கலம் மூடப்பட்டது.
2. அவைகளின் 60 பாதங்கள் வெண்கலம்
3. பலிபீடத்தைப் பொதிந்தது வெண்கலம்
4. வெண்கலத்தொட்டியும் அதன் பாதமும்
5. பரிசுத்த ஸ்தலத்து வாசல், தூண் ஐந்தின் பாதம். யாத். 26 : 37.
6. பிராகாரத்தைச் சுற்றிலுமுள்ள 60 முளைகள் மற்றும் வாசஸ்தலத்தைச் சுற்றிலுமுள்ள முளைகள். யாத். 27 : 19.
7. கூடாரத்தின் மேல் மூடும் திரையாகிய ஆட்டுமயிர் திரைகளை இணைக்கும் 50 கொக்கிகளும் வெண்கலம். யாத். 26:11 (7-11)

வெண்கலம் நல்ல ஓசை தரும். இது கிறிஸ்தவனின் ஜெபம் மற்றும் சுவிசேஷம் அறிவிக்கிற சத்தத்தைக் குறிக்கிறது. சத்தமில்லாத கிறிஸ்த வனை செத்தவனென்று சொல்ல வேண்டும். ஆனால் வாயால் போடுகிற சத்தத்துடன் ஜீவியத்தால், நற்சாட்சியால் சத்தமில்லாத சத்தம் போடு கிறவன் இன்னும் விசேஷித்தவன். வெண்கலம் சத்தம் போடும் என்பதற்கு 1 கொரி. 13 : 1 காண்க.

வெண்கலம் பெலத்தையும், உறுதியையும் குறிக்கும். அது ஆசரிப்புக் கூடாரத்தின் கடினமான பணிகளுக்கு பயன்பட்டது போல தேவஜனம் பலமான பணிகளுக்கு தோள் கொடுக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பிலும், விசுவாசத்திலும், பரிசுத்தத்தைக் காப்பதிலும் பவுல், ஆபிரகாம், யோசேப்பு ஆகியோரைப் போன்ற உறுதியுடையவர் களாயிருக்க வேண்டும். இடத்துக்கு இடம் வித்தியாசமான பண்புடையதாகும். இந்த வெண்கலம் பலிபீடத்தில் காணும்போது தண்டனையையும், நியாயத் தீர்ப்பையும் குறிக்கிறது. தூண்களில் சுற்றிலும் நின்று பாதுகாக்கும் அதன் பண்பு, சபையினை காப்பதில் நமக்கு இருக்க வேண்டும் என்கிறது.

பாதங்களில் தரைமட்டும் தாழ்மைப்படுதலுக்கும் ஆனால் சகலத்தையும் தன் மேல் தாங்கும் தன்மைக்கும் வெண்கலம் ஒப்பனை. தொட்டியின் வெண்கலம் கிறிஸ்துவின் கிருபா பாத்திரமாக நம்மை

நிறுத்துகிறது. முளைகளின் வெண்கலம் தரைக்குள் இறங்குகிற மரணத்தியாக சேவைக்கு ஒப்பனை. இவ்வாறு ஒரே வெண்கலம் பல பணிமுட்டுகளில் பல தன்மையில் விளங்குகிறது. இணைக்கும் கொக்கிகளில் நாம் சகோதர சிநேகத்தினால் உள்ள ஐக்கியமாக்கும் பணியில் வெண்கலத்தைக் காண்கிறோம்.

வெண்கலம் எங்கிருந்து இத்தனைத் திரளாகக் கிடைத்தது? இஸ்ரவேலர் எகிப்தில் வெண்கலப் பாத்திரங்களை மிகுதியாக பயன்படுத்தி வந்தனர். வெள்ளி, பொன் உடைமைகளை எகிப்தியரிடம் கேட்டு வாங்கி வந்தனர். ஆனால் வெண்கலம் சாதாரணமான உலோகமானதால் இஸ்ர வேலரிடமே ஏராளமாயிருந்தது. அதை அவர்கள் உதாரத்துவமாக கர்த்த ருடைய சேவைக்காகக் கொடுத்ததில் ஆச்சரியமுண்டோ?

**3. வெள்ளி:** *1.* ஆசரிப்புக் கூடாரத்தின் பணியில் வெள்ளி ஆற்றிய பங்கு வெகு சிறப்புடையதாகும். *(1)* வேதாகமத்திலேயே வெள்ளி மீட்பின் கிரயத்திற்கு அடையாளமாக உள்ளது. இஸ்ரவேலன் குற்றம் செய்தால் அவன் மீட்கப்பட அபராதத்தை வெள்ளிச் சேக்கலில் மதிப்பிட்டு அதற்கு ஈடான ஆட்டுக் கடாவை செலுத்த வேண்டும். லேவி. *5 : 15. (2)* ஆண் பெண் யாவரும் தங்களை பொருத்தனையாக அர்ப்பணித்தால் பின்பு தங்களை விடுவிக்க வேண்டுமானால் அதற்கு ஈடான மீட்பின் பொருளை வெள்ளிச் சேக்கல் கணக்கில் செலுத்த வேண்டும். லேவி. *27 : 1-6. (3)* காணியாட்சியாகிய வயலில் யாதொரு பங்கை கர்த்தருக்கு பரிசுத்தம் (அர்ப்பணிப்பது) என்று நேர்ந்து விட்டால் பின்பு அதை மீட்க (தனக்கென எடுக்க) வெள்ளிச் சேக்கல் கணக்கில் செலுத்த வேண்டும். (ஒரு கலம் வாற்கோதுமை விளைவிக்கும் நிலத்துக்கு *50* சேக்கல் வெள்ளி) *(4)* நஷ்டஈடு ஒருவகை மீட்பின் பொருளாகும் என உபா. *22 : 19, 29* ல் காண்க. இவ்வாறு மீட்பின் பொருளாகிய வெள்ளி ஆசரிப்புக்கூடாரப்பணிக்கு ஏற்றதாயிற்று.

*2.* வெள்ளி ஐசுவரியத்தின் அடையாளம். ஆபிரகாம் வெள்ளியுடைய சீமானாயிருந்தார். ஆதி. *13 : 2.*

*3.* ரெபேக்காளுக்குக் கொடுக்கப்பட்ட வெள்ளியுடைமை மணவாளன் மணவாட்டிக்கு அளித்த வாக்குத்தத்தங்களுக்கு ஒப்பனை. ஆதி. *24 : 53.*

*4.* பலிபீடம் அபிஷேகிக்கப்பட்டபோது இஸ்ரவேலின் பிரபுக்களின் காணிக்கையில் வெள்ளி மிகுதியாயிருந்தது. எண். *7 : 84.* சபையின் உபயோகத்திற்காக உண்டாக்கப்பட்ட பூரிகைகள் இரண்டும் வெள்ளி. *(1)* சபை கூடுவதையும் *(2)* பாளயம் புறப்படுவதையும் குறிக்கிறது. ஆம்! தேவ எக்காளம் முழங்கும்போது யாவரும் பரலோகத்திற்கு புறப்பட வேண்டுமே. எண். *10 : 2. 1* கொரி. *15 : 51.*

*5.* புதிய ஏற்பாட்டில் எல்லாவிதமான மீட்பின் கிரயமும் இயேசுவின் இரத்தமே. நாம் வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல்

ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறோம்.

**வெள்ளி இருக்கும் ஸ்தான மகிமைகள்**

*1.* கூடாரப் பலகைகளின் கீழே பாதங்களாய் சேவை செய்கின்ற வெள்ளி வெளியே உள்ள தூண்களின் உச்சியில் பூண்களாகத் திகழ்கின்றன. பாதங்கள் தாழ்ந்திருக்குதலையும், உச்சிப்பூண்கள் வாழ்ந் திருக்கு தலையும் காட்டும். பிலி. *4 : 12.* குறைவிலும், நிறைவிலும் மனரம்மி யமாயிருப்போமாக.

*2.* வெளியே நிற்கும் தூண் போல வெளி உலகில் உயர்ந்த பிரசங்கி யானாலும் கூடாரத்தில் (சபையில்) பலகையின் கீழ் பாதமாய் தாழ்மையின் சேவை செய்பவனாய் இருக்க வேண்டும். குடும்பத்திலும் அப்படியே.

*3.* வெறும் சேவை செய்கிறவர்களாய் மட்டுமல்ல, தேவைப்பட்டால் உச்சிப் பூண்களைப் போல தலையை உயர்த்தி இயேசுவுக்காக நிற்கவும் வேண்டும். பந்தி சேவைக்கு வைத்த பிலிப்புவும், ஸ்தேவானும் பின்பு இரத்த சாட்சி களானது போல. அப். *6 : 1-8*

*4.* பலகைகளாகிய விசுவாசிகளைச் சுமக்கும் வெள்ளிப்பாதங்கள் ஒரு பக்கமிருக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலத்துத் தூண்களின் வெள்ளிப் பாதங்கள் கிறிஸ்துவாகிய தூண்களைச் சுமக்கவும் செய்கிறது. எனவே, வெள்ளிப் பாதங்கள் கிறிஸ்துவை மட்டுமல்ல, விசுவாசிகளையும் சுமக்கிறது.

*5.* சிலர் பாதங்கள் மற்றும் பூண்கள் போல பெரிய வேலைகளை மட்டுமே செய்ய விரும்புவர். ஆசரிப்புக் கூடாரத்து வெள்ளியோ சிறிய சேவைக்கு உதவுகிற சிறிய கொக்கிகளாகவும் பயன்பட்டன. இயேசு பாதங்களைக் கழுவினாரே*!* இந்தச் சிறியரில் ஒருவனையும அற்பமாய் எண்ணாதே. மத். *18 : 10.*

**வெள்ளி முழுமையாக இல்லை.**

ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள ஏழு பணிமுட்டுகளில் எதிலும் வெள்ளி முழுமையாக இல்லை. தேவன் அதை ஒரு கருத்தோடு தான் பயன்படுத்தாதிருந்தார் எனலாம். வெள்ளி மீட்பின் கிரயமாக மீட்புக்கு அடையாளமாக இருப்பதால் அதைப் பணிமுட்டுக்காக பயன்படுத்தாமல் விட்டிருக்கலாம். பலிபீடத்திலும், தொட்டியிலும் வெண்கலம் உண்டு. மேஜை, குத்துவிளக்கு, தூபபீடம், பெட்டி, கிருபாசனம் ஆகியவற்றில் பொன் உண்டு. இப்பணி முட்டுகளில் வெள்ளி இல்லை.

முக்கிய பணிமுட்டுகளில் வெள்ளிக்கு இடமில்லாதிருந்த போதிலும் மற்ற சில பொருட்களில் ஒரு உறுப்பாக அது பங்கு பெற்றிருந்தது. இந்த வெள்ளியின் உபயோகத்தை வேத வசனத்துடன் ஒப்பிடலாம். சங். *12 : 6*ல் வேத வசனம் மண்குகையில் ஏழுதரம் உருக்கி புடமிடப்பட்ட வெள்ளிக் கொப்பான சுத்த சொற்கள் என்னப்பட்டுள்ளது. ஆசரிப்புக் கூடாரத்தில் உபயோகமான வெள்ளி ஏழுதரம் உருக்கி சுத்தமாக்கப்பட்டது

என்பதையும் இதனால் அறியலாம். இங்கே, ஆசரிப்புக் கூடாரத்தில் வேத வசனத்துக்கு அதிக முக்கியத்துவத்தை நாம் கொடுக்கவேண்டும்.

அதன் விளக்கங்களாவன:

*1.* சுற்றுப் பிராகாரத் தூண்களின் உச்சியில் வெள்ளிப்பூண். யாத். *27 : 17.* இது வேத வசனத்தைப் பிடித்துக்கொண்டு சுடர்களைப் போல் பிரகாசிக்கும் அனுபவமாகும். பிலி. *2 : 14.*

*2.* அவைகளில் துணிகள் தொங்கவிடப்படும் கொக்கிகளும் வெள்ளி. *27 : 17.* உலகத்தையும், கூடாரத்தையும் பிரிக்கின்ற துணிகள் நிற்க வேத உபதேசங்களாகிய கொக்கிகள் தேவை. 2 கொரி. *6 : 14-18.*

*3.* பிராகார வாசலின் *4* தூண்களின் உச்சியில் குமிழ்கள் (Chapiter) இருந்தன. அவை வெள்ளித்தகட்டால் மூடப்பட்டன. *38 : 19.* வெள்ளிக் குமிழ் தூண்களின் உச்சியில் தண்ணீரோ, தூசிகளோ இறங்கிக் கெடுக் காதபடி காக்கிறது போல வசனம் நம்மை காக்கிறது. சங். *119.*

*4.* ஆலயத்தின் *48* பலகைகளின் கீழும் *2* வீதம் *96* பாதங்களும் வெள்ளியாகும். *26 : 19-25.* வெள்ளிப்பாதங்கள் பலகைகளை விழாதபடி நிறுத்துவது போல விசுவாசிகளை வேதவசனம் நிலை நிறுத்துகிறது, ஸ்திரப்படுத்துகிறது.

*5.* மகா பரிசுத்த ஸ்தலத்தின் *4* தூண்களின் பாதங்கள் வெள்ளி *26 : 32.* மற்ற தூண்களின் பாதங்கள் வெண்கலமாயிருக்க, இங்கே உள்ளே நிற்கும் தூண்கள் வெள்ளிப்பாதங்கள் மேல் நிற்பதுபோல ஊழியர்கள் மற்றவர்களை விட வேத வாக்கியங்களில் தேறினவர்களாயும், வேத வாக்கியங்களில் நிற்கவும் நடக்கவும் முன்மாதிரியாயிருக்கவும் வேண்டும். *1* தீமோ. *4 : 12.*

### 4. பொன்

**1. அழகு:** ஆசரிப்புக் கூடாரத்தின் எழிலை ஏற்றியது பொன் என்றால் மிகையாகாது. தேவஜனமும் ஆன்மீக அழகுமிக்கவர்களாயிருக்க வேண்டும்.

**2. மதிப்பு:** எழிலை மட்டுமல்ல, கூடாரத்தின் மதிப்பையும் அது ஏற்றியது. பொன் மட்டும் இல்லாத ஆசரிப்புக் கூடாரத்தை நினைத்துப் பாருங்கள்! அது எழுத்தின்படி காரசாரமற்றதாய் தோன்றும். ஆனால் ஆசரிப்புக் கூடாரத்தை ஆண்டவர் பொன்னால் நிரப்பியிருக்கின்ற அதிசயத்தைப் பாருங்கள்.

**3. பொன் ஆதாரம் -** (Gold Standard) *:* உலக வர்த்தகங்கள் அனைத்தும் பொன் ஆதாரத்தின் பேரில் கணிக்கப்படுகிறது. நாட்டுக்கு நாடு கொடுக்கல் வாங்கல் யாவும் பொன்னின் அளவில் செய்யப்படுகிறது. உலகத்தைப் பொன் ஆளுகை செய்கிறது எனலாம். அத்தனை விலை யேறப்பெற்ற பொன் ஆசரிப்புக் கூடாரத்தில் பயன்படுத்தப்பட்டது

தேவனுடைய சித்தமே. ஆனால் பொன்னினால் கருவிகளைச் செய்ய ஆலயத்தில் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்த தேவன் அதை சரீரத்தில் ஆபரணமாக அணிய உற்சாகப்படுத்தவில்லை என்பதையும் நாம் அறிக. 1 தீமோ. 2 : 9, 10.

**ஆசரிப்புக் கூடாரத்தில் பொன்**

1. உடன்படிக்கைப் பெட்டியும் அதன் திரணையும் பொன் பொதியப்பட்டது. 37 : 2; 25 : 11.
2. உடன்படிக்கைப் பெட்டி உள்ளும், புறம்பும் பொன்னால் மூடப்பட்டது. 25 : 11.
3. பசும் பொன்னினால் கிருபாசனம் 25 : 17.
4. கிருபாசனத்தின் இரண்டு கேருபீன்கள் 25 : 18, 19.
5. சமூகத்து அப்ப மேஜையும் அதன் திரணையும் பொன் பொதியப்பட்டது. 25 : 24.
6. மேஜைக்குச் சுற்றிலும் ஒரு 4 விரற்கடையான சட்டம் மற்றும் அதின்மேல் ஒரு பொன் திரணை. 25 : 25.
7. பசும்பொன் குத்துவிளக்கு 25 : 31.
8. நான்கு வகை நூல்களால் செய்த மூடுதிரையை இணைக்க 50 பொன் கொக்கிகள். 26 : 6.
9. 10 முழ உயரமும் ஒன்றரை முழ அகலமுள்ள 48 பலகைகள் பொன் பொதியப்பட்டது. 26 : 29.
10. 16 தாழ்ப்பாள்கள் பொன் பொதியப்பட்டது. 26 : 29.
11. மகா பரிசுத்த ஸ்தலத்து 4 தூண்கள் பொன் பொதியப்பட்டது. 26 : 32.
12. மகா பரிசுத்த ஸ்தலத்து தூண்களின் கொக்கிகள் பொன். 26 : 32.
13. கூடாரத்தின் நுழைவாயிலிலுள்ள 5 தூண்கள் பொன் பொதியப்பட்டது. 26 : 36, 37.
14. தூப பீடம் பொன் பொதியப்பட்டது. 30:1, 3. திரணை, தண்டு, வளையம் அனைத்தும் பொன்.
15. ஆசாரிய வஸ்திரத்தில் பொன்.
    a. ஏபோத்தில் 28 : 6
    b. மார்ப்பதக்கத்தில் 28 : 15
    c. அங்கியில் பொன்மணிகளும், பழங்களும் 28 : 33
    d. பாகையின் மேல் பட்டம் 28 : 36. முத்துக்களும், இரத்தினங்களும்.

**வளையங்களில் பொன்**

1. உடன்படிக்கைப் பெட்டி4 -25 : 12
2. மேஜைக்கு - 4 - 25 : 26
3. மார்ப்பதக்கத்தில் 2 - 28 : 23
4. ஏபோத்தில் 2 - 28 : 26
5. ஏபோத் கச்சைக்கு மேல் 2 -28 : 27.
6. தூபபீடத்தில் 4 -30 : 4; 37 : 27.

**தண்டுகளில் பொன்**

1. உடன்படிக்கைப் பெட்டி 2 - 25 : 13
2. மேஜை 2 - 25 : 28
3. தூபபீடம் 2 - 30 : 5

**ஆசரிப்புக் கூடாரத்து பொன் & வெள்ளி**

*1.* எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்டது. எகிப்தியர் இஸ்ரவேலரை கூலியின்றி வேலை வாங்கிக் கொள்ளையடித்ததற்கு ஈடாக எகிப்தியரை கொள்ளையிட இஸ்ரவேலரை தேவன் அனுமதித்தார். யாத். *12 : 35, 36.*

*2.* எகிப்தியப் பொன்னாக இருந்த போதிலும் அது இஸ்ரவேலரின் உழைப்பின் கூலியாகும். அதைக் கொண்டுவர அனுமதித்த தேவன் நீதியுள்ளவர். பொன்னும், வெள்ளியும் கர்த்தருடையது. அவனவனுடைய கூலியைப் பிடித்து வைத்தால் தேவன் கோபிப்பார். யாக். *5 : 4.*

*3.* பொன்னும், வெள்ளியும் தங்களால் கொண்டுவரப்பட்டதாயிருந்த போதிலும், தங்கள் உழைப்பின் பலனாயிருந்த போதிலும் மனப்பூர்வமாய் ஊழியத்திற்காகக் கொடுத்தனர். யாத். *35 : 22, 24.*

*4.* சாதாரணமாக புழக்கத்திலுள்ள உலோகங்களில் பொன் அதிக விலையுயர்ந்ததே. அது ஆசரிப்புக் கூடாரத்தில் அதிகமாய் பயன்பட்டதினால் அது எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தது.

*5.* பொன் வெள்ளி நகைகளும் உடைமைகளும் தங்கள் தங்கள் கைகளில் இருந்த வடிவமல்ல இப்போது. எல்லாம் உருக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் தேவனுக்கேற்ற வடிவம் பெற்றன. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதிய சிருஷ்டியாக இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. *2* கொரி. *5 : 17.*

*6.* ஆசரிப்புக் கூடாரத்தில் பசும் பொன்னினால் மட்டும் செய்த பணிமுட்டுகள் இரண்டு ஆகும். அதில் ஒன்று பரிசுத்த ஸ்தலத்திலுள்ள குத்துவிளக்கும், மற்றது மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிருபாசனமும் ஆகும். எனவே இரட்சிப்பின் மேன்மையான அனுபவங்களை அடைய நாம் உள்ளறைகளுக்கு வரவேண்டும் என தேவன் விரும்புகிறார்.

*7.* பிராகாரத்தில் பொன் இல்லையென்பதால் அது புறக்கணிக்கப் பட்டது எனப் பொருளல்ல. இரட்சிப்பு பிராகாரத்தில் தான் துவங்குகிறது. ஆனால் இரட்சிப்பு அற்பமானதில் தான் மறைந்திருக்கிறதென இது வெளிப்படுத்துகிறது. அற்பமான சிப்பிக்குள் முத்துப் போல*!*

(அ) இயேசுவின் மனுஷ அவதாரம் அற்பமாய் காணப்பட்டது.

(ஆ) பிறப்பிடம் அற்பமானது. கொட்டாரமோ, சத்திரமோ கூட கிடைக்க வில்லை. முன்னணை தான் கிடைத்தது.

(இ) அவர் வாழ்ந்த ஊர் அற்பமானது. நாசரேத்திலிருந்து நன்மை வருமா என்றனர். யோவான் *1 : 46.*

(ஈ) இயேசு கல்லாதவர் எனப்பட்டார்.

(உ) மரியாள் ஐசுவரியமான குடும்பமல்ல. இவ்வாறு ஆசரிப்புக் கூடாரத்தின் பார்வைக்கு மகிமை குறைந்த பிராகாரத்தில் தான் பலிபீடமும் இரட்சிப்பும் இருக்கிறது. இயேசுவின் தாழ்மையும் இகழ்ச்சிக்குரியதுமான சிலுவையின் ஈன மரணத்தில் தான் இரட்சிப்பு இருக்கிறது என்பதைப் பொன்னின் பளபளப்பு அற்ற பிராகாரம் வெளிப்படுத்திற்று.

# பொன்னின் ஸ்தான மகிமை

ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரம் தவிர்த்து இரண்டு பகுதிகளும் பொன் மயமாக இருந்தது. பிராகாரத்தில் எந்த பணி முட்டுகளிலும், கட்டுமானப் பணியிலும் அதற்கு இடமில்லை. பிராகாரத்தின் மனுஷீகத் தொடுதலுக்கு விலகி கூடாரத்திற்குள்ளே மட்டுமே காணப்பட்டது. இது பாவத்தால் கறைப்பட்ட மனிதனின் கண்ணுக்கு மறைந்திருக்கிற தேவனுக்கு ஒப்பனை.

தெய்வீகத்தின் மகிமைகளாகிய பொன்மயமான மேஜை, விளக்கு, தூப பீடம், உடன்படிக்கைப்பெட்டி, கிருபாசனம் ஆகியவை கூடாரத்திற்குள் மறைந்திருந்தன. தெய்வீகத்தின் மகிமைகளும் ஆழமான அனுபவங்களும் சற்று மறைவாகவே உள்ளன. அவைகள் பெறக்கூடாதவைகள் அல்ல. பிராகாரத்தின் அனுபவத்தைத் தாண்டி உள்ளே வந்தால் மட்டுமே அடையக் கூடியதாயிருக்கிறது. உதாரணமாக, இரட்சிப்பு பிராகாரம் போல யாவருக்கும் வெளிப்படையாக இருக்கிறது. ஆனால் ஊழியம், வரங்கள் முதலியன சற்று மறைவாகவும் தேவ இரகசியங்கள் உக்கிராணக் காரருக்கு மட்டும் கிடைப்பதுமாயிருக்கிறது.

இவ்வாறு பொன் மிகுதியாக உள்ளே மறைந்திருந்த போதிலும் அதன் ஒரு சில பகுதி வெளியே தெரியக்கூடியதாக இருந்தன. கூடாரத்தின் நுழைவாயிலில் தூண்கள் பொன்னால் பொதியப்பட்டிருந்தது. இதனை பிராகாரத்தில் வருவோர் காணமுடியும். இது யாவரும் காணக் கூடியவராய் வந்த இயேசுவில் வெளிப்பட்ட தெய்வீகத்தின் சித்திரமாகும். *48* பலகைகளின் ஒரு பக்கம் உள்ளே பார்த்தவண்ணமிருக்கையில் மறுபக்கம் பிராகாரத்தைப் பார்த்த வண்ணம் இருந்தது. இது உலகம் காணத்தக்க விதத்தில் விசுவாசிகள் மூலமுள்ள தேவ செயல்களின் வெளிப்பாடாகும். தேவன் மறைந்திருந்த போதிலும், தமது மகிமையின் ஐசுவரியத்தை (எபி. *1:1-3*) பங்கு பங்காகவும், வகைவகையாகவும் எக் காலத்திலும் வெளிப்படுத்திக்கொண்டே இருந்தார். வெளியே காண்பிக்கிற கொஞ்சம் இத்தனை மகிமையாக இருந்தால் உள்ளே இன்னும் எத்தனை மேன்மையாக இருக்கும் என்பதை மனிதன் எண்ணி உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படியே, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், இலை, பூ சிறிய பெரிய மிருகங்கள், பறவை யாவும் அவருடைய வல்லமையின் சிறு சிறு வெளிப்பாடுகளேயாகும்.

இரட்சிக்கப்பட்ட தேவ ஜனமே! வெளியே காண்பதே நமக்கு மிகுதியானால் காணப்படாதவைகள் எத்தனை விசேஷமாக இருக்கும்! தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இதயத்தில் தோன்றவுமில்லை. *1* கொரி. *2:9*. காணப்படுகிற பூமியில் வெளிப்படும் தேவ மகிமைகள் இத்தனை பெரிதானால் காணப்படாத

புதிய எருசலேம் எத்தனை விசேடமாக இருக்கும்?

ஆசரிப்புக் கூடாரத்தில் பயன்படுத்தப்பட்ட பொன்னானது பசும்பொன் னாகும். "பசும்" என்ற வார்த்தை கறையற்ற, கலப்படமற்ற சுத்தப் பொன்னைக் குறிக்கும்.

1. வேத வசனங்கள் பசும்பொன் போன்றது. சங். *19 : 8-10.*
2. இயேசு பசும்பொன் போல சுத்தமானவர் எபி. *7 : 26.*
3. சபையும் அப்படியே இருக்க வேண்டும் எபே. *5 : 26.*
4. புதிய எருசலேம் பரிசுத்தப் பொன் நகரமாகும் வெளி. *21 : 10.*

பரிசுத்த வேதாகமத்தில் *5* வகைப் பொன்னைக் காணலாம். அவற்றுள் எதை ஆசரிப்புக் கூடாரத்தில் பயன்படுத்தினர் என்பது தெரியவில்லை. எதுவானாலும் அது பசும்பொன்னாக இருந்ததென்பது மட்டும் உறுதி. அவையாவன:

1. ஆவிலா தேசத்துப் பொன் ஆதி. *2 : 11.*
2. பர்வாயீம் பொன் 2 நாளாகமம் *3 : 6.*
3. ஊப்பாசின் பொன் தானியேல் *10 : 5.*
4. ஒப்பீரின் தங்கம் சங். *45 : 9.*
5. ஆனால் புதிய எருசலேமின் பொன்னானது இவைகளைப் பார்க்கிலும் மேன்மையேறின தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப் பொன்னாம். வெளி. *21 : 18.* அல்லேலூயா!

### 5. ஆசரிப்புக் கூடாரத்தில் இல்லாத உலோகம் - இரும்பு

மனித வாழ்வில் மிக மிக உபயோகத்திலுள்ள உலோகமாகும் இரும்பு. இரும்பினை மனிதனின் நண்பன் எனலாம். ஆனாலும் தேவன் அதனை ஆசரிப்புக்கூடாரத்தில் எந்த ஒரு பணிக்கும் பயன்படுத்தாமல் தள்ளி விட்டார். காரணமாவது: *(1)* அது எளிதில் வளையும் தன்மையுள்ளது, வெண்கலம், வெள்ளி, பொன் இவற்றை விட உறுதி குறைந்ததாகும் இரும்பு. உறுதியற்றவன் ஆண்டவரின் ஊழியத்திற்கு உதவாதவன் என்பதே அதன் பொருள். பாவ சோதனைகளுக்கு வளைந்து கொடாதவனே ஊழியன். *(2)* துருப்பிடிக்கும் குணமுடையது இரும்பு. உலோகங்கள் அனைத்திலும் இரும்பு மட்டுமே இத்தனை அதிகக் கேடுள்ளதாயிருக்கிறது. மற்ற எந்த குணங்கள் அதற்கு இருந்தபோதிலும் இந்த ஒரு கேவலத்தினிமித்தம் தேவன் அதை ஆசரிப்புக்கூடாரத்தில் பயன்படுத்தவில்லை. இது போல உலகத்தின் அசுத்தங்களால் வாழ்க்கை யில் கேடு பிடித்து இற்றுப்போகிற சுபாவமுள்ளவர்கள் ஆலயத்தின் பணிக்கு உதவார். ஆனால் குடிகாரர், வேசிக்கள்ளர், லஞ்சப்பேர்வழிகள் முதலியோர் தேவசபைகளில் முக்கியஸ்தர்களாயிருப்பார்களேயானால் இரும்புக்கு ஆசரிப்புக் கூடாரத்தில் தேவன் இடமளிக்கவில்லை என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். உலோகங்களில் இரும்பு; மிருகங்களில் நாயும், பன்றியும்!

## அதிகாரம் 37

## மகா பிரதான ஆசாரியன்

பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டு காலத்தில் கொடுக்கப் பட்டுள்ள முக்கியமான பதவிகள் மூன்று ஆகும். அவையாவன:

1. அரசியல் நிர்வாகத்திற்கு - ராஜா
2. யூத சமுதாய சீர்திருத்தத்திற்கு - தீர்க்கதரிசி
3. ஆன்மீக வாழ்வுக்கு - ஆசாரியன்

வானளாவும் மேன்மைகளுடன் தோன்றிய பிரதாபமிக்க இப்பதவிகள் போகப் போக சீர்குலைந்து இழிநிலையை அடைந்தது. ஆரம்பத்தில் தேவன் தாமே இம்மூன்று பதவிகளுக்கும் தக்க அதிகாரிகளை நியமித்து வந்தார். ஆனால் போகப்போக அவரவர் தங்கள் மனம் போல இவர்களை வைத்துக் கொண்டனர். தேவ சித்தப்படி வைக்கப்பட்டவர்களும் தேவ சித்தப்படி செயல்படாமல் சொந்த வழிகளுக்குத் திரும்பினர்.

**1. இராஜாக்கள்:** கானானில் இஸ்ரவேலின் முதலாவது இராஜாவும், பென்யமீன் கோத்திரத்தைச் சார்ந்த அபிஷேகம் பண்ணப்பட்டவருமாகிய சவுல் தேவ சித்தம் செய்யத் தவறியபோது யூதா கோத்திரத்தைச் சார்ந்த தாவீது இராஜாவாக தேவனால் நியமிக்கப்பட்டார். தாவீதின் குமாரனாகிய சாலமோனை இராஜாவாக்க தேவன் சொல்லவில்லை என்றாலும் ராஜரீகம் குடும்ப பரம்பரையாக மாற்றப்பட்டது. தொடர்ந்து ராஜகுலம் அல்லது ராஜ வம்சம் உருவாயிற்று. போகப்போக இராஜாக்கள் எத்தர்களும், பித்தர்களுமாயினர். விபச்சாரிகளும், விக்கிரக வழிபாட்டினருமாயினர். இதனால் தேவன் இராஜ குலத்தை வெறுத்தார். கைவிட்டார். சிறைக்கு அனுப்பினார்.

**2. தீர்க்கதரிசிகள்:** தேவன் அபிஷேகத்தினால் நியமித்தவர்களாகும் தீர்க்கதரிசிகள். அதிகாரப்பூர்வமாக அறியப்பட்ட முதலாவது தீர்க்கதரிசி சாமுவேல் எனலாம். இவர்கள் இராஜாக்களின் பரம்பரை வாரிசு முறை உடையவர்கள் அல்ல. தேவன் அங்குமிங்கும் இருந்து சிலரைத் தெரிந்தெடுத்து ஆவியால் அபிஷேகித்து பயன்படுத்தியதாகக் காணலாம்.

பெரிய தீர்க்கதரிசிகளில் பலரும் லேவி கோத்திரத்தைச் சார்ந்த ஆசாரிய வகுப்பினராக இருந்ததாகக் காணலாம். எனவே, ஆசாரியத்துவத்துடன் தீர்க்கதரிசன ஊழியம் சொந்தமாயிருந்தது எனலாம். உதாரணமாக,

1. லேவி கோத்திரத்தைச் சார்ந்த மோசே தீர்க்கதரிசியாக இருந்தார் உபா. *34 : 12*.
2. அப்படியே ஆரோன் தீர்க்கதரிசியாக இருந்தார். யாத். *7 . 1*.
3. சாமுவேல் தீர்க்கதரிசியும் லேவியின் குமாரனான கோகாத்தின் வம்சமாயிருந்தார். *1* நாளாகமம் *6 : 33, 38*.
4. எலியாவின் கோத்திரம் பற்றி எதுவும் தெரியாதிருந்த போதிலும்,

ஆசாரியருக்குரிய பலி செலுத்தும் பணியை இவர் செய்ததால் அவரை லேவி கோத்திரத்தான் என நிர்ணயிக்கலாம் *1* இராஜா. *18.*

5. எரேமியா தீர்க்கதரிசி ஆசாரியனாகிய இல்கியாவின் குமாரனாக இருந்தார். எரேமியா *1 : 1.*
6. எசேக்கியல் பூசி எனும் 'ஆசாரியனுடைய மகனானாவார். எசே. *1 : 3.*
7. யோவான் ஸ்நானனாகிய தீர்க்கதரிசியும் சகரியா என்ற ஆசாரியனுடைய மகனாவார். லூக்கா *1 : 5;* மத். *21 : 26.*

இந்த அதிசய வரம் பெற்ற ஊழியம் பிற்காலங்களில் இருளில் மூழ்கியது. பொய்யரும், பொல்லாதவர்களுமாகிய தீர்க்கதரிசிகள் மெய் தீர்க்கதரிசிகளுடைய கண்டனத்திற்குள்ளாயினர். ஏசாயா *9 : 15.* "பொய் போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால்" "தீர்க்கதரிசிகள் மதுபானத்தால் மதி மயங்கி ....... மோசம் போயினர்." ஏசாயா *29 : 10.* தீர்க்கதரிசிகள் பொய்யர். எரேமியா *6 : 13.* தீர்க்கதரிசிகள் காற்றாய் போவார்கள். எரே. *5 : 13.* மாயக்காரராயிருக்கிறார்கள். எரே. *23 : 11.* "சமாரியாவின் தீர்க்கதரிசிகளிலோ மதிகேட்டைக் கண்டேன், பாகாலைக் கொண்டு தீர்க்க தரிசனம் சொல்லி இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தை மோசம் போக்கினார்கள்." எரேமியா *23 : 13.* இந்நிலையில் தேவன் தீர்க்கதரிசி களையும் சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார்.

**3. ஆசாரியன்:** இராஜா, தீர்க்கதரிசி, ஆசாரியன் ஆகிய முப்பதவிகளில் மிகப்பெரியதும், முதலாவது ஸ்தாபிதமானதும் ஆசாரியப்பதவியாகும். எகிப்திலிருந்து புறப்பட்ட ஜனங்கள் 3ம் மாதம் முதல் தேதியன்று சீனாய் மலையை அடைந்தனர். அங்கே கர்த்தர் மோசேயைக் கூப்பிட்டுப் பேசி ஆசரிப்புக் கூடாரத்தின் மற்றும் ஆசாரிய ஊழியத்தின் அமைப்பு குறித்து வெளிப் படுத்தினார். இஸ்ரவேலரை ஒரு "ஆசாரிய ராஜ்யம்" என முதன் முதலாக தேவன் அழைத்தார். யாத். *19 : 6.* அதை ஒரு ஆசாரியத்துவ சாம்ராஜ்யம் எனலாம். ஆசாரிய அமைப்பில் ஒரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்துவதே தேவ சித்தமாயிருந்தது. a priestly Kingdom.

*1.* ஒரு ராஜா மூலம் ஆளுகை செய்யும் முறை ஏற்கனவே புறஜாதி வழக்கமாக இருந்தது. ஆகையினால் தான் இஸ்ரவேலர் புறஜாதிகளைப் போல் ஒரு ராஜாவைக் கேட்டுக் கொண்டது தேவனுக்குப் பிரியமில்லாமற் போயிற்று. *1* சாமு. *8 : 7.* ஒரு ராஜாவை வேண்டிக்கொண்டதினால் "என்னைத் தள்ளினார்கள்" என்று வருந்தினார் தேவன். மேலும், தேவன் தாமே தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் ஆகியோரை நியாயாதிபதிகளாகப் பயன்படுத்தி வந்தார். ஜனங்கள் ஆத்திரப்பட்டு கேட்டபோது தேவனும், "கோபத்திலே ராஜாவைக் கொடுத்தேன்" என்றார். ஓசியா *13 : 11.*

*2.* நித்திய ராஜரீக பதவியை தேவன் இயேசுவுக்காக வைத்திருந் தார். தானியேல் *7 : 14.* அதை இஸ்ரவேலர் வேண்டிக்கொண்டது தேவனுக்கு பிரியமில்லாமற் போயிற்று. எனினும், அவர்கள் விரும்பிக் கேட்டதினால் இராஜாக்களை தேவன் அனுமதித்தார். இராஜாக்கள்

கர்த்தருக்குப் பயந்து நடந்தபோது ஆதரித்தார். சோரம் போனபோது தள்ளிவிட்டு, சிறை யிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார். எனவே, ஆசாரியத்துவ ஆளுகையை தேவன் விரும்பினார்.

இஸ்ரவேலில் ஆசாரியனின் பதவி மகிமை மிக்கது ஆகும். ஆசாரிய அமைப்பைப் பற்றி தேவன் மேன்மையாய் கூறியிருக்கும் அளவுக்கு ராஜரீக அமைப்பையோ, தீர்க்கதரிசன அமைப்பையோ குறித்துப் பேசவில்லை. அதன் காரணங்களாவன.

1. மக்களின் பாவ நிவாரணபலிக்கு ஆசாரியனிடம் ஒவ்வொருவனும் வந்தே ஆக வேண்டும். இராஜாக்களும் ஆசரிப்புக் கூடாரத்திற்கு வந்து ஆசாரியனின் விதிப்படி பலி செலுத்த வேண்டும்.

2. இராஜாக்களின் வஸ்திரங்களைக் குறித்து எதுவும் கூறாதிருக்கையில் ஆசாரியனுடைய வஸ்திரங்களைக் குறித்து திட்டவட்ட மான அறிவுரைகளை வழங்கினார். இது ஆசாரியனின் மகிமையை உயர்த்தியது.

3. இராஜா, தீர்க்கதரிசி ஆகியோரின் அரமனை/அலுவலகம் குறித்து தேவ வெளிப்பாடுகள் இல்லாதிருக்கையில் ஆசாரியனின் அலுவல கமும், ஆலயமுமாகிய ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்ட தேவனே மாதிரியைக் கொடுத்திருப்பது ஆசாரியனுக்கு மிக மேன்மையாகும்.

4. ராஜா கை வல்லமையாலும், இராணுவ பெலத்தினாலும் செயல் பட்டான். ஆசாரியனோ, தேவ வல்லமையாலும், தேவ வெளிப்பாட்டினாலும் ஊழியம் செய்தான்.

5. அரசன் நாட்டின் செழிப்பையும், பாதுகாப்பையும் நாடினபோது, ஆசாரியன் மக்களின் ஆத்மீகத்தின் பாதுகாப்பை நாடி நின்றான்.

6. ராஜாவும் மற்றவர்களும் தனி சுதந்திரம் பெற்று வாழ்ந்தனர். ஆசாரியர் களோ பூமியில் சுதந்திரம் எதுவுமின்றி கர்த்தரே அவர்கள் சுதந்திரம் என்ற அந்தஸ்தை அடைந்திருந்ததும் அவர்களது மகிமைக்குக் காரணமாகும்.

7. யோசுவா *13 : 14*. “லேவியரின் கோத்திரத்துக்கு மாத்திரம் சுதந்திரம் கொடுக்கவில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுக் குச் சொன்னபடியே அவருடைய தகனபலிகளே அவர்களுடைய சுதந்திரம்.”

   “கர்த்தரே அவர்களுடைய சுதந்திரம்” யோசுவா *13 : 33*.

   “லேவியருக்கு உங்கள் நடுவே பங்கில்லை; கர்த்தருடைய ஆசாரிய பட்டமே அவர்கள் சுதந்தரம்.” யோசுவா *18 : 7*. இத்தனை மகிமையான ஒரு சுதந்தரத்தை இராஜாக்களுக்கோ, தீர்க்கதரிசி களுக்கோ தேவன் கொடுக்காதது ஆசாரியத்துவத்தை சிறப்பித்துள்ளது.

8. உசியா ராஜா கூட ஆலயத்துக்குள் தூபம் காட்ட விரும்புமளவிற்கு அது உச்சிதமான ஊழியமாயிருந்தது. தனக்கடாத வேலைக்கு தன்னிச்சையாக நுழைந்ததற்கு அடியாக நெற்றியில் குஷ்டம் கண்டு ஒரு ராஜா கதி கலங்கி வெளியேறுமளவிற்கு அது பயங்கரமான தாகவும் இருந்தது. *2* நாளாகமம் *26 : 18-21.*

**ஆசாரிய வகுப்புகள்:** ஆசாரிய வகுப்பு மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

**1. லேவியன்:** இஸ்ரவேலின் (யாக்கோபு) மூன்றாவது மகனாகிய லேவியின் வம்சாவழியில் பிறந்த எவருமே லேவியன் எனப்பட்டான். அவனுடைய தாயின் பெயர் லேயாள். கூச்சப்பார்வையினால் யாக்கோபின் பிரியத்தைக் குறைவாகப் பெற்றிருந்த போதிலும் அவளுடைய மகனையே ஆசாரிய கோத்திரமாகத் தெரிந்துகொள்ள தேவன் பிரியப்பட்டார். உங்கள் வழி என் வழிகளல்ல; ஏசாயா *55 : 8.* சகோதரனே, உன் மனைவி அழகில்லை யென்றோ, சகோதரியே உன் புருஷனின் குறைபாடுகளையோ எண்ணாதே. தேவ ஆசீர்வாதமே பெரியது. நீங்கள் அன்பாயிருந்தால் தேவன் உங்கள் பிள்ளைகளை உயர்த்துவார். மற்றபடி பாருங்கள்! யாக்கோபின் பிரியமான மனைவியான ராகேல் ஒரு திருடி. அவள் தன் கணவன் வீட்டை அடைய வில்லை. வழியிலே மரித்தாள். ஸ்திரீயே நீ எப்படி? மதிகெட்ட அழகுள்ள ஸ்திரீயை நேசிக்கிறாயா? தேவபக்தியுள்ள உன் மனைவியை வெறுக்கிறாயா? ராகேல் திருடியாயிருந்த போதிலும் அவளுடைய குமாரனை (யோசேப்பு) தேவன் உயர்த்தினார். உன் பெற்றோர் கொடிய பாவியாக இருந்தாலும் நீ நல்லவனாகலாம். எசேக். *18 : 4, 20.* "இதோ எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்." "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன் சிரசின் மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல்தான் இருக்கும்."

லேவி என்பதற்கு அவர் (புருஷன்) "என்னோடே சேர்ந்திருப்பார்" என்று பொருள். ஆதி. *29 : 34.* எனவே, லேவி என்பது வெறுக்கப்பட்ட லேயாளை புருஷனோடு இணைக்கும் பண்பாகும். ஆம்! தேவனை வெறுக்கிற மனுக்குலத்தையும், பாவத்தினால் மனிதனை வெறுத்த தேவனையும் இணைக்கும் பாலமாகும் லேவியன். அவன் மூலமாகத்தான் பலிகளைச் செலுத்தி மனிதன் தேவனோடு ஒப்புரவாக முடியும். சுருங்கக்கூறின் தேவன் மனிதனோடு இணையும்படி தெரிந்தெடுத்த கோத்திரமாகும் லேவி.

மேலும் மோசே மலையிலிருந்து இறங்கி வந்தபோது ஜனங்கள் கன்றுக்குட்டி வழிபாட்டில் ஈடுபட்டு தங்களைக் கெடுத்துக் கொண்டிருந் தனர். யாத். *32 : 3-7, 25 , 28.* மோசே கோபங்கொண்டார்.

''கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள்" என்று அறைகூவினார். உடனே லேவி புத்திரர் மட்டுமே முன் வந்தனர். மோசே யின் கட்டளைப்படி பட்டயத்தை உருவி மூவாயிரம் பேரை லேவியர் சங்கரித் தனர். இவ்வாறு லேவியர் விக்கிரக ஆராதனைக்கு உடன்படாமல் அதற்கு எதிர்த்து நின்றதால் தேவகடாட்சம் பெற்றனர். கர்த்தருடைய சேவைக்குத் தெரிந்து கொள்ளப்பட்டனர். உபா. *10 : 8-9.* "அக்காலத்திலே கர்த்த ருடைய உடன் படிக்கைப் பெட்டியைச் சுமப்பதற்கும், இந்நாள் வரைக்கும் நடந்து வருகிறது போல, கர்த்தருடைய சந்நிதியிலே நின்று அவருக்கு ஆராதனை செய்வதற்கும், அவர் நாமத்தைக் கொண்டு ஆசீர்வதிப் பதற்கும், கர்த்தர் லேவியின் கோத்திரத்தைப் பிரித்தெடுத்தார். ஆகையால் லேவிக்கு அவன் சகோதரரோடே பங்கும், சுதந்தரமும் இல்லை; உன் தேவனாகிய கர்த்தர் அவனுக்குச் சொன்னபடி, கர்த்தரே அவனுக்குச் சுதந்தரம்." எனவே லேவி கோத்திரத்தாரல்லாத ஒருவன் ஆசரிப்புக் கூடாரத்து ஊழியத்திற்கு சேரலாகாது.

**2. ஆசாரியன்:** தேவன் தாம் ஏற்படுத்திய ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடைக்காக அநேக ஆசாரியர்களை அதிகாரபூர்வமாக நியமித்திருக் கிறார். இவர்கள் லேவியர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆசரிப்புக்கூடாரத்தில் பலிகளும், பணிகளும் மிகுதியாக இருந்ததால் அநேக ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் மகாபிரதான ஆசாரியனின் கட்டளை களின்படி நடந்துகொண்டு கீழ்வரும் பணிகளைச் செய்ய வேண்டும். இப் பணிகளின் பொதுவான கண்காணிப்பாளர் பிரதான ஆசாரியராவார்.

**ஆசாரியனின் பணிகள்**

1. பலிபீடத்தில் பலியின் துண்டங்களை அடுக்கி வைத்தல் லேவி. *1 : 12.*
2. பலிகளைக் கொண்டு வருகிற எல்லா மக்களுக்காகவும் பாவ நிவர்த்தி செய்தல் லேவி. *4 : 20, 26; 5 : 6; 6 : 7; 12 : 8; 15 : 15, 30; 16 : 30; 19 : 22.*
3. பலிகள் பீடத்தில் எரிந்து சாம்பலாகுமட்டும் கண்காணிக்க வேண்டும். லேவி. *1 : 9, 13, 17; 2 : 2, 9, 16; 3 : 1, 16; 4 : 10, 31, 35; 7 : 5, 31.*
4. குஷ்டரோகியை பார்வைபிட்டு அடைத்து வைப்பதும், சுத்தமுள்ளவ னென்றோ, அசுத்தமுள்ளவனென்றோ தீர்ப்புக்கூறுவது. லேவி. *13.*
5. சில பலிகளின் இரத்தத்தை எடுத்து ஆசரிப்புக் கூடாரத்தில் குறிப்பிட்ட இடங்களில் தெளிப்பது. லேவி. *1 : 5.*
6. வீட்டின் குஷ்டங்களைப் பார்வைபிடுவதும், தீர்ப்புக் கூறுவதும்.
7. முதற்கனியாகிய கதிர்கட்டை தேவ சந்நிதியில் அசைவாட்டுவது லேவி. *23 : 10, 11.*
8. விசேஷ பொருத்தனையாக தங்களை அர்ப்பணிக்கிறவர்களை சேக்கல் கணக்கில் மதிப்பிடுதல். லேவி. *27 : 1-8.*
9. விற்கப்பட்ட வயல் மீட்கப்படாமல் வேறு ஒருவனுக்கு மீண்டும்

விற்கப்பட்டால் அது திரும்ப மீட்கப்படாமல் யூபிலி வருஷத்தில் கர்த்தருக்குச் சொந்தமாகும். அதை ஆசாரியன் காணியாட்சியாக பெற்றுக்கொள்ள வேண்டும். லேவி. *27 : 19-21.*

10. புருஷனுக்குத் துரோகம் பண்ணின ஸ்திரீயை விதிப்படி தீர்ப்பு செய்து தீர்ப்புக் கூறுவது. எண். *5 : 11-31.*
11. நசரேய பொருத்தனை செய்து கொண்டவனுக்கு விரத நாட்கள் நிறைவேறின அன்றே விரத நிவர்த்தி செய்தல். எண். *6 : 13-21.*
12. இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்தல்.
13. இரத்தப்பழிகளைக் குறித்தும், வியாச்சியங்களைக் குறித்தும் காயம்பட்ட சேதங்களைக் குறித்தும் தீர்ப்புக்கூறுவது. உபா. *17 : 8-12.*
14. ஜனங்கள் யுத்தத்திற்கு புறப்படும்போது அவர்களை தைரியப்படுத்தி அனுப்புவது. உபா. *20 : 1-4.*
15. தேசத்தில் முதல் விளையும் பலன்களை வாங்கி தேவசந்நிதியில் வைத்தல்.
16. தேவாலயத்தைப் பழுது பார்க்கும் பணிகள். *2* ராஜாக்கள் *12 : 6.*
17. பரிசுத்த ஸ்தலத்திற்கும், ஆசரிப்புக் கூடாரத்திற்கும், பலிபீடத்திற்கும் பிராயசித்தம் செய்தல். லேவி. *16 : 33.*
18. ஆசாரியருக்காகவும், சகல ஜனங்களுக்காகவும் பாவ நிவர்த்தி செய்தல் லேவி. *16 : 33.*
19. ஓய்வுநாள்தோறும் சமுகத்தப்பங்களை மாற்றுதல்.
20. குத்துவிளக்கில் எண்ணெய் வார்த்து எப்போதும் அதை எரிந்து கொண்டிருக்கச் செய்தல்.
21. தூப பீடத்தில் தூப வர்க்கமிட்டு தூபம் காட்டுதல். *2* நாளா. *26 : 18.*
22. வாதையின்போது தூபகலசத்தை எடுத்து ஜனங்களுக்குள் சென்று தூபங்காட்டி வாதையை நிறுத்த தேவனிடம் பரிந்து பேசுதல். எண். *16 : 46-50.*
23. உடன்படிக்கைப் பெட்டியை சுமத்தல்.
24. அன்றாட பலிகள், ஓய்வுநாள்தோறுமுள்ள பலிகள், பண்டிகைப் பலிகள், பிரதிஷ்டை பலிகள் ஆகியவற்றை அதினதின் காலத்தில் செலுத்துதல்.
25. வேதத்தின் விளக்கங்களை ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டும். எரே. *18 : 18;* மல்கியா *2 : 7.*

இப்பணிகளையெல்லாம் பிரதான ஆசாரியனின் கட்டளைக்கும், கண் காணிப்பிற்கும் உட்பட்டு ஆசாரியர்கள் கூட்டம் செய்து வந்தனர். ஆசாரியர்கள் ஒருவரல்ல, பலர் அல்லது ஒரு ஆசாரியர் கூட்டமே ஆசரிப்புக் கூடாரத்தில் பணி புரிந்திருந்தனர். ஒரு விசை உசியா ராஜாவை *80* ஆசாரியர்கள் எதிர்த்தனர் என்பதிலிருந்து ஆசாரியர்கள் அநேகராயிருந்தனர் என்பதை அறியலாம். *2* நாளா. *26 : 17.* ஒருமுறை சவுலின் கட்டளைப்படி தோவேக்கு என்பவன் *85* ஆசாரியர்களைக் கொன்றான். *1* சாமு. *22 : 18.* ஆசரிப்புக் கூடாரத்துப் பணிமுட்டுகளையும், உடன்படிக்கைப் பெட்டியையும் அநேகரான ஆசாரியர்கள் சுமந்ததாக காண்கிறோம். எண். *4 : 18-20;* யோசுவா *3 : 6.*

**3. பிரதான ஆசாரியன்:** இஸ்ரவேலில் ஆசாரியன் ஒருவர் நியமிக்கப்படும் முன்னே மெல்கிசேதேக்கு என்பவர் சாலேமில் ஆசாரியனாக இருந்திருக்கிறார். இவரது ஆசாரியத்துவ முறைமையின் ஒரு பிரிவாக யாத். *2 : 16.* ஆபிரகாமின் மறுமனையாட்டியாகிய

கேத்தூராளின் மகனாகிய மீதியா னின் பேரில் ஒரு ஆசாரிய வம்சம் உருவாகியிருக்கிறது. எனவே ஆபிரகா மின் வழிபாட்டு முறைக்கொத்த ஒரு ஆசாரிய முறைமை எத்திரோவுக்கும் இருந்திருக்க வேண்டும். இவ்விருவரும் அந்தந்த தேசத்து ஜனங்களுக்குத் தலைவர்களாயிருந்து ஆசாரியப் பணிவிடையையும் செய்து வந்ததாக எண்ணத்தகும். யோபு வும் அவ்வாறு ஒரு தேசத்தலைவனும் ஆசாரிய னுமாக இருந்திருக்கிறார் எனக் கருதலாம். தன் பிள்ளைகளுக்காக இவர் சர்வாங்க தகனபலி களைச் செலுத்துவதைக் கவனிக்கவும். யோபு *1 : 1, 5*. எனவே, தெய்வீகத்தின் பராமரிப்புக்கு ஒரு ஆசாரியன் தேவை என்பது தொன்றுதொட்டே மக்கள் உள்ளத்தில் ஆழமாய் பதிந்திருந்தது.

இன்றும் எல்லா மதங்களிலும் ஒருவர் மதகுருவாகவும், தலைவ னாகவும் செயல்படுவது வழக்கமாகும். அவரை ஆசாரியன் என்று அழைப் பதும் உண்டு. எகிப்திலும், பாபிலோனிலும் அவ்வாறு பிறமத ஆசாரியர்கள் இருந்ததாக வரலாறுகள் உள்ளன. கிறிஸ்தவத்தின் பெயரிலும் கத்தோலிக்க மதத்தினர் 'போப்' என்ற பதவியில் ஒரு ஆசாரியனை ஏற்படுத்தி யிருப்பதும் நாமறிந்ததே! இவைகள் யாவும் இஸ்ரேலிய மத ஆசாரியனிலிருந்தும், வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாட்டு விதிமுறைகளைத் தழுவியும் ஆசாரிய பட்டத்தைக் காப்பி அடித்தும் வந்ததெனக் காண இயலும்.

இஸ்ரவேல் சபையிலும் பிரதான ஆசாரியன் மூலம் சபையை நிர்வகிப்பது என்று தேவன் முடிவு பண்ணினார். ஆசரிப்புக்கூடாரத்தின் அழகும், மகிமையும் அதன் பிரதான ஆசாரியனில் இருந்தது. ஆசாரியனில்லாத ஒரு ஆசரிப்புக்கூடாரத்தையும், ஆசரிப்புக்கூடார மில்லாத ஆசாரியனையும் எண்ணிப் பார்க்கவே முடியாது. சபையின் நிர்வாகத்தில் ஊழி யனின் பதவி மேன்மையாயிருக்க வேண்டுமென தேவன் விரும்புவதை பிரதான ஆசாரியனின் பதவியை மேன்மைப்படுத்தியிருப்பதிலிருந்து அறியலாம்.

**ஆசாரியத்துவத்தின் பணி என்ன?** ஆசாரியன் என்பதன் கிரேக்க வார்த்தை 'ஹீயரீஸ்' (Hiereis) என்பதாகும். இதற்கு தேவாலயத்தில் ஊழியம் செய்கின்ற ஆசாரியர்கள் என்றே பொருள். புதிய ஏற்பாட்டு சபையின் அப்போஸ்தலர் முதல் போதகர் வரையிலுமுள்ள எவருக்கும் இந்த வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. காரணமாவது:

*1.* புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியன் பழைய ஏற்பாட்டு சபையின் ஆசாரியனைப் போல தேவனுக்கும், மனிதனுக்கும் நடுவே மற்றவர்களுக்காக பாவ நிவர்த்தி செய்வதில்லை. மத்தியஸ்தராக நிற்பதுமில்லை. இப்பணிகளை நிறைவேற்றுகிறவர் இயேசு கிறிஸ்து மட்டுமே.

*2.* புதிய ஏற்பாட்டு சபையில் அவரவர் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு இயேசுவின் பலியை தனக்காக என ஏற்று *(*செலுத்தி*)* பாவ நிவர்த்தி செய்வது அவரவருடைய கடமையே! எனவே, இதைச் செய்கிற விசுவாசிகள் ஒவ்வொருவரும் ஆசாரியர்களாவர். *1* பேதுரு *2 : 9*.

அதே வேளையில் தேவன் அருளிய வரங்களின்படி தேவ சேவையை நிறைவேற்றுகிற ஊழியர்கள் இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரவான் களாவர். *1* தீமோ. *5 : 17*. ஆரோனைப் போன்ற பணிகளை விட மேன்மையேறின பணிகளும் புதிய ஏற்பாட்டு சபையில் உண்டு.

| பழைய ஏற்பாட்டு ஆசாரியன் | புதிய ஏற்பாட்டு ஊழியன் |
|---|---|
| 1. ஒழிந்து போகிற மகிமை | 1. ஒழியாத மகிமை |
| 2. மற்றவர்களுக்காக பாவநிவர்த்தி செய்தான் | 2. மனந்திரும்புதலை போதிப்பது மட்டுமே வேலை. மனந்திரும்புதலையும், பாவ மன்னிப்பையும் உண்டாக்குகிறவர் தேவன் |
| 3. குறிப்பிட்ட வஸ்திரம் உண்டு | 3. குறிப்பிட்ட வஸ்திரம் இல்லை |
| 4. ஊழியமானது குறிப்பிடப்பட்ட சில வழக்கமான சடங்குகளே | 4. அன்றாடம் புதியதும் ஆத்துமாக்களுக்கேற்ற விதம் வித்தியாசமான சேவைகள் உடையது |
| 5. தன் பாவங்களுக்காகவும் பலிகளை செலுத்த வேண்டும் | 5. தன் குற்றங்களை அறிக்கையிட்டால் போதும் |
| 6. ஊழியத்தின் எல்லை ஆசரிப்புக் கூடாரத்தைச் சார்ந்திருந்தது | 6. ஊழியத்தின் எல்லை உலகம் முழுவதுமாகும் |
| 7. ஊழியம் இஸ்ரவேலருக்காக மட்டும் | 7. எல்லா ஜனத்துக்கும் |
| 8. பிரதான ஆசாரியன் ஒரு மனிதன் | 8. பிரதான ஆசாரியன் தேவனாகிய இயேசு |
| 9. பழைய உடன்படிக்கைக்கு ஊழியம் | 9. புதிய உடன்படிக்கைக்கு ஊழியம் |

## அதிகாரம் 38

# ஆசாரியத்துவ வஸ்திரங்கள்

மேன்மைமிக்கவராயிருக்கிற ஒருவருக்கு அவருக்கேற்ற பதவிக்குரிய வஸ்திரங்கள் அவரது மகிமையை ஏற்றுகிறது. உதாரணமாக, பள்ளிக்கூட சீருடை, ராணுவ உடை, செவிலியர் உடை. அப்படியே மத ஆசாரியனின் சிறப்பான உடைகள் மற்றவர்களிலிருந்து அவரைப் பிரித்துக் காட்டுவதுடன் அவருக்கு மகிமையாகவும் அமைகின்றன. தேவன் பிரதான ஆசாரியனாகிய ஆரோனுக்கு முதன் முதலாவதாக செய்வித்த வஸ்திரங் களின் நோக்கமானது அவனுக்கு "மகிமையும் அலங்காரமுமாய் இருக்கும் பொருட்டு" என்பதே. யாத். *28 : 2.*

புதிய ஏற்பாட்டின் ஊழியர்களுக்கு குறிப்பிட்ட வஸ்திர அமைப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் தேவ ஊழியர்கள் சாதாரண ஜனங்களிலிருந்து வித்தியாசமான ஒரு உடையை அணிவதில் பழுதொன்றுமில்லை.

பழைய ஏற்பாட்டு ஊழியத்தில் ஆசாரியனின் வெளித் தோற்றமே கம்பீரமாக இருக்க வேண்டுமென தேவன் நினைத்தது ஆச்சரியம். மேலும் வசனம் *2* ல் அதை "பரிசுத்த வஸ்திரம்" என்றார். பரிசுத்தம்

என்பதற்கு வேதாகமத்தில் காணக்கிடைக்கின்ற பொருளானது, கர்த்தருடைய கட்டளைப்படி செய்யப்பட்டது அல்லது கர்த்தருக்காக் பிரித்துப் பிரதிஷ்டிக் கப்பட்ட ஒன்று என்பதாகும், அவ்வாறே ஆசாரிய வஸ்திரமும் தேவனால் ஏற்படுத்தப்பட்டதாகையால் அது பரிசுத்தமானதாகும்.

**ஆசாரிய வஸ்திரம் = ஊழியம்:** இயேசு நமக்களித்த இரட்சிப்பின் வஸ்திரமானது விசுவாசிக்கிற யாவருக்குமுரியதாகும். ஆனால் இரட்சிப்பின் வஸ்திரத்தின் மேலே அணிகின்ற ஒன்றாகும் ஆசாரிய வஸ்திரம். இது புதிய ஏற்பாட்டு ஊழியனின் அழகான, கருத்துற்ற சித்திரமாகும். ஆசாரிய வஸ்திரத்தில் காணப்பட்ட பண்புகள் யாவும் ஒரு புதிய ஏற்றாட்டு ஊழியத்தில் (ஊழியனில்) காணப்படுவது அவசியம். அவை என்னவென்று பார்ப்போமா?

**ஏழு வித அலங்காரங்கள்.** எட்டு வகை வஸ்திரங்களுள் சல்லடம் என்பது நிர்வாணத்தை மறைப்பதற்குரிய குறைந்தபட்ச வஸ்திரமாகும். அதன் மேலுள்ள ஏழு வஸ்திரங்களை ஆரோனுக்கு மகிமையும், அலங்கார முமாய் இருக்கும் பொருட்டு செய்யப்பட்ட அலங்கரிப்புகள் எனலாம். ஏழு என்பது தெய்வீகப் புனித எண்ணாகும். தேவனுடைய *7* ஆவிகள், *7* சபைகள், *7* குத்து விளக்குகள், *7* நட்சத்திரங்கள், *7* கண்கள், *7* இடிகள் முதலிய யாவும் அதினதின் குறைவற்ற நிறைவையே விளங்கச் செய்கிறது. வெளி. *5 : 6, 1 : 4, 1 : 12-13, 10 : 3.* அவ்வாறே ஆசாரியனின் வஸ்திரத்தில் ஆன்மீக வெளிப்பாடுகள் பூரணமாக இருந்தது. அதன் ஏழுவிதமான அலங்கரிப்புகளாவன: யாத். *28 : 4, 36. (1)* மார்ப்பதக்கம் *(2)* ஏபோத் *(3)* அங்கி *(4)* விசித்திரமான உள்சட்டை *(5)* பாகை *(6)* இடைக்கச்சை *(7)* பரிசுத்த பட்டம்

**1. மார்ப்பதக்கம்** யாத். *28 : 15-30.* (The Breast Plate)

இதற்கு நியாயவிதி மார்ப்பதக்கம் என்ற பெயர் உண்டு. இஸ்ரவேலருடைய நியாய விதியை ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் சுமக்க வேண்டும் என்பது அதன் பொருள்.

தேவன் மனிதனை அவனவனுடைய கிரியைகளின்படி நியாயம் தீர்க்கிறவர் என்பதை வலியுறுத்துகிறார். மனிதனுடைய தப்பிதங்களுக் குத் தக்கதாக தேவன் தண்டித்து விடாதபடி பிரதான ஆசாரியன் தேவ சந்நிதியில் மார்ப்பதக்கத்தை அணிந்தவனாய் நிற்க வேண்டும். ஜனங்க ளுக்காக பரிந்துபேசும் போது ஆசாரியனை மார்ப்பதக்கத்துடன் பார்க்கும் போது தேவன் தமது கோபத்தை நெகிழ்த்துத் தயை பாராட்டுகிறார். ஆசாரியன் வெறுமையாக வந்து நிற்கவும் கூடாது. தேவன் நியமித்த மார்ப்பதக்கத்துடன் நிற்க வேண்டும். இயேசு தேவ விதிகளை நிறை வேற்றிய பின்னரே பரிந்து பேச தேவ சந்நிதியில் வீற்றிருக்கிறார். நாமும் தேவ விதிகளின்படி ஜெபிக்கவும், ஜீவிக்கவும் வேண்டும்.

ஆசாரியனின் வஸ்திரங்களுள் மார்ப்பதக்கத்தைப் பற்றி மட்டும் விவரிக்க தேவன் *18* வசனங்களைப் பயன்படுத்தியிருப்பது அதன்

முக்கியத் துவத்தை வெளிப்படுத்திற்று. அது நியாயவிதி சம்பந்தமானது. அது ஆரோனுடைய இதயத்தின் மேல் தரிக்க வேண்டியது. வசனம் *30*. ஜனங் களுடைய நியாயத்தீர்ப்பின் பாவ நிவர்த்தியைச் செய்ய அவன் பொறுப் பெடுக்க வேண்டும் என்பதே கருத்து. சமஸ்த இஸ்ரவேலரின் பொறுப்பு அவனைச் சார்ந்திருக்கிறது. சபையின் ஊழியர் தன் எல்லைக் குட்பட்ட ஜனத்தின் ஆன்மீகத்திற்கு பாரப்படவும், பொறுப்பெடுக்கவும் வேண்டும்.

மார்ப்பதக்கம் என்பதற்கு மார்பில் அணியும் பதக்கம் என்று இயற்கை பொருள். வெளியே அது மார்பில் இருப்பதால் அத்துடன் முடிவ தில்லை. அதனோடு இருதயத்தையும் இணைக்கச் சொல்கிறார். ஆரோன் அதை தன் இருதயத்தின் மேல் சுமக்க வேண்டும் என்றார். ஆம்*!* ஊழியம் வெறும் வெளி வேஷமானது அல்ல. மக்களுக்கு வெளி வேஷம் மட்டுமே தென்படும். ஆனால் ஊழியனின் உள்ளே ஆட்டுக் குட்டியானவருக்காக மணவாட்டியை ஆயத்தம் பண்ண ஒரு பாரம் இருப்பதைப் பாருங்கள்*.!*

*1.* உங்களை என் இருதயத்தில் தரித்துக் கொண்டிருக்கிறேன். பிலி. *1 : 7.*
*2.* உங்களுக்காக கர்ப்ப வேதனைப்படுகிறேன். கலா. *4 : 19.*
*3.* ஜெபம் பண்ணாமல் போனால் பாவம். *1* சாமு. *12 : 23.*
*4.* சபைக்காக பவுல் பட்ட அடிகள் பல. *2* கொரி. *11 : 23-28.*
*5.* என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். *1* கொரி. *9 : 27.*
*6.* இடைவிடாமல் ஜனத்துக்காக விண்ணப்பம் *1* தெச. *1 : 4.*
*7.* எல்லாருக்கும் எல்லாமானேன் *1* கொரி. *9 : 22.*
*8.* அதிக ஜனங்களை ஆதாயப்படுத்த என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன் *1* கொரி. *9 : 19.*

**மார்பதக்கத்தின் அமைப்பு**

*1.* அதனை விசித்திர வேலையாகச் செய்ய வேண்டும்.

*2.* பொன்னை நூல்களாக அடித்து வெட்டி பொன் நூலினாலும், இளநீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும், சிவப்பு நூலாலும், திரித்த மெல்லிய பஞ்சு நூலாலும் செய்ய வேண்டும். மூடுதிரைகளிலும், தொங்கு திரைகளிலும் இல்லாத பொன் நூல்கள் பிரதான ஆசாரியனின் மார்ப் பதக்கத்தில் கூடுதலாக உள்ளது. இந்தப் பொன் வேத வசனங்களுக்கும், விசுவாசத்திற்கும் ஏற்ற ஒப்பனையாகும். சங். *19 : 8-10; 1* பேதுரு *1 : 7* ஆகிய வசனமும், விசுவாசமுமே நமது இரட்சிப்பை உறுதி செய்கிறது. இவ்விரண்டும் உடையவனே ஆசாரியன் (நூல்களின் விளக்கங்களை மற்ற பகுதிகளில் காண்க*)* பொன் வேத வசனத்திற்கு ஒப்பனை. சங். *19.* நியாய விதி மார்ப்பதக்கத்தில் உள்ள பொன் நூல்களானது,

வசனத்தைக் கொண்டு தேவன் நியாயம் தீர்ப்பார் என்பதையல்லவோ வெளிப்படுத்திற்று. "நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்." யோவான் *12 : 48.*

*3.* அது சதுரமானது. அதன் நீளமும், அகலமும் ஒரு சாண் வீதம் ஆகும். இவ்வாறு தேவன் தாமே அதற்கு வடிவத்தைக் கொடுத்துள்ளதால் மார்ப்பதக்கம் மனித சித்தத்தையல்ல, தேவ சித்தத்தையே வெளிப் படுத்திற்று. சதுரம் என்பது சமநீளமும், அகலமும் உள்ளது. இது நியாயத் தீர்ப்பு ஒரு பக்கம் கூடவோ, குறையவோ செய்யாதிருக்க வேண்டும் என்பதற்கு அடையாளம். "வழக்கிலே நியாயத்தைப் புரட்ட மிகுதியானவர் களின் பட்சத்தில் சாய்ந்து உத்தரவு சொல்லாதிருப்பாயாக. வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக." யாத். *23 : 3.*

*4.* அது இரட்டையாக செய்யப்பட வேண்டும். **Doubled.** அது இரட்டையாக மடித்து செய்யப்பட்டதால் ஒரு சிறு பை போன்ற காட்சியைத் தருகிறது. ஊரீம், தும்மீம் என்பவைகளை அதிலே வைக்கும்படி தேவன் உத்தரவிட்டுள்ளார். வச. *30.*

*5.* மேலும் ஏபோத்தையும், மார்ப்பதக்கத்தையும் இணைக்கும்படி தேவன் கட்டளையிட்டார். அதற்காக மார்ப்பதக்கத்தின் இரண்டு மேல் மூலைகளிலும் இரண்டு சிறிய பொன் வளையங்களை வைத்து, அவைகளில் பொன் சங்கிலிகளின் ஒரு முனையை இணைக்க வேண்டும். சங்கிலியின் மறுமுனையை ஆசாரியனின் இரண்டு தோள்களில் உள்ள ஏபோத்துடன் இணைக்க வேண்டும். ஏபோத்திலும் இஸ்ரவேலின் *12* நாமங்கள் உள்ளதால் இரண்டும் ஞாபகக்குறியாக இணைத்து வைக்கப் பட்டது.

ஆகவே நியாயத்தீர்ப்பு எனும்போது ஏபோத்தும் மார்பதக்கமும் ஆகிய இரண்டும் இணைந்த சாட்சிகளாகவும் அமைகின்றன. இரண்டு பேருடைய சாட்சி உண்மை. யோவான் *8 : 17.* இயேசுவுக்கு விரோதமாக நிறுத்தப்பட்ட சாட்சிகள் ஒவ்வவில்லை. மத். *26 : 60.* ஆனால் இங்கே தேவனுடைய தீர்ப்பானதாலும் இயேசு ஊரீம் தும்மீம் என்பவை உள்ளவ ரானதாலும் "அவர் உண்மையுள்ள சாட்சி." வெளி. *1 : 5.* அவரது "நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்" வெளி. *16 : 7.*

*6.* மார்பதக்கத்தில் *4* பத்தி ரத்தினகற்களை பத்திக்கு மூன்று வீதமாகப் பதிக்க வேண்டும். அவைகளில் இஸ்ரவேல் கோத்திர நாமங்களை வெட்டி பொன்னினாலே பதிக்க வேண்டும்.

| முதலாம் பத்தி | ஆங்கிலம் | நிறம் | தாயின் பெயர் | பாளையத்தின் ஒழுங்கு | |
|---|---|---|---|---|---|
| 1. பத்மராகம் | SARDIUS | இரத்த வருணம் | லேயாள் | கிழக்கு | யூதா |
| 2. புஷ்பராகம் | TOPAZ | பச்சை + மஞ்சள் | லேயாள் | கிழக்கு | இசக்கார் |
| 3. மாணிக்கம் | CARBUNCLE | சிவப்புக்கல் | லேயாள் | கிழக்கு | செபுலோன் |
| **இரண்டாம் பத்தி** | | | | | |
| 4. மரகதம் | EMERALD | பச்சை நிறம் | லேயாள் | தெற்கு | ரூபன் |
| 5. இந்திரநீலம் | SAPPHIRE | நீலநிறம் | லேயாள் | தெற்கு | சிமியோன் |
| 6. வச்சிரம் | DIAMOND | பிரகாசமான வெண்மைக்கல் | சில்பாள் | தெற்கு | காத் |
| **மூன்றாம் பத்தி** | | | | | |
| 7. கெம்பு | LIGURE | மங்கின சிவப்பும் மஞ்சளும் | ராகேல் | மேற்கு | எப்பிராயீம் |
| 8. வைடூரியம் | AGATE | மங்கின பச்சை நீலம் அல்லது சிவப்பு கலந்தது | ராகேல் | மேற்கு | மனாசே |
| 9. சுகந்தி | AMETHYST | கடும் சிவப்பு + கடும் நீலம் கலந்த வயலட் | ராகேல் | மேற்கு | பென்யமீன் |
| **நான்காம் பத்தி** | | | | | |
| 10. படிகப்பச்சை | BERYL | இளநீலம் + பச்சை | பில்காள் | வடக்கு | தாண் |
| 11. கோமேதகம் | ONYX | பலவருணங்கள் கலந்த கல் | சில்பாள் | வடக்கு | ஆசேர் |
| 12. யஸ்பி | JASPER | சிவப்பு, மஞ்சள், தவிட்டு நிறங்களில் வெள்ளை புள்ளி உள்ளது | பில்காள் | வடக்கு | நப்தலி |

ஏபோத்தின் இரண்டு கற்கள் மேல் இஸ்ரேல் கோத்திரங்களின் நாமங்களை அவர்களுடைய பிறந்த வரிசைக்கிரமத்தின்படி கொத்த தேவன் கூறினார். யாத். *28 : 9, 10.* பிறப்பின் வரிசையானது. *(1)* ரூபன் *(2)* சிமியோன் *(3)* லேவி *(4)* யூதா *(5)* தாண் *(6)* நப்தலி *(7)* காத் *(8)* ஆசேர் *(9)* இசக்கார் *(10)* செபுலோன் *(11)* யோசேப்பு *(12)* பென்யமீன். ஏபோத்தில் ஒரு கல்லில் *6* வீதம் *2* கற்களில் *12* நாமங்களை பிறந்த வரிசையில் செதுக்கச் சொன்னார். ஆனால் மார்பதக்கத்தில் ஒரு வரிசையில் *3* வீதம் *4* வரிசைகளாக மாற்றி அனுமதித்தார். இந்த மாறுதல்களில் ஒரு ஆன்மீகப் புரட்சியை நாம் காணலாம். ஏபோத்தின் பிறப்பு வரிசை தான் பதக்கத்திலும் என்று சொல்லப்படவில்லை. தேவன் ஏற்படுத்திய மாறுதல் என்னவென்றால் பதக்கத்தில் *3* கோத்திரம் வீதமுள்ள *4* வரிசைகள் உள்ளன. இஸ்ரவேல் பாளயத்தின் வரிசைக் கிரமமும் *3* கோத்திரங்கள் வீதமுள்ள *4* வரிசைகளே. எனவே பதக்கத்தின் அமைப்பிலும் பாளயத்தின் அமைப்பிலும் வரிசைக் கிரமத்தில் ஒற்றுமையைக் காண்கிறோம். எண். *2*ம் அதிகாரம். இதில் பிறப்பின் வரிசையில் வந்த மாறுதல்களாவன.

*1.* ரூபன் முதல் பிறந்தவனாயிருந்த போதிலும் அவன் தண்ணீர் போல தளம்பினவனானபடியால் இரண்டாம் பாளயத்தில் தான் இடம் பெற்றான். ஆதி. *49 : 3, 4.*

*2.* யூதா நான்காம் குமாரனாயிருந்தும் கிழக்கிலுள்ள பாளயத்தில் முதலாம் இடம் பெற்றான். அவனே இராஜரீக கோத்திரம்.

*3.* லேவி எதிலும் இடம் பெறவில்லை என்றாலும் ஆசாரியத்துவ பட்டம் அவனுக்கே கொடுக்கப்பட்டது.

*4.* யோசேப்பு பதினோராம் மகனாயிருந்த போதிலும் அவரது கோத்திரத்தை இரண்டாகப் பிரித்து (மனாசே, எப்பிராயீம்) இருவரையும் யாக்கோபின் சுதந்தரத்தில் தனித்தனி கோத்திரங்களாக்கி யோசேப்புக்கு இரண்டு பங்கு கிடைக்கச் செய்தார்.

*5.* ராகேலின் மக்களாகிய யோசேப்பின் குமாரர் இருவரையும், பென்யமீனையும் ஒரே பாளயத்தில் வைத்தார். யாக்கோபுக்கு பிரியமான ராகேலின் குமாரராயிருந்த போதிலும் ஆசரிப்புக் கூடாரத்தின் பின்புறமாகிய முக்கியத்துவம் குறைந்த மேற்குப் பாளயத்தையே கொடுத்தார்.

*6.* முதலாம் பாளயமாகிய கிழக்குப் பக்கமே முக்கிய நுழைவாசல். அதிலே யாக்கோபின் பிரியம் குறைந்த மனைவியாகிய லேயாளின் பிள்ளைகள் மூவரையும் வைத்தார்.

*7.* மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுள் சில்பாளின் மகன் காத் *2* ஆம் பாளயத்தில் இடம் பெற்றான். மறுமனையாட்டிகளின் மற்ற மூன்று பிள்ளைகளும் நான்காம் பாளயத்தில் இடம் பெற்றனர்.

எனவே மூத்தவன் தான் பெரியவன் என்கிற மனித சகஜ

வரிசையை தேவன் தள்ளிவிட்டிருக்கிறார் எனக் காண்கிறோம். தேவன் ஒரு காரணமுமின்றி தமது சித்தப்படியும், மக்களின் குணநலன்களின் படியும் மக்களை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்கிறார் எனக் காண்கிறோம். ஆனால் யாக்கோபின் பிள்ளைகளுள் எவரையும் தேவன் தள்ளிவிடாமல் எங்கேயாவது ஒரு இடத்தைக் கொடுத்துள்ளார். எல்லாரையும் மார்ப்பதக் கத்தில் சுமக்கின்ற ஆசாரிய பட்டத்தை லேவிக்குக் கொடுத்தார். எல்லாம் தேவகிருபையே! அல்லேலூயா! லேவியின் கோத்திரத்தின் பிரதி நிதியாக ஆசாரியனே நிற்பதால் லேவியின் பெயர் எதிலும் இல்லை.

கோத்திரங்களை தேவன் உயர்த்தியதில் மேலும் சில விசேடங்களைக் காண்க. யாக்கோபின் முழுபிரியத்தையும் பெறாத கூச்சப்பார்வை மிகுந்த லேயாளின் பிள்ளைகளுக்கே அதிகாரம் மிகுந்த ராஜரீக கோத்திரமும் (யூதா) மேன்மையேறிய ஆசாரிய கோத்திரமும் (லேவி) கிடைத்தது. யாக்கோபுக்குப் பிரியமான மனைவியாகிய ராகேலின் பிள்ளைகள் சாதாரண கோத்திரங்களாகவே இருந்தனர். அவர்களாவன: யோசேப்பின் சந்ததியாகிய மனாசே கோத்திரமும், எப்பிராயீம் கோத்திரமும் யாக்கோபின் *12*ம் குமாரனாகிய பென்யமீன் கோத்திரமும். இவ்வாறு மனிதன் நினைப்பது போல தேவன் நினைப்பதில்லை. யாவையும் அவர் தமது சித்தத்தின்படியே செய்கிறார். ஏசாயா *55 : 9*. "பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது."

**ஊரீம் தும்மீம்** யாத். *28 : 30*.: மார்ப்பதக்கத்திலே ஊரீம் தும்மீம் என்பவைகளை வைக்க வேண்டும் என்றார். இதன் உண்மையான பொருள் (material) என்ன, வடிவம் என்ன, அளவு என்ன, குணம் என்ன என்பவை வெளிப்படுத்தப்படவில்லை. ஆனாலும் மூலபாஷையை ஆராய்ந்தால் அதன் பொருளிலிருந்து (meaning) கீழ்வருவனவற்றை அறியலாம்.

ஊரீம் என்பதன் எபிரேய மூலபதம் UWRIYM என்பதாகும். இது UWR (ஊர்) என்ற ஆண்பால் நாமத்தின் பன்மை ஆகும். அதன் வினைச்சொல் OWR (ஔர்) என்பதும் ஆகும். அதன் பொருள், அக்கினியின் வெளிச்சம், தீ ஜுவாலை, வெளிச்சம் காட்டுதல், வெளிப்படுத்துதல் முதலியவை ஆகும். கிரேக்க செப்துவஜிந்து மொழி பெயர்ப்பில் பிரகாசமாக்குதல், வெளிப்பாடு என்ற பொருள் காணப்படுகிறது. தும்மீம் என்பதன் எபிரேய மூலபதம் Tom (தாம்) என்ற ஆண்பால் நாமமாகும். இதன் மூல வார்த்தை TAMAM (தமாம்) என்பதாகும். நிறைவு, பூரணம் முதலிய பொருள்கள் இதற்குண்டு.

செப்துவஜிந்து மொழிபெயர்ப்பில் "சத்தியம்" எனப்பட்டுள்ளது. (TRUTH), எனவே, ஊரீம், தும்மீம் என்பதற்கு "வெளிப்பாடும், சத்தியமும்" எனலாம். ஆரோனை முதன்முதலாவதாக வஸ்திரம்

அணிவிக்கையில் இவைகள் மார்ப்பதக்கத்தினுள் வைக்கப்பட்டது. லேவி. *8 : 8*. ஊரீம் தும்மீம் என்பவைகளை உண்டாக்க தேவன் சொல்லவில்லை. மார்பதக்கத்தில் அதை வைக்கச் சொன்னதினால் அதை தேவன் தாமே மோசேயிடம் கொடுத்திருப்பார் எனலாம். முதன் முதலாவது எழுதிய கற்பலகைகளைக் கொடுத்ததுபோல!

யோசுவாவின் மேல் மோசே கைகளை வைத்தபின் ஆசாரியனாகிய எலெயாசாரிடம் உள்ள "ஊரீம் என்னும் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன் என்றார்." எண். *27 : 21*. எனவே இதை ஆசாரியன் அணிந்தால் கேட்கிற காரியங்களுக்கு தேவ ஆலோசனை கிடைக்கும் என்று புலனாகிறது. எஸ்றா *2 : 63* லும், நெகேமியா *7 : 65* லும் "ஊரீம் தும்மீம் என்பவைகளுள்ள ஒரு ஆசாரியன் எழும்புவார்" என உள்ளது. எனவே பூரணரும் வெளிப்பாடும் சத்தியமும், உலகத்தின் ஒளியும், ஆலோசனை கர்த்தருமாய் வந்த இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனமாக இதை நாம் காணலாம்.

யோசுவாவும், ஆசாரியனாகிய எலெயாசாரும் (எண். *34 : 17*) தேசத்தைச் சீட்டுப்போட்டு பங்கிடுவதற்கு இவைகளைப் பயன்படுத்தியிருக்க வாய்ப்பு உண்டு. பிற்காலங்களில் ராஜாக்களும், ஆசாரியர்களும் தேவ ஆலோசனையைக் கேட்க இதைப் பயன்படுத்தியிருந்தனர்.

**2. ஏபோத்.** யாத். *28 : 6-14:* ஏபோத்தை ஆசரிப்புக் கூடாரத்திற்கு வழக்கமான நான்கு வகை நூல்களினால் செய்ய வேண்டும். இளநீலநூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல், திரித்த மெல்லிய பஞ்சுநூல் ஆகியவற்றுடன் பொன்னினாலுள்ள நூலினையும் சேர்க்க வேண்டும். அதன் மேலுள்ள விசித்திரமான கச்சையும் இந்த ஐவகை நூல்களால் செய்யப்பட வேண்டும். யாத். *39 : 3*. "அந்தப் பொன்னை, இளநீலநூலோடும், இரத்தாம்பர நூலோடும் சிவப்பு நூலோடும் மெல்லிய தகடுகளாய் அடித்து, அவைகளைச் சரிகைகளாகப் பண்ணினார்கள்."

ஏபோத்தை இரண்டு பகுதிகளாகச் செய்து ஆரோனின் இரண்டு தோள்கள் மேலே அணிய வேண்டும். பின்பு இரண்டு கோமேதகக் கற்களை எடுத்து ஒன்றில் ஆறும், மற்றதில் ஆறுமாக இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை பிறந்த வரிசைக் கிரமத்தில் வெட்ட வேண்டும். நாமங்களை வெட்டி பொன் குவளைகளில் பதிக்க வேண்டும். கோமேதகக் கல்லானது நீலம், சிவப்பு முதலிய பல வர்ணங்கள் கலந்ததாகும். ஆம்! பல குணங்கள் கொண்ட *12* பேரும் ஒரே குடும்பத்தில் இருப்பதற்கு ஒப்பனையாக பலநிறங்கள் கலந்த கோமேதகக் கல் அடையாளமாக இருக்கிறது.

இரண்டு கற்களில் பன்னிரெண்டு நாமங்கள் வெட்டப்பட்டிருந்தாலும், ஆரோனுடைய தோள்கள் மேல் அவை விசித்திரமான கச்சையால் இணைக்கப்பட வேண்டும். இது ஒற்றுமைக்கு அடையாளம். சபையில் அனைவரும் ஒற்றுமையாய் இருக்கவேண்டும். அப். *2 : 1, 1* கொரி.

*1 : 10.* பிரிந்து நின்று யுத்தம் செய்தல் சபைக்கு ஏற்றதல்ல. இஸ்ரவேல் கோத்திரங்கள் போல நாம் வெவ்வேறு குடும்பங்களாயிருந்தாலும், தேவ சந்நிதியில் அனைவரும் ஒரே குடும்பமாகிறோம். ஏபோத்தில் அவனவன் பிறந்த வரிசைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். தேவன் தமது சித்தம் நிறைவேற்ற யாரைத் தெரிந்து கொள்கிறாரோ, அவர்கள் பிறக்கும் முன்னே தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிறார்கள். சங். *87 : 5.* "சீயோனைக் குறித்து இன்னான் இன்னான் அதிலே பிறந்தான் என்றும் சொல்லப்படும்." உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார். எனவே, தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பிறப்பின் வரிசை தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது ஆகும். ஒருவனை மூத்தவனாகவும், ஒருவனை இளையவனாகவும் தோற்றுவிப்பதும் அவர் சித்தமே. மாம்சமான ஒருவனும் மேன்மை பாராட்டாதபடிக்கு அவர் யாவையும் நேர்த்தியாய் செய்கிறார்.

இஸ்ரவேலருடைய நாமங்களை ஆசாரியன் ஞாபகக்குறியாகச் சுமந்து வரும்படி இப்படிச் செய்தார். ஆசாரியன் ஜனத்துக்காகப் பரிந்து பேச வேண்டும் என்பதை இது காட்டுகிறது. இயேசுவும் நமக்காக பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். *(1 யோவான் 2 : 1)* ஆசாரியனின் அணிகலன்களுள் ஏபோத்தும் மார் பதக்கமும் மிக முக்கியமாகும். தேவ சமுகத்திலும், மனுஷர் மத்தியிலும் இஸ்ரவேலருக்காக பரிந்து பேசும் மகா பெரிய பொறுப்பினையும் நியாய விதியின் உக்கிரமான உத்தியோகத்தையும் உடையவைகளாகும் இவ்விரு பொருட்களும். இன்று நமக்காகப் பரிந்து பேசுகிற இயேசு நியாயாதிபதியாக வரப்போகிறார் என்பதையும் விளக்குமாப்போல் இவை உள்ளன.

**ஏபோத்துபோன போக்கு:** *1.* பிரதான ஆசாரியனுக்காக மட்டும் செய்யப்பட்ட ஏபோத்தின் மகிமை மக்களை கவர்ந்து கொண்டது. எனவே, அவரவர் தங்கள் கவுரவத் திற்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றபடி ஏபோத்தை உண்டு பண்ணினர். பராக்கிரமசாலியாகிய கிதியோன் யுத்தத்தில் கிடைத்த பொன் கடுக்கன் களினால் ஒரு ஏபோத்தை உண்டுபண்ணி அதை தன் பட்டணமாகிய ஒப்ராவிலே வைத்தான். ஜனங்கள் அதை ஒரு விக்கிரகமாக வழிபட்டு சோரம் போயினர். இது கிதியோனுக்குக் கேடாயிற்று. ஆசாரியன் அணியவேண்டிய ஏபோத் பட்டணத்தில் வைக்கப்பட்டது.

*2.* மீகா என்பவன் ஒரு ஏபோத்தையும், விக்கிரகங்களையும் வைத்திருந்தான். இஸ்ரவேலர் நியாயாதிபதிகளின் ஆட்சிக்காலத்தில் மிகவும் பின்வாங்கிப் போயிருந்தனர் என்பதை இது பறைசாற்றுகிறது. நியா. *17 : 5.* அது தான் கோத்திரத்தாருடைய விக்கிரகமாயிற்று என *18* ம் அதிகாரத்தில் காண்க. தேவனால் நியமிக்கப்பட்ட பொருளானாலும் அது இருக்கவேண்டிய இடம் (ஆசாரியனின் தோள்) விட்டுப்போய் விட்டால் அது விக்கிரகமாகி விடும் என அறிக.

*3.* சாமுவேல் **சணல்நூல் ஏபோத்தை** தரித்திருந்ததாக *1* சாமு.

*2 : 18* ல் காண்கிறோம். ஏலியின் காலம் முதற்கொண்டே ஒரு ஆன்மீக வீழ்ச்சி ஏற்பட்டிருப்பது *1* சாமு. *3 : 1*ல் தெளிவு. ஆரோனுக்காக மோசே செய்வித்த ஐவகை **நூல்களால் செய்த ஏபோத்** எங்கே என்று தெரிய வில்லை. யுத்தங்களினாலும், காலப்பழக்கத்தினாலும் அது சிதைந்தி ருக்கலாம். அல்லது சிறியவனாகிய சாமுவேலுக்காக ஒரு சணல்நூல் ஏபோத்து தனியாகச் செய்யப்பட்டிருக்கலாம்.

*4.* சவுல் ஆசாரியர்களைக் கொலை செய்யும்போது தப்பி ஓடிய ஆசாரியனாகிய அபியத்தாரிடம் ஒரு ஏபோத்து இருந்தது. *1* சாமு. *22 : 20-21; 23 : 6; 30 : 6-8.* அமலேக்கியரோடு யுத்தம் உண்டானபோது தாவீது கர்த்தரிடம் விசாரிக்க ஏபோத்தைக் கொண்டுவர அபியத்தாரிடம் கூறினார். அது கொண்டுவரப்பட்டு தாவீது கர்த்தரிடம் விசாரித்துப் பதில் பெறவும் செய்தார். இச்சம்பவத்தில் நாம் ஆராயவேண்டியது:

(அ)தேவ சமுகத்தில் ஞாபகக்குறியாக சுமந்துவர ஆரோனுடைய தோளில் இருக்க வேண்டியதாகும் ஏபோத்து. அது மாற்றப்பட்டது அல்லது அது போன்ற வேறொன்று செய்யப்பட்டது.

(ஆ) தேவ சமுகத்தில் அதைச் சுமந்து வருவதற்குப் பதிலாக தேவனிடம் ஆலோசனை கேட்கும் கருவியாக பிற்காலங்களில் பயன்படுத்தப்பட்டது.

(இ) தாவீதைப் பொறுத்தவரையில் ஏபோத்து இல்லாமலே பிற்காலங்களில் பலமுறை கேட்டதற்கெல்லாம் பதிலளித்துள்ளார். *2* சாமு. *2 : 1; 5 : 22-26.* எனவே, தாவீது ஏபோத்தைக் கையாள வேண்டியதில்லை.

(ஈ) ஆனால் ஏபோத்தின் மூலம் விசாரிப்பது அக்காலத்தில் அவ்வளவாய் பிரபலமடைந்திருந்ததால் தாவீதும் அதைப் பயன்படுத்தியிருக்கலாம்.

(உ) ஏபோத் வஸ்திரம் இல்லாத ஒரு காலம் குறித்து ஓசியா *3 : 4*ல் காணலாம். எனவே, ஏபோத்தின் செயல்பாட்டை தேவன் நீக்கிப் போட்டார் என அறியலாம்.

*5.* பிரதான ஆசாரியனாகிய ஆரோனுக்காகத் தான் ஏபோத் செய்யப்பட்டது. ஆனால் போகப்போக பிரதான ஆசாரியன் மட்டுமல்ல, எல்லா ஆசாரியர்களும் ஏபோத்தை அணிந்திருந்தனர் என *1* சாமு. *22 : 18* ல் தெளிவு. ஏதோமியனாகிய தோவேக்கு என்பவன் சவுலின் கட்டளைப்படி கொன்றுபோட்ட *85* ஆசாரியர்களும் அதை அணிந்திருந்தனர். மேலும் ஆரோனின் ஏபோத் *4* வகை நூல்களினாலும், பொன்னினாலும் செய்யப் பட்டது. ஆனால் பிற்காலங்களில் சணல்நூலினால் செய்யப்பட்டது என இவ்வசனம் கூறுகிறது. இவ்வாறு போகப்போக பிரதான ஆசாரியனின் ஏபோத்தை விட மலிவான பொருட்களால் அது செய்யப்பட்டது என அறியலாம்.

௨. **அங்கி.** ROBE யாத். *28 : 31-25.:* அங்கி என்பதற்கு ஆங்கிலத்தில் ஏபோத்தின் அங்கி **(Robe of the Ephod)** என உள்ளது. அங்கியின் தோளில் ஏபோத் இணைக்கப்பட்டி ருந்ததே அதற்குக் காரணம்.

**நீல அங்கி :-** அங்கி முழுவதும் இளநீலநூலால் செய்யப்பட்டதால் அது நீலநிறமாகக் காட்சி அளித்தது. அது வானத்தின் நிறமானதால் தேவகிருபை மற்றும் விண்மகிமைக்கு அடையாளமாக உள்ளது. ஆசாரியன் தேவ கிருபை நிறைந்து தேவ மகிமையை வெளிப்படுத்த வேண்டும்.

**கிழியா வஸ்திரம்:-** ஆசாரியனுடைய அங்கியில் எளிதில் கிழியத்தக்க இடமாகும் கழுத்து. எனவே, அவ்விடம் கிழியாதபடி தலை நுழையும் துவாரத்தைச் சுற்றிலும் நாடா ஒன்று இருக்கிறது. பிரதான ஆசாரியனுடைய வஸ்திரத்தை கிழிக்கக்கூடாது என்றார் தேவன். அது இயற்கையாக கிழியாதிருக்கவும் பெலமான நாடா கழுத்தைச் சுற்றிலும் இருந்தது.

குஷ்டரோகமுள்ளவனுடைய வஸ்திரம் கிழிக்கப்பட வேண்டும். லேவி. *13 : 45.* தன் குஷ்டத்தை சிறப்பான வஸ்திர அலங்காரங்களினால் மறைத்தல் கூடாது. தன் பாவ குஷ்டத்தை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். பாவி தன் ஜீவிய வஸ்திரம் கிழிந்தவனாவான் என சத்திய வேதம் எடுத்துக் கூறுகிறது.

''பிரதான ஆசாரியனாக தன் சிரசில் அபிஷேக தைலம் வார்க்கப்பட்டவனும் அவனுக்குரிய வஸ்திரங்களைத் தரிக்கும்படி பிரதிஷ்டை பண்ணப்பட்டவனுமாயிருக்கிறவன் எவனோ அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொள்ளாமலும் இருப்பானாக.'' லேவி. *21 : 10-12.* துக்கமும் தோல்வியும் வரும்போது வஸ்திரம் கிழிப்பது இஸ்ரவேலில் வழக்கம். ஆசாரியனோ துக்கங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும். ஆசாரிய வஸ்திரத்தைக் கிழிக்கக்கூடாது. மாம்சத்தால் கறைப்பட்டும் (யூதா *23)* பாவத்தால் குஷ்டரோகியைப் போல ஜீவிய வஸ்திரம் கிழிந்தவனாயும் ஆசாரியன் இருக்கக்கூடாது. ஆனால் இயேசுவை நியாயம் விசாரிக்கையில் பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான். மத். *26 : 65.* இது பிரதான ஆசாரியனின் நியாயப் பிரமாண ஊழியம் கிழிக்கப்பட்டு இயேசுவின் கிருபையின் ஊழியம் துவக்கப்பட்டதற்கு சமமான நிகழ்ச்சி ஆகும்.

இஸ்ரவேலர் வனாந்திரத்தில் பிரயாணம் செய்த *40* வருடங்கள் அவர்களது வஸ்திரம் பழமையாகவில்லை. கால் வீங்கவும் இல்லை. எனவே ஆரோனுக்காக செய்யப்பட்ட அங்கி குறைந்தது *40* வருடங்கள் உழைத்திருக்க வேண்டும். உபா. *8 : 4*

**அங்கி சொந்தமல்ல** ஆரோன் மரிக்கும்போது அவர் அதுவரைக்கும் பயன்படுத்திய வஸ்திரங்கள் கழற்றப்பட்டு அடுத்த ஆசாரியனும், அவரது மகனாகிய எலெயாசாருக்கு அணிவிக்கப்பட்டது. எண். *20 : 25.* ஆசாரிய வஸ்திரங்கள் ஒருவருக்கு சொந்தமல்ல. சபையின் சொத்துக்களை மோசடி செய்கிறவர்களே உஷார்!

**மாதளம்பழம்** உலகில் எங்கும் இல்லாத விசித்திர வேலைப்பாடுகள் அங்கியின் கீழ் ஓரத்தில் இருந்தது. இளநீலநூல், இரத்தாம்பரநூல், சிவப்பு நூல் ஆக மூவகை நூல்களால் செய்யப்பட்ட மாதளம் பழங்கள் கீழ் ஓரத்தில் தொங்க விடப்பட்டன. பழங்கள் கனிதரும் வாழ்வின் சித்திரமாகும்.

வேதாகமப் பழங்கள் ஒன்பது ஆகும். *(1)* மாதளம்பழம் *(2)*

தூதாயீம் *(3)* திராட்சை *(4)* பேரீச்சை *(5)* அத்தி *(6)* ஜீவ மரக்கனி *(7)* நன்மை தீமை அறியும் கனி *(8)* வாதுமை *(9)* கிச்சிலிப்பழம். அவ்வாறே ஆவியின் கனியும் ஒன்பதாகும். கலா. *5 : 22.* குத்து விளக்கிலும் மாதளம் வடிவத்தில் பழங்கள் இருந்தன. உன்னதப்பாட்டில் ஆறு தடவை மாதளம்பழம் இடம் பெறுகிறது. மணவாளனுக்கும் மணவாட்டிக்குமுள்ள நேசத்தையும், அழகையும் அது பிரதிபலிக்கிறது. அவளது கன்னங்கள் வெடித்த மாதளம் போல் சிவேரென்ற அழகு. அவளுடைய தோட்டத்தில் மாதளம்பழங்கள் உண்டு. அவள் தன் நேசருக்கு மாதளம்பழ ரசத்தைக் கொடுத்தாள். உன். *4 : 3; 6 : 7; 4 : 13; 6 : 11; 7 : 12; 8 : 2.* எனவே இருவருடைய அன்பை ஊக்குவிக்கும் பழமாகும் இது. ஆசாரியனின் வஸ்திர ஓரத்தில் இது காணப்பட்டதின் தாற்பரியமாவது: ஆசாரியத்துவம் எத்தனையாய் அதிகாரமும், பக்தியும் கொண்டதாயிருப்பினும், தன்னைத் தெரிந்து கொண்டு இப்பதவியில் அன்பாய் அமர்த்திய ஆண்டவர் மேல் அவன் பாசம் மிக்கவனாயிருக்க வேண்டுமென்பதே.

புதிய ஏற்பாட்டில், நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கிட அவர் நம்மில் வைத்த அன்பை அது குறிக்கிறது. வெளி. *1 : 6.* "நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக." அந்த அன்புக்கு ஈடாக நாம் அன்பு என்னும்' கனியைக் கொடுப்போமாக.

**பொன்மணி:** அங்கியின் கீழ் ஓரத்தில் ஒரு பழமும், ஒரு பொன்மணியும் இருக்க வேண்டுமாம்.. ஆரோன் ஆலயத்திற்குள் நடமாடும்போது சாகாதிருக்க (சாகாதிருக்கிறான் என்று அறிவதற்காக) அதன் சத்தம் கேட்கப்பட வேண்டும். ஒரு ஊழியர் உயிரோடிருக்கிறார் என்பதற்கு அடையாளமாக அவனது சத்தம் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். ஊழியக்காரனில் முழங்கவேண்டிய இரண்டு சத்தங்களை அப். பேதுரு வகையறுத்துள்ளார். "நாங்களோ, *(1)* ஜெபம் பண்ணுவதிலும், *(2)* தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்." அப். *6 : 4.* பிரியமான தேவ ஊழியர்களே இவ்விரண்டு சத்தங்களும் உங்களில் முழங்குகிறதா?

ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் கூட தேவனுக்கேற்ற சத்தம் முழங்கவேண்டும். மணவாட்டியிடம் சொல்கிறார், "உன் சத்தத்தைக் நான் கேட்கட்டும்." உன். *2 : 14.* துதியின் சத்தம், பாடலின் சத்தம், குடும்ப ஜெபம் மற்றவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல் முதலிய சத்தங்கள் நம்மில் ஓயாதிருப்பதாக. வீண் வார்த்தை, சண்டை, சபித்தல் போன்ற பாவ சத்தங்களை அகற்றுங்கள். ஏனெனில் ஆரோனின் மணிகள் பொன்மணி ஓசையாகும். அது தெய்வீகத்திற்கு அடையாளம். மற்றவை எல்லாம் இரும்பும், தகரமும் தரும் சத்தம் போன்றதாகும்.

அதிக வேகம் விவேகம் அல்ல. பழங்களும் பொன்மணிகளும்

ஒன்றுவிட்டு ஒன்றாக சம எண்ணிக்கையில் இருந்தன. இவற்றின் பாரத்தினால் ஆரோனுடைய நடைவேகம் கட்டுப்படுத்தப்படுகிறது. கூடாரத் திற்குள் ஆரோன் வேகமாய் ஓடி ஓடி எதையும் செய்யலாகாது. உள்ளான ஊழியங்கள் மிகப் பொறுமையுடன் செய்ய வேண்டியவையாகும். புதிய ஏற்பாட்டு ஊழியனும் நிதானமாய் கடந்து செல்ல வேண்டும். பிரசங்கத் திலும் கூட வேகமாய் பேசுவோர் நிறைய உண்டு. கடைசியில் ஜனத்தைக் கேட்டால் ஒன்றும் புரியவில்லை என்பர். பவுல் தீமோத்தேயுவுக்குச் சொன்னார், "சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதை யாயிரு." *2* தீமோ. *2 : 15.* இடம், காலம், பொருள் அறியாத சொற்பொழிவு களும் குறைவல்ல. ஜெபத்தில் வீண்வார்த்தைகளை அலப்புகிற ஆசாமி களைப் பற்றி இயேசு தாமே கூறியிருப்பது நினைவிலிருப்பது நல்லது. மத். *6 : 7.* ஆதியாகமம் முதல் வெளிப்படுத்த லாகமம் வரையில் சில வாய்ப்பாடுகளைத் தட்டிவிடுகிறவர்களும் குறைவல்ல.

ஆரோனைப் போல நடைகள், ஊழியம், ஜெபம் யாவும் நிதான மாயிருப்பதாக. பழமும் மணியும் சமமாயிருப்பது போல வெறும் சத்தமோ வெறும் கனியோ மாத்திரம் உடையவர்களாயிராமல் இரண்டும் உடையவர்களா யிருப்போமாக.

**4. பட்டம்** Crown யாத். *28:36-38.:* இது ஒரு பசும்பொன் தகடு. அதில் கர்த்தருக்குப் பரிசுத்தம் என முத்திரை வெட்டாக வெட்ட வேண்டும். அதைப் பாகையின் நெற்றிப்பகுதியில் இளநீல நாடாவினால் கட்ட வேண்டும். இதனால் இஸ்ரவேல் புத்திரர் படைக்கும் பரிசுத்தமான வைகளின் தோஷத்தை ஆரோன் சுமக்கிறார்.

அப்படியே கிறிஸ்துவும் தம்மிடம் தங்களைப் படைக்கிறவர்களின் தோஷத் தைச் சுமந்து தீர்த்தார் என்பதே இதன் பொருள். மனிதன் எப் போதுமே பாவத்தீட்டின் தோஷத்தில் கிடக்கிறான். அதை நிவர்த்தி செய்ய வேண்டு மென்பதின் நினைப்பூட்டுதலாயும் இது இருக்கிறது. நமது பிரதான ஆசாரியனாகிய இயேசுவைப் பார்க்கும்போதெல்லாம் நமது தோஷங் களைச் சுமந்து தீர்த்தது ஞாபகத்தில் வருகின்றதன்றோ! அப்படியே பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலருடைய தோஷங்களை ஆரோன் சுமந்தார்.

**5. பாகை.** Mitre யாத். *28 : 39.:* இது மத ஆசாரியர்களும் சிலவேளைகளில் இராஜாக்களும் தலைமேல் அணிகின்ற தொப்பி போன்றதாகும். அது பல வடிவங்களில் செய்யப்படும். அதில் விலையு யர்ந்த கற்களைப் பதித்தும் அணிவார்கள். ஆரோனுடைய பாகையானது மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்டது. (Fine Linen) இதற்கு குல்லா என்ற பெயரையும் *40* ம் வசனம் தருகிறது. இது மெல்லிய பஞ்சு நூலால் மட்டும் செய்யப்பட்டது. இதின் நெற்றிப் பகுதியில் கர்த்தருக்குப் பரிசுத்தம் என வெட்டப்பட்ட பொன்தகடு இளநீல நாடாவில் கட்டப்பட்டது.

பாகை அதிகாரிகளின் அடையாளமாகும். ஒருவனை

பாளயத்திற்கு புறம்பே நிறுத்துவதோ, உள்ளே அனுமதிப்பதோ என்பது ஆசாரியனின் அதிகாரத்திலுள்ள தாகும். கூடாரத்திற்குள் ஊழியம் செய்யும் அதிகாரம் வேறு எவருக்கும் இல்லை.

புதிய ஏற்பாட்டிலும் நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்துள்ளார். யோவான் *1 : 12*. பழைய ஏற்பாட்டு பாகைக்குப் பதிலாக இரட்சணியம் எனும் தலைச்சீராவை அணிந்து கொள்ளச் செய்தார். எபே. *6 : 17*. நாம் உலகத்தை ஆளும் காலம் வரும்போது பஞ்சு நூல் பாகையல்ல, பலவிதமான கிரீடத்தை நமக்குத் தருவார். ஆறுவகை கிரீடங்கள் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

1. பொன் கிரீடம் *24* மூப்பர்கள் அணிந்திருந்தனர். வெளி. *4 : 4*.
2. அழிவில்லா கிரீடம் பந்தயசாலையில் ஜெயிப்பது போல வாழ்க்கைப் போராட்டத்தில் ஜெயிக்கிறவர்களுக்குரியது. *1* கொரி. *9 : 24, 25*.
3. நீதியின் கிரீடம் *2* தீமோ. *4 : 7, 8*. இயேசுவின் பிரசன்னமாகுதலுக்காக நல்ல போராட்டம் போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொள்பவர்களுக்கு.
4. மகிழ்ச்சியின் கிரீடம் *1* தெச. *2 : 19*. ஆதாயம் செய்யப்படுகிற ஆத்துமாக்களுக்கேற்ப இந்த கிரீடம் அமையும்.
5. ஜீவகிரீடம் வெளி. *2 : 10*. கடும் போராட்டத்தில் இரத்த சாட்சியாகிறவர்களுக்குரியது.
6. மகிமையின் கிரீடம் *1* பேதுரு *5 : 2-4*. மந்தையை நன்றாய் மேய்க்கிற மேய்ப்பர்களுக்குரியது.

இயேசு இவ்வுலக வாழ்வில் ஒரு பாகையாகிலும் சூடியிருந்ததாக ஆதாரம் இல்லை. அவருடைய வாரிசு எனப்படுகிற சிலர் பாகை மட்டுமல்ல, கிரீடமும் சூடியுள்ளனர். பாகையோ கிரீடமோ அணியாத இயேசுவின் தலைமேல் முட்கிரீடம் சூட்டிப் பரியாசம் செய்தனர். அதின் மேல் அடித்துக் கொடுமைப்படுத்தினர். ஆனால் இனி அவர் வரும்போது அநேக கிரீடங்கள் அணிந்தவராக ராஜாதி ராஜாவாக வருவார். வெளி. *19 : 12*.

**6. உள் சட்டை Coat** யாத். *28:39.:* மெல்லிய பஞ்சு நூலால் உள்சட்டையை உண்டாக்க வேண்டும். உள்சட்டையானது உடலில் ஒட்டிக்கிடந்தது. அது விசித்திரமானது என்பதால் அதில் சித்திரவேலைகள் உண்டென எண்ணலாம். ஆங்கிலத்தில் அது எம்பிராய்டரி வேலை என உள்ளது. ஆசாரியனின் உடலில் தோன்றும் வியர்வை போன்ற அழுக்குகள் இந்த வஸ்திரத்திற்கு வெளியே வராதபடி இது காக்கிறது.

**7. இடைக்கச்சை Girdle** யாத். *28:39.:* இது சித்திரத்தையல் வேலையாகச் செய்யப்பட்டது. கச்சையானது இடுப்புக்கு பெலன் தருகிறது. பலிபீடத்திலும் கூடாரத்திற்குள்ளேயும் ஓயாத ஊழியத்தினால் ஆசாரியனின் இடுப்புக்குப் பாதிப்புண்டாகலாம். எனவே கச்சையைக் கட்டிக்கொள்ள தேவன் கூறினார். எபே. *6 : 14*. அதை சரீரத்தின் இடுப்பிலல்ல, மனதின் அரையில் (உள்ளான மனிதனின்) கட்டிக்கொள்ள அப். பேதுரு தெரிவிக்கிறார். *1* பேதுரு *1 : 13*. சத்தியம் என்பது வேத வசனத்தின் இரட்சணிய உபதேசங்களின் தொகுப்பு அல்லது நிறைவு ஆகும். அதில் சிறிதும் பெரிதுமான கட்டளைகள் உண்டு. பூரண மனிதனாக கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியை அடைய அவை

அனைத்தும் தேவை. இதில் கால்வாசி, பாதி, முக்கால் என்று மக்கள் தங்களைப் பிரித்துக் கொள்வது சரியல்ல. எபே. *4 : 11-16.* இவைகளே அலங்கார வஸ்திரங்கள்.

**8. சல்லடம்** Breeches யாத். *28:42. :* இது முழங்கால் வரையிலும் நீளமுள்ள அரைக்கால் சட்டையாகும். இதனை லினன் (மெல்லிய சில்க்) போன்ற நூலினால் செய்தனர். இது அலங்கார வஸ்திரமல்ல. இது உள் வஸ்திரமானதால் உடலை அரிக்காதிருக்க சில்க் போன்ற லினன் நூலில் செய்யப்பட்டது. இதன் தேவை மிக முக்கியமாகும். ஆசாரியனின் நிர்வாணம் பலிபீடத்தின் மேல் காணப்படலாகாது என்ற விதியை யாத். *20:26* ல் காணலாம். அப்படியே ஆசாரியன் கூடாரத்திலும் விசேஷமாக மகா பரிசுத்த ஸ்தலத்திலும் பணிவிடை செய்யும்போது அவனது நிர்வாணம் தேவமகிமை நிறைந்த கூடாரத்தரையில் தென்படலாகாது. எனவே சல்லடங்கள் கொடுக்கப்பட்டது.

நிர்வாணத்தைப் பற்றி தேவன் எவ்வளவு கரிசனையாக இருக்கிறார் என்று பாருங்கள். இன்று தங்கள் சரீர நிர்வாணங்களை சரியாக மறைக்காமல் நடக்கிற விசுவாசிகளையும், ஊழியர்களையும் காணலாம். சகோதரிகளும் தகுதியான வஸ்திரத்தினால் தங்களை மூடக்கடவர்கள். ஜெபிக்கும்போதே தலையை மூடிக்கொள்ள வேண்டுமென்றால் சரீரத்தை நன்றாய் மறைக்க வேண்டியது எத்தனை அவசியம்? ஆதாமையும் ஏவாளையும் நிர்வாணிகளாயிருக்க விரும்பாத தேவன் தோல் உடைகளை உண்டாக்கி உடுத்துவித்ததால் நமது தேவன் நிர்வாணத்தை வெறுக்கிறவர் என்பது எத்தனை உண்மை?

பல மதங்களிலும் ஆசாரியர்கள் குறைந்தபட்ச ஆடைகளையே அணிகின்றனர். பல தெய்வங்களும் மனிதர்களை நிர்வாணமாக்கிய சரித்திரங்களையும் காணலாம். ஆனால் நமது தேவன் நிர்வாணத்தை விரும்பவில்லை. கிறிஸ்தவ மக்களே பயப்படுவீர். தேவ ஊழியர்களே, ஊழியர்களின் மனைவிகளே, பிள்ளைகளே இவ்விஷயத்தில் "மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள்" *1* பேதுரு *5 : 3.*

## அதிகாரம் 39

## ஆசாரியனின் பங்கு - பலிகள்

இஸ்ரவேலில் லேவி கோத்திர ஆசாரியர்களுக்குத் தனி சுதந்திர பூமி இல்லாததினால் ஆசரிப்புக் கூடாரத்தின் வருமானத்தில் பெரும் பகுதியையும் தேவன் ஆசாரிய குலத்துக்கு ஈவாகக் கொடுத்தார். ஆசரிப்புக் கூடாரத்திற்கு வந்து சேரும் வருமானங்கள் ஆசாரியர்களுக்கென்றும் லேவியருக்கென்றும் இரண்டாகப் பிரிக்குமாறு தேவன் கட்டளையிட்டார்.

**1. ஆசாரியர்களுடைய பங்கு**

*1.* கர்த்தர் தாமே அவர்களுடைய சுதந்தரம் என்றார். எல்லா சுதந்தரங்களிலும் கர்த்தரே மேலான சுதந்தரம். எண். *18 : 20.* மலைகள் விலகினாலும், நதி வற்றினாலும் இவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இல்லாதவைகளை இருக்கிறவை போல அழைக்கிறவராகிய

கர்த்தரே மேலான சுதந்தரம். ஆகையினால் தான் தாவீது பாடினார், "கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்; நான் தாழ்ச்சி அடையேன்". சங். *23 : 1*. ஆகையினால் தான் ஆபிரகாம் சோதோமின் 'இராஜா பொருட்களைக் கொடுத்த போது ஒரு சரடாவது, செருப்பின் வாராகிலும் வேண்டாம் என்றார். ஆதி. *14 : 21, 22*. உடனே தேவன் வெளிப்பட்டு ஆபிரகாமிடம் "நீ பயப்படாதே, நான் உனக்கு கேடகமும் மகா பெரிய பெலனுமாயிருக்கிறேன் என்றார்" *15 : 1*. இந்த தேவனின் போஷிப்பில் ருசியும் திருப்தியும் கண்ட தானியேல் ராஜ போஜனத்தை ஏற்க மறுத்தார். தானி. *1 : 8*. இந்த அற்புத தேவன் ராஜாவானால் நாட்டில் பசியும் பிணியும் ஒழியுமே என்று சொல்லி அவரைப் பிடித்து இராஜாவாக்க ஒரு முயற்சியும் நடந்தது. யோவான் *6 : 15*.

தேவ ஊழியர்களே, கர்த்தர் உங்களைப் போஷிப்பார். உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவரல்லவா? அவர் ஒரு போதும் கைவிட மாட்டார். ஆகாப் அரசனால் கைவிடப்பட்ட எலியாவை இரண்டு வகுப்பார் போஷித்தனர். *(1)* காகம் : இது மனித இனமல்லாதது. ஒரு அற்புத போஷிப்பு. எதிர்பாராத வழிகளில் கர்த்தர் போஷிப்பார் என்பதற்கு திருஷ்டாந்தம். *(2)* விதவை : காகங்களிடம் கேட்டு வாங்காதவர் விதவையிடம் கேட்டு வாங்கினார். மனிதர் மூலமும் போஷிப்பார் என்பதற்கு இது திருஷ்டாந்தம். விதவையையும் மகனையும் ஒரு அற்புதம் செய்து உழைப்பூட்ட முடியும் என்பதால் தான் எலியா கேட்டு வாங்கித் தின்றார். சும்மா சுற்றி வயிற்றை நிரப்புகிறவர் அல்ல இந்த எலியா! தேவனும் விதவையினிடத்துக்குப் போ என்றார். *1* இரா. *17 : 9*. அப்படியே பானையின் மாவும் கலசத்தின் எண்ணெயும் நாள் தோறும் பெருகிக் கொண்டேயிருந்தது. *17 : 14-16*.

அருமையான விசுவாசிகளே, தேவனால் அனுப்பப்பட்டவர்களை வெறுமையாக அனுப்பாதீர். அவர்களை இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராய் எண்ணுங்கள். *1* தீமோ. *5 : 17*. தமக்காக சேவை புரிகிற ஆசாரியர்களை தேவன் வெறுமையாய் விட்டுவிடவில்லை. அவர்களைப் போஷிப்பதற்காக தேவன் தமக்கு வருகிறவைகளில் ஆசாரியருக்கு பகிர்ந்து கொடுக்கிறவைகளைப் பாருங்கள்.

*2*. அக்கினிக்கு உட்படுத்தப்படாத படைப்புக்களெல்லாம் ஆரோனுக்கும் அவர் குமாரருக்கும் சொந்தமாகும். இவ்வாறு எல்லா போஜன பலியும் பாவ நிவாரண பலியும் எல்லா குற்ற நிவாரண பலியும் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் சொந்தமாகும். ஆனால் இரண்டு நிபந்தனைகள் உண்டு. *(1)* பரிசுத்த ஸ்தலத்திலே புசிக்க வேண்டும். வெளியே கொண்டு போகக் கூடாது. *(2)* ஆண்மக்கள் மட்டுமே புசிக்க வேண்டும் எண். *18 : 9, 10;* லேவி. *6 : 25-27*.

*3*. ஏறெடுத்துப் படைக்கிறதும் அசைவாட்டுகிறதுமான எல்லா காணிக்கைகளின் படைப்பும் ஆரோனுடையதாகும். இதனை குமாரரும் குமாரத்திகளும் சாப்பிடலாம். வீட்டிலே சுத்தமானவர்கள் சாப்பிடலாம். எண். *18 : 11*

*4*. முதற்பலன்களாக வருகிற உச்சிதமான எண்ணெயும், உச்சிதமான திராட்ச ரசமும் தானியமும் கூட ஆசாரியனுக்கே கொடுத்தி ருக்கிறார். இதனையும் வீட்டிலே சுத்தமானவர்கள் புசிக்கலாம். எண். *18 : 12, 13*

5. மிருகங்களிலும் மனிதரிலும் கர்ப்பந்திறந்து பிறப்பவைகளும் கூட ஆசாரியனுக்கே சொந்தம். எண். *18 : 15-18.* அவற்றுள் மனிதர் மற்றும் தீட்டான மிருகங்களின் தலையீற்றை சேக்கலுக்கு *20* கேரா மதிப்புள்ள ஐந்து சேக்கல் பணத்தை ஆசாரியனுக்குச் செலுத்தி மீட்டு தனக்காக வைத்துக் கொள்ளலாம். மனித தலையீற்றை அகத்தியமாய் மீட்க வேண்டும். சுத்தமான மிருகங்களாகிய ஆடு, மாடு ஆகியவற்றை பலியிட்டு, கொழுப்பைத் தகனிக்க வேண்டும். மாம்சமோ ஆரோனைச் சேரும்.

6. பலிக்குவரும் மாடுகளின் முன்னந் தொடை, தாடை, இரைப்பை ஆகியவை ஆசாரியனைச் சேரும். உபா. *18 : 3.*

7. முதற் பலனாய் வரும் ஆட்டு ரோமமும். ஆசாரியனைச் சேரும். உபா. *18 : 4*

8. போஜனபலியில் ஒரு பங்கைத் தகனித்தது போக மீதி ஆசாரியனை சேரும். லேவி. *2 : 2, 3, 9, 10.* ஆரோனின் ஆண்மக்கள் அதைப் புசிக்கலாம். *6 : 14-18.*

9. சில குற்றநிவாரண பலிகளுக்கு எப்பாவில் பத்தில் ஒரு பங்கு மா வர வேண்டும். அதில் ஆசாரியனின் கைப்பிடி நிறைய எடுத்து பலிபீடத்தில் தகனித்தது போக மீதி ஆசாரியனைச் சேரும். லேவி. *5 : 11-13; 7 : 1-7, 9.*

10. ஆசாரிய வகுப்பில் அநேகர் உண்டு. அவர்களில் யார் பலியைச் செலுத்த அனுமதிக்கப்படுகிறானோ அவனுக்கு அதன் தோல் உரியதாகும். லேவி. *7 : 8.*

11. எண்ணெயிலே பிசைந்ததும் பிசையாததுமான எல்லா போஜன பலிகளும் ஆரோனின் குமாரருக்கு சரிபங்காகச் சேர வேண்டும். எனவே, எல்லாருக்கும் பகிர்வு செய்யும் முறை ஒன்று அங்கே இருந்திருக்கிறது. லேவி. *7 : 10.*

12. போஜனபலி ஸ்தோத்திர பலியாக செலுத்தப்படும் போது அதன் மீதி சமாதான பலியை செலுத்துகிற ஆசாரியனுக்குரியதாகும். லேவி. *7 : 11-15*

13. ஆரோனின் குமாரரில் சமாதான பலியைச் செலுத்துகிற வனுக்கு வலது முன்னந்தொடை உரியதாகும். லேவி. *7 : 33.* இவ்வாறு ஆசாரியர்களுக்குப் பலியின் பெரும் பகுதியும் பங்காகச் சேருகிறது. பலிகளில் சர்வாங்க தகன பலி மட்டுமே முற்றிலும் தகனிக் கப்படுகிறது. லேவி. *1*-ம் அதிகாரம். மற்ற பலிகளில் இரத்தம், கொழுப்பு முதலிய சிலவகை தவிர மற்றவை எல்லாம் ஆசாரியர்களுக்கே சொந்தம்.

சமாதானபலியில் ஒரு விசேஷ சட்டத்தைக் காணலாம் லேவி. *7 : 17, 18.* அதன் மீதியை ஆசாரியர்கள் இரண்டு நாளில் புசிக்க வேண்டும். *3*-ம் நாளில் அது அருவருப்பாகிறது. அதைப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான். அவ்வாறு மீறுவதை அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும். இல்லாவிட்டால் அதைச் செலுத்துகிறவனுக்குப்

பலிக்காது. எனவே, இந்தப் பலிக்குரியதை ஆசாரியர்கள் *2* நாளுக்குள் புசிக்கிறார்களா மீந்ததை *3*-ம் நாளில் சுட்டெரிக்கிறார்களா என்பதைக் கூட செலுத்துகிறவன் கவனிக்க வேண்டும். இல்லேல் அவனுக்கு அதன் ஆசீர்வாதம் பலிக்காதாம். எனவே, *(1)* இதனை பிரதான ஆசாரியன் கவனிக்க வேண்டும். *(2)* அல்லது பலியைச் செலுத்துகிறவன் கவனிக்க வேண்டும். சபையிலும் ஊழியங்கள் நன்றாய் நடக்கின்றதா என்று விசாரணை செய்யும் பொறுப்பு பிரதான ஊழியரைச் சாரும். அதில் குறைகள் உண்டானால் பணிவோடு நன்மைக்கேதுவாகச் சுட்டிக் காட்டி கர்த்தருடைய சபை குந்தகமின்றி நடந்து வளர்ந்தேற பாரத்தோடு உழைக்கிற விசுவாசிகள் ஆவன செய்ய வேண்டும்.

**2. லேவியரின் பங்கு - தசமபாகம்:** ஆசாரியர்களைப் போல லேவியருக்கும் இஸ்ரவேல் தேசத்தில் தனி சுதந்தர பூமியில்லை. எனவே அவர்கள் அனைவரும் ஆசரிப்புக் கூடாரத்தினாலே தான் போஷிக்கப்பட வேண்டும். லேவி கோத்திரத் தாரின் மக்கள் தொகை ஆசாரியர்களை விட அதிகமானதால் ஆசாரியர்களை விட லேவியரின் தேவை மிகுதியாகும். எனவே, ஆசரிப்புக்கூடாரத்தில் வருமானம் மிகுதியான தசமபாகங்களை லேவி கோத்திரத்தாருக்குக் கொடுத்தார் என்பது ஒரு சுமுகமான ஏற்பபாடாகும்.

லேவியராகமம் சர்வாங்க தகனபலியில் துவக்கி தசம பாகத்தில் முடிகிறது. *27 : 30-33.* அது ஆசாரியர்களுக்குரிய பலிகளில் துவக்கி லேவியர்களுக்குரிய தசம பாகத்தில் முடிவடைகிறது. தசமபாகம் நியாயப்பிரமாண காலம் துவங்கும் முன்னே ஆபிரகாமின் காலத்திலே இருந்தது. ஆதி. *14 : 20,* எபி. *7 : 20.* இயேசு நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளவும், நீதி, விசுவாசம், இரக்கம் ஆகியவற்றை விடாதிருக்கவும் வேண்டும் என்றார். மத். *23 : 23.* எனவே தசமபாகம் செலுத்துதல் புதிய ஏற்பாட்டிலும் உள்ளது.

பிழைத்திருக்கிறான் என்று பெயர் பெற்ற மெல்கிசேதேக்கு தசம பாகம் வாங்கினான். இயேசு மெல்கிசேதேக்கு முறைமையில் வந்ததால் நாம் செலுத்தும் தசமபாகங்கள் இயேசுவுக்கே சேரும். பணத்தில் மட்டுமல்ல, விதை, கனி, முதலிய எல்லா வருமானத் திலும் தசமபாகம் செலுத்த வேண்டும். லேவி. *27 : 30-33.* யாக்கோபு எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்தினார். ஆதி. *28 : 22.* ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தார். ஆதி. *14 : 20.* நியாயப் பிரமாண காலத்தில் தசமபாகம் லேவியருக்கே உரியது. ஆசாரியர்களுக்கு பலிகளைக் கொடுத்திருக்கிறார். தசம பாகங்களை ஆசாரியர்கள் வாங்கவோ விநியோகிக்கவோ முழு உரிமையுடன் கட்டளையிடவில்லை.

தசமபாகத்தை ஆலயத்தின் பண்டசாலையில் கொண்டு வருமாறு தேவன் கட்டளையிட்டார். மல்கியா *3 : 10.* பண்டசாலையிலிருந்து லேவியருக்குக் கொடுக்கின்ற ஒரு ஏற்பாடு இருந்தது என்று இதிலி ருந்து அறியலாம்.

தசமபாகத்தை லேவியன் தான் சர்வசாதாரணமாக வாங்கினான். தசமபாகம் வாங்குகிற அவனும் என லேவியைக் குறித்து எபி. *7 : 9-10* வசனங்களில் காண்க. ஆசாரியர்களும் லேவி கோத்திரத்தாரானதால் கோத்திர உரிமையின்படி தசமபாகம் வாங்க கட்டளை பெற்றிருந்தனர் எபி. *7 : 5.* ஆனாலும் அதை வாங்கி ஆலயத்தின் பண்டசாலையிலே சேர்க்க வேண்டும் என மல்கியா *3 : 10* ன் மூலம் அறியலாம். மேலும் தசம பாகத்தை லேவியருக்கு "**சுதந்தரமாகக் கொடுத்தேன்**" என திட்டவட்டமாகக் கூறியுள்ளார். எண். *18 : 21.* அது அவர்களுடைய சம்பளம். எண். *18 : 31.* எசேக்கியா அரசன் தசம பாகங்களைச் சேர்த்து வைக்க ஆலயப் பண்டசாலைகளை ஆயத்தப்படுத்தி அதின் மேல் லேவியரான விசாரிப்புக் காரரை வைத்தார். *2* நாளா. *31 : 11-13.*

அவைகளைப் பங்கிட்டுக் கொடுக்கவும் ஒரு அதிகாரக்குழுவை ஏற்படுத்தினார். *2* நாளா. *31 : 14-18.* ஆசரிப்புக்கூடாரத்தில் பிரவேசித்துப் பணிவிடை செய்கிற எல்லா லேவியருக்கும், ஆசாரியருக்கும் சரிசமமாய் குழந்தைகள் உட்பட யாவருக்கும் அவரவருடைய பங்கு வழங்கப்பட்டது. வச. *18.*

நெகேமியாவின் காலத்திலும் முதற்பலன்கள் முதலிய ஆசாரியனுக் குரியதை ஆசாரியனிடத்திலும், தசமபாகத்தை லேவியரிடத்திலும் ஒப்படைத்தார்கள். நெகே. *10 : 37.* லேவியர் வாங்கும் தசமபாகத்தில் பத்தில் ஒன்று ஆசாரியர் களுக்குக் கொடுக்கப்பட்டு வந்ததால் ஆசரிப்புக்கூடாரத்திற்கு முழு தசமபாகமும் ஆசாரியர்களுக்குரியதல்ல என்பது புலனாகும்.

இவ்வாறு லேவியர் வாங்குகிற தசமபாகத்திலும் பத்தில் ஒன்று ஆசாரியர்களுக்குரியதாகும். அதனை ஆசாரியனிடத்தில் கொடுத்து விடவேண்டும். எண். *18 : 26-28.* நெகேமியாவின் காலத்திலும் அப்படியே செய்யப்பட்டது. நெகே. *10 : 38.* இந்தப் படைப்பு தேசத்தின் வருமானத்தின் பத்தில் ஒரு பங்கில் பத்தில் ஒரு பங்காகும். இதனை எடுத்து ஆசாரி யனிடத்தில் கொடுக்க வேண்டும். தசமபாகத்தை வாங்குவதற்கோ, பகிர்ந்து கொடுப்பதற்கோ தனி பொறுப்பு ஆசாரியர்களுக்கு இல்லா திருந்த போதிலும் தசமபாகத்தின் தசமபாகங்கள் ஆசாரியர்களுக்கே உரியது. ஆசாரியர்கள் தங்கள் வருமானத்தில் தசமபாகம் செலுத்துவதாக வசன ஆதாரம் இல்லை.

புதிய ஏற்பாட்டு சபையின் நிலைமை என்ன?

1. விருத்தசேதனம், ஓய்வுநாள் ஆகியவை ஒழிக்கப்படவோ, விலக்கப்படவோ, மீறப்படவோ செய்யப்பட்டது போல தசமபாகம் ஒழிக்கப் படவில்லை.

2. தசமபாகத்தை விடாதிருக்க வேண்டும் என இயேசு தெளிவாகக் கூறினார். மத். *23 : 23.*

3. போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்றபடி ஊழியருக்கு சபையின் வருமானத்தில் பங்கு உண்டு. *1* கொரி. *9 : 9*.

4. ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள் தேவாலயத்துக்குரியவைகளில் புசிக்கிறார்கள். அவ்வாறு புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியரை சபையின் வருமானம் போஷிக்க வேண்டும். *1* கொரி. *9 : 13-14*. "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டும்."

5. புதிய ஏற்பாட்டு சபையின் தசமபாகம் முழுவதும் ஊழியருக்கே சொந்தம் என ஒரு போதனை இல்லை. எனவே, வருமானம் அதிகமாக உள்ள சபைகள் கணக்குகளைப் பராமரித்து ஊழியரைத் திருப்தியாக போஷித்தது போக மீதியானதைக் கொண்டு சுவிசேஷ ஊழியங்களையும் செய்வதே நல்லது. இப்பணியை ஒரு குழுவின் மூலமாகவும் செய்யலாம். ஊழியர் தாமாகவும் செய்யலாம். எல்லாவற்றையும் உண்மையாய் செய்கிற ஊழியரை கணக்குக் கேட்டு தொல்லை கொடுக்கவும் வேண்டாம். உண்மையாய் வரவு செலவை நடப்பித்தவர்களிடம் கணக்கு கேளாதிருந்த ஒரு சம்பவத்தையும் *2* இரா. *12 : 15*ல் காண்கிறோம்.

6. கர்த்தருடைய ஊழியத்தை நடப்பித்து ஆத்தும ஆதாயம் செய்வதே புதிய ஏற்பாட்டு சபையின் பணி. இப்பணிக்குப் பணத்தை ஞானமாய் விநியோகிக்கிறவர்கள் கர்த்தருடைய வருகையில் நற்பலனை அடைவார்கள்.

7. பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்களுக்குப் பலியில் மிகுதியான பங்கு உண்டு. புதிய ஏற்பாட்டில் மிருகபலி ஒழிக்கப்பட்டதால் ஊழியர்களுடைய தேவைகள் உட்பட சுவிசேஷ வேலைகள் அனைத்தும் தசமபாகம் மற்றும் காணிக்கைகளினால் சந்திக்கப்படுவது அவசியம்.

8. பழைய ஏற்பாட்டில் சுவிசேஷ ஊழியம் இல்லை. அது ஒரே ஜாதிக்குரியது. சுவிசேஷ ஊழியத்திற்கு என்று ஒரு செலவும் இல்லை. ஆகையால் வருமானம் முழுவதும் ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் பகிர்மானம் செய்யப்பட்டது. புதிய ஏற்பாட்டில் எல்லா ஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு ஆலயங்கள் கட்டப்பட வேண்டியுள்ளதால் அதற்குரிய செலவுகள் மிகுதி. எனவே, சபையின் வருமானங்களை எவரும் சுருட்டிக்கொண்டு ஓடலாகாது. ஊழியங்கள் வளரச் செலவு செய்ய வேண்டும். அதே வேளையில் ஊழியர்களுடைய பிள்ளைகளின் படிப்பு, திருமணம் முதலிய அவசியமான தேவைகளில் அவர்களைக் கைவிடாதிருக்க வேண்டும். ஊழியர்களை நன்றாய் போஷியுங்கள். அப்போது தான் அவர்கள் பற்றாக்குறைகளைக் குறித்த கவலைகளின்றி நிறைவாய் துதிக்கவும், சுவிசேஷ வேலைகளை செய்யவும் இயலும். கொடுக்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் இயேசு நியாயந்தீர்ப்பார்.

## அதிகாரம் 40

# மெல்கிசேதேக்கின் முறைமை

பரிசுத்த வேதாகமத்தில் சில பொருட்களும் சில நபர்களும் ஒப்பனையாகக் கூறப்பட்டுள்ளது. மெல்கிசேதேக்கு என்ற ஒருவர் குறித்து ஆதி. *14 : 15-20* ல் வாசிக்கிறோம். இவர் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பனை.

**1. மெல்கிசேதேக்கு** பற்றி பவுல் விரிவான விளக்கம் தருகிறார். *(எபிரேயர் 7ம் அதிகாரம்)* அங்கே *(7 : 3)* மெல்கிசேதேக்கு தகப்பனும் தாயும் வம்ச வரலாறும் இல்லாதவன் என்கிறார். இயேசுவுக்கு வம்ச வரலாறும் தகப்பனும் தாயும் உண்டு எனலாமா?

இயேசுவின் மனுஷ அவதாரத்தில், பெத்லகேம் முதல் கல்வாரி வரை *33 1/2* வருடங்கள் மட்டுமே அவர் மனிதனாக வாழ்ந்தார். ஆனால் அவர் ஆதியிலே இருந்தவரும், தேவ குமாரனும், தேவனுமாவார். தேவகுமாரன் என்ற அந்தஸ்தில் அவரது துவக்கமும் முடிவும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர் துவக்கமும் முடிவும் ஆனவர். அவர் ஆதியும் அந்தமுமானவர். துவக்கத்தை அறிவீர்களேயானால் முடிவையும் அறிவீர்கள். இரண்டையும் அறியோம். எனவே துவக்கமும் முடிவும் இல்லாத தேவ குமாரனாயிருக்கிறார்.

மேலும் எபி. *7 : 3* ல் மெல்கிசேதேக்கு தகப்பனும் தாயும் இல்லாதவர். இயேசுவுக்கு தகப்பனும் தாயும் உண்டு என்பது உண்மையா? இயேசுவின் மனித அவதாரத்தில் தகப்பன் உண்டா? தாய் மட்டும் தானே உண்டு. இயேசு புருஷவித்தினால் பிறக்கவில்லையே.

மெல்கிசேதேக்கை மனுஷீகத்துக்கு அப்பாற்பட்ட நிலையில் விளக்குவது போல இயேசுவின் மனுஷ அவதார வம்சா வழியையும் தாய் தகப்பன் உறவு முறைகளையும் மறைத்து அவர் தேவன் என்றே பவுல் விளக்குகிறார். அவரை தேவன் என்று விளக்குவதற்கு தாய் தகப்பன் வம்ச வரலாறுகள் சொல்லப்படாத மெல்கிசேதேக்கைப் பயன்படுத்தினார். அவ்வளவு தான்.

**2. மெல்கிசேதேக்கு உண்மையிலே ஒரு மனிதரா?** எபி. *7 : 1.* ஆம்! அவர் ஒரு மனிதர். அவர் ஆபிரகாமின் காலத்தில் வாழ்ந்திருந்தவர். அவர் தேவனுடைய ஆசாரியனும் சாலேமின் இராஜா வுமாக இருந்தார். சத்துரு ராஜாக்களை முறியடித்து வந்த ஆபிரகாமை வரவேற்று அப்பமும், திராட்சரசமும் கொடுத்து உபசரித்தார் அரசன் என்ற முறையில். ஆனால் ஆசாரியன் என்ற முறையில் ஆபிரகாம் கொடுத்த தசமபாகத்தை அவர் பெற்றுக்கொள்வதையும் காண்கிறோம். ஆதி. *14 : 17-20)* எனவே, மெல்கிசேதேக்கு ஆபிரகாமின் காலத்தில் வாழ்ந்திருந்த தனி மனிதன் என்று எண்ணாவிட்டால் அவரை தேவனாக எண்ண வேண்டியது வரும். பிதா, குமாரன், பரிசுத்தஆவி ஆகிய திரியேக தேவனுக்கு மேல் வேறு தேவன் இல்லையே.

ஆனால் மெல்கிசேதேக்கின் தாய் தகப்பன் வம்சவரலாறு சொல்லப்படவில்லை என்பதால் இயேசுவை தேவகுமாரனாகவும் தாய் தகப்பன் வம்ச வரலாறுகளுக்கு மேற்பட்டவராகவும் உயர்த்திக்காட்டு வதற்கு மெல்கிசேதேக்கை ஒப்பனையாக உபயோகப்படுத்துகிறார். இது தான் உண்மை.

*3.* எபிரேயர் *7 : 3*ல் ''நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல்'' என்கிறார். இதுவும் இயேசுவுக்குப் பொருத்தமாகும். இங்கு இயேசுவின் மனித அவதாரத்தை அல்ல தெய்வீகத்தையே வெளிப்படுத்துகிறார். மெல்கிசேதேக்கின் பிறப்பின் காலமும், இறப்பின் காலமும் சொல்லப்படாததினால் அவரை இயேசுவுக்கு ஒப்பிட்டு வர்ணிக்கிறார். இயேசு சகல சிருஷ்டிக்கும் முந்தினவர். ஜீவனின் துவக்கமும் நாட்களின் முடிவும் இல்லாதவர். மனுஷ அவதாரமும் சிலுவை மரணமும் அவரது தெய்வீகத்தை ஒருக்காலும் கட்டுப்படுத்த வில்லை. ''மரித்தேன் ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடி ருக்கிறேன்.'' வெளி. *1 : 18.*

*4.* தொடர்ந்து *7 : 3*ல் மெல்கிசேதேக்கு "தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவராய்" இருக்கிறார் எனப்பட்டிருக்கிறது. இங்கே மறைமுகமாக அல்ல, நேரடியாகவே இயேசுவைத்தான் மெல்கிசேதேக்கு வெளிப் படுத்துகிறது.

*5.* தொடர்ந்து *7 : 3*ல் மெல்கிசேதேக்கு "என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்'' என்பதைக் காண்க. பரிசுத்த ஆவியானவரை வேதத்தில் ஆசாரியனாக எங்குமே வெளிப்படுத்தப் படவில்லை. இயேசுவின் ஆசாரியத்துவம் பிரசித்தமாயிற்றே. எபி. *7 : 17.* நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியரா யிருக்கிறீர்.

*6.* தொடர்ந்து *7 : 4*ல் மெல்கிசேதேக்கு ஆபிரகாமின் கையிலே தசமபாகம் பெற்றார் என்று காண்கிறோம். பரிசுத்த ஆவியானவருக்கு தசமபாகம் செலுத்தியதாகவோ அவர் அதை பெற்றதாகவோ வேதத்தில் ஆதாரம் இல்லை. ஆசாரியன் என்ற முறையில் இயேசு மட்டுமே தசமபாகத்திற்கு உரியவர். இதின்படியும் மெல்கிசேதேக்கு இயேசுவுக்கே ஒப்பனை.

*7.* தொடர்ந்து *7 : 5-13* வரை வாசித்தால் லேவி கோத்திரத்தார் மட்டுமே தசமபாகம் பெற அனுமதிக்கப்பட்டனர் என்றும், இயேசுவோ, வேறு கோத்திரத்தில் (யூதா கோத்திரம்) தோன்றியிருந்தும் ஆசாரியனும் பாவ பரிகாரியுமாகி விட்டதால் தசம பாகம் வாங்கத் தகுதி பெற்றார் எனக் காண்கிறோம். யூதா கோத்திரத்தில் பிறந்தவர் இயேசு தானே, பரிசுத்த ஆவி அல்லவே! எனவே, மெல்கிசேதேக்கு இயேசுவுக்கே ஒப்பனை.

*8.* தொடர்ந்து *7 : 11-15* ல் இரண்டு முறைமைகளைக் காணலாம்

*1.* ஆரோனுடைய முறைமை

*2.* மெல்கிசேதேக்கின் முறைமை

ஆரோனுடைய முறைமையின்படி பூரணத்துவம் உண்டாகாததினால் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி வேறு ஒரு ஆசாரியத்துவம் எழும்ப வேண்டியதாயிற்று என்கிறார். ஆசாரியத்துவப் பதவி பரிசுத்த ஆவியான வருக்குரியது அல்ல, இயேசுவுக்கே உரியது.

**9. மெல்கிசேதேக்கின் முறைமை எப்படி பூரணப்படுத்தும்?:** ஆரோனுடைய முறைமையில் ஆசாரியத்துவம் மட்டுமே இருந்தது. அரசாளும் அதிகாரம் யூதா கோத்திரத்தில் இருந்தது. இயேசு யூதா கோத்திரத்தில் பிறந்ததினால் அரசாளவும், பாவ பரிகாரபலி செலுத்திய தினால் லேவி கோத்திர ஆசாரியத்துவத்திற்கும் அதிகாரம் பெற்றார். இயேசு கிறிஸ்து ராஜாவாகவும் *(ராஜாதி ராஜா)* ஆசாரியராகவும் *(பிரதான ஆசாரியர்)* இருக்கிறார். இவ்விரண்டும் ஒருங்கிணைந்த ஒப்பனை மெல்கிசேதேக்கில் மட்டுமே காணமுடிகிறது. தேவனுடைய ஆசாரியனா யிருந்த சாலேமின் இராஜாவாயிருந்த மெல்கிசேதேக்கு என்பது இயேசுவுக்கு எத்தனை பொருத்தமாக உள்ளதென்று பாருங்கள்! ஆதி. *14 : 18.* லேவி கோத்திரத்தாருக்கில்லாத ராஜரீகமும், யூதா கோத்தி ரத் தாருக்கில்லாத ஆசாரியத்துவமும் இயேசுவில் இணைந்தது. இவ் விரண்டுமே இணைந்தபோது, “ராஜரீக ஆசாரியக் கூட்டம்” என்ற புதிய சபை உருவாயிற்று. *1* பேதுரு *2 : 9.*

வேதவசனம் கூறுவதைக் கேட்போம். எபி. *7 : 13-14.* இவைகள் எவரைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதோ அவர் வேறொரு கோத்திரத்துக்குள்ளானவராயிருக்கிறாரே; அந்தக் கோத்திரத்தில் ஒருவ னாகிலும் பலிபீடத்து ஊழியம் செய்ததில்லையே. நம்முடைய கர்த்தர் யூதா கோத்திரத்தில் தோன்றினாரென்று பிரசித்தமாயிருக்கிறது. **எனவே, மெல்கிசேதேக்கின் இவ்விரு சிறப்புகளும் இயேசுவில் காணப்படுவதால் அவர் இயேசுவுக்கே ஒப்பனை.**

*10.* மேலும் எபி. *7 : 2* ல் மெல்கிசேதேக்குக்கு இரண்டு பொருள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. அவ்விரண்டும் இயேசுவுக்கே பொருந்தும். *(1)* நீதியின் இராஜா-இது அரசியல் நாமமாகும். நீதி நியாயங்களை நடப்பித்து அரசாளுகிற ஒரு நேர்மையான அரசனை சுட்டிக்காட்டுகிறது. அந்த அரச பதவிக்குரியவர் இயேசு ஒருவரே. “இதோ! ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்” *(ஏசாயா 32 : 1)* என்பது இயேசுவுக்கே பொருந்தும். *(2)* சாலேமின் ராஜா-சமாதானத்தின் ராஜா-இது ஆன்மீக நாமமாகும். அவர் நமது சமாதான காரணராகி தமது பலியினாலே தேவனுக்கும் மனிதனுக்கும் சமாதானத்தை உண்டாக்கினார். இவ்விரண்டு குணங்களும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து அல்ல, இயேசுவைக் குறித்தே கூறப்பட்டுள்ளது.

## 11. பரிசுத்த ஆவியின் முறைமையா?

மெல்கிசேதேக்கு இயேசுவுக்கு ஒப்பனை என்றும் ஆனால் மெல்கிசேதேக்கின் முறைமை என்பது பரிசுத்த ஆவியின் முறைமை என்றும் கூறலாமோ? மெல்கிசேதேக்கு இயேசுவுக்கு ஒப்பனை என்றால் மெல்கி சேதேக்கின் முறைமை என்பதும் இயேசுவின் முறைமை தான்.

பரிசுத்த ஆவியானவர் இன்று வரங்களாலும், பலத்த செய்கைகளாலும், சபையையும், ஊழியத்தையும் நடப்பிப்பதும் இயேசு வைத்துப்போன முறைமையின்படியாகும். இவை பரிசுத்த ஆவியின் முறைமை என்று எண்ணி மெல்கிசேதேக்கையும் இத்துடன் இணைத்து விடலாகாது.

**மெல்கிசேதேக்கின் முறைமையில் பரிசுத்த ஆவியானவர் புதிய ஒரு முறைமையை ஏற்படுத்தவில்லை.**

மெல்கிசேதேக்கின் முறைமையின்படி மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் எழும்பிய வேறொரு ஆசாரியரே பழைய ஏற்பாட்டு எழுத்துக்குரிய முறைமையை ஒழித்துப் புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய முறைமையை ஸ்தாபித்தார். பரிசுத்த ஆவியானவர், தாமாக எதையும் செய்யாமல் "தாம் கேள்விப்பட்ட யாவையும் சொல்லுவார்." யோவான் *16 : 13*. அவர் என்னை (இயேசுவை) மகிமைப்படுத்துவார். *16 : 14*. என்னுடையதில் எடுத்து அறிவிப்பார். *16 : 14*. நான் உங்களுக்குச் சொன்ன யாவையும் நினைப்பூட்டுவார். *14 : 26*. பரிசுத்த ஆவியானவர் இயேசு ஸ்தாபித்த முறைமையை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார் என்பதே உண்மை.

மேலும் *7 : 17* ல் "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென் றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்" என்று எத்தனை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.? மெல்கிசேதேக்கின் முறைமையை ஒப்பனையாக சுட்டிக் காட்டக் காரணம் என்ன? ஆரோனுடைய முறைமையில் பூரணத் துவம் இல்லாததால், ராஜரீகமும், ஆசாரியத்துவமும் இணைந்த ஒரு ஆசாரியர் எழும்புவதைக் குறித்து மட்டுமே இந்த ஒப்பனை கொண்டு வரப்பட்டுள்ளது.

*12*. ஆரோனுடைய முறைமையில் திருப்தியடையாத தாவீது மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான ஆசாரியர் எழும்புவதை அன்றே கண்டிருக்கிறார். சங். *110 : 4*. "நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார்; மனம் மாறாமலுமிருப்பார்,"

மனம் மாறாமலுமிருப்பார் என்பதற்கு அவரை எழுப்பியே தீருவார், அதில் மாறுதல் இல்லை என்றே பொருள். அப்படியே இயேசு ஆசாரியராக எழும்பியதைத் தான் எபிரேயர் 7 ல் நிரூபிக்கப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியின் முறைமை என்பதைவிட சிலுவை பலியினாலும், விசுவாசத்தி னாலும் நீதி என இயேசு ஸ்தாபித்த முறைமையின்படி பரிசுத்த ஆவியா னவர் சபையை நடத்துகிறார் என்பதே உண்மை. இயேசு நிறுவிய புதிய முறைமை ஆவிக்குரியதாயிருக்கிறது. ஆரோனின் முறைமையோ எழுத்துக்குரியது.

## அதிகாரம் 41

| | 1. நியாயப்பிரமாணமும் | கிருபைப் பிரமாணமும் |
|---|---|---|
| 1. | பழைய ஏற்பாடு 2 கொரி. 3 : 14 | புதிய ஏற்பாடு 3 : 6 |
| 2. | முதலாம் உடன்படிக்கை எபி. 8 : 7, 9 : 1 | இரண்டாம் உடன்படிக்கை எபி. 8 : 7, 10 : 1-9 |
| 3. | பழைய உடன்படிக்கை எபி. 8 : 7 | புதிய உடன்படிக்கை எபி. 8 : 7 |
| 4. | இஸ்ரவேலோடும் யூதாவோடும் செய்த உடன்படிக்கை எபி. 8 : 8 | சர்வலோகத்தோடும் செய்த உடன் படிக்கை 1 யோவான் 2 : 2 |
| 5. | மோசே மூலம் வந்தது யோவான் 1 : 17 | கிறிஸ்து மூலம் வந்தது எபி.. 8 : 6, 9 : 15 |
| 6. | மோசேயின் பிரமாணம் அப். 13 : 39 | கிறிஸ்துவின் பிரமாணம் கலா. 6 : 2 |
| 7. | மோசே மத்தியஸ்தர் | இயேசு மத்தியஸ்தர் எபி. 8 : 6 |
| 8. | மோசே நியாயப்பிரமாணத்தின் துவக்கம் | கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவு ரோமர் 10 : 4 |
| 9. | கிறிஸ்துவினால் முடிக்கப்பட்டது ரோமர் 10 : 4 | கிறிஸ்து துவக்கம் எபிரேயர் 8 : 6, 10 : 9 |
| 10. | மனிதரான மோசே தவிர தெய்வீக மத்தியஸ்தர் இல்லை | இயேசுவும், பரிசுத்த ஆவியும் பரிந்து பேசுகின்றனர் ரோமர் 8 : 26, 34 |
| 11. | தூதன் மூலம் கொடுக்கப்பட்டது கலா. 3 : 19 | பரிசுத்த ஆவியால் கொடுக்கப்பட்டது எபி. 10 : 15-18 |
| 12. | சீனாய் மலையில் துவக்கியது | கல்வாரி மலையில் துவக்கியது |
| 13. | முந்தினதும் நாள்பட்டதும் எபி. 8 : 13 | புதிதும் ஜீவனுள்ளதுமான வழி எபி. 10 : 19-20 |
| 14. | நிறைவேறி முடிந்தது மத். 5 : 17-18 | நிறைவேறிக்கொண்டிருக்கிறது |
| 15. | சீர்திருத்தல் உண்டாகும் வரை (சிலுவைப்பலி வரை) கொடுக்கப் பட்டது | பூமியில் தேவராஜ்யம் ஸ்தாபிக்கும் வரை |
| 16. | கற்பலகையில் எழுதப்பட்டது 2 கொரி. 3 : 3 | இருதயங்களில் எழுதப்பட்டது |
| 17. | பலவீனமுள்ளது எபி. 7 : 18, 25 | பலமுள்ளது அப். 1 : 8 |
| 18. | எழுத்திற்குரியது 2 கொரி. 3 : 6 | ஆவிக்குரியது |
| 19. | விசுவாசத்திற்குரியதல்ல கலா. 3 : 12 | விசுவாசப்பிரமாணம் ரோமர். 3 : 27 |
| 20. | அடிமைத்தனம் கலா. 4 : 24 | ஆவியின் விடுதலை 2 கொரி. 3 : 17 |
| 21. | பாவத்தை நினைவூட்டும் எபி. 10 : 3 | பாவத்தை மறக்கும் எபி. 8 : 12, 10 : 17 |
| 22. | சுதந்திரம் இல்லை ரோமர் 4 : 13 | நித்திய சுதந்திரம் உண்டு எபி. 9 : 15 |
| 23. | பாவ நிவர்த்தியை முடிவுபெறச் செய்யவில்லை எபி. 10 : 4 | முற்றுமுடிய மீட்கிறது கலா. 3 : 13, எபி. 9 : 12-15 |
| 24. | நீதிமானாக முடியாதிருந்தது கலா. 2 : 16 | நீதிமானாக முடிகிறது அப். 13:39 |
| 25. | பாவப்பிரமாணம் ரோமர் 7 : 23, 8 : 2 | நீதிப்பிரமாணம் ரோமர் 9 : 31, |
| 26. | எழுத்து கொல்லும் 2 கொரி. 3 : 6 | ஆவி உயிர்ப்பிக்கிறது |

| | |
|---|---|
| 27. பாவங்களை உணர்த்தும் மனச் சாட்சி நீங்கவில்லை | பாவத்தை முற்றிலும் நீக்கும் 1 யோவான் 1 : 7 |
| 28. மனசாட்சியை பூரணப்படுத்தாது எபி. 9 : 9 | 28. மனசாட்சியை பூரணப்படுத்தும் எபி. 7 : 19 |
| 29. வரப்போகிற நன்மைகளின் நிழல் | நன்மைகளின் சாயல் |
| 30. நியாயப்பிரமாணத்தின்படி செய்தால் நீதி. ரோமர் 2 : 13 | 30. விசுவாசத்தினாலே நீதி ரோமர் 5 : 1 |
| 31. கோபாக்கினையை உண்டாக்கும் ரோமர் 4 : 15 | கோபாக்கினையிலிருந்து இரட்சிக்கும் ரோமர் 5 : 9 |
| 32. இரக்கமில்லாதது எபி. 10 : 28 | முற்றிலும் கிருபை எபி. 8 : 12 |
| 33. கிரியை பிரமாணம் ரோமர் 3 : 26-31 | கிருபை பிரமாணம் யோவான் 1 : 17 |
| 34. உயிரைக் கொடுக்காது கலா. 3 : 21 | ஜீவனைத் தருகிறது யோவான். 6 : 63-68 |
| 35. சாபத்துக்குட்படுத்துகிறது கலா. 3 : 10 | சாபத்திலிருந்து விடுதலை கலா. 3 : 13 |
| 36. பூமிக்குரிய சாபங்களும் உண்டு உபா. 28 : 15-63 | சாபம் ஒழிந்தது கலா. 3 : 13 |
| 37. பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் மிகுதி உபா. 28 : 1-14 | ஆவிக்குரிய ஆசீர்வாதம் மிகுதி எபே. 1 : 3 |
| 38. அடிமைத்தன நுகம் கலா. 5 : 1 | சுயாதீனப்பிரமாணம் யாக். 1 : 25 |
| 39. பயனற்றது எபி. 7 : 18 | அதிக நன்மையானது எபி. 7 : 19 |
| 40. பிழை உள்ளது 8 : 7 | பிழை அற்றது யாக். 1 : 25, எபே.5 : 26 |
| 41. இனிவரும் நன்மைகளின் நிழல் | நன்மைகளின் பொருள் எபி. 10 : 1 |
| 42. கிரியையினாலே ரோமர் 11 : 6 | கிருபையினாலே எபே. 2 : 8 |

| **2. ஆசரிப்புக்கூடாரம்** | **தேவசபை** |
|---|---|
| 1. மனுஷரால் ஸ்தாபிக்கப்பட்டது எபி. 8 : 2 | கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்டது |
| 2. கைகளால் ஸ்தாபிக்கப்பட்டது எபி. 9 : 24 | கைகளால் செய்யப்படாதது 2 கொரி. 5 : 1 |
| 3. முதலாம் உடன்படிக்கையின் கூடாரம் | இரண்டாம் உடன்படிக்கை எபி. 8 : 7 |
| 4. மனிதர் ஆசாரியராயினர் | இயேசுவே ஆசாரியர் எபி. 3 : 1 |
| 5. ஆரோனின் முறைமை எபி. 7 : 11 | மெல்கிசேதேக்கின் முறைமை 5 : 5, 6 |
| 6. லேவி கோத்திரத்தான் 7 : 11 | யூதா கோத்திரம் எபி. 7 : 14 |
| 7. பெலவீன மனிதன் ஆசாரியன் | பூரணரான குமாரன் 7 : 26 |
| 8. மனிதன் மூலமாக | மனிதனாலுமல்ல,மூலமாயுமல்ல கலா.1:1 |
| 9. ஆசாரியன் தற்காலிகமானவன் எபி. 7 : 23, 24. | நித்திய ஆசாரியன் எபி. 7 : 17 |
| 10. அநேக ஆசாரியர்கள் எபி. 7 : 23 | ஒரே ஆசாரியர் எபி. 7 : 24- 28 |
| 11. பிரகாசம் மூடப்பட்டது 2 கொரி. 3 : 13 | பிரகாசம் வெளிப்பட்டது 2 கொரி. 3 : 18 |

| | |
|---|---|
| 12. ஒழிந்து போகும் மகிமை 2 கொரி. 3 : 8 | நிலையான மகிமை 2 கொரி. 3 : 18 |
| 13. முகத்தில் மட்டும் மகிமை 2 கொரி. 3 : 7 | முற்றிலும் பிரகாசம் வெளி. 1 : 13-18 |
| 14. ஆணையில்லாமல் ஆசாரியர் | ஆணையின்படி எபி. 7 : 20, 21 |
| 15. மரணத்தினால் நிலைத்திருக்க முடியாத ஆசாரியத்துவம் எபி. 7 : 23, 24 | என்றைக்கும் நிலைத்திருக்கும் ஆசாரியத்துவம் |
| 16. ஆசாரியனுக்கு ஆசாரியப்பதவி மட்டுமே உள்ளது | ஆசாரியத்துவமும், ராஜரீகமும் உள்ளது எபி.. 7 : 2 |
| 17. நிழலான கூடாரம் எபி. 8 : 5 | மெய்யான கூடாரம் எபி. 8 : 2 |
| 18. கூடாரத்தில் 3 பகுதிகள் உண்டு | பகுதிகள் இல்லை. ஒரே சபை |
| 19. மகா பரிசுத்தஸ்தலத்தில் சாதாரண மக்களுக்கும், ஆசாரியர்களுக்கும் கூட பிரவேசம் இல்லை | கிருபாசனம் வரையில் எல்லாரும் எப்போதும் செல்லலாம் எபி. 4 : 16 |
| 20. ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் எபி. 9 : 1 | பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படி ஆராதனை |
| 21. அநேக பலிகள் எபி. 10 : 11 | ஒரே பலி எபி. 10 : 12 |
| 22. மிருகபலி எபி. 9 : 12 | தேவாட்டுக்குட்டியின் பலி யோவான் 1 : 36 |
| 23. ஆசாரியனுடைய பாவங்களுக்காகவும் பலி செலுத்த வேண்டும் எபி. 7 : 27 | இயேசுவுக்கு ஒரு பலி தேவையில்லை எபி. 7 : 27. |
| 24. பாவ நிவாரணபலிக்கு செலவும் பாடுகளும் உண்டு எபி. 5 : 1, 9 : 9 | செலவும் இல்லை. பாடுகளும் இல்லை. இலவசம் |
| 25. வருடத்திற்கொருமுறை எல்லாருக்காகவும் பாவநிவர்த்தி செய்ய வேண்டும் எபி. 10 : 13 | என்றென்றைக்குமாக ஒரே தரம் எபி. 10 : 14 |
| 26. ஆசாரியர்கள் மரிக்கிறார்கள் | மரித்து உயிர்த்தெழுந்தவர் |
| 27. மரணத்திற்கேதுவான ஊழியம் 2 கொரி. 3 : 7 | ஜீவனுக்கேதுவானது |
| 28. மாம்சத்திற்குரியது எபி. 9 : 9, 10 | ஆவிக்குரியது |
| 29. ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் 2 கொரி. 3 : 9 | நீதியைக் கொடுக்கும் ஊழியம் |
| 30. நெருங்கினால் சாவு எண். 18 : 22, 32 | தூரமாய் போனால் சாவு மத். 27 : 1-7 |
| 31. மாம்சத்தில் விருத்தசேதனம் ரோமர் 4 : 9-25 | இருதயத்தில் விருத்தசேதனம் |
| 32. ஓய்வுநாள் ஆசரிப்பு நித்திய கட்டளை யாத். 31 : 14-17 | ஓய்வுநாள் ஆசரிப்பு கட்டாயமில்லை |
| 33. பண்டிகைகள் உண்டு | இல்லை |
| 34. பண்டிகைக்கு விசேட பலிகள் உண்டு | இல்லை |
| 35. அளவுகளின்படியே ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட வேண்டும் | சபையின் ஆராதனை ஸ்தலத்துக்கு அளவுகள் குறிக்கப்படவில்லை |
| 36. ஆசாரியர்களுக்கு குறிக்கப்பட்ட வஸ்திரம் உண்டு | வஸ்திரத்தின் அளவுகள் குறிக்கப்படவில்லை |
| 37. ஆசாரியர்களுக்குத் தைலத்தினால் அபிஷேகம் | பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் |
| 38. கண்ட இடமெல்லாம் பலியிடக் கூடாது. உபா. 12 : 13 ஆசரிப்புக் கூடாரத்தில் மட்டுமே பலியிடலாம் | இரண்டோ மூன்றோ பேர் எங்கேயும் கூடலாம் மத். 18 : 20 |

(3) சாகாதபடிக்கு

1. ஆராதனை செய்ய பரிசுத்த ஸ்தலத்தில் செல்கையில் சாகாதபடிக்கு மணியின் சத்தம் கேட்க வேண்டும். யாத். *28 : 35.*
2. தகனபலியைச் செலுத்த ஆரோனும் குமாரரும் பலிபீடத்தண்டையில் சேரும்போது சாகாதபடிக்கு கைகால்களைக் கழுவ வேண்டும். யாத். *30 : 20,21.*
3. தங்கள் பிரதிஷ்டையைத் தொடர்ந்து ஆசாரியர்கள் சாகாதபடிக்கு ஏழுநாள் ஆசரிப்புக் கூடாரத்தில் தங்கியிருக்க வேண்டும். லேவி. *8 : 33-35.*
4. இஸ்ரவேல் புத்திரர் சாகாதபடிக்கு தீட்டு நீங்கும் வரை தீட்டான வர்களை விலக்கி வைக்க வேண்டும் லேவி. *15 : 31.*
5. ஆசாரியர்கள் பரிசுத்தமானதை மூடிக்கட்டும்போது சாகாதபடிக்கு பார்க்கும்படிக்கு ஒருவரும் உள்ளே வரலாகாது. எண். *4 : 20.*
6. இஸ்ரவேல் புத்திரர் சாகாதபடிக்கு துளிர்த்த கோலை சாட்சிப் பெட்டிக்கு முன்னே வை. எண். *17 : 10.*
7. ஆரோன் சாகாதபடிக்கு கிருபாசனத்துக்கு முன்பாக எல்லாவேளையிலும் வரவேண்டாம். லேவி. *16:2.*
8. தூபம் காட்டும்போது தூப மேகமானது கிருபாசனத்தை மூடும் அளவிற்கு மிகுதியாகஇருக்கவேண்டும். சாகாதபடிக்கு அது குறையக்கூடாது. லேவி.*16 : 13.*
9. ஓய்வுநாளில் வேலை செய்கிறவன் சாக வேண்டும். யாத். *31 : 15.*

இவ்வாறு ஆசரிப்புக் கூடாரத்துப் பணிவிடை சாவு பயம் நீங்கின தாயிருக்க வில்லை. பிரதான ஆசாரியன் முதற்கொண்டு சாதாரண லேவியன் வரை தங்கள் அரும்பெரும் பணிகளில் குறை ஏற்பட்டு சாவு வந்துவிடுமோ என்ற அச்சத்துடனேயே சேவை செய்தனர். எனவே, பவுல் அதை "மரணத்துக்கேதுவான ஊழியம்" என்றார். 2 கொரி. *3 : 7.*

புதிய ஏற்பாட்டு ஊழியமோவென்றால், ஜீவனுக்கேதுவான ஊழியமாகும்.

ஜீவன் சம்பந்தமாக அது பற்றிய விஷயங்கள் அதை நிரூபிக்கிறது. ஜீவ தண்ணீர் யோவான் *4 : 10,* வெளி. *22 : 17*. ஜீவ மார்க்கம் எபி. *10 : 10, 19,* ஜீவ வசனம் யோவான் *6 : 65.* ஜீவ வார்த்தை அப். *5 : 20.* ஜீவ புஸ்தகம் பிலி. *4 : 3,* வெளி. *21 : 27,* ஜீவ விருட்சம் வெளி. *2 : 7.* ஜீவனுக்குப் போகிற வாசல் மத். *7 : 14.* ஜீவனுக்குள் பிரவேசித்தல் மாற்கு *9 : 43.* ஜீவ அப்பம் யோவான் *6 : 48.* ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதல் அப். *11 : 18,* புதிதான ஜீவன் ரோமர் *6 : 4,* ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் ரோமர் *8 : 2*. நமது ஜீவனான கிறிஸ்து. கொலோ. *3 : 4*. புதிதும் ஜீவனுமான மார்க்கம் எபி. *10 : 19*. ஜீவனுள்ள நம்பிக்கை *1* பேதுரு *1 : 4,* ஜீவனுள்ள கல் *1* பேதுரு *2 : 4.*

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திரத்தில் இருந்த *40* ஆண்டுகள் இயற்கையான வியாதிகளால் மரிக்கவில்லை. ஆபத்துக்களால் மரிக்க வில்லை. அவர்களுடைய கால் வீங்கவோ, வஸ்திரம் பழையதாகவோ

இல்லை. உபா. *8 : 4*. அவர்களுக்கு ஏற்பட்ட மரணங்கள் எல்லாம் மீறுதலுக்கு வந்த தண்டனைகளாகும். எகிப்திலிருந்து புறப்பட்ட *603550* (எண். *1 : 46*) பேரில் காலேப், யோசுவா ஆகிய இருவர் தவிர மற்ற எல்லாருமே வழியிலே மாண்டு போனார்கள். "அவர்களுடைய சவங்கள் வனாந்திரத்தில் விழுந்து போயிற்றே." எபி. *3 : 17*.

ஆனால் ஜீவனுக்கேதுவான ஊழியத்தினால் மீட்கப்பட்ட மக்கள் ஜெயம் பெற்று தேவ சிங்காசனத்தண்டையில் திரள் திரளாக நிற்பதை வெளி. *7 : 9* ல் காணலாம். "இவைகளுக்குப் பின்பு நான் பார்த்தபோது, இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளை தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டி யானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்." மகா உபத்திரவ காலத்தின் முற்பகுதியில் மீட்கப்படுகிறவர்கள் இத்தனையானால் கிருபையின் யுகம் முழுவதிலும் மீட்கப்படும் மக்களின் தொகை எம்மாத்திரமாக இருக்கும்? அதுதான் சாவுக்கேதுவான ஊழியத்திற்கும், ஜீவனுக்கேதுவான ஊழியத் திற்கும் இடையே உள்ள வித்தியாசம். "இவைகளுக்குப் பின்பு பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன்." வெளி. *19 : 1*.

## அதிகாரம் 42

# மோசே ஆரோன் வம்சாவழி



இஸ்ரவேலில் லேவி கோத்திரமே ஆசாரிய கோத்திரம். லேவியின் மக்கள் மூவர். எண். *3:17*. கெர்சோன், கோகாத், மெராரி.

இவர்களுள் கோகாத் வம்சமே மிக முக்கியமானது. ஆசரிப்புக் கூடாரத்தின் மிக முக்கியமானதும், மகா பரிசுத்தமானவைகளுக்குரியது மாகும் இவர்களது பணி. எண். *4 : 4*. எனவே கோகாத் வம்சம் அழிந்து போகாதபடி பாருங்கள் என்றார். எண். *4 : 18*. சாட்சிப்பெட்டி, மேஜை, குத்து விளக்கு, பொற்பீடம், பரிசுத்த ஸ்தலத்தின் பணிமுட்டுகள், பலி பீடம் முதலிய யாவையும் சுமக்கும் வேலை அவர்களுடையதே.

அத்தனை முக்கியமான கோகாத் வம்சத்தில் அம்ராம் பிறந்தான். எண். *3 : 19*. அம்ராம் யோகேபேத்தை விவாகம் பண்ணினான். இவர்களுக்கு மோசே, ஆரோன் என்பவர்கள் பிறந்தனர். எனவே, மகா பரிசுத்த மானவைகளுக்குரிய வம்சத்தில் ஒருவனை இஸ்ரவேலின் தலைவனாகவும், ஒருவனை பிரதான ஆசாரியனாகவும் தெரிந்து கொண்டார். எண். *26 : 58-59*.

பார்வோனுக்கு முன்பாக நிற்கும்போது ஆரோனுக்கு வயது *83*. மோசேக்கு வயது *80*. இளையவனாகிய மோசேயை தலைவனாக வைத்தார். மூத்தவனாகிய ஆரோனை இளையவனாகிய மோசே ஸ்நானம் பண்ணுவித்து, வஸ்திரங்களை உடுத்துவித்து அபிஷேகமும் பண்ணினார். லேவி. *8 : 6-12*. இளையவனாகிய மோசேயை மூத்தவனாகிய ஆரோன் ஒருமுறை என் ஆண்டவனே என அழைத்தார். எண். *12 : 11*. எனவே, இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதிருங்கள். மத். *18 : 10*. தேவனுடைய அழைப்பும் தெரிந்து கொள்ளுதலும் அதிசயமானவை.

இளையவனாகிய காயீனின் பலி அங்கீகாரம் பெற்றது. இளைய யாக்கோபைத் தெரிந்து கொண்டு மூத்த ஏசாவை வெறுத்தார். இளைய யோசேப்பின் பாதத்தில் மூத்தவர்கள் பணிந்தனர் என்பதையும் நினைத்துக் கொள்ளுங்கள். அரசனான தாவீது இளையவனே.

அதே வேளையில் தேவன் மூத்தவர்களையும் தெரிந்து கொண்டார். ஆபிரகாம் குடும்பத்தில் மூத்தவராவார். ஆதி. *11 : 26*. முதற்பேறான ஆண்மக்கள் கர்த்தருக்குரியவர்கள் என்ற பிரமாணத்தையும் கொடுத்தார். மூத்தவனாகிய ஆரோனை பிரதான ஆசாரியனாக்கினார். சாமுவேல் தீர்க்கதரிசி அன்னாளுக்கு மூத்த மகனாவார். *1* சாமு. *1 : 20, 2 : 21*. இயேசு கிறிஸ்து தாமே மரியாளுக்கு முதற்பேறாயிருந்தார். மத். *1 : 25*. அவர் சபையிலும் அநேக சகோதரருக்குள் முதற்பேறானவரே. ரோமர் *8 : 28*. எனவே, தேவன் தமது சித்தத்தின்படி மூத்தவனையும் தெரிந்து கொள்கிறார். உலக

வழக்கத்திற்கு மாறாக இளையவனையும் தள்ளாமல் தெரிந்து கொள்ளுகிறார்.

மோசேயை இம்மாபெரும் பொறுப்பில் அமர்த்த தேவன் அழைத்த போது தட்டிக்கழிக்கப் பார்த்தார். அவர் தேவன் முன் வைத்த காரணங் களாவன: *(1)* நான் வாக்கு வல்லவன் அல்ல. *(2)* திக்குவாயும், மந்தநாவும் உள்ளவன். *(3)* வேறு யாரையாகிலும் அனுப்பும். மோசே சாடி விழுந்து ஊழியத்தை ஏற்கவில்லை. நன்றாக நிதானித்து உறுதி பெற்ற பின்னரே பொறுப்பேற்றார். பின்னர் அவர் ஒருபோதும் பின் வாங்கவில்லை. தேவன் பெலவீன பாண்டங்களையே தெரிந்தெடுக்கிறார். மோசேக்கு உதவியாக அண்ணனாகிய ஆரோனைக் கொடுத்தார். இருவருமாக இஸ்ரவேலரை அழைத்துக்கொண்டு போயினர். ஆரோன் ஆசாரியரானார்.

மோசேயை தேவன் அழைத்தபோது வாக்கிலும், செய்கையிலும் வல்லவராக இருந்தார். *40* வருடத்து அரண்மனைக் கல்வியில் எகிப்தின் சாஸ்திரங்களைக் கசடறக் கற்றிருந்தார். அப். *7 : 22*. எனினும் இந்த நாவலர் தான் தேவனிடம் தாம் வல்லவன் அல்ல என்றார். கல்விமான் களே, தேவ சபையில் உங்களைத் தாழ்த்துங்கள். எண். *12 : 3, 7*.

நதியில் விடப்பட்டவர்களுள் மோசே ஒருவரே காப்பாற்றப்பட்டார். தேவன் அவரைக் காப்பாற்றி பெரிய இடத்தில் வளரச்செய்தார். தேவன் தமது ஊழியத்திற்கு ஒருவரைத் தெரிந்து கொண்டால் அவரைக் காப்பாற்றி போஷித்து தமது வேலையை அவரைக்கொண்டே நிறைவேற்றுகிறார்.

மோசே சில சூழ்நிலைகளில் மனம் பதறிப் பேசினார். விசுவாசத்தில் பெலவீனமடைந்தார். கானானில் பிரவேசிக்காமற் போனார். சங். *106 : 32-33;* எண். *20 : 12*. தேவ ஊழியர்களே எச்சரிக்கை.

மோசேயின் மரணமும் தன்னிகரற்றது. *120* ம் வயதிலும் மலை உச்சியில் நடந்து ஏற பெலனிருந்த் இந்தக் கிழவன் மூதறிஞனும், கண் பார்வை குன்றாதவனுமாயிருந்தார். உபா. *34 : 1, 7*. தேவன் தம்மைத் தாழ்த்திக் கொண்டு ஒரு மனிதனின் பிரேதத்தை அடக்கம் பண்ணின அபூர்வ சரித்திரம் படைத்தார் மோசே. பிறக்கும் போதே தாய்ப்பால் ஊட்டியதற்கு தன் தாய்க்கு அரசனின் கஜானாவிலிருந்து சம்பளம் தருவித்த மோசே தேவனுடைய அற்புத மனிதனானார். இத்தனை மகிமை யாக உயர்த்தப்பட்ட மோசே கானானை அடையமுடியவில்லை என்பது அனைவரையும் மயிர்சிலிர்க்கத் திகைத்துத் தரித்து நின்று சிந்திக்கச் செய்கிறது.

தேவன் இதே பிரமாணத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். தாவீது எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்தபோதிலும், அவன் ஆலயத்தைக் கட்ட தேவன் அனுமதிக்கவில்லை. நமது வீரபராக்கிரமங்கள் சம்பூரண மான தேவப்பிரியத்தை இழக்கச்செய்யாதபடி பாருங்கள்.

அண்ணனையும், தம்பியையும் சேர்த்து ஒரு வேலைக்கு அழைத்ததின் தேவ இரகசியம் பெரியதாகும். இரத்த பாசமுள்ள குடும்ப உறவினர்கள் பலர் இவ்வாறு ஆசீர்வாதமான ஊழியங்களை நிறைவேற்றி வருகின்றனர். மாம்ச உறவும், ஆவியின் உறவும் ஒன்றாய் இணைந்தால் மிக நேர்த்தியாக ஊழியங்களை செய்யலாம் என்பதற்கு மோசேயும் ஆரோனும் எடுத்துக்காட்டு.

ஆனால் மாம்ச உறவு இல்லாத பவுலும் தீமோத்தேயுவும் ஆவிக்குள் இணைந்தபோது மகிமையான ஊழியம் நிறைவேறியது. எனவே, தேவன் இரண்டு விதங்களிலும் மக்களை உபயோகிக்கின்றார். ஏனென்றால் "எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே." *1* கொரி. *12 : 6.*

மோசே நிர்வாகித்த பெரும் பதவிகளாவன:

1. ஆசாரியன். அவர் லேவியனும் பலி செலுத்துகிற ஆசாரியனுமாயிருந்தார். யாத். *3 : 1-3;* லேவி. *8 : 15-17.*
2. தீர்க்கதரிசி உபா. *34 : 12.*
3. ராஜாவாயிருந்தார் உபா. *33 : 5.*

இயேசு கிறிஸ்துவும் இந்த மூன்று பதவிகளுக்குரியவரே. *(1)* ஆசாரியன் எபி. *7 : 20-24. (2)* தீர்க்கதரிசி யோவான் *4 : 19;* வெளி. *19 : 10. (3)* இராஜா வெளி. *19 : 16.* இவ்வாறு மோசே இயேசுவுக்கு முன்னடையாளமாயிருந்தார்.

## அதிகாரம் - 43

# I. பாளயத்தின் அமைப்பும் பயணமும்

இத்தனை மகிமையும், அலங்காரமுமான கூடாரத்தை அமைத்த தேவன், இஸ்ரவேலரைத் தங்கள் மனம்போல பாளயம் போடவோ, பயணம் செய்யவோ விடவில்லை. அவைகளையும் ஒழுங்குபடுத்தினார். **வாழ்க்கை மற்றும் ஆராதனை** ஒழுங்குகளுக்குக், கொடுத்த சட்டங்களாகும் நியாயப் பிரமாணம். சட்டம் ஒழுங்கு (Law and Order) என அரசாங்க இலாகாப் பிரிவும் உண்டு.

நமது தேவனுடைய ஒழுங்கின் சிறப்புகளை சிருஷ்டிப்பிலும் காணலாம். ஒரு மரத்தின் இலை ஒரே மாதிரியாக அடுக்கி வைக்கப் பட்டுள்ளது. தென்னை, பனை, புளி எல்லாம் அவ்வாறே உள்ளது. மிருகம், மனிதன் முதலிய ஜீவனுள்ளவைகளின் உறுப்புகளும் உபயோகத்துக் கேற்றபடியும் ஒழுங்காகவும் உள்ளது. மரம், செடி, கொடிகளின் கனியும் அப்படியே. இலையும், பூவும், காயும், உயிரினங்களின் உறுப்புகளும் தலை முறைதோறும் மாறி வந்திருந்தால் ஒரே குழப்பமாகிவிடும். எல்லாம் தேவ ஒழுங்காகும்.

இஸ்ரவேலிலும் அவரவர் இஷ்டம் போல பாளயம் போட அனுமதித் தால் நெரிசலும், தான் முந்தி, நல்ல இடம் எனக்கு, முன் வரிசை எனக்கு முதலிய வழக்குகளும் எழும்பியிருக்கும். ஒவ்வொரு கோத்திரமும் எங்கெங்கே பாளயமிறங்க வேண்டுமென்பதை தேவன் முன் குறித்து விட்ட தால் இடம் பிடிப்பதற்கு என்று ஒரு சண்டை அங்கே இல்லை. அவரவருக் குரிய இடம் அங்கே உறுதியாய் கிடைக்கும். “உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப்போகிறேன்” என்றார். யோவான் *14 : 1-3.* அந்த இடம் நமக்கு உறுதியாக உண்டு என்ற

கிழக்கு

*செபுலோன்*
*இசக்கார்*
*யூதா*

லேவியர் *மோசே* *ஆரோன்*

வடக்கு நப்தலி ஆசேர் தாண்




ரூபன் சிமியோன் காத் தெற்கு

*எப்பிராயீம்*
*மனாசே*
*பென்யமீன்*

மேற்கு

வாக்குத்தத்தத்தையும் இது நினைப்பூட்டுகிறதல்லவா? தேவனுடைய ராஜ்யத்தில் நமக்கு ஒரு இடம் உள்ளது என்பது எத்தனை மகிழ்ச்சி.?

பாளயமானது ஆசரிப்புக்கூடாரத்தைச் சுற்றிலுமாக அமைக்கப் பட்டது. மையமாக ஆசரிப்புக் கூடாரம் இருப்பது வாழ்க்கையின் மையம் தேவனுக்கு உரியது; மனிதனின் மையமாகிய உள்ளம் தேவனுடையது என்று பொருள்படுகிறது. தேவ ஆராதனையும், சபையும் ஒவ்வொருவருக் கும் மையமாக அமைய வேண்டும். அதற்காகவே வாழ்வு. அதுவே முக்கியமானது.

இவ்வாறு ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றிலும் வரிசையும் கிரமமுமாக அமைக்கப்பட்ட பாளயங்களின் அழகைக் கண்டான் ஒருவன். இஸ்ர வேலரை சபிக்க வந்த அவன் பாளயத்தின் அழகைக் கண்டு பிரமை கொண்டான். அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து, "யாக்கோபே உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்" என்றான். எண். *24 : 5.* அவன் தான் பிலேயாம். அப்படியே சேனைகளின் கர்த்தருடைய வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்ப மானவைகள் என்றான் சங்கீதக்காரன். *84 : 1.* இவ்வாறு ஆலயமும் கூடாரங்களும் அமைந்த கிரமத்தைக் காண்போமா? வேதபகுதி எண். *2 : 1-31.*

இந்த அமைப்பின்படியே தான் பல பிறமதங்களின் கோவில்களும் அமைக்கப்பட்டுள்ளன. கோவிலைச் சுற்றிலும் நேர்த்தியான தெருக்களை அமைத்து கோவிலை மையமாக வைத்துள்ளனர். அவ்வாறு ஒரு கோபுர மாகிய கோவிலையும் ஒரு நகரத்தையும் கட்ட பாபேல் மக்கள் முன்னரே முயற்சித்தனர். பரலோகத்தின் தேவனோ பாஷைகளைத் தாறுமாறாக்கி அதைக் கலைத்து விட்டார். நகரத்தையும், கோபுரத்தையும் கட்டுவதை விட்டு சிதறிப்போயினர். ஆதி. *11 : 1-10.* ஏனென்றால் அவ்வித அமைப்பை முதன் முதலாவதாக தமது ஜனமாகிய இஸ்ரவேலருக்கு கொடுக்க முன் குறித்திருந்தார்.

ஆயிரமாண்டு ஆட்சி காலத்தில் தோன்றவிருக்கும் ஆலயம் மைய மாகவும், சுற்றிலும் நகரங்கள் நேர் தெருக்கள் அமைந்தவண்ணமாகவும் அமையும் என எசேக்கியல் *40-48* அதிகாரங்களில் காணலாம்.

புதிய பூமியில் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் மிக நேர்த்தியாக அமையும். அதன் தெருக்களின் நடுவில் ஜீவ மரங்கள் உண்டு. *1500* மைல் *(2400* கி. மீ.*)*நீளமும், அதே அகலமும், உயரமும் உள்ளதால் அது சதுரவடிவமுள்ளதாகும். புதிய பூமியின் தெருக்களும் ஜனவாசமும் ஒழுங்குமிக்கதாக அமையும். இயேசு ஐந்து அப்பங்களைக் கொண்டு *5000* பேரை போஷித்த போது பந்திபந்தியாக ஒழுங்காக

அமரச்செய்து போஜனம் வழங்கினார். இவை அனைத்தும் தேவன் எதை அமைத்தாலும், சிருஷ்டித்தாலும் நேரும் சீருமாகச் செய்கிறார் என்பதையே நிரூபிக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தையும், இஸ்ரவேல் பாளயத்தையும் அவ்வாறே அமைத் திருப்பது நமது கண்களைத் தெளிவிப்பதாக.

கிறிஸ்தவ வாழ்க்கையை ஒழுங்கீனமாக நடததுகிறவர்கள் எச்சரிக் கையாயிருக்கட்டும். குடும்ப வாழ்க்கை, சபை, ஊழியம் அனைத்திலும் ஒழுங்காயிருப்போமாக. வேலை செய்யாமல் ஒழுங்கற்றுத் திரிகிறவர்களை பவுல் எச்சரிக்கிறார். *2* தெச. *3 : 6-10.*

ஒரே ஒழுங்காய் நடக்கவேண்டும் பிலி. *3 : 16.*
ஒழுங்கைப் பார்த்து சந்தோஷப்படுகிறேன். கொலோ. *2 : 5.*
குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்து. தீத்து *1 : 5.*
சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்க. *1* கொரி. *14 : 40.*
இயேசுவின் சரித்திரம் ஒழுங்காய் எழுதப்பட்டது. லூக்கா *1 : 4.*

## 2. பயணத்தில் கூடாரம் - கோகாத், கெர்கோன், மெராரி

இஸ்ரேல் பாளயம் *40* நீண்ட ஆண்டுகள் பயணத்தில் இருந்ததால் ஆசரிப்புக் கூடாரம் எளிதில் பிரித்து மாற்றக் கூடியதாக இருந்தது. கூடாரத்தின் எல்லா பொருட்களையும் யார் யார் சுமக்க வேண்டுமென்பதை யும் தேவனே முன் குறித்தார். இல்லையேல் சில பெருமைக்காரர்கள் எழும்பி சில் முக்கியமானவைகளைத் தாங்கள் தாமே சுமக்கவேண்டும் என பிரச்சனைகளை எழுப்புவர். அல்லது இன்னவர் இதனை சுமக்கவிடக் கூடாது என்பர். இன்று சபைகளில் இதற்கொப்பான எத்தனையோ பிரச்சனைகள் எழுகிறது. சிலர் சபைக்கு வருவது ஆராதிப்பதற்கு அல்ல, தங்கள் திறமைகளை மற்றவர்கள் முன்னால் காண்பிக்கவே வருகின்றனர். அதற்கு வாய்ப்பு கிடைக்காவிட்டால் முகம் போகின்ற போக்கு ஒரு தனி ரகம் தான்*!* சிலர் தாங்கள் சில ஆத்துமாக்களை இரட்சித்து விட்டதாகவே கூறுவர். சிலருக்கு தங்கள் காணிக்கைகளையும் தாங்கள் ஊழியத்திற்கு பயன்படுகிற மகிமையையும் சபையில் அறிவிக்காவிட்டால் வரும் ஆத்திரம் அளவிடற்கரியதே.

இஸ்ரவேல் பாளயத்தில் தூபம் காட்ட நியமிக்கப்பட்டவர்கள் இருந்த போதிலும் அதிகாரவெறியால் உசியா ராஜாவும் மோசேயை எதிர்க்கும் ஆவி பிடித்த கோராகு கும்பலும் தூபம் காட்டினார்களே*!* "தெய்வம் அன்றே கொல்லும்" என்ற பிரமாணம் இருந்த அக்காலத்தில் இப்படி இருந்தால் "தெய்வம் நின்று கொல்லும்" என்ற பிரமாணம் இருக்கின்ற இக்காலத்தில் இந்த ஆவி எவ்வளவு அதிகமாய் வேலை செய்யும்*?*

மனிதனின் இந்த பெலவீனத்தை காயீனின் பலியிலே கண்ட தேவன் எல்லா பணிகளையும் இன்னின்னவர் தான் செய்ய வேண்டுமென வகையறுத்து விட்டார். பயணத்தில் கூடாரப்பொருட்களை சுமப்பதற்கும் கூட. அல்லேலூயா!

**கெர்சோன், கோகாத், மெராரி**

இம்மூவரும் லேவியின் புத்திரர் ஆவர். எண். *3 : 17.* ஆசரிப்புக் கூடாரத்தின் எல்லா பணிவிடைகளும் இவர்களுடைய சந்ததிகளுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது. விசேஷமாக கோகாத்தின் புத்திரருக்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட்டது. ஏனெனில் ஆசரிப்பு கூடாரத்திலே "கோகாத்தி யரின் பணிவிடை மகா பரிசுத்தமானவைகளுக்குரியது" எண். *4 : 4.* இந்த வம்சம் அழிந்துபோனால் வேறு ஒருவரைக் கொண்டு அப்பணியைச் செய்விக்க தேவன் அனுமதிக்கவில்லை. அவருடைய அழைப்பு மாறாதது. எனவே, கோகாத் புத்திரரை இஸ்ரவேலர் கண்மணியைப் போல் காத்தனர். யுத்தம் வந்தால் அவர்களுக்கு சகல பாதுகாப்பும் அளித்தனர். மகா பரிசுத்தமான ஊழியம் செய்கிறவர்களை கனம் பண்ணுங்கள். "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே." எபி. *13 : 17.* லேவியனைக் கைவிடாதபடி எச்சரிக்கையாயிரு.

**கோகாத்தின் பொறுப்புகள்** எண். *4 : 5-20.*

1. சாட்சிப் பெட்டியை மறைவின் திரைச்சீலையால் மூடி அதின்மேல் தகசுத்தோல் மூடியைப் போட்டு அதின்மேல் முற்றிலும் நீலத் துப்பட்டியை போட்டு தண்டுகளைப் பாய்ச்ச வேண்டும்.
2. மேஜையை நீலத் துப்பட்டியால் மூடி அதின் தட்டுகள், தூபகரண்டிகள், கிண்ணங்களையும், அவற்றின் மூடிகளையும் அதின் மேல் வைக்க வேண்டும். நித்திய அப்பமும் அதின் மேலிருக்கவேண்டும். இவைகள் மேல் சிவப்புத் துப்பட்டியை விரித்து, பின்பு தகசுத்தோல் மூடியால் மூடி தண்டுகளைப் பாய்ச்ச வேண்டும்.
3. குத்துவிளக்கு அதன் அகல்கள், கத்தரி, சாம்பல் பாத்திரம், எண்ணெய்பாத்திரம் ஆகியவற்றை இளநீல துப்பட்டியாலும் அதின்மேல் தகசுத் தோலினாலும் மூடிக்கட்டி ஒரு தண்டிலே மாட்டி வைக்க வேண்டும்.
4. பொன் தூபபீடத்தின் மேல் இளநீல துப்பட்டியையும் அதின் மேல் தகசுத் தோல் மூடியையும் போட்டு தண்டுகளைப் பாய்ச்ச வேண்டும்.

5. பரிசுத்த ஸ்தலத்தில் வழங்கும் சகல தட்டு முட்டுகளையும் இளநீல துப்பட்டி, தகசுத்தோல் ஆகியவற்றால் மூடி ஒரு தண்டின் மேல் கட்ட வேண்டும்.

6. பலிபீடத்தைச் சாம்பலற விளக்கி இரத்தாம்பரத் துப்பட்டியை அதின் மேல் விரித்து அதின் பணிமுட்டுகளாகிய கலசங்கள், முள்துறடுகள், சாம்பல் கரண்டிகள், கலசங்கள் முதலிய யாவையும் அதின்மேல் வைத்து தகசுத் தோல் மூடியை விரித்து தண்டுகளைப் பாய்ச்ச வேண்டும்.

7. இவைகளை எல்லாம் இறக்கி, விளக்கி மூடி கட்டும் பொறுப்பு ஆரோனையும் அவன் குமாரரையும் சார்ந்தது. எண். *4 : 15.* வேறு எவரும், லேவியரும் கோகாத்தியரும் கூட இதைச் செய்யலாகாது.

8. கட்டி முடித்த பின்னர் அவைகளைச் சுமந்து கொண்டு போக கோகாத்தியர் வரக்கடவர். *4 : 15.*

9. கோகாத்தியர் மகா பரிசுத்தமான இவைகளைச் சுமக்கலாமே தவிர உள்ளே இருக்கிறவைகளைத் தொட உரிமையில்லை. தொட்டால் சாவார்கள். *4 : 15.* அவைகளை மூடிகட்டும்போது பார்க்கிறதற்கு உள்ளே பிரவேசிக்கவுங்கூடாது. *4 : 20.*

10. இவர்களுக்கு வண்டிகளோ, மாடுகளோ கொடுக்கப்படவில்லை. தோள்மேல் சுமப்பதே அவர்கள் பணி. எண். *7 : 9.*

11. இப்பணிகளைக் கண்காணிப்பதோடு, விளக்குக்கு எண்ணெய், சுகந்த தூப வர்க்கம், அனுதின போஜனபலி, அபிஷேக தைலம், வாச ஸ்தலமம் முழுவதையும் அதிலுள்ள யாவையும், பணிமுட்டுகளையும் விசாரிக்கும் பொறுப்பு ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரைச் சார்ந்ததாகும். *4 : 16.*

12. இஸ்ரவேலின் அதிகாரபூர்வமான தீர்க்கதரிசியாகிய சாமுவேல் கோகாத் வம்சத்தைச் சார்ந்தவராவார். அவரது குமாரனாகிய யோவேலின் குமாரன் ஏமான் பிரபல பாடகனாயிருந்தான்.

13. இஸ்ரவேலின் தலைவனாகிய மோசே கோகாத்தின் வம்சத்தில் பிறந்தார். லேவியின் மகன் கோகாத்-அம்ராம்-மோசே. எண். *26 : 58-59.* இதுவும் கோகாத் வம்சத்தின் மகிமையை உயர்த்தியது. ஆசாரியனாகிய ஆரோனும் கோகாத்தியனே. தேவன் இஸ்ரேலாகிய பரிசுத்த ஜாதியிலும் பரிசுத்த கோத்திரத்தை *(லேவி)* தெரிந்து கொண்டார். அதிலும் பரிசுத்த வம்சமாகிய கோகாத் வம்சத்தையும் அதிலும் சிறந்த திடமும் தாழ்மையுமுள்ள மோசேயையும் தெரிந்து கொண்டார்.

**கெர்சோனின் பொறுப்புகள்**. எண். *4 : 22-28.*

1. வாசஸ்தலத்துக்கும் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் உரிய தொங்குதிரைகள் கூடாரத்தின் மேல் மூடிகள் தகசுத்தோல் மூடி கூடார வாசல் மறைவு, பிராகாரத் தொங்குதிரைகள் பிராகார வாசல் தொங்குதிரை, அவைகளின் கயிறுகள் மற்றும் அவைகளுக்குரிய எல்லா கருவிகளையும் சுமத்தல்
2. இப்பணிகளை ஆரோனும், அவன் குமாரரும் சொல்லுகிறபடி கெர்சோனியர் செய்ய வேண்டும்.
3. கெர்சோன் புத்திரரின் பணிகளைக் கண்காணிக்கும் பொறுப்பு ஆரோனின் குமாரனாகிய இத்தாமாரைச் சார்ந்ததாகும். *4 : 28.*
4. இவர்கள் சுமக்க வேண்டிய சுமைகளின் பளுவுக்கேற்ப இவர்களுக்கு இரண்டு கூண்டு வண்டிகளும் *4* மாடுகளும் கொடுக்கப்பட்டது. எண்.*7 : 6-7.*
5. பிரபல பாடகனும், சங்கீதக்காரனுமாகிய ஆசாப் என்பவன் ஏமானின் வலது பக்கத்தில் நிற்பான். *1* நாளா. *6 : 39-43.* இவன் கெர்சோனின் சந்ததியாவான்.

**மெராரியின் பொறுப்புகள்** எண். *4:29.*

1. வாசஸ்தலத்தின் பலகைகள் *(48)* தாழ்ப்பாள்கள், தூண்கள், பாதங்கள்.
2. பிராகாரத் தூண்கள் *(60)* அவைகளின் பாதங்கள், முளைகள், கயிறுகள் மற்றும் இவைகளுக்கடுத்த எல்லாப் பொருட்களும்.
3. இவர்களுடைய பணியும், பளுவும் அதிகமானதால் *4* கூண்டு வண்டிகளும் *8* மாடுகளும் கொடுக்கப்பட்டது. *7 : 8.*
4. ஆரோனின் குமாரன் இத்தாமார் தான் இதன் விசாரிப்புக்காரன்.
5. மெராரியின் புத்திரர்கள் பாடல் குழு தலைவனாகிய ஏமானின் இடது பக்கத்திலே நிற்பார்கள். *1* நாளா. *6 : 44-48.* யோசபாத் அரசன் யுத்தத்தில் ஜெயம் பெற லேவியரை மட்டுமே பாடவும், துதிக்கவும் வைத்தார். *2* நாளா. *20 : 19.* இன்றைய சபைகளில் குலமும், கோத்திரமும் பார்க்க வேண்டியதில்லை என்றாலும் பரிசுத்த ஆவியின் நிறைவையும், நற்சாட்சி யையுமாவது பார்த்து நிறுத்த வேண்டாமா? உதவிக்காரனின் தகுதிகளை *1* தீமோ. *3 : 7-12.* ல் படித்துப் பாருங்கள். ''அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும். அந்தப்படியே, உதவிக்காரரும், இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும்

இராமல் நல்லொழுக்கமுள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள் கிறவர்களாயும் இருக்க வேண்டும். மேலும் இவர்கள் முன்னதாக சோதிக்கப்பட வேண்டும்; குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டும். மேலும், உதவிக்காரரானாவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் .நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்."

நாம் சுமக்கும் சுமைக்குத்தக்கதாக தேவன் நமக்கு வண்டிகளாகிய உதவிக் கரங்களை எழுப்புகிறார்.

ஆசரிப்புக்கூடாரப் பணிவிடையைச் செய்ய நியமிக்கப்பட்டவர்கள் எல்லாம் *30* முதல் *50* வயதுள்ளவர்களே. இளவயதுள்ளவர்களையும், பெலனற்ற முதிர் வயதுள்ளவர்களையும் தேவன் ஏற்கவில்லை. *4 : 35, 30, 23.* இதன்படி அன்று எண்ணி நியமிக்கப்பட்டவர்களாவன, கோகாத்தியரில் *2750*ம், கெர்சோனியரில் *2630*ம், மெராரியரில் *3200*ம் ஆக மொத்தம் *8580* ஆகும். *4 : 48.* இவர்களை சேனை எனப்பட்டிருப்பது அத்திரள் கூட்டத்தின் வலிமையைக் குறிக்கும். *4 : 34, 38, 42.* ஆம்! தேவனுடைய ஊழியம் பெரியதும் அதைச் செய்கிறவர்கள் மகா பெரிய சேனையுமாவர்.

"அழகாய் நிற்கும் யாரிவர்கள்?
திரளாய் நிற்கும் யாரிவர்கள்?
சேனைத்தலைவராம் இயேசுவின் போர்க்களத்தில்
அழகாய் நிற்கும் யாரிவர்கள்?"

## 3. பயணத்தின் ஒழுங்குகள் - பூரிகை, கொடி

### I. வெள்ளிப் பூரிகைகள். எண். *10*

இரண்டு வெள்ளிப் பூரிகைகளை உண்டாக்க கர்த்தர் மோசேயிடம் கூறினார். அவைகளின் உபயோகம் நான்காகும். *(1)* சபையைக் கூடி வரவழைப்பதற்கு *(2)* பாளயங்களை பிரயாணப்படுத்துவதற்கு *(3)* யுத்தம் செய்யும்போது முழக்க *(4)* பண்டிகையில் ஊதி மகிழ. அவைகள் ஒரே வெள்ளித்தகட்டால் செய்யப்பட்டன.

**1. சபையைக் கூட்டுவதற்கு :-** ஒன்றை மாத்திரம் ஊதினால் போதும். உடனே ஆயிரவர்களுக்குத் தலைவர்கள் மட்டும் மோசேயிடம் கூடி வரவேண்டும். இவர்களைக் (சபையை) கூட்டுவதற்காக பெருந் தொனியாக முழக்கக்கூடாது, சாதாரணமாக ஊத வேண்டும். எனவே, சாதாரணமாக ஊதவும், பெருந்தொனியாக முழக்கவும் தக்கதாக இரண்டுவித இயந்திர வசதி (Mechanism) பூரிகைகளில் இருந்திருக்கிறது. ஆறு லட்சம் புருஷர்கள் அடங்கிய சுமார் *30* லட்சம் மக்கள் தூரமாகப்பரவி பாளயமிறங்கியிருக்கிற தூரமான இடம் வரை சாதாரணமாக ஊதும் போதே கேட்கிறது என்றால் பெருந்தொனியாக முழக்கும்போது அதன் சத்தம் எத்தனை பயங்கரமாக இருக்கக்கூடும்?

வேறுவிதமாகச் சொன்னால், சாதாரணமாக ஊதும்போது பாளயத்தின் கடைசிவரை கேட்காது என்றிருந்தால் அருகாமையில் கேட்டவர்கள் மற்றவர்களை எழுப்பிவிட வேண்டும். அப்படியே சபையிலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும். எபி. *10 : 25.* உற்சாகப் படுத்தவேண்டும். சபை கூடிவருதல் யாவருடையவும், கடமையும் பொறுப்பு மானதால் சாதாரண அறிவிப்புகளே போதுமானது. ஜனம் கூடிவரக் கடமைப்பட்டவர்களாவர்.

**2. பாளயம் புறப்படுவதற்குப்** பெருந்தொனியாக முழக்க வேண்டும். *10 : 5.* பாளயத்திலுள்ள ஒருவரும் விடுபடாமல் அனைவரும் கேட்குமாறு ஊதுக. எனக்குத் தெரியாதென்று சாக்குப்போக்கு சொல்லி ஒருவனும் நின்று விடாதபடிக்கே இந்தப் பெருந்தொனி. யாவரும் புறப்படுக. இயேசுவின் வருகையில் நமது பாளயம் பூமியிலிருந்து பரலோகத்திற்கு மாற்றப்படும். அப்போது தேவ எக்காளம் முழங்கும். *1* தெச. *4 : 16.* பவுல் அதனைக் கடைசி எக்காளம் என்கிறார். *1* கொரி. *15 : 51.* கடைசி நாளில் வலுவாய் தொனிக்கும் எக்காளத்துடன் தூதர்களை அனுப்பி வானத்தின் ஒரு முனைமுதல் மறுமுனை மட்டிலுமுள்ள தெரிந்து கொள்ளப் பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார். மத். *24 : 31.* இஸ்ரவேலரின் பாளயங்கள் புறப்படுவதற்கும், கிறிஸ்தவசபை புறப்படுவதற்கும் எக்காளங்களைப் பயன்படுத்துகிறார். அவ்வாறு பரலோகத்திலும் எக்காளம் உண்டென்றும் அதன் சாயல் தான் ஆசரிப்புக் கூடாரத்தில் கொடுக்கப்பட்டதென்றும் அறியலாம்.

**3. யுத்தம் வரும்போதும்** பெருந்தொனியாக முழக்க வேண்டும். எண். *10 : 9.* யுத்தத்திற்கு புறப்படும்போது பூரிகைகளை முழக்கிக்கொண்டு

போக வேண்டும். "அப்பொழுது உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சமூகத்திலே நீங்கள் நினைவு கூரப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவீர்கள்." இச்செயல் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தத்தையும், விசுவாசத்தையும் காட்டுகிறது. எபே. *6 : 15.* அதனால் மக்களுக்கு சமாதானத்தைக் கூறுகிறோம் என்றாலும் அது சாத்தானுயை இராஜ்யத்துடன் செய்யும் மாபெரும் யுத்தமுமாகும். யுத்தத்தில் ஜெயம் தரும்படியாக தேவனிடம் முறையிடுகிற ஜெபமாகவும் இது இருக்கிறது. யுத்தம் கர்த்தருடையது. *2* நாளா. *20 : 15.* ஆபத்துக்காலத்தில் நீ என்னை நோக்கிக் கூப்பிடு என்றார். சங். *50 : 15.* யுத்தகாலம் ஆபத்துக்கால மல்லவா? இந்த எக்காள முழக்கம் அந்த கூப்பிடுதலுக்கு ஒப்பனை.

**4. இஸ்ரவேலின் பண்டிகை நாட்களில் :-** லேவி. *23 : 24, 25.* எக்காள சத்தத்தால் பெரு முழக்கமாய் கொண்டாடுகிற பண்டிகை ஒன்றை நடத்த தேவன் கற்பித்தார். அதை ஒரு ஓய்வு நாளாக்கி ஆசரிக்க வேண்டும். ஏழாம் மாதம் முதல் தேதியன்று இப்பண்டிகை வருகிறது. இது ஒரு நாள் பண்டிகை ஆகும். அன்று சபை கூட வேண்டும். அன்று சாதாரணமான யாதொரு வேலையும் செய்யக்கூடாது. இப்பண்டிகையிலும் தகனபலியிடப்பட வேண்டும். இது ஒரு ஞாபகக்குறியான பண்டிகை. இத்தனை விபரங்களையும் இவ்விரண்டு வசனங்களும் தருகின்றன.

ஞாபகக்குறி என்பது இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தன நுகத்தை உதறிவிட்டு ஜெய கெம்பீரமாய் புறப்பட்டதன் ஜெயகோஷத்தின் நினைவு கூருதலாகும். குறிப்பாக, செங்கடலைக் கடந்தபோது ஏற்பட்ட சந்தோஷத் தின் ஆரவாரம் கொஞ்சமல்ல. அதன் நினைவுகூருதலாகும் இது. பண்டி கையில் எக்காளம் ஊதுங்கள் என சங்கீதக்காரன் கூறுகிறான். *81 : 1-3;* எண். *10 : 10.* எனவே, இது சந்தோஷ ஆரவாரத் திற்கு அயையாளமாகும். நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரச்சத்தங்கள் உண்டு. சங். *118 : 15.* மேலும் யுத்தத்தில் அடைந்த வெற்றிக்கு இது அடையாளம். தேசத்தின் மேல் வரும் ஆபத்தை அறிவிக்க காவல்காரன் எக்காளம் ஊதவேண்டும். எசே. *33 : 1-3.*

ஜனத்தின் பின்மாற்ற காலத்தில் சீயோனில் எக்காளம் ஊதி ஜனத்தைக் கூட்டுங்கள் என்கிறார். யோவேல் *2 : 15.* இவ்வாறு எல்லா நிலைகளிலும் எக்காளம் ஊதுதல் வழக்கமாக உள்ளது. புதிய ஏற்பாட்டு சபைக்கு உகந்த சுவிசேஷத்தை எக்காளம் போல் சத்தமாய் அறிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோமல்லவா?

# 4. முதலாம் பிரயாணமும், பயணக்கிரமமும்

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் *1* ம் தேதியிலே சீனாய்க்கு வந்தனர். யாத். *19 : 1. 2* ம் வருடம் *2* ம் மாதம் *20* ம் தேதியன்று சீனாயை விட்டு புறப்பட்டனர். எனவே சீனாய் மலையருகே பதினொன்று மாதங்களும், *20* நாட்களும் தங்கியிருந்தனர். அதற்குள் ஆசரிப்புக்கூடாரத்தை வேகமாக செய்து முடித்தனர். எண். *10 : 11-13.* இவ்வாறு முதலாம் பிரயாணம் துவக்கப்பட்டது. புறப்படும் முன்னே ஆரோனும், குமாரரும் எல்லா உள்ளான் பணிமுட்டுகளையும் மூடிக்கட்டி வைத்தனர்.

பூரிகைகளை பெருந்தொனியாய் முழக்கினபோது கிழக்கேயிருந்த பாளயங்கள் புறப்பட்டன. எண். *10 : 5; 14-17.* அதிலும் யூதா முதலிலும், தொடர்ந்து இசக்காரும் பின்பு செபுலோனும் புறப்பட்டனர்.

இவர்கள் புறப்பட்ட உடனே பாளயம் முழுவதும் இறக்கி வைக்கப்பட்டது. அதைக் கெர்சோன் புத்திரரும், மெராரி புத்திரரும் சுமந்து கொண்டு பின்னே சென்றனர். மற்ற கோத்திரங்களும் கோகாத்தியரின் பரிசுத்தமானவைகளும் வரும் முன்னே இவர்கள் சென்று பாளயத்தை ஸ்தாபனம் பண்ண வேண்டும். எண். *10 : 21.*

இரண்டாம் விசை பூரிகை முழங்கின உடனே முறையே தெற்கே பாளய மிறங்கி இருக்கும் ரூபன், சிமியோன், காத் ஆகியோர் புறப்பட்டனர். கோகாத்தியர் பரிசுத்தமானவைகளைச் சுமந்து கொண்டு போயினர்.

மூன்றாம் விசை பூரிகை முழங்கும்போது முறையே மேற்கே இருக்கும் எப்பிராயீம், மனாசே, பென்யமீன் ஆகியோர் புறப்பட வேண்டும்.

நான்காம் விசை பூரிகை முழங்கும்போது முறையே வடக்கிலுள்ள தாண், ஆசேர், நப்தலி கோத்திரங்கள் புறப்பட வேண்டும். எண். *10 : 25-27.*

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியானது இளைப்பாறும் இடத்தைக் காட்டும்படிக்கு அவர்கள் முன் சென்றது. எண். *10 : 33.* மேகம் எழும்பும் போது புறப்படுவார்கள். மேகம் எத்தனை காலம் தங்கியிருந்தாலும் அத்தனை காலமும் புறப்படாமல் பாளயத்திலேயே இருப்பர். யாத். *40 : 36-37.* அது இரண்டு நாளாவது ஒரு வருடமாவது தங்கியிருந்தாலும் புறப்படமாட்டார்கள். கர்த்தருடைய கட்டளைப்படியே புறப்படவோ, தங்கவோ செய்தனர். எண். *9 : 15-23.* பெட்டியும் பாளயங்களும் புறப்படும்போதும் தங்கும் போதும் இவ்வாறு மோசே ஜெபத்தை ஏறெடுத்தார். எண். *10 : 35, 36.* "பெட்டியானது புறப்படும் போது,

மோசே: கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார் களாக, உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக என்பான். அது தங்கும்போது: கர்த்தாவே, அநேக ஆயிரவர்களாகிய இஸ்ரவேலரிடத்தில் திரும்புவீராக என்று சொல்லுவான்." இது தேவ ஆவியினால் நடத்தப்படுகிற அனுபவமாகும். ரோமர் *8 : 14* "மேலும் எவர்கள் தேவனுடைடய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுயை புத்திரராயிருக்கிறார்கள்." இவ்வாறு சீனாய் மலை முதற்கொண்டு ஆசரிப்புக்கூடாரத்துடனும் அதிகாரப்பூர்வமாக தங்களை நடத்துகிற ஆசாரியர்களோடும் கூட புறப்பட்டனர். எண். *10 : 11-28.*

**5. பாளயமும் பயணமும் கொடியுடன்**

எங்கும் கொடிகள் உயரும் காலமாகும் இது. கட்சிகளும், சமுதாயங் களும் சில மதங்களும் தங்களுக்கென கொடிகளை உருவாக்கி உயரக் கட்டுகின்றனர். தேசீயக்கொடிகளும் இவ்விஷயத்தில் பின்னிலை அல்ல. இவ்வழக்கம், இஸ்ரவேல் பாளயத்திலிருந்து பின்பற்றப்புடுவதாகக் கருத நியாயமுண்டு. இஸ்ரவேலர் பாளயமிறங்கும்போதும், புறப்படும் போதும் கொடியுடனே தங்கவும், புறப்படவும் வேண்டும். எண். *2:3, 10, 18, 25; 10:14, 18, 22, 25.* பன்னிரெண்டு கோத்திரங்களும் *4* வகுப்பாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் ஒரு கோத்திரம் தலைமையாக இருந்தது.

கொடியில் என்ன அடையாளம் இருந்தது என்று நிர்ணயிப்பதில் சிரமம் உண்டு. ஆகிலும் *4* ஜீவன்களின் முகசாயல் இக்கொடிகளில் இருந்திருக்க வேண்டும் என்பது பண்டிதர்களின் கருத்து. இது உண்மையாயிருந்தால் கீழ்வரும் சாயல்கள் கொடிகளில் இருக்கலாம்.

சிங்க முகம், காளை முகம், மனுஷமுகம், கழுகு முகம்

| திசை | கோத்திரம் | தலைமை |
|---|---|---|
| கிழக்கு | யூதா, இசக்கார், செபுலோன் | யூதா |
| தெற்கு | ரூபன், சிமியோன், காத் | ரூபன் |
| மேற்கு | எப்பிராயீம், மனாசே, பென்யமீன் | எப்பிராயீம் |
| வடக்கு | தாண், ஆசேர், நப்தலி | தாண் |

கொடிகள் ஜெயத்திற்கும், மகிழ்ச்சிக்கும் அடையாளமாகும். அந்திகிறிஸ்துவின் ஆட்சியில் ஜெயம் பெற்றவர்கள் குருத்தோலைகளைப் பிடித்துக் கொண்டு தேவ சிங்காசனத்தண்டை நிற்கும் காட்சியை வெளி. *7 : 9-10*ல் காணலாம். இயேசுவை வரவேற்க மகிழ்ச்சி ஆரவாரம் செய்த மக்கள் குருத்தோலைகளைப் பிடித்திருந்தனர். யோவான் *12 : 13.*

கிறிஸ்தவ ஜீவியம் ஒரு பிரயாணமாகும். பின்னானவைகளை மறந்து முன்னானவை களை நாடி ஓடுகிறோம். பிலி. *3 : 13-14.* அது போலவே, உலகம், மாமிசம், பிசாசுடனே போராடுவதில் ஜெயம் உண்டென்பதற்கடையாளமாக ஜெயக் கொடியுடன் மகிழ்ச்சியுடன் வாழுவோமாக. பிலி. *4 : 1, 4.*

## அதிகாரம் 44

## பிரதிஷ்டைகள் - லேவியன், ஆசாரியன், கூடாரம்.

பிரதிஷ்டை என்பது தேவனுக்காக ஒரு நபரையாவது, பொருளை யாவது பிரித்துப் பரிசுத்தப்படுத்தி ஏறெடுத்து ஒப்புக்கொடுத்தல் ஆகும். இஸ்ரவேலில் முக்கியமான மூன்று பிரதிஷ்டைகள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. *(1)* லேவியின் பிரதிஷ்டை *(2)* ஆரோனுடையவும், குமாரருடையவும் பிரதிஷ்டை *(3)* கூடாரத்தின் பிரதிஷ்டை

**1. லேவியரின் பிரதிஷ்டை** எண். *8:5-26.*

பிரதிஷ்டை செய்யப்படாத ஒருவன் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் நுழைய அனுமதியில்லை. வசனம் *15.* *(அ)* அவர்களை சுத்திகரிப்பாயாக. *(ஆ)* அதற்காக சுத்திகரிக்கும் ஜலத்தை அவர்கள் மேல் தெளிப்பாயாக. *(இ)* லேவியரை சர்வாங்க சவரம் பண்ணு *(ஈ)* தங்கள் வஸ்திரங்களைத் தோய்க்க வேண்டும். *(உ)* ஒரு காளை, போஜனபலி, பாவ நிவாரணபலி யாக வேறொரு காளை ஆகியவற்றை வாங்க வேண்டும். *(ஊ)* லேவியரை ஆசரிப்புக் கூடாரத்தின் முன் வரச்செய்து இஸ்ரவேலையும் கூடி வரப்பண்ணு. *(எ)* இஸ்ரவேல் புத்திரர் லேவியர் மேல் கைகளை வைக்கக்கடவர். *(ஏ)* ஆரோன் லேவியரை அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்தக்கடவர். *(ஐ)* பின்பு லேவியர் தங்கள் கைகளை காளைகளின் தலைமீது வைத்து *(ஒ)* ஒன்றை பாவநிவாரணபலியும், மற்றதை சர்வாங்க தகனபலியுமாகச் செலுத்தி *(ஓ)* இவ்வாறு அவர்களை அசைவாட்டும் காணிக்கையாக்கி அவர்களை கர்த்தருடையதாக்க வேண்டும்.

**ஏன் லேவியர்.** எண். *8:16.*

எகிப்திலே தேவன் முதற்பேறுகளை சங்கரித்தபோது, இஸ்ரவேலிலே முதற்பேறுகளைத் தமது சேவைக்காகப் பிரித்தெடுத்தார். லேவியரிலும் *25* வயது முதல் *50* வயது வரை உள்ளவர்களை மாத்திரமே ஆசரிப்புக் கூடாரத்தின் சேவைக்காக தேவன் பிரித்தெடுத்தார். *8 : 24.*

## 2. ஆரோன் மற்றும் குமாரரின் பிரதிஷ்டை லேவி. 8.

1. சபையை ஆசரிப்புக் கூடாரத்தின் முன் வரவழைப்பாயாக.
2. அவர்களை ஜலத்தினால் ஸ்நானம் பண்ணுவித்து
3. ஆரோனின் ஆசாரிய வஸ்திரங்களை உடுத்து
4. பரிசுத்த அபிஷேக தைலத்தால் வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவற்றையும் அபிஷேகம் பண்ணு என்றார். ஆரோனை அபிஷேகம் பண்ண கூடாரத்தையும் அபிஷேகம் பண்ணினதால் பிரதான ஆசாரியன் மற்றும் குமாரரின் அபிஷேகம் எத்தனை முக்கியமென்று பாருங்கள்.
5. பின்பு அபிஷேக தைலத்தில் கொஞ்சம் எடுத்து ஆரோனின் சிரசின் மேல் வார்த்து, பரிசுத்தமாக்கும்படி அபிஷேகம் பண்ணினார்.
6. பின்பு ஆரோனின் குமாரரை வரவழைத்து அங்கிகள், இடைக்கச் சைகள், குல்லாக்கள் ஆகியவற்றை அணிவித்தார்.
7. பாவ நிவாரண பலிக்கான காளையின் தலையின் மேல் ஆரோனும், அவன் குமாரரும் கைகளை வைத்து
8. காளையைக் கொன்று அதன் இரத்தத்தைப் பலிபீடத்தின் கொம்பு களில் பூசி, பலிபீடத்திற்காக பிராயச்சித்தம் செய்து மீந்த இரத்தத் தைப் பலி பீடத்தின் அடியிலே ஊற்றினார். காளையைத் தகனித்தார்.
9. பின்பு சர்வாங்க தகனபலிக்கான ஆட்டுக்கடாவின் தலையின் மேல் ஆரோனும், அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்து அதைக் கொன்று இரத்தத்தை பலிபீடத்தைச் சுற்றிலும் தெளித்து, பின்பு ஆட்டுக்கடாவை முற்றிலும் சர்வாங்க தகனபலியாக தகனித்தான்.
10. வேறொரு ஆட்டுக்கடாவையும் *8 : 22-29* ஆகிய வசனங்களின்படி கொன்று இரத்தத்தை ஆரோன் மற்றும் குமாரரின் வலது காதின் மடல், வலதுகைப் பெருவிரல், வலது கால் பெருவிரல் ஆகியவற்றில் பூசி இன்னும் சில காரியங்களையும் செய்தபின் அதன் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து அதை ஆரோன் மேலும், குமாரர் மேலும் அவர்களது வஸ்திரங்கள் மேலும் தெளித்து அவர்களை கூடார சேவைக்காக பரிசுத்தப்படுத்தினார்.
11. பின்பு ஆரோனும், குமாரரும் அதன் மாம்சத்தைக் கூடார வாசலி லே வேவித்துப் புசிக்க வேண்டும். பிரதிஷ்டை பலிகளுள்ள கூடையின் அப்பங்களையும் புசிக்க வேண்டும்.
12. பிரதிஷ்டையின் நாட்களான ஏழு நாட்களும் கூடாரத்தை விட்டு விலகாமல் அங்கேயே தங்கியிருக்கக்கடவர்.

## 3. கூடாரப்பிரதிஷ்டை யாத். *30 : 25-30.*

ஆசரிப்புக் கூடாரத்தில் பிரதிஷ்டை செய்யப்படாத பொருள் இல்லை. பிரதிஷ்டை என்பதில் அடங்கியிருக்கின்ற முக்கியமான

நடவடிக்கைகள் இரண்டு ஆகும். *(1)* அதற்காகச் செய்யப்பட்ட தைலத்தினால் அபிஷேகம் பண்ணுதல் ........ *(2)* அதற்காகக் குறிக்கப்பட்ட பலிகளைச் செலுத்துதல். அவ்வாறே ஆசரிப்புக் கூடாரத்தை அபிஷேகம் பண்ணினார். அதன் எல்லாப் பணிமுட்டுகளையும் அபிஷேகம் பண்ணினார். யாத். *30 : 26-31.*

தைலத்தினால் கூடாரம், சாட்சிப்பெட்டி, மேஜை, அதன் பணிமுட்டுகள், குத்துவிளக்கு, அதன் கருவிகள், தூபபீடம், தகன பலி பீடம் அதன் பணிமுட்டுகள், தொட்டி, அதன் பாதம் ஆகிய அனைத்தையும் அபிஷேகம் பண்ணினார். அன்றைய தினமே ஆரோனும், குமாரரும் கூட அபிஷேகம் பண்ணப்பட்டனர்.

கூடாரத்தின் அபிஷேகத்தில் பலிபீடத்தின் பிரதிஷ்டையை சற்று விபரமாகக் கூறியுள்ளார். இஸ்ரவேலின் சகல கோத்திர பிரபுக்களும் விசேஷ காணிக்கைகளைப் படைத்து கூடாரத்தின் பிரதிஷ்டையையும் விசேஷமாக பலிபீடத்தின் பிரதிஷ்டையையும் சிறப்பித்தனர். அவர்கள் செலுத்திய காணிக்கையாவன: எண். *7 : 3-11, 84-88.*

1. ஆறு கூண்டு வண்டில்கள், *12* மாடுகள்
2. வெள்ளித் தாலங்கள் *12*
3. வெள்ளிக் கலங்கள் *12*
4. பொன் தூபக்கரண்டிகள் *12*
5. சர்வாங்க தகனபலிக்கு காளைகள் *12*
6. ஆட்டுக்கடாக்கள் *12*
7. ஒருவயது ஆட்டுக்குட்டி *12*
8. பாவ நிவாரணபலிக்கு வெள்ளாட்டுக் கடாக்கள் *12*
9. சமாதான பலிக்கு காளைகள் *24*
10. ஆட்டுக்கடாக்கள் *60*
11. வெள்ளாட்டுக்கடாக்கள் *60*
12. ஒருவயதான ஆட்டுக்குட்டிகள் *60*

இவ்வாறு உடன்படிக்கைப் பெட்டி முதல் பலிபீடம் வரையிலுமுள்ள யாவும் பிரதிஷ்டை செய்யப்பட்ட உடனே வானத்திலிருந்து அக்கினி இறங்கி பலிபீடத்திலுள்ள எல்லா பலிகளையும் பட்சித்து தேவன் தமது அங்கீகாரத்தை வெளிப்படுத்தினார். லேவி. *9 : 24.* "அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதால் மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது." யாத். *40 : 33-35.*

## ஆசாரியத்துவமும் திருமணமும்

இஸ்ரவேலின் ஆசாரியர்கள் திருமண மானவர்களாக இருந்தனர். எடுத்ததற்கெல்லாம் தீட்டு எனத் தள்ளிவிடுகின்ற அக்காலத்திலும் திருமண வாழ்க்கையால் ஆசாரியர்கள் தீட்டுப்பட்டதாக வேதம் கூறவில்லை. மாறாக ஆசாரியன் திருமணமானவராக இருக்க வேண்டும் என ஒரு பிரமாணமே கொடுக்கப்பட்டிருந்தது.

கன்னிகையாகிய ஒரு பெண்ணை அவன் விவாகம் பண்ண வேண்டும். விதவையையானாலும், கற்புக் குலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம் பண்ணாமல் தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம் பண்ணக்கடவன். லேவி. *21 : 10 - 14*.

ஆதியில் ஏதேனில் திருமணத்தை தேவனே ஏற்படுத்தினார். இது எல்லா மனுஷருக்குமுள்ள பொதுவிதியாகும். ஆதியிலே திருமணத்தை ஏற்படுத்திவிட்டதால், திரும்பவும் அதுபற்றி ஆசாரியனுக்கு விவாகம் பண்ணு என்று சொல்ல வேண்டியது என்ன ?

ஒரு வேளை, ஆசாரியத்துவத்தைப்பற்றி ஆண்டவர் அருளிய மேன்மைகளினிமித்தம் இல்லறத்தை தீட்டு என எண்ணிவிடுவார்கள் என தேவ்ன முன்னறிந்துதான் அதை மீண்டும் வலியுறுத்தியிருக்கலாம். அப்படியும் நினைப்பார்களோ என்று நீங்கள் கேட்டால் நினைக்கிறார்களே என்று சொல்லுவேன். புதிய ஏற்பாட்டு சபையில் அப்படி ஒரு கும்பல் தோன்றியிருக்கிறதே. விவாகம் பண்ணாதிருக்க அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள் என்று சொல்லிருந்தும்கூட, *1* தீமோ. *4 : 1 - 3* கண்காணியானவன் ஒரே மனைவியை உடைய புருஷனாயிருக்க வேண்டும் என்று சொல்லியிருந்தும் கூட, *1* தீமோ *3 : 1,2*. அவர்கள் மனச்சாட்சியில் சூடுண்டவர்களாம் *4 : 1*. தேவன் மூன்று வகுப்பாருக்குத் திருமணம் ஏற்படுத்தியுள்ளார்.

1. ஆதாம் ஏவாளுக்கு. மனுக்குலத்திற்கு இரு நிழல். ஆதி. *1 : 27,28*
2. பழைய ஏற்பாட்டு ஊழியராகிய ஆசாரியர். லேவி. *21 : 10 - 14*
3. புதிய ஏற்பாட்டு ஊழியருக்கு *1* தீமோ. *3 : 1,2*

புதிய ஏற்பாட்டில் நான்குவகுப்பார் திருமணமானவர்களாயிருக்க வேண்டும்.

1. கண்காணியானவன். *1* தீமோ. *3 : 1 - 5*
2. உதவிக்காரன் - *1* தீமோ *7 : 3, 12, 13*
3. மூப்பர் - தீத்து *3 : 5 - 9*
4. விசுவாசி - *1* கொரி. *7 : 1 - 5*

அ. *1* கொரிந்தியர் *7*ம் அதிகாரம் அன்று ஏற்பட்ட

உபத்திரவத்தினிமித்தம் விசுவாசிகள் விவாகம் பண்ணலாமா ? என்ற விசுவாசிகளின் இக்கட்டான சூழ்நிலைக்கு பவுலின் பதில்களாகும் *7 : 1,26*. இது ஊழியர்கள் பற்றியதல்ல. விசுவாசிகளுக்கும் உபத்திரவத்தினிமித்தம் கூறப்பட்ட விதிகளாகும்.

ஆ. ஏசாயா *56 : 3 - 7*ல் கண்ட அண்ணகன் மற்றும் கறை அல்லது தீட்டு முதலியவற்றைப் பற்றி கூடுதல் விவரங்கள் இயேசுவின் வருகையும் உலகத்தின் முடிவும் என்ற எனது நூலில் தரப்பட்டுள்ளது.

**இயேசுவின் அங்கியும் இஸ்ரேலிய ஆசாரியனின் அங்கியும்**

இயேசுவை நியாயம் விசாரிக்கும்போது பிரதான ஆசாரியன் அங்கே இருந்தார். இயேசுவுக்கு விரோதமாகப் பொய் சாட்சிகளைத் தேடியும் ஒவ்வவில்லை. தம்மைக்கொல்ல காரணம் தேடிய அவர்களுக்கு இயேசுதாமே ஒரு காரணத்தைக் கொடுத்தார். அதாவது தாம் தேவகுமாரனென்றும் இனி தாம் வானத்துமேகங்களுடன் வருவேன் என்றும் கூறினார். இதைக்கேட்ட பிரதான ஆசாரியன் தன் வஸ்திரத்தைக் கிழித்துவிட்டான்.

*1.* இயேசு கூறியதெல்லாம் தேவ தூஷணம் என்றான்.

*2.* மெய்யான ஆசாரியராக வெளிப்படபோகிற அவர், கூண்டிலும் பொய்யான ஆசாரியன் ஆசனத்திலும் காணப்பட்டனர்.

*3.* பொய்யான ஆசாரியன் பொய்யான சாட்சிகளைக்கொண்டு பொய்யான குற்றங்களை மெய்யான ஆசாரியன் மேல் சாட்டினான்.

*4.* பொய்யன் மூன்று நாட்களுக்கு வென்றது போல காணப்பட்டான். மூன்றாம் நாள்முதல் பொய்யன் தோற்றான். மெய்யானவர் வென்றார். அதன் அடையாளமாக பொய்யன் தன்னை அறியாமல் தன் வஸ்திரத்தைக் கிழித்தான். மெய்யனோவென்றால் கிழியாத வஸ்திரத்தை என்றைக்குமாய் பெற்றார். அந்த நிலையங்கியைத் தரித்தவராக அவர் பத்முதீவில் தன் சீடனாகிய யோவானுக்குக் காட்சியளித்தார். வெளி. *1 : 14 - 16*

*5.* இந்த ஆவியின் சரீரத்திற்கேற்ற மேன்மையான அங்கியைப் பெறும்படிக்குத் தம்முடைய சரீரப்பிரகாரமான அங்கியைக் கழற்றிவிட ஒப்புக்கொடுத்தார். அதை மாம்சத்துக்குரிய போர்ச்சேவகர்கள் சீட்டுப் போட்டுச் சொந்தமாக்கிக் கொண்டனர்.

*6.* இயேசுவின் பூலோக அங்கியைக் கழற்றிய மூன்றாம் நாளில் பரலோக அங்கியைப் பெற்றார். அதற்குமாறாக இஸ்லேலிய ஆசாரியன், ஆன்மீக ஆசாரிய வஸ்திரத்தை கிழித்துவிட்டு மாம்சத்திற்குரிய அங்கியைப் பெற்றான்.

# அதிகாரம் 45

## பரலோகக் கூடாரம்

பரிசுத்த வேதாகமத்தின் வெளிப்பாடுகளை ஆராய்ந்து பார்த்தால் இஸ்ரவேலருக்கு தேவன் அருளிய ஆசரிப்புக் கூடாரத்தைப் போன்ற ஒரு கூடாரம் பரலோகத்தில் உண்டு என எண்ண வேண்டியிருக்கிறது. பரலோகத்தைப் பற்றியவைகள் பூரணமாக வெளிப்படுத்தப்படவில்லை. எனவே, வெளிப்பட்டவைகளைக் கொண்டு எவ்வளவு கற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்குக் கற்றுக்கொண்டால் போதுமானதாகும். ஏனென்றால், "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்." உபா. *29 : 29*. இந்த விதியின்படி அறியக்கூடியவைகளை மாத்திரம் ஆராய்வோமாக.

ஆசரிப்புக்கூடாரத்தைச் செய்யும்போது அதின் மாதிரியை தேவன் தாமே காண்பித்துள்ளார். மேலும் அந்த மாதிரியின்படி மட்டுமே செய்வீர்களாக என்றார். யாத். *25 : 9*. "எச்சரிக்கையாயிரு" என ஒரு தாக்கீதும் வழங்கியுள்ளார். யாத். *25 : 40*. அப்படியே மோசேயும் கர்த்தர் "கற்பித்தபடியே" செய்தார் என *39, 40* ஆகிய இரண்டு அதிகாரங்களில் *18* முறை கூறியிருப்பதும் நமது கவனத்திற்குரியவைகளே. ஏன் இந்த "மாதிரி"? இந்தக் கூடாரம் பரலோகத்திலுள்ள கூடாரத்தின் நிழலும் சாயலுமாக இருந்ததினால் அதன் மாதிரியை தவறாமல் காத்துக்கொள்ளுமாறு தேவன் கற்பித்திருக்க வேண்டும் என்றே நாம் கருதவேண்டியிருக்கிறது.

பரலோகத்தில் மேன்மையான ஒரு கூடார அமைப்பு இருந்திருக்க வேண்டும் என்பதற்கு கீழ்வரும் வசனங்கள் ஆதாரமளிக்கின்றன.

*1.* இவர்கள் செய்யும் ஆராதனை **பரலோகத்திலுள்ளவைகளின்** சாயலுக்கும், நிழலுக்கும் ஒத்திருக்கிறது என எபிரேயர் *8 : 5* ல் காண்க. இவ்வசனத்திலே மலையிலே காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே செய் என்ற எச்சரிக்கையை மீண்டும் எடுத்துக் கூறுகிறார்.

*2.* இது நிழலும் சாயலுமாக உள்ளது என்கிறார். அது எதினுடைய நிழல்? பரலோகக் கூடாரத்தின் நிழல் என்பதே பதில். பொருள் இல்லாமமல் நிழலும் சாயலும் இல்லை.

*3.* தம்முடைய சொந்த இரத்தத்தினாலே மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தார் என எபி. *9 : 12* ல் காண்க. இந்த மகா பரிசுத்த

ஸ்தலம் பரலோக கூடாரத்தில் பிதா வீற்றிருக்கிற கிருபாசனமேயாகும். எனவே, பரலோக கூடாரத்திலும் முப்பிரிவுகளைக் காணலாம்.

**4. பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகளாகிய** (எபி. *9 : 23)* சகல பணிமுட்டுகளும் *(9 : 21)* மிருக இரத்தம் தெளித்து சுத்திகரிக்கப்பட்டது. சாயலானவைகளுக்கு இந்த சுத்திகரிப்பு என்றால் பரலோகத்திலுள்ள உண்மையானவைகள் அதிலும் விசேஷித்த பலிகளினால் சுத்திகரிக்கப்பட வேண்டியதாமே. *9 : 24.* எனவே, ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பணிமுட்டுகள் பரலோகத்திலுள்ள பணிமுட்டுகளின் சாயல் என்கிறார். எனவே பரலோகக் கூடாரம் உண்டெனக் கருதலாம்.

**5. பரலோகத்திலுள்ள பரிசுத்த ஸ்தலம்** மெய்யானது என்றும் அதற்கு அடையாளமானது தான் பூமியிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலம் என்றும் எபி. *9 : 24* ல் காண்க. எனவே, பரலோகக்கூடாரத்திற்கு பரிசுத்த ஸ்தலம் உண்டு என அறியலாம்.

**6. பரலோகத்தில் சாட்சியின் கூடாரமாகிய ஆலயம்** திறக்கப்பட்டது என்ற வசனமும் பரலோக கூடாரம் உண்டு என உறுதி செய்கிறது. அதனை ஆலயம் என்றும் கூறப்பட்டுள்ளது. வெளி. *15 : 5, 6, 16.*

*7.* பரலோகத்திலுள்ள தேவாலயத்திலே உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது. வெளி. *11 : 19.* எனவே, ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள உடன்படிக்கைப் பெட்டியின் பொருளானதொன்று பரலோகத்தில் இருக்கிறது என அறியலாம்.

*8.* பரலோக சிங்காசனத்திற்கு முன்பாக ஒரு பொற்பீடம் இருப்பதாகவும் அதில் ஜெபங்களோடு கூட தூபவர்க்கம் செலுத்தப்பட்டதாகவும் வெளி. *8 : 3* ல் காணலாம். பரலோகத்தின் தூதன் பயன்படுத்துகிற ஒரு தூப கலசத்தையும் *8 : 4* ல் காண்க. எனவே ஆசரிப்புக் கூடாரத்தின் தூபபீடம், தூபகலசம் போன்றவை தேவ சிங்காசனத் தண்டையில் உள்ளதாகக் காணலாம். ஆனால் பூமிக்குரிய ஆசரிப்புக் கூடாரம் போல அழிந்து போகும் பொருட்களால் அது செய்யப்பட்டிருக்க முடியாது. நேர்த்தியும், உச்சிதமுமான பொருட்களால் அளவில் பெரியதாக, விண்மயமானதாகவும் இருக்கும்.

*9.* ஆயிரம் ஆண்டு ஆட்சியில் ஒரு ஆலயம் கட்டப்படும் என்று எசேக்கியேல் கூறுகிறார். *(40-48* அதிகாரங்கள்*)* அதிலும் பிராகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் ஆகிய முப்பிரிவுகளையும், குத்துவிளக்கு, பலிபீடம் ஆகிய கருவிகளையும் காணலாம். எனவே,

பரலோகக் கூடாரத்தின் மாதிரியை விடாமல் எல்லாருக்கும் வழங்கி வருகிறார் என்பது புலனாகிறது. இவ்வாறு பரலோகத்தில் ஆராதனைக் கூடாரத்தின் அமைப்பு உண்டென நிர்ணயிக்கலாம்.

*10.* இயேசு கிறிஸ்து உயிர்தெழுந்த பின்பு சீடனாகிய யோவானுக்கு பத்மு தீவில் வெளிப்பட்டபோது ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவுவதாகவே காட்சியளிக்கிறார். இயேசு பரலோகத்தில் இவ்விதமாக காட்சி அளிப்பதால் ஆசரிப்புக்கூடாரத்திலுள்ள குத்துவிளக்கின் அனுபவ மும் பொருளும் பரலோக கூடாரத்தில் உண்டென அறியலாம். நியாயப் பிரமாணம் சிலுவையுடன் ஒழிந்த பின்னும் இதைக் காண்பதால் அது மேலும் உறுதியாகிறது.

*11. 1.* தேவன் தமது மகிமைக்காக இவ்வித அமைப்பை ஏற்படுத்தி அதிலே வீற்றிருந்து சகலத்தையும் செய்கிறார் என்பதும் இதன் இரகசியமாகும்.

*2.* ஆனால் தேவன் ஏன் ஒரு பரலோக கூடாரத்தை அமைத்தார் என்பது புரியாத புதிராகவே உள்ளது. மனிதன் பாவம் செய்தது முதல் தேவன் ஒரு இரட்சிப்பின் திட்டத்தை வகுத்தார் என்பது உண்மை. அத்திட்டத்தில் உடன்படிக்கையினால் மீட்கப்பட்ட மனிதன் ஆராதிக்க வேண்டிய மாதிரியான கூடாரத்தை அப்போதே பரலோகத்தில் ஸ்தாபித்திருக்கலாம்.

*3.* இவை அனைத்தையும் பார்த்தால் ஆசரிப்புக்கூடாரத்தின் அமைப்பு பரலோக கூடாரத்தின் மாதிரியாகும் எனலாம். பரலோகத்தில் இவ்வித கூடாரம் எதற்கு என்ற நியாயமான கேள்வி எழுகிறதல்லவா? அதற்கு பூமியிலே ஆசரிப்புக்கூடாரம் எதற்காக என்ற கேள்வியே பதில். பூமியில் ஆராதனைக்காகத்தான் அந்தக் கூடாரம் என்கிறோமல்லவா? பரலோகத்திலும் ஆராதனைக்காகவே கூடாரம் என்ற பதில் கிடைக்கிறது. நிற்க: ஆராதிக்கிறவர்களில் மட்டுமே வித்தியாசம்.

*(1)* பூமியில் ஆசரிப்புக் கூடாரத்தில் இஸ்ரவேலராகிய மனிதர் ஆராதித்தனர்.

*(2)* பரலோகக் கூடாரத்தில் தூதர்களாகிய சிருஷ்டிகள் ஆராதித்தனர். பரலோகத்தில் தூதர்கள் செய்யும் ஆராதனையின் முறைமைக்கு எசேக்கியேல் *1*-ம் அதிகாரம், ஏசாயா *6*-ம் அதிகாரம் வெளிப்படுத்தலாகமம் *4*-ம் அதிகாரம் ஆகிய வேதபகுதிகள் வெளிச்சம் வீசுகின்றன.

புதிய ஏற்பாட்டு சபையில் மட்டுமே ஆராதனைக் கிரமம் வித்தியாசமாயிருக்கிறது.

*4.* அத்துடன் உலகை ஆளுவதற்கான தமது சிங்காசனத்தையும்


அதற்குள்ளே ஸ்தாபித்திருக்கலாம். இவ்வாறு இராஜரீக கெம்பீரத்துடன் அவர் வீற்றிருக்கையில் தூதர்கள் அவருக்கு பணிவிடை செய்த வண்ணம் நிற்பதையும் பரலோக கூடாரம் வெளிப்படுத்துகிறது.

5. மனிதனுக்கு தாம் அளிக்கப்போகிற கற்பலகைகளையும் அவைகளில் எழுத வேண்டிய கற்பனைகளையும் கூட அப்போதே திட்டம் பண்ணி உடன்படிக்கைப் பெட்டியில் வைத்திருக்கக்கூடும். அதன் நிழலானது தான் மோசேயினால் உண்டாக்கப்பட்டது எனலாம். இவ்வாறு ஆண்டவர் மலையின் மேல் காண்பித்த கூடார மாதிரியானது பரலோகத்திலுள்ளவைகளின் நிழலுக்கும் சாயலுக்கும் ஒத்திருக்கிறது என அறியலாம்.

**முடிவுரை:**

இத்தனை மகிமையான ஒரு கூடாரமாகிய சமரசமன்றம் மூலமாகத் தம்மை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்திய தேவனுக்குப் பல கோடி ஸ்தோத்திரமுண்டாவதாக. அதைவிட சிறப்பான சமரசத்தைச் சிலுவையின் மூலம் ஏற்படுத்தி மனிதனை மீட்ட தேவ ஆட்டுக்குட்டியானவரும், பிரதான ஆசாரியருமாகிய இயேசுவுக்கு எண்ணிறந்த ஸ்தோத்திரமுண்டாவதாக. பூலோக பாக்கியங்களைத்தைப் பார்க்கிலும் புண்ணியரும், புனிதருமான பரலோகப் புதிய எருசலேமைப் பூமியில் ஸ்தாபிக்கவிருக்கிற பரிசுத்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரமும், புகழும், கனமும் இன்றும் என்றும் சதா காலங்களிலும் உண்டாவதாக! ஆமென்!! அல்லேலூயா!!!

## ஆசிரியரைப் பற்றி



தமிழ் நாடு அரசு கூட்டுறவுத் துறையில் கூட்டுறவுசார் பதிவாளராகப் பணியாற்றி வரவே, தேவ நடத்துதலின் படி வேலையை இராஜினாமா செய்து விட்டு கர்த்தரின் பணியைச் செய்து வருகிறார். அல்லேலூயா பெந்தெகொஸ்தே சுவிசேஷ ஐக்கியத்தை ஸ்தாபித்து பல கிளைகளுடன் சபைகளை நடத்தி வருகிறார். மேலும் பல இடங்களில் சபைகளை நிறுவ திட்டமிட்டுள்ளார். சபையாரும் ஆசிரியரின் மனைவியும் ஒரு மகளும் இரண்டு மகன்களும் தங்களை வாழ்த்துகின்றனர். இவ்வூழியங்களுக்காகத் தங்கள் ஜெபங்களை வேண்டுகிறார்.

## ஆயத்தமாக உள்ள புத்தகங்கள்

(தபால் செலவு உட்பட)

1. இயேசுவின் வருகையும் உலகத்தின் முடிவும் ......ரூ. 50.00
2. பலிகள் ஏதேன் முதல் கல்வாரி வரை .................. ரூ. 25.00
3. இஸ்ரேலிய ஆசரிப்புக்கூடாரம் ............................ ரூ. 45.00
4. அல்லேலூயா முழக்கம் – மாதப்பத்திரிகை ...... ரூ. 20.00


புத்தகங்கள் கிடைக்குமிடம்

பாஸ்டர் டி. தாம்ஸன், ஆசிரியர்

அல்லேலூயா நகர், திருப்பாச்சூர் அஞ்சல்,

திருவள்ளூர் மாவட்டம், தென் இந்தியா 631203.

போன். 04116 ~ 61706


குறிப்பு : பிறருக்கு இந்நூல்களை அறிமுகப்படுத்தி உதவுங்கள்